Issued—19—8—74]

95

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 24th APRIL 1974

Volume CXXII—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1974

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*24th to 27th April* 1974.

VOLUME CXXII (Nos. 1–4.)

TABLE OF CONTENTS.

*Wednesday, 24th April* 1974.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. .. | i-v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. .. | ix–xi |
| 1. Swearing-in of New Members .. .. .. | 1 |
| 2. Government Motions and Resolutions— | |
| (1) Dispensation with Question-hour .. .. | 1 |
| (2) Nomination of Members to the Public Accounts Committee of the Legislative Assembly .. | 4 |
| (3) Nomination of Members to the Estimates Committee of the Legislative Assembly .. | 5 |
| (4) Nomination of Members to the Committee on Delegated Legislation of the Legislative Assembly .. .. .. .. | 5 |
| (5) Nomination of Members to the Committee on Public Undertakings of the Legislative Assembly .. .. .. .. | 6 |

63135

PAGES.

*Wednesday, 24th April* 1974—cont.

2. Government Motions and Resolutions—*cont.*
   (6) State Autonomy and Rajamannar Committee Report—*cont.* .. .. .. 7–42
3. Calling attention to need for postponement of collection of Government and co-operative loans due from agriculturists of Madurantakam taluk, Chingleput district .. .. .. .. 2–4
4. Papers laid on the table of the House .. .. 43–44

*Thursday, 25th April* 1974.

1. Government Motions and Resolutions—
   (1) Dispensation with Question-hour .. 45
   (2) Election of nine Members to the Committee of Privileges .. .. .. .. 45–46
   (3) Election of six Members to the House Committee .. .. .. .. 46
   (4) State Autonomy and Rajamannar Committee Report—*cont.* 47–102
2. Papers laid on the table of the House .. .. 103–104

*Friday, 26th April* 1974.

1. Government Motions and Resolutions—
   (1) Dispensation with question hour .. .. .. 105
   (2) State Autonomy and Rajamannar Committee Report—*cont.* 109–180
2. Adjournment Motion *re* food poisoning in Midday meals supplied in Panchayat Union Elementary School in Chettiapatti village near Dindigul, Madurai district and consequent death of 2 students and admission of 91 students in hospitals .. .. 105–108



PAGES.

***Saturday, 27th April* 1974.**

1. Government Motions and Resolutions—
   (1) Dispensation with Question-hour .. .. 180a
   (2) Transaction of Government business on a Private Members' day .. .. .. 180a
   (3) State Autonomy and Rajamannar Committee Report—*cont.* 181–252
   (4) Nationalization of sick Textile Mills in Private sector .. .. .. .. 253–254
2. Papers laid on the able of the House .. .. 255–256
   Index .. .. .. .. .. .. 258–273

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration. Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Public Relations, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர் :

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நீதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3 மாண்புமிகு திரு. க. அன்பழகன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்-குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி விளம்பரம், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரணி, இளைஞர் அணி, பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகித கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

**6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

**7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள் கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

**8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (வருவாய்த் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், மூகம்மதியர் அறக் கட்டளைகள்.

**9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

**10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

**11. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

**12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், வீட்டுவசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், குடிசை மாற்று வாரியம்.



**13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

**14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

**15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

---

### சட்டமன்ற மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

### சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. எம். இராமநாதன்.

திரு. எல். பலராமன்.

திரு. கே. எஸ். கணபதி.

திரு. எம். எம். பக்கர்.

### சட்டமன்றச் செயலாளர்.

திரு. கி. மூ. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் | .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம். ஏ. | .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. | .. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி.,பி.ஏ.,பி.எல். | | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி.வி. | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராமகிருஷ்ண தேவர், எஸ். | .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி | .. | நியமன உறுப்பினர். |
| 14 இராமநாதன், எம். | .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜு, ஜி. என். | .. | மாநிலச் சட்டப் பேரவை |
| 16 இளம்பரிதி | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 எல்லமந்தா, பி. | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 18 கணபதி, கே.எஸ். | .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| 19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு | | நியமன உறுப்பினர். |
| 20 கோலப்பா, சி.ஆர். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 சக்தி மோகன், ஆர். | .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 சங்கரலிங்கம், எம். | .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி, எம்.ஏ.பி.எல். | | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |

| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 24 சாம்பசிவம், இரா. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமன உறுப்பினர். |
| 26 சிற்றரசு, சி. பி. (மாண்புமிகு தலைவர்) | மாநிலச் சட்டப் பேரவை |
| 27 சுந்தரேசத் தேவர், என். .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 28 செங்கோட்டு வேலப்பன், எஸ்.சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி, பி. பார்மஸி | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 டிமாண்டி டென்சில் வின்செண்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 31 தங்கவேலு, எ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 32 தங்கப்பாண்டியன், வி. பி.எ.பி.டி. | மாநிலச் சட்டப பேரவை. |
| 33 தாமஸ், பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 தாமோதரன், எ.ஆர் பி.எஸ்.ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி.ஆர். .. | தமிழ்நாடு மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, ஆ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 தென்னரசு, எஸ்.எஸ். .. | நியமன உறுப்பினர். |
| 38 தேவராஜ், வி.எம். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 39 நடராசன், என்.வி. (பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 40 நடராசன், மு.க.து. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நாராயணசாமி, பி. (உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி எஸ். .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 43 பக்கர், எம்.எம். .. | நியமன உறுப்பினர். |
| 44 பலராமன் எஸ். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 45 பாலசுப்பிரமணியம், எ. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், கு.மா. .. | நியமன உறுப்பினர். |
| 7 பெரியண்ணன், .வி.ஆர். .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 மணி, கோ.சு. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மாசிலாமணி, எம். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 முத்து, எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துசாமி, செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 53 முருகேசன். எச்.எல். .. | நியமன உறுப்பினர். |
| 54 யோகாம்பாள், சி. .. | நியமன உறுப்பினர். |
| 55 ரசல்ராஜ், சி. .. | நியமன உறுப்பினர். |
| 56 வசந்தபாய், ஜி. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 57 வில்வம், எ. கே. .. | நியமன உறுப்பினர். |
| 58 வில்சன் அப்போலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கடேஸ்வர தீட்சிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெங்கா, வி. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஜார்ஜ் கோமகன் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 வெற்றிடம் .. | |

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமன்ற மேலவையின் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்.

### புதன்கிழமை, 1974 ஏப்ரல் 24

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

**1. புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் பிரமாணம் அல்லது உறுதிமொழி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு. வே. தங்கப்பாண்டியனை உறுதி மொழி எடுத்துக்கொள்ள அழைத்தார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் தமிழில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அரசின் தீர்மானங்கள்

### (1) வினா நேரம் கைவிடப்படுதல்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேலவைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

என்று முன்மொழிகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தலைவரவர்களே, கேள்வி நேரம் இன்று ஏன் கைவிடப்படுகிறதென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாநில சுயாட்சி பற்றிய விவாதங்கள், இரண்டு மூன்று நாட்களில் குறிப்பிட்ட அளவுக்கு முடிந்துவிட வேண்டுமென்ற காரணத்தால், நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் போன்றவர்கள் நீண்ட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் கேள்வி நேரம் கைவிடப்படுகிறது. இதுபற்றி நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் முன் உள்ள பிரச்சினை:—

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 3. கவன ஈர்ப்பு.

**செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய வரியை வஜா செய்வது, அரசுக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களையும் ஒத்தி வைப்பது குறித்து.**

**திரு. வி. வெங்கா :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை தவறி விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியிருப்பதால் இந்த விவசாயிகள் செலுத்த வேண்டிய அரசுக் கடன்களையும், கூட்டுறவுக் கடன்களையும் ஒத்தி வைக்க வேண்டியும், அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து".

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் இந்த ஆண்டில் உரிய காலத்தில் போதிய மழை பெய்யாததன் காரணமாக பெரும்பாலான பகுதிகளில் வழக்கமான விளைச்சலைப் பெற இயலாத போதிலும், அதை விட ஒரு சிறிதே குறைந்த விளைச்சலுடன் சம்பா அறுவடை முடிவடைந்துள்ளது என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். வளர்ந்து வரும் நெல், வேர்க்கடலை, கரும்பு முதலிய பயிர்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளன. ஆனால், அதிகமான பலனை எதிர் பார்க்க முடியாது. 1973 ஆம் ஆண்டு டிசம்பருக்குப் பின்னர் மழை பெய்ய வில்லை. லத்தூர் வளர்ச்சி வட்டாரத்தில் செய்யூர் பிர்க்காவில் உள்ள செய்யூர், சிக்கினாங்குப்பம் கிராமங்களின் சில பகுதிகளில் பயிர்கள் சாவியாகப் போனதற்கு வரித் தள்ளுபடி செய்ய முறையீடுகள் வரப்பெற்றன. இந்த கிராமங்களில் பயிர் விளைச்சல் மதிப்பீட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரித் தள்ளுபடி அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தனியே நடவடிக்கை எடுத்து வருகிறார். ஏனைய பிர்க்காக்களைப் பொறுத்த வரை அப்பகுதிகளில் பயிர்கள் சாவியாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிப்பதற்கான பிரச்சினை எதுவும் தற்போது எழவில்லை.

வறட்சிக் காலத்தில் கடன் தவணைத் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கு உழவர்களுக்கு இயலாதபோது அரசுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகைகளை "மெதுவாக வசூலிக்கும் கொள்கையைப்' பின்பற்றுமாறு அல்லது வசூலிப்பதை ஒத்திப் போடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்படுவது அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது.





பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் பாக்கிகளை வசூலிப்பதை ஒத்திப் போடுவதற்குத் தங்களுடைய விருப்ப உரிமையைப் பயன்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

உழவர் சங்கத்திடமிருந்து முறையீடுகள் வந்ததன் பேரில், மோசமான பருவ நிலைகளால் அல்லது ஏனைய இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்துவது குறித்து நிவாரணம் அல்லது சலுகை அளிக்குமாறு முறையீடுகள் வரப்பெற்றால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவற்றை உடனடியாக ஆய்வு செய்து, உண்மையிலேயே இடர்ப்பாடுள்ள நேர்வில் விதிகளையொட்டி தாம் அவசியமெனக் கருதுகிற நிவாரணத்தை அல்லது சலுகைகளை அவர்கள் வழங்கலாமென்று அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இறுதியான ஆணைகளைப் பிறப்பிக்க முடியாத முறையீடுகளின் நேர்வில், அவற்றிற்கு ஏற்ற சலுகைகளை வழங்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய பரிவுரைகளுடன் அவற்றை வருவாய்த் துறை வாரியத்திற்கு அல்லது அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பயிர் விளைச்சல் 36 காசும் அதற்குக் குறைவாக (அதாவது 6 அணாவுக்குக் குறைவாக) இருக்கின்ற நேர்வில் உழவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்க குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்படலாமெனவும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆகவே, வரித் தள்ளுபடி கேட்கப்பட்டபோது அவ்வாறே வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதும் அரசுக் கடன்களையும் கூட்டுறவுக் கடன்களையும் வசூலிப்பதில் நிவாரணம் அளிப்பதற்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதென்பதும் மேற்கூறியவற்றால் தெரிய வரும்.

**திரு. வி. வெங்கா :** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில், மதுராந்தகம் வட்டத்தில், லத்தூர் பிர்க்காவில் 2 கிராமங்களில் வறட்சி ஏற்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் மதுராந்தகம் வட்டத்திலே, மதுராந்தகம் ஏரியும், அதனால் பயன் அடையக்கூடிய 18 ஏரிகளைத் தவிர, பாலாறு பேசினை ஒட்டியிருக்கக்கூடிய கிராமங்களைத் தவிர, எஞ்சிய அனைத்து கிராமங்களிலேயும் கிணறு இல்லாது, மழையை நம்பியிருக்கக் கூடிய அனைத்து கிராமங்களிலேயும் முதல் போகமானது சாவியாகி இருக்கிறது. கிணற்றுப் பாசனம் இருந்த கிராமங்களில் மட்டுமே சம்பா அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி கிணற்றுப் பாசனம் அல்லாத, ஏரியை நம்பியிருக்கக்கூடிய அந்த நிலங்களுக்கு வரி வஜா செய்வதோடு, அனாவாரி சர்ட்டிபிகேட்டையும் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

[திரு. வி. வெங்கா] [1974 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து வருவாய்த் துறை அதிகாரிகளோடு நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தியபோது மாண்புமிகு உறுப்பினர்களும் இருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியாக ஆணையிடப் பட்டிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். இந்தப் பகுதியில் செய்ய வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கொள்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேலவைத் தலைவரவர்களே,

"1974-75-ம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

என்று முன்மொழிகிறேன்.

"(1) திரு. எம். இராமநாதன்
(2) திரு. எம். சங்கரலிங்கம்
(3) திரு. எஸ். டி. ஆதித்தன்
(4) திரு. கே. ராஜாராம்
(5) திரு. வில்சன் அப்பலோஸ்"

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

(1) திரு. எம். இராமநாதன்
(2) திரு. எம். சங்கரலிங்கம்
(3) திரு. எஸ். டி. ஆதித்தன்
(4) திரு. கே. ராஜாராம்
(5) திரு. வில்சன் அப்பலோஸ்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(3) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேலவைத் தலைவரவர்களே,

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

என்று முன்மொழிகிறேன்.

"(1) திரு. எஸ். எஸ். தென்னரசு
(2) திரு. மு. க. மு. நடராசன்
(3) திரு. சி. ஆர். கோலப்பா
(4) திரு. அய்யணன் அம்பலம்
(5) திரு. எல். பலராமன்."

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்—

(1) திரு. எஸ். எஸ். தென்னரசு
(2) திரு. மு. க. மு. நடராசன்
(3) திரு. சி. ஆர். கோலப்பா
(4) திரு. அய்யணன் அம்பலம்
(5) திரு. எல். பலராமன்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) சட்டப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மேலவைத் தலைவரவர்களே,

"1974-75-ம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது"

என்று முன்மொழிகிறேன்.

(1) திரு. சி. ரஸ்ஸல்ராஜ்
(2) திரு. வே. தங்கப்பாண்டியன்
(3) திரு. என். சுந்தரேசத் தேவர்
(4) திரு. டி. சந்தோஷம்
(5) திரு. ஆர். [illegible]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது—

(1) திரு. சி. ரஸ்ஸல் ராஜ்
(2) திரு. வெ. தங்கப்பாண்டியன்
(3) திரு. என். சுந்தரேசத் தேவர்
(4) திரு. டி. சந்தோஷம்
(5) திரு. ஆர். சக்திமோகன்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (5) சட்டப் பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே,

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

என்று முன்மொழிகிறேன்.

"(1) திரு. க. அறிவழகன்
(2) திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்
(3) திரு. மு. மாசிலாமணி
(4) திரு. ஒய். வெங்கடேஸ்வர தீஷிதர்
(5) திரு. எம். எம். பக்கர்"

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"1974-75-ஆம் நிதியாண்டுக்குரிய சட்டப் பேரவை பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

(1) திரு. க. அறிவழகன்
(2) திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்
(3) திரு. மு. மாசிலாமணி
(4) திரு. ஒய். வெங்கடேஸ்வர தீஷிதர்
(5) திரு. எம். எம். பக்கர்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## (6) மாநில சுயாட்சி, இராஜமன்னார் குழுவின் அறிக்கை (விவாதத் தொடர்ச்சி)

(பிற்பகல் 4.10)

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன். இந்த மாநில சுயாட்சிபற்றி பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை நம்முடைய இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்களுக்கு நம்முடைய அரசு அனுப்பியிருப்பதாக நான் பத்திரிகையிலே இன்று காலையிலே பார்த்தேன். பேரவையிலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, மேலவையிலும் இந்தத் தீர்மானம் நிறைவேறி அதற்கு மேல் இந்திய நாட்டின் பிரதமர் அவர்களுக்கு அதை அனுப்பியிருந்தால், இந்த மேலவைக்குரிய மரியாதை காட்டப்பட்டதாக இருக்கும் என்று உறுப்பினர்கள் சார்பிலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மட்டும் அனுப்பியதிலே தவறில்லை என்றாலும், மேலவையிலே நாங்கள் மூன்று நாட்கள் பேசியதற்குப் பிறகு, எங்கள் கருத்துக்களையும் சேர்த்து அனுப்பியிருந்தால் அது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கு அரசாங்கத்தின் விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இரண்டு அவையிலும் தீர்மானத்தை நிறைவேற்றி சேர்த்து அனுப்பினால், ஒரு முறைதான் பிரதமரின் கவனத்தைக் கவர முடியும். ஆகவே பேரவையின் தீர்மானத்தை அனுப்புவதன் மூலம் ஒரு முறையும் மேலவையின் தீர்மானத்தை அனுப்புவதன் மூலம் மறு முறையும், ஆக இரண்டு முறை பிரதமரின் கவனத்தைக் கவரலாம் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

THIRU G. VASANTHA PAI : Sir, as the Leader of the House, Hon. the Chief Minister owes us a duty and respect to this House. He should protect the dignity of th's House and I think he should have waited till the discussion is over in this House also before forwarding the Resolution. Though he is the Chief Minister, he as the Leader of this House should not let down this House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய கவுரவம் எள்ளளவும் பாதிக்கப்படக்கூடாது என்கின்ற முறையிலே, இந்த அவை முன்னவனாக இருக்கிறவன் என்ற முறையில், மேலவையின் தீர்மானம் நிச்சயமாக அனுப்பி வைக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்டமன்ற மேலவையில் தமிழகத்தின் முதல்வர் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற மாநில சுயாட்சித் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதிலே நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.

அதற்கு முன்னால் இந்த சட்ட மன்ற மேலவையில் மீண்டும் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்த தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய அமைச்சரவைக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதை என்னுடைய தலையாயக் கடமையாகக் கருதுகிறேன். அதைப் போல எனக்கு வாக்களித்து இந்த அவைக்கு மீண்டும் வருவதற்கு உறுதுணையாக இருந்த என்னுடைய வாக்காள ஸ்தல ஸ்தாபன பெருமக்களுக்கு, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டினுடைய சட்டப் பேரவையிலே நிறைவேற்றியிருக்கிற தீர்மானத்தையும், இன்றைக்கு சட்டமன்ற மேலவையிலே கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தையும், தமிழ்நாட்டினுடைய அரசியலில் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கியிருப்பதற்குக் காரணமாக இருந்த தமிழ்நாட்டினுடைய முதல்வர் அவர்களுடைய தலைமையையும் அரசியல் வல்லுநர்கள், பல்வேறு துறையிலே பணியாற்றுகிற விற்பன்னர்களெல்லாம் பாராட்டுகிறார்கள் நமக்குச் சில சந்தேகங்களும் வருவதுண்டு. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு ஒரு தனி தைரியம் வேண்டுமா அல்லது தனிச் சிறப்பு வேண்டுமா என்றுகூட சிலர் நினைக்கலாம், கேட்கலாம். பல்வேறு மாநிலங்களில் பல ஆற்றல் மிக்க முதல்வர்கள் ஆண்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக்கண்ட அரசை வழி நடத்திய பல பெரியவர்கள், இந்திய சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல தலைவர்களெல்லாம் இப்படி ஒரு புதிய தத்துவத்தை, ஒரு புதிய சித்தாந்தத்தை மனதிலே எண்ணினாலுங்கூட, அன்றைக்கிருந்த சூழ்நிலையினாலோ அல்லது தலைமை கோபித்துக் கொள்ளுமோ, மத்திய அரசு நம்மீது மனக்கசப்பு கொண்டுவிடுமோ என்று கருதி, பல சந்தர்ப்பங்களிலே சொல்லத் தவறியதை சொல்வதற்காக இன்றைக்கு தமிழக முதல்வர், இந்த நாட்டின் வளம் கருதி, எல்லா மாநிலங்களின் நலன் கருதி, இந்தத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை தமிழ் நாட்டு முதலமைச்சர் முன்மொழிந்த காரணத்தாலேயே, இந்தத் தீர்மானத்தை நாங்கள் சந்தேகிக்கிறோம், இது நாட்டினுடைய நலனுக்கு உகந்ததாக இருக்காது, மத்திய அரசின் பலத்திற்கு ஒரு பலகீனத்தை உருவாக்கிவிடும், இந்திய நாட்டின் அரசியலைத் திசை திருப்பிவிடுகிறார்கள் என்றெல்லாம் இன்றைக்கு பல்வேறு கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள். அந்த வாதத்திற்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் நாட்டின் முதலமைச்சர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற காரணத்தாலேயே, இப்படி அவர்களுக்குச் சந்தேகம்





ஏற்பட்டால், நான் அவர்களுக்குச் சொல்கிறேன். தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஒருவர்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு முன்னால் பல்வேறு முறை இந்தப் பிரச்சினைபற்றி பலவிடங்களிலே பேசப்பட்டிருக்கிறது. மக்கள் மத்தியிலே பேசப்பட்டது. பொட்டல் வெளியிலே மாலைநேரப் பொதுக்கூட்டங்களிலே பேசப்பட்டது. சட்டமன்றப் பேரவையிலேயும், மேலவையிலேயும், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால், இதுவெல்லாம் என்ன வாதம், இதற்கு ஒரு சரியான உருவம் கொடுக்க வேண்டாமா, இந்தக் கருத்துக்களை முறைப்படுத்தி, வகுத்து, தொகுத்து, தீர்மான உருவத்திலே கொண்டுவந்து தலைமை அமைச்சரின் கவனத்தைப் பெற வேண்டும், இந்திய நாட்டின் அரசியலில் இதற்கொரு முக்கியத்துவம் ஏற்பட வேண்டுமானால், இது முறைப்படி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டாகவேண்டும் என்ற கருத்துக்களும் சொல்லப்பட்டன. அதையொட்டித்தான் இன்றைக்கு இந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானம் முன்னேற்றக் கழகத்தின் தீர்மானம் என்று பலபேருக்கு எண்ணம் இருக்கக்கூடும். முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆளுகிற பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற நிலையிலே இருக்கிறோம். ஆனால் இது முன்னேற்றக் கழகத்தினுடைய தீர்மானமாக மட்டுமே அல்லாமல், தமிழ் நாட்டினுடைய முதுபெரும் அறிஞர்கள், அறிவாற்றல்மிக்கவர்கள் மூன்று பேர் கூடி தெரிவித்த கருத்தை தீர்மானமாக இங்கே வடித்துக் கொடுத்திருக்கிறோம். இந்தக் குழுவிலே அங்கம் வகித்த டாக்டர் ராஜமன்னார் அவர்களைப் பற்றியோ, அவருக்கு இந்திய தேசிய ஒருமைப்பாட்டிலே இருக்கிற எண்ணத்தைப் பற்றியோ, யாருக்கும் இரண்டாவது கருத்து கிடையாது. அதைப் போல டாக்டர் ஏ. எல். முதலியாரைப்பற்றியோ, அவருக்கு இருக்கிற தேசப்பற்றைப்பற்றியோ, இந்தியத் துணைக்கண்டம் ஒன்றாக இருக்க வேண்டும், மத்தியிலே பலமான ஆட்சி இருக்க வேண்டும் என்பதிலே அவருக்கிருந்த தூய நோக்கத்தைப் பற்றியோ யாருக்கும் சந்தேகமே கிடையாது. நம்முடைய தலைவர் அவர்கள்கூட, ஒரு தடவை வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார். பிரிட்டிஷ்காரன் இந்தியாவை விட்டுப் போகிறபோது, சுதந்தரத்தை காந்தியடிகளின் கையிலும், ஆங்கில மொழியை நம்முடைய டாக்டர் ஏ. எல். முதலியார் கையிலும் கொடுத்து விட்டுப் போனான் என்று சொன்னார்கள். அப்படி ஆங்கில மொழியிலே வல்லமை பெற்ற டாக்டர் ஏ. எல். முதலியார் அந்தக் குழுவிலே இடம் பெற்றிருந்தார். அதைப் போலவே நீதிபதி சந்திரா ரெட்டி இடம்பெற்றிருந்தார். முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மேல் யாருக்கும்

சந்தேகம் இருந்தாலும், டாக்டர் ஏ. எல். முதலியார் மேலேயோ, டாக்டர் ராஜமன்னாரிடமோ அல்லது சந்திரா செட்டியிடமோ இங்கே இடம் பெற்றிருக்கிற நம்முடைய மேலவை உறுப்பினர்களுக்கு நிச்சயமாகச் சந்தேகம் இருக்காது. இவர்கள் இரண்டாண்டுக் காலம் தங்களுடைய ஆற்றலைப் பயன்படுத்தி, தங்களுடைய திறமையைப் பயன்படுத்தி, தாங்கள் படித்திருந்த பல்வேறு புத்தகங்களிலேயிருந்து கருத்துக்களைச் சேகரித்து, இத்தகைய தீர்மானத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் இன்றைக்கு பல்லோராலும் பேசப்படுகிறது. இந்த தன்னாட்சி அல்லது மாநில சுயாட்சி என்ற உணர்வுக்கு ஒரு புதிய உருவம் அமைத்து, அதற்குத் தருகின்ற கருத்துக்களை இந்தியத் துணைக் கண்டத்திலே மாநிலங்களிலே ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்றவர்களும், மத்தியிலே நாடாளுமன்றத்திலே அங்கம் வகிக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொருளாதார நிபுணர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். டெல்லியிலே இருக்கிற தலைமை அமைச்சர் ஏற்றுக்கொள்வாரா, இல்லையா என்பது அல்ல பிரச்சினை. நாம் எடுத்து வைத்திருக்கிற கொள்கையிலே நியாயம் இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை. இந்தத் தீர்மானத்தில் இந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், அரசியல் உரிமைகளுக்கும் முறைபடத்தக்க வலுவான அத்தியாயங்கள் இருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தத் தீர்மானத்தையொட்டி இங்கே காரசாரமான விவாதங்கள் நடைபெறலாம். சட்டமன்றப் பேரவையிலே இதுபற்றிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இறுதியிலே அந்தத் தீர்மானத்தை ஆதரித்து உரையாற்றிய நம்முடைய முதல்வர் அவர்கள் எல்லாவிதமான வாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கத் தக்க அளவுக்கு பதிலளித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஆங்கில நாட்டில் திடீரென்று ஜனநாயகத்தை மக்கள் உருவாக்கிக்கொள்ளவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாவது நூற்றாண்டு வரையில் அரசியல் அறிஞர்கள் இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் இடம் பெற்று, கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் உறுதியாக இங்கிலாந்து நாட்டிலே பாராளுமன்ற முறையைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வருவதற்கு முதல் கட்டமாக, அவர்கள் அந்த நாட்டினுடைய 'மாக்ன கார்ட்டா' என்ற அரசியல் சாசனத்தை உருவாக்கினார்கள். அப்பொழுதுதான் மகுடம் மக்களுக்குப் பணிந்தது.

"Voice of the people is mightier than that of God."

என்று சொல்லத் தக்க அளவிற்கு மக்கள் குரல் மகேசன் குரலைவிட உயர்ந்தது என்ற நிலை வந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைகளைப் பின்பற்றிவரும் நமது நாட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாக பல அதிகாரங்களை 1857 லிருந்து [illegible] வரையில் பல கட்டங்களிலே பெற்று வந்தோம்.



MR. CHAIRMAN:—Magna Carta-dispute between Lords and James.

(பிற்பகல் 4–20)

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஆக மக்களுக்கும் மன்னனுக்கும் ஏற்பட்ட போராட்டம்தான் 1857-லிருந்து 1947 வரையில் நடந்தவை. இப்படி இந்திய அரசியலில் நமது நாட்டிற்கு பல்வேறு கட்டங்களிலே மத்தியிலிருந்து மாநிலங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மாநில அரசுகள் தம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. முழு அளவிற்குச் சுய ஆட்சித் தன்மை இல்லை என்றால், பொருளாதாரத்தில் தன்நிறைவு காண்பதற்கு முடியாது என்ற நிலைமையில் பல்வேறு கட்டங்களிலே பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருந்துவிட்டன. இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய அதிகாரங்கள் கொடுக்கப்படாமலிருக்கும் காரணத்தினால்தான், மாநில மக்களுக்கு முழுமையாக நல்லது செய்ய முடியவில்லை. மராட்டியத்திலே திரு. சவான் அவர்களும் அவருக்கு முன்னர் மொரார்ஜி அவர்களும் ஆண்டார்கள். வங்கத்திலே டாக்டர் பி. ஸி. ராய் ஆண்டிருக்கிறார். கேரளத்திலே திரு. நம்பூதிரிபாடு அவர்கள் ஆட்சியிலே இருந்தார்கள். ஒரிஸ்ஸாவிலே சுதந்திரக் கட்சித் தலைவர்கள் ஆண்டிருக்கிறார்கள். மிகமிக ஆற்றல் மிக்கவர்கள் எல்லாம் ஆண்டிருக்கின்றார்கள். ஆனால் எவ்வளவுதான் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தாலும், அந்தந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சி போன்ற பல்வேறு வளர்ச்சிகளிலே அவர்களால் தன்நிறைவு காண முடியவில்லை. ஆட்சியிலே இருந்தவர்கள் மிகமிக ஆற்றல் படைத்தவர்கள். ஆனாலும் எதை ஒன்றையும் செய்ய முடியவில்லை. அவர்களுக்குப் போதிய அதிகாரம் இல்லாதிருந்த காரணத்தினால்தான், மாநிலங்களின் சிறு சிறு பிரச்சினைகளைக்கூட முழுமையாக அவர்களால் தீர்த்து வைக்க முடியவில்லை. மத்திய அரசின் தலையீடுகள், அங்குள்ள அதிகாரக் குவிப்பு ஆகியவற்றின் காரணமாக மாநிலங்கள் முறையாகச் செயல்பட முடியாத தன்மை இருந்த காரணத்தினால், எதை ஒன்றையும் மாநிலங்கள் முழுமையாகச் செய்ய முடியவில்லை. அங்கே உள்ள சிலருக்கு நெஞ்சத்தில் தீ இருந்தாலும், வெட்ட வெளியில் அவர்கள் சொன்னதை சட்ட சபையில் சொல்லுவதற்குப் பயந்தார்கள். அன்றைக்கு மறுத்துவந்ததை இப்போது செய்யவேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறோம். தமிழ் நாடு எவ்வளவோ துறைகளிலே முன்னணியில் இருந்துவந்திருக்கின்றது. எவ்வளவோ விஷயங்களிலே வழிகாட்டியாக இருந்து வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், அல்லது மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும்

என்ற இந்தக் கோரிக்கையிலும் போராட்டத்திலும் தமிழ் நாடு தலைமை தாங்குவதில் ஆச்சரியமொன்றுமில்லை. வேறு மாநிலங்களிலே இதுபோன்ற குரல் கேட்கவில்லையே என்ற காரணத்தினால், நாம் அதைக் கேட்கக்கூடாது என்று சொல்லுவதில் நியாயமில்லை. தமிழ் நாடு தனக்கென்று ஒரு பாணியை அமைத்துக்கொண்டு, அந்த நிலைக்கு தன்னை உட்படுத்திக்கொண்டு, அதிலே ஒரு இறுதிக் கட்டத்தைக் கண்டாக வேண்டும் என்ற முறையில், நமது மாநிலத்திற்கு கூடுதலாக என்னென்ன அதிகாரங்கள் தேவையென்று சொல்லி, நாம் அவற்றைக் கேட்கிறோம். இந்த இந்த அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுத்தால், அவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்வார்கள் என்று முறையாக மத்தியில் பொறுப்பேற்றிருப்பவர்கள் காரணங்களோடு விளக்கத் தயாராக இருக்க வேண்டும். வேண்டுமானால் மத்திய அரசிலுள்ளவர்கள் நாம் அனுப்பும் இந்தத் தீர்மானத்தின்பேரிலே அனைவரையும் கூட்டிப் பேசிடத்தக்க வகையில் ஒரு வட்ட மேஜையைத் தயார்படுத்திக்கொள்ளட்டும். அதிலே பல்வேறு அரசியல் அறிஞர்களை, பொருளாதார நிபுணர்களை அமர்த்தி இன்றைய தீர்மானம்பற்றி வாதப் பிரதிவாதங்களைக் கேட்போம். ஒன்று எங்களைத் திருப்திப் படுத்துங்கள், அல்லது மாநிலங்களுக்கு வேண்டிய அதிகாரங்களை வழங்குங்கள் என்று கேட்கத்தான் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நிச்சயமாக சில கருத்துக்களை உணர்ந்து பார்க்க வேண்டும். மாறுபட்ட கட்சிகள் நிச்சயமாக மாநிலங்களிலே ஆட்சிக்கு வரும், மத்தியிலே வேறு கட்சி, மாநிலங்களிலே பல்வேறு கட்சிகள் வரக்கூடும் என்பதை 1967-க்குப் பிறகு இந்திய அரசியல் நிரூபித்துவிட்டது. சுதந்திரம் பெற்ற நாட்களிலே, ஆண்டாண்டு காலம் ஒரே கட்சிதான் மத்தியிலும் மாநிலங்களிலும் ஆட்சி புரியும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள் பலர். ஆனால் 1967-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்த எண்ணம் மண்ணோடு மண்ணாகப் போய்விட்டது. எந்த ஒரு கட்சியும் மாநிலத்தில் வரலாம், மத்தியிலும் வரலாம் என்பது வரலாற்றுபூர்வமான உண்மையாகிவிட்டது. இப்படி மாநிலங்களிலே பிற கட்சிகளும் மத்தியிலே வேறு ஒரு கட்சியும் ஆட்சி செலுத்த வரும்போது, மாறுபட்ட கட்சியின் ஆட்சியை மத்திய அரசு பழி வாங்குகிற போக்கைப் பார்க்கிறோம். இதை இல்லையென்று சொல்லிவிட முடியாது. குறிப்பாக தமிழ் நாட்டிலிருந்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான தீர்மானங்களை அனுப்பியும், வேண்டுகோளைச் சமர்ப்பித்தும் இருக்கிறோம். ஆனால் நமது உணர்ச்சிபூர்வமான தீர்மானங்கள், திட்டங்கள், அநேகமாக கிடப்பில் போடப்பட்டுவிடுவதைப் பார்க்கிறோம். அவைபற்றி மத்திய அரசு முடிவெடுப்பதற்குத் தயாராக இருந்ததில்லை. இந்த நிலையில்தான் இதற்கு ஒரு நிரந்தரமான முறையில் பரிகாரம் காண வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அப்படி ஒரு



நிரந்தரத் தீர்வைக் காணும் எண்ணம் மத்திய அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பல நேரங்களிலே மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மத்திய அரசு நமது மாநிலத்தை நடத்தியிருக்கின்றது. எனவேதான் நாம் அரசியல் சட்டபூர்வமாக ஒரு பாதுகாப்பு வேண்டும், மாநில அரசுகள் தங்கள் சுய தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்கும், மாநில மக்கள் தங்கள் உரிமைகளை, தனது இனத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கும், மரியாதையைத் தேடிக்கொள்ளுவதற்கும் மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் தேவையென்று இந்திய அரசிடம் அடிக்கடி எடுத்துச்சொல்லிவருகிறோம். ஒரு உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். காவிரி நீர்ப் பிரச்சினை என்று வந்த நேரத்திலே—அந்தப் பிரச்சினையே ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை. ஆனாலும்—அதைப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. இண்டர்-ஸ்டேட் கவுன்ஸில் வேண்டுமென்று கேட்டிருப்பது, பொதுப் பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காண்பதற்காக. வெளிவிவகாரங்கள் வரும்போது, உதாரணமாக இலங்கை வாழ் இந்தியர்கள் இந்தியாவிற்குத் திரும்பி அனுப்பப்படும்போது, அங்குள்ள தமிழ் பெருங்குடி மக்கள் தமிழகத்திற்குத் திருப்பி அனுப்பப்படும்போது, அல்லது லட்சத் தீவுப் பிரச்சினை என்று வரும்போது, அங்கிருந்து வருபவர்களை எந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர்களுடைய புனர் வாழ்விற்கான செலவுகளை மத்திய அரசும் மாநில அரசும் எந்த அளவில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதில் தீர்வுகாண இண்டர்-ஸ்டேட் கவுன்ஸில் பயன்படும். இப்படிப்பட்ட பாதுகாப்பு, அரசியல் சட்டத்திற்கு உள்ளிட்ட பாதுகாப்பு நமக்குத் தேவையென்ற அளவில்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை, அல்லது மாநில சுயாட்சி தேவை என்று சொல்லுகிறோம். தமிழகத்தில் நமது முதலமைச்சர் அவர்களிடம் அதிக அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால், அந்த அதிகாரங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுவார்கள் என்று யாரும் எண்ணி, இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டாம். நிரந்தரமாக தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமே ஆட்சியில் இருக்கும் என்பதில்லை அல்லது முதல்வராக மதிப்பிற்குரிய நமது டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இருப்பார்கள் என்பதில்லை. நாளைக்கே மற்றவர்களும் வரலாம். ஆதலால், இன்றைக்கு நாங்கள் தரவேண்டுமென்று கேட்கிற அதிகாரம் நாளைக்கு வருபவர்களுக்கும் பயன்படும் என்ற நல்ல எண்ணத்திலேயாவது இதில் குறுக்கிடாமல் இதை அனைவரும் ஆதரிக்க வேண்டும். இப்படி அதிகாரங்களைக் கொடுக்கும்போது, அவை எந்தவிதத்திலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவிடாது. கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முறையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்று பார்த்துக்கொள்ளுவதற்கு உயர்நீதி மன்றங்கள், சுப்ரீம் கோர்ட்டு என்று இருக்கின்றன. எந்த ஒரு முதலமைச்சரும் தன் அதிகாரங்

களைத் துஷ்பிரயோகம் செய்தார் என்றால், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு மத்திய அரசிடம் போதுமான வலிமை இருக்கின்றது. மிஞ்சினால் அடுத்து வரும் பொதுத் தேர்தலிலே மக்களே அதற்கு வேண்டிய தீர்ப்பினை வழங்கிவிடுவார்கள். எனவே அதற்குப் பயந்துகொண்டு நடைபெற வேண்டிய நல்ல காரியத்தைத் தடுத்து நிறுத்திவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு மாநிலங்கள் பெற்றுள்ள இந்த அந்தஸ்துகூட திடீரென்று வந்துவிடவில்லை. சுதந்திரம் பெற்றவுடன் பல்வேறு பகுதிகளிலுள்ள மாநிலங்களை மொழிவழி அடிப்படையில் மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு முதலில் அன்றைக்கு பண்டித நேரு அவர்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள். 'இப்படி மொழி வழி மாநிலங்களை உருவாக்கினால், மாநில உணர்ச்சிகள் தலைதூக்கி இந்தியாவின் ஒருமைப்பாடு பாதிக்கப்படும்' என்று சொன்னார்கள். அப்படியும் ஆந்திரத்தில் அன்றைக்கு ஏற்பட்ட கிளர்ச்சிக்குப் பணிந்து பின்னர் நேரு அவர்கள் மொழிவாரி மாநிலங்களுக்கு இசைவு தரவேண்டியதாயிற்று. மாநிலங்களுக்குச் சில அந்தஸ்துகள், சில அதிகாரங்கள் கொடுக்கப்படுவதால், ஆபத்து ஏதும் வந்துவிடாது என்பதை பின்னர் ஏற்பட்ட பல அரசியல் சம்பவங்கள் எடுத்துக்காண்பித்துவிட்டன. சமீபத்தில் ஆந்திரத்தில் நடைபெற்ற முல்கி கிளர்ச்சியின்போதும் முதலில் மாறுபட்ட கருத்தைக்கொண்டிருந்த மத்திய அரசு பிறகு இறங்கிவரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது. இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் மொழிக் கிளர்ச்சி அல்லது வேறு கிளர்ச்சி ஏற்படும்போதெல்லாம் முதலில் மறுத்த மத்திய அரசு பின்னர் மக்களின் எழுச்சிக்குத் தலைவணங்கி அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு வந்திருக்கின்றது என்பதைப் பார்த்து வருகிறோம். ஆகவே இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஒட்டு மொத்தமாக எல்லா மாநிலங்களுக்கும் என்னென்ன அதிகாரங்கள் தேவை, எப்படிப்பட்ட அதிகாரங்களை உடனடியாக வழங்கினால் மாநிலங்களும் முன்னேற்றமடையும் என்பதை மத்திய அரசு பரிசீலனை செய்தாக வேண்டும். தமிழ் நாடு கேட்டுவிட்டால் போதுமா என்று யாரும் எண்ணத் தேவையில்லை. ஆந்திரம் கேட்க அதிக நாளாகாது. கேரளம் குரலெழுப்ப நாட்களாகாது. மைசூர் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பாடீல் அன்றைக்கே தைரியமாகக் கேட்டார்கள். பல்வேறு காங்கிரஸ் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் பேசும்போது மாநிலங்களுக்கு சுயாட்சி தேவை என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது பேசி முடிக்க வேண்டிய ஒரு பிரச்சினை. உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பஞ்சாப் போன்ற மாநிலங்கள் அதிக ஜனத்தொகை இருப்பதால், அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தலைநகருக்குப் பக்கத்தில் இருக்கும் காரணத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அதிகப் பயன்



களைப் பெற்று வரும் நேரத்திலே, தக்காணத்திற்குத் தெற்கே உள்ள மாநிலங்களுக்கு அத்தகைய பயன்கள் மறுக்கப்பட்டுவருகின்றதைப் பல சந்தர்ப்பங்களிலே பார்க்கிறோம். எனவே என்றைக்கு மாநிலங்கள் என்றும் தனித்தனியாகச் சட்ட மன்றங்கள் என்றும் உருவாக்கிவிட்டார்களோ, அன்றைக்கே அந்த மாநிலங்களுக்கு வேண்டிய அதிகாரங்களை வழங்கி, மாநில மக்களுக்கு நன்மைகளைச் செய்வது, அவர்கள் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவதுதான் மத்திய அரசின் நேர்மையான கடமை என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் ஒன்று. நாம்

(பிற்பகல் 4.30)

இன்றையதினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கின்றபோது, ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வித் துறையை மட்டும் செயல் படுத்தி வருகின்ற பல்கலைக் கழகங்களுக்கு தன்னிச்சையாக இயங்கும் அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கல்வித் துறையில் அரசியல் கூடாது. கல்வியில் வேறு ஒருவர் தலையீடு கூடாது என்ற கருத்தில், தன்னிச்சையாக இயங்கச் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே எல்லாவற்றிலும் முழு கவனம் செலுத்தக் கடமைப்பட்டுள்ள மாநில அரசுக்கு முழு அதிகாரம் கேட்பதில் நியாயமில்லை என்று கூறுவது நியாயமாகுமா? பல்கலைக் கழகங்களுக்கு 'அட்டானமஸ் ஸ்டேட்டஸ்', கல்வித் துறையைப் பொறுத்த வரையில், வழங்கப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய்ப் பிரச்சினையிலிருந்து உண்ணும் உணவுப் பிரச்சினை வரையில், மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சினையானாலும், அது மத்திய அரசாங்கம் என்று தட்டிக் கழிக்க முடியாத நிலைமையில், மாநில அரசாங்கம் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இப்படிப்பட்ட எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று நடத்த வேண்டிய மாநில அரசாங்கத்திற்கு, தேவையான அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்று நாம் கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

ஓட்டு முறையில் கூட, சம பங்கு கொடுத்திருக்கிறோம். ஒரு நபர் சட்ட மன்றத் தேர்தலில் ஒரு வாக்கு அளிக்க உரிமை பெற்றிருப்பதுபோல், பாராளு மன்றத் தேர்தலிலும் ஒரு வாக்கு அளிக்க உரிமை பெற்றவராக இருக்கிறார். சட்ட மன்றத் தேர்தலில் வாக்கு அளிக்கின்ற அதே ஆள் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒரு வாக்கு அளிக்கின்றார் என்பதை நாம் பார்க்கிறோம். நாட்டை ஆள்வதற்கும், சட்டங்களை இயற்றுவதற்கும் இரண்டு அவைகள் தேவை. மாநிலங்களில் இயற்றப்படுகின்ற சட்டங்களும் மத்தியில் இயற்றப்படுகின்ற சட்டங்களும், ஒரே ஆள் போட்ட வாக்குகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் சேர்ந்து செய்யப்படுகின்ற சட்டங்களாகும். வேண்டுமானால் மத்திய அரசுக்கு

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1974 ஏப்ரல் 24

வெளிநாட்டு விவகாரங்கள், நம்முடைய நாட்டுப் பாதுகாப்புத் தேவைகள், நாணயம், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்குமிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் போன்ற காரியங்களைக் கவனிப்பது என்று பொறுப்பை மட்டும் வைத்துக்கொள்ளலாமே தவிர, மாநிலங்களில் ஏற்படுகின்ற சிறு பிரச்சினைகளையெல்லாம் மத்திய அரசு கண்காணிப்பது என்ற முறை இருக்கக் கூடாது என்று நான் கூறிக்கொள்கிறேன். இந்தக் காரண காரியங்களையெல்லாம் ஆராய்ந்து நாம் ஒரு முடிவு காண வேண்டியது அவசியமாகிருக்கிறது. 17, 18, 19-ஆம் நூற்றாண்டில் இருந்த அரசியல் நிலைமைகளோடு நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், 20-ஆம் நூற்றாண்டில் இன்றையதினம் பல நாடுகளில் பெரிய மாற்றங்கள் தெரியும். மத்திய அரசு பலமாகவிருக்க வேண்டும், அப்படி பலமாக இருப்பதற்கு மாநில அரசாங்கங்கள் எல்லாம் தங்களுக்குள்ள அதிகாரங்களை மத்திய அரசுக்கு சரணடையச் செய்து விட வேண்டும் என்ற கொள்கை ஒத்துக்கொள்ளாத முறையில் அமைந்திருப்பதைப் பார்க்க முடியும். அமெரிக்காவும் இரஷ்யாவும் இரண்டு பெரிய வல்லரசுகள். அந்த நாடுகளில் உள்ள மாநிலங்கள் எல்லாம் தன்னிச்சையாக, சுயேச்சையாக இயங்கி வருவதைப் பார்க்க முடிகிறது. அமெரிக்க நாட்டிலுள்ள மாநிலங்கள் அத்தனையையும் எடுத்துக்கொண்டாலும், இரஷ்ய நாட்டிலுள்ள மாநிலங்களை எடுத்துக்கொண்டாலும், அந்த் இரண்டு பெரிய வல்லரசுகள் என்று கூறப்படுகின்ற நாடுகளில், அத்தனை துறைகளிலும் அந்த மாநிலங்கள் சுயேச்சையாகச் செயல்பட்டு வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டும், ஏன் இத்தனை பெரிய பாரத்தைச் சுமந்துகொண்டிருக்க வேண்டுமென்று விளங்கவில்லை. ஏன் இத்தனை பெரிய சுமையைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்க வேண்டும்? நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அன்று எல்லாச் சுமையையும் பாகிஸ்தான் தன் தலையில் தூக்கி வைத்துக்கொண்டிருந்தது. அங்கு அந்தச் சுமை இறக்கப்பட்டது. இங்கு மாநில சுயாட்சி அடைவதற்கு, பங்களா தேஷ் நிலைமை வரவேண்டாம், சுமையை மேலும் சுமந்து கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, இந்த நிலைமைகளைக் கருதி மத்திய அரசு அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை மனதார வரவேற்று, ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சிபற்றி தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வந்து அதன் மீது நம்முடைய கருத்துக்களைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மாநில சுயாட்சி என்பது நேற்றோ அல்லது இன்றோ பேசப்படுகிற பிரச்சினையல்ல. கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்தப்



1974 ஏப்ரல் 24] [திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

பிரச்சினை பேசப்பட்டு வந்தது. இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பிருந்தே அந்தக் கட்சியின் தலைவர்கள் இதைப்பற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் மாநில சுயாட்சி பற்றி கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. கடந்த கால கழக அரசு காலத்திலே கூட, எது, எதில் மத்திய அரசு தடையாக இருந்திருக்கிறது, என்னென்ன காரியங்களில் மத்திய அரசு குறுக்கிட்டிருக்கிறது, என்னென்ன நன்மைகளை உடனடியாகச் செய்ய முடியாமல் மத்திய அரசு தடையாக இருந்திருக்கிறது என்பதையெல்லாம் அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவருடைய நோக்கமெல்லாம் மத்திய அரசு பலமாக இருக்க வேண்டுமென்பதற்காக சகல பொறுப்பையும் அது தன்னிடம் வைத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதுதான். மாநில அரசு தான் இங்கே மக்களிடம் நேரடித் தொடர்பும் பொறுப்பும் கொண்டிருக்கிறது, மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறது, ஆகையினால் ஒவ்வொரு நிலையிலும் மாநிலத்திலுள்ள மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்வதற்கான அதிகாரம் இருக்க வேண்டியதுதான். இந்தக் காரணங்களைக் கொண்டு மாநில சுயாட்சி வேண்டுமென்று சொன்னால், அது ஏதோ ஒரு பயங்கரமான வாதம், விபரீதமான போக்கு என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் அதற்குத் திரும்பத் திரும்பப் பல விளக்கங்களைக் கொடுத்து, என்னென்ன அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும், என்னென்ன அதிகாரங்கள் மாநில அரசாங்கங்களுக்கு இருக்க வேண்டுமென்று கூறி வந்திருக்கிறார்கள். அதிலே யாருக்கும் எந்த விதமான ஆட்சேபணையோ குறைபாடோ இருப்பதாகத் தெரியவில்லை. நம்முடைய மக்களுடைய தேவைகளை உடனடியாகக் கவனித்துச் செய்ய வேண்டும் என்பதற்காக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோரப் படுகின்றனவே தவிர, அது ஏதோ மத்திய அரசைப் பலவீனப்படுத்த வேண்டும், அதிலிருந்து பிரிந்துவிடவேண்டுமென்ற நோக்கத்தோடு கேட்பது என்பதாகாது. இதை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் விவரமாக அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் மீண்டும், மீண்டும் ஒரு சந்தேகமான எண்ணத்தை சிலர் மனதில் வைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். இந்த அரசினுடைய நோக்கமெல்லாம் தெளிவுபடுத்தப்பட்டாகிவிட்டது. மத்திய அரசினுடைய நிலை என்ன, மாநில அரசினுடைய நிலை என்ன என்றெல்லாம் ஆராய்ந்து கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மக்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் செய்ய வேண்டிய கடமைகளுக்கு மாறாக, புறம்பாக எதிர்ப்பாக, கால தாமதமாக வருகின்ற அதிகாரங்கள்தான்

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [1974 ஏப்ரல் 24

இன்றைக்கு மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற வகையில் மாநில சுயாட்சி கேட்கப்படுகிறது. அதற்கு எந்த விதமான நோக்கமும் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை.

(பிற்பகல் 4.40)

முன்பு ஒரே கட்சி ஆட்சி மத்தியிலும் மாநிலங்களிலும் இருந்தது. எந்தப் பொறுப்பை மாநில அரசுக்குத் தந்தாலும், மத்திய அரசினுடைய நிர்வாகத்தைப் போலவே சொல்லி வந்தார்கள். எந்தக் குறைகள் வந்தாலும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் வித்தியாசம் இல்லாமல், அவைகள் எடுத்துச் சொல்லப்பட்டு வந்தன. இப்போது கால வேறுபாட்டினாலும், மாறுதல்களினாலும் பல மாநிலங்களில் பல்வேறு கட்சிகள் அதிகாரத்திற்கு வந்திருக்கின்றன. இந்த நிலையில் ஆட்சிக்கு வந்த மற்ற கட்சிகள் நடைமுறையில் உணர்ந்த கஷ்டங்களைத் தான் எடுத்துச் சொல்கிறார்களேயொழிய, வேறு ஒன்றுமில்லை. இந்த நிலையில் எந்தவித சந்தேகமும் யாருக்கும் இருக்கத் தேவையில்லை. இந்த நிலையை வரவேற்று, ஆதரித்து உடனடியாக மத்திய அரசு இதற்கான சட்டங்களைத் திருத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மாநில சுயாட்சிக்கு அப்பால் சில கருத்துக்களைச் சொல்ல நினைக்கிறேன். கடந்த காலத்திலே ஒரே கட்சி ஆட்சியில் இருக்கிற மாநிலங்களிலே எத்தனையோ கிளர்ச்சிகளும், மாற்றங்களும், தொல்லைகளும், சங்கடங்களும் இருந்து கொண்டு வந்ததை, இன்றும் இருந்துகொண்டிருப்பதைப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். மந்திரி சபையை மாற்றுவது, போட்ட மந்திரியை நீக்குவது, ஒரு ஆளை மந்திரியாகப் போடுவது, அப்படிப் போடப்பட்டவர் மந்திரிப் பதவி வேண்டாமென்று சொல்வது—இப்படிப்பட்ட ஒரு விபரீதமான போக்கு நாட்டில் இருப்பதைப் பார்க்கிறோம். இவைகள் நாட்டு மக்களின் மனப்பான்மை, அரசியல் வளர்ச்சி, மக்கள் எந்த அளவிற்கு இவைகளைப்பற்றி நினைக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் என்ன வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்கிறார்கள், எதற்காகக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. இவைகளை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்த்து, எதிர்காலத்திலே இந்த மாதிரி ஒரு நிலைமை இல்லாமல் நாட்டு மக்களின் நலனுக்காக ஆட்சியில் இருப்பவர்கள் நல்லவிதமாகப் பணிகளைச் செய்ய வேண்டும், எந்தவிதமான கிளர்ச்சிகளும், குழப்பங்களும் இல்லாமல் ஆட்சி நடைபெறவேண்டுமென்றால், நடைமுறையில் இவைகள் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். இவைகளைப்பற்றி நன்றாகப் பரிசீலனை



1974 ஏப்ரல் 24] [திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

செய்ய வேண்டும். இன்றைக்கு மாநில அரசுக்குப் போதுமான அதிகாரமில்லை என்பதைக் காண்கிறோம். ஆனால் இன்றைக்கு நாட்டில் நடக்கிற குழப்பங்கள், விபரீதங்கள், துப்பாக்கிச் சூடுகள், இவைகளைக் கட்டுப்படுத்த இராணுவ படைகளைக் கொண்டுவரவேண்டிய அவசியம் என்னவென்று பார்க்க வேண்டும். நாட்டிலுள்ள உணவு நிலை, மற்ற என்னென்னவோ நிலைகளை வைத்துக் கிளர்ச்சிகள் செய்து பெரிய மெஜாரிட்டியுடன் நடக்கிற கட்சிகளின் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்டு, மீண்டும் அங்கு பலமான ஆட்சியை அமைக்க முடியாத நிலை இருக்கிறது. பொதுவாக இதையெல்லாம் சிந்தித்தாக வேண்டும். பொதுவாக இளம் தலைமுறையினர் அரசியலிலே, ஜனநாயகத்திலே புரட்சிகரமான மாற்றங்கள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த மாற்றங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று கூட அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. மாற்றம் இருக்க வேண்டுமென்று தான் எண்ணுகிறார்கள். மாநிலத்திலே ஒரு கட்சி ஆட்சி செய்து தோற்கடிக்கப்பட்ட பிறகு, மாற்றுக் கட்சிகளும், மற்றவர்களும் சேர்ந்து, இதற்கான பல குறைபாடுகளை, குற்றங்களைக் கண்டுபிடித்து, தொடர்ந்து கிளர்ச்சி செய்துகொண்டு வருகிறார்கள். இந்த நிலையை இன்றைக்கு நாடு பூராவும் பார்க்கிறோம். இந்த நிலையை மாற்றுவதற்கு என்ன வழி என்று சிந்திக்க வேண்டும். இதை ஒவ்வொரு அங்கத்தினரும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சர்க்காரில் உள்ள அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள் எல்லாம வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சேர்ந்து தலைவரைத் தேர்ந்தெடுத்தால், அவர் முதல்வராக இருந்து நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வருகிறார். ஆனால் மற்றவர்களுக்கு இவர்களைப் பார்த்து பொறாமை வந்துவிடுகிறது. இவர் என்ன மந்திரி, சட்டசபை உறுப்பினர் என்று எண்ணுகிறார்கள். பொறாமையின் காரணமாக இவர்களுக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டுமென்ற சிந்தனைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இன்றைக்கு மாநிலத்திலே அமைச்சர்களும், மற்ற சட்டசபை அங்கத்தினர்களும் இருப்பதைக் கண்டு, தெரிந்தோ, தெரியாமலோ அல்லது வேண்டுமென்றே ஏதோ செய்கிறார்கள் என்பேன். ஏதோ தேர்தல் வந்தது, வயது வந்தவர்கள் ஓட்டுப் போட்டார்கள், மெஜாரிட்டியாக வந்தார்கள், அவர்கள் 5 ஆண்டுகள் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. இன்றைக்கு நமக்கு வேண்டிய கோரிக்கைகளைக் கேட்டுப் பெறவேண்டும். அதைத் தவிர்த்து, கிளர்ச்சிகள் உண்டுபண்ணி எந்த வித நன்மையும் மக்களுக்கு ஏற்படாமல் செயல்படுத்தப்படுகிறது. நம் மாநிலத்தில் நிலைமை அந்த அளவிற்கு வளரவில்லை. ஆனால் மற்ற மாநிலங்களில் பயங்கரமான நிலைமையைப் பார்க்கிறோம். என்னைப் பொறுத்த வரை, அரசியல் மாற்றம் இருந்தால் கூடத்

தவறில்லை, இன்றைக்கு இருக்கிற அமைப்பை மாற்றுவது கூடத் தவறில்லை. இதனால் வருங்காலத்திலாவது வேறு எந்தக் குழப்பமோ, கிளர்ச்சியோ இல்லாமல் இருக்க முடியும் என்று கருதுகிறேன். அமெரிக்காவைப்பற்றி, இரஷ்யாவைப்பற்றிச் சொன்னார்கள். அங்கேயெல்லாம் கவர்னர்கள்தான் ஆட்சி செய்கிறார்கள். அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இங்கேயும் வயது வந்தவர்களால் ஓட்டின் மூலம் கவர்னர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டால், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இப்படி வருகிற கிளர்ச்சிகளையும், தொல்லைகளையும் சமாளிக்க முடியும். இல்லாவிட்டால் மந்திரிகளைப் பார்த்துப் பொருமை, இவர் என்ன மந்திரி, இவர் என்ன சட்ட சபை உறுப்பினர், என்று எண்ணுகிற நிலை மற்ற மாநிலங்களில் இருக்கிறது. தமிழகத்தில் பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. இங்கேயும் பல பிரச்சினைகளை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எதையாவது வைத்துக்கொண்டு இங்கே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி, மாற்றத்தைச் செய்துவிட முடியுமா வென்று மறைமுகமாக பல சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இன்றைக்குள்ள கட்சியாட்சி நாளைக்கு மாறலாம். ஆனால் நிரந்தரமாக மக்களுக்கு நல்வாழ்வும், பாதுகாப்பும் கொடுக்கப்பட்டாக வேண்டும். குஜராத்தில் மந்திரி சபையைக் கலைத்து விட்டார்கள். அங்கே மத்திய அரசால் நியமிக்கப்பட்ட கவர்னர் நிர்வாகம் செய்தும் கூட கிளர்ச்சிகள் நிற்கவில்லை. இன்றைக்கும் துப்பாக்கிச் சூடு தான். இவைகளெல்லாம் எதிர்காலத்தில் பயங்கரமான விளைவுக்குக் கொண்டுபோய்விடும் என்று நான் எண்ணுகிறேன். இதைத் தவிர்க்க வேண்டும். தமிழகத்தில் நல்லவேளையாக இந்த நிலை இல்லை. நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னர் நிர்வாகம் செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். எவ்வளவு தரக்குறைவாக தமிழகத்தில் ஜனநாயகம் செயல்படுகின்றதென்று நாம் பார்க்கிறோம். கடந்த 4, 5 நாட்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நடந்தது. இனி சட்டசபையோ, அமைச்சர்களோ, மந்திரிகளோ இருக்கத் தேவையில்லை என்று நான் நினைக்கிற அளவிற்கு இன்றையதினம் மாநிலத்திலுள்ள கட்சிகள் செயல்படுகின்றன என்று வேதனைப்பட்டேன். முதல்வர் உரையைக் கேட்டுவிட்டு 2-30 மணிக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.ஏ., அவர்கள் ஹாஸ்டலுக்குச் சாப்பிடப் போனபோது வழியில் டாக்சிகள் நிறுத்தியிருப்பதைப் பார்த்து, என்னடா இப்படி டாக்சிகளை நிறுத்தியிருக்கிறார்களே என்று சொல்லி, தன் காரை ஓரமாக நிறுத்திவிட்டு உள்ளே போனார். நான் உள்ளேயிருந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்தேன். டாக்சிக்காரர்கள் சட்டசபைப் பசங்கள் என்று சொல்லி திட்டினார்கள். நான் என் ரூமிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தேன். 30, 40 பேர்கள் சட்டசபை உறுப்பினர் காரை பட்டப்பகலில் வெளியில் கொண்டுபோய் மௌண்ட் ரோடில் வைத்துவிட்டார்கள். அதைப்பற்றிப் பத்திரிகையில் கண்டபடி



(பிற்பகல் 4.50)

எழுதுகிறார்கள். சட்டசபை அங்கத்தினர் ஒரு டாக்சி டிரைவரைச் செருப் பால் அடித்துவிட்டார்; அதனால் பெரிய குழப்பம்; திட்டிவிட்டார், அதனால் பெரிய கிளர்ச்சி என்றெல்லாம் பத்திரிகையில் போடுகிறார்கள். பத்திரிகைகள் தரத்தையும், இன்றைக்கிருக்கிற அரசியல் நிலையையும் பார்த்தால், மிகவும் கேவலமாக இருக்கிறது. ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்காலத்தில் பெரிய புரட்சியைச் செய்யப் போகிறோம், நல்ல நிர்வாகத்தைச் செய்யப் போகிறோம் என்று சொல்லக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள்—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அப்படிச் செய்தார்கள் என்று சொன்னார்கள். வட சென்னைக்கோ, தென் சென்னைக்கோ அவர் பெரிய தலைவராம். அவர், எம்.எல்.ஏ. பசங்கள் என்று திட்டிவிட்டு, அந்தக் காரை மவுண்ட் ரோடுக்கு ஓட்டிக்கொண்டுபோய், பொது ஜனங்களுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்திருக்கிறார். அதில் ஒன்றுமில்லையென்று சொல்வதற்காக, நடக்காத ஒன்றை எதற்காக நடந்ததென்று சொல்லப் போன உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ.-வையும், செஞ்சி எம்.எல்.ஏ.,-வையும் அடிக்க வருகிறார்கள். எம்.எல்.ஏ.-க்களை காலில் விழச் சொல்லுங்கள் என்று அவர்கள் சொன்னதாகப் பொதுமக்கள் சொல்லுகிறார்கள். யாரும், எது சொன்னாலும் கேட்கவில்லையாம். அங்கே இருக்கும் போலீஸ்காரர்கள், எம்.எல்.ஏ.-க்களைப் பார்த்து போய்விடுங்கள், இங்கிருக்கும் நிலைமையில் உங்களைக் காபந்து பண்ண முடியாது; இங்கே எந்தச் சமாதானமும் எடுபடாதென்று சொல்லி, அனுப்பிவிட்டார்கள். நாட்டிலே எத்தனையோ நடக்கிறது. அதையெல்லாம் சொல்லவில்லை. இன்றைக்குத் தமிழ் நாட்டில் எந்த அளவுக்கு ஜனநாயகம் இருக்கிறது, எந்த அளவுக்கு மக்கள் செயல்படுகிறார்கள், எந்த அளவுக்கு தலைவர்கள் செயல்படுகிறார்கள்; அதற்கெல்லாம் கட்சிகள் எந்த அளவுக்கு ஆதரவு தருகின்றன என்பதைப் பார்த்தால், மிகவும் வருத்தமாக இருக்கிறது. அந்த நிலையைப் பார்க்கும்போது, இது என்ன சட்டசபை, எதற்கு அமைச்சரவை என்று தோன்றுகிறது. கவர்னர் ஒருவரை மாத்திரம் ஜனநாயக முறைப்படி—அமெரிக்காவில் உள்ளதுபோல், ரஷ்யாவில் உள்ளதுபோல் ஓட்டெடுப்பு மூலம் தேர்ந்தெடுத்துவிடலாம் என்று தோன்றுகிறது. இங்கே மேலவை ஒன்று, கீழவை ஒன்று இருக்கிறது. கீழவையில் இருக்கிறவர்கள் மேலவை எதற்கு, அதை எடுத்து விடலாமென்று சொல்லுகிறார்கள். முதல்வர் அவர்கள்கூட ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டசபையில் தீர்மானம் வந்துவிட்டால் போதுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்களைவிட அதிகாரிகள் யாரும் இல்லை; நான் சொன்ன பிறகு இவர்கள் யார் என்று சொல்லலாம். அதைப்பற்றி விவாதிக்க விரும்பவில்லை. மேல்சபை, கீழ்சபை,

அமைச்சர்கள் ஒன்றும் வேண்டாம். இந்த மாதிரி நாட்டிலே பொறுமையும், தப்பான எண்ணமும் வருகிற தலைமுறையினருக்கு வந்து, இன்றைக்குத் தொல்லைகளுக்கு ஆளாகி, நாட்டிலே பல குழப்பங்களை உண்டுபண்ணுகின்றன. இதைத் தவிர வேறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்காலத்தில் இன்னும் பயங்கரமான நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதுதான் தெரிகிறது. எனவே, இதில் கொஞ்சம் எச்சரிக்கையாக முன்கூட்டியே அத்தனை பரிகாரங்களையும், சட்ட திட்டங்களையும், அரசியல் திருத்தங்களையும் உண்டு பண்ண வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலுள்ள அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இதை ஏதோ தவறுதல் இருக்கிறதென்று சொல்லவில்லை; யாரையும் குறை கூறவுமில்லை. ஆட்சியில் பொறுமை அதிகமாக இருக்கிறது. அதிலே எத்தனையோ குறைகளையெல்லாம் சொல்லிக்கொண்டு, ஒரு நல்ல நிர்வாகம் இன்றைக்கு சீராகச் செயல்பட முடியாமல் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு எந்த நாட்டிலும் இல்லாத பத்திரிகைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவர்களுக்கு வேலை ஒன்றும் கிடையாது. பொழுது விடிந்து, பொழுது போனால் தமிழக அரசு இதைப் பண்ணியது, அதைப் பண்ணியது, இந்த ஊழலைச் செய்தது என்று எழுதுகிறார்கள். பத்திரிகை என்றால், அதிலே கொள்கைகளை விளக்க வேண்டும்; மக்களின் தேவைகளைச் சொல்ல வேண்டும்; மக்கள் இந்தக் காரணத்திற்காக வருத்தப்படுகிறார்கள்; இந்த நிலையால் கஷ்டப்படுகிறார்கள்; எனவே, இதைச் செய்ய வேண்டும் என்பனவற்றையெல்லாம் சொல்ல வேண்டும். இருக்கின்ற பத்திரிகைகளில் 4, 5-ஐத் தவிர, மற்ற பத்திரிகைகள் எல்லாம் இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று குறைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சியை மாற்ற வேண்டுமென்பதற்காக, தரக் குறைவாக, மட்டமாக எவ்வளவு தூரம் எழுத வேண்டுமோ அவ்வளவு தூரம் எழுதுகிறார்கள். இந்த நிலையெல்லாம் 10 ஆண்டுகளுக்கு மாறவேண்டும். அப்படிப்பட்ட மாற்றம் தமிழகத்திற்கு வேண்டும். அதற்குப் பிறகு, அந்த மாற்றம் இந்தியா பூராவுக்கும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். இன்று நாட்டிலே நடக்காததை, நடந்ததென்று சொல்லுகிறார்கள். அதற்காக வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கெல்லாம் பத்திரிகைகள் ஆதரவு தருகின்றன. பெரிய தலையங்கங்களை அதற்காக எழுதுகின்றன. இந்த நிலைமையில் போனால், வரும் தலைமுறையினர் எல்லாம் இதை வேடிக்கையாக ஏற்றுக்கொண்டு, இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு தங்களை ஆளாக்கிக்கொண்டு, தமிழகத்தில் குழப்பத்தையும், தொல்லைகளையும் உண்டுபண்ண வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.



பொதுவாக முதல்வரவர்களால் கொண்டுவரப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்தை வரவேற்று ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் ஜனநாயக முறைப்படி, ஓட்டெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரின் நிர்வாகம் நடந்தாலே போதுமென்று மக்களின் நன்மைக்காகக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

THIRU S.T. ADITYAN : Hon. Chairman, Sir, this House is now deliberating upon a point which future generations will certainly regard as a most histroic one.

Today, we are setting the whole country on a truly democratic path. I should say, Sir, that the golden age of democracy of this country is dawning today. Such is the historic importance of the Resolution that has been moved and I should certainly say, Sir, that I am proud to take part in the discussion thereon. I am proud to be living now. I am old and I have seen a number of improvements that have been granted to us from the time of the Britishers and a number of democratic principles set into our Constitution, but none of them has equalled the present Resolution because it is herein that we see the true seed of democracy.

Sir, it has been objected to and I think it has been objected to on the ground that this Resolution, by giving more powers to the States will weaken the Centre. May I say, Sir, that now the Centre is ffabby, too fat and that a sliming of the Centre will be the only reform to make the Centre strong. Sir, we know the story of the man who had elephantiasis. I think he had a very big leg and boys were afraid of going near him. But, when it was found that he could not move the leg, the boys were simply playing around him. Till the time it was discovered that it was an elephantiasis leg, he was supposed to be very strong. The case is now the same with the Centre. The Centre has become too flabby and too unmanageable and that is the position now at the Centre. Now therefore, this Resolution seeks to curb the power of the centre so that it may be limited and the Centre may slim a little.

Sir, it has been mentioned on page 2 of the "Tamil Nadu Government views on State Autonomy and the Rajamannar Committed Report" that "there has been a strong tendency to work the Constitution as a unitary one treating the States as subservient.

to the Centre". That is so in most of the Federal Governments. Once a Federal Government is set up and the relation between the Federal Government and the local Governments is not clearly defined, it generally happens that the Central Government begins to encroach upon the powers of the State Governments. That is the tendency which, I find, has been noted by so many authors and one of them is Professor weir I find, Sir, that it is a tendency throughout the world and it is not a tendency peculiar to this country. Everywhere, the Centre begins to encroach upon the rights and duties of the various State Governments. The Federation, like a piece of blotting-paper or a picece of sponge, goes on absorbing the rights and privileges of the State Governments. Therefore, it becomes the duty of the State Governments to watch their powers jealously so that their powers may not be eroded everyday.

Sir, there is one other aspect that I should emphasise here. In India, now, the general tendency is that all the funds of the people taken away as taxes, are treated as the exclusive property of the Centre, and what is given as subvention is the grant to the State Governments, is treated as though they were doles. The whole idea is a topsy-turvy one. Actually the money that belongs to the State. It should be in the hands of the State and the Centre should come up for help to the State. Instead of it, what is happening now ? In Tamil to mean "grant", we use the word "Maniyam". As though the money belongs to the Centre, as though the Centre is giving us help, and as though it is their money, they are distributing it, at their sweet will and pleasure, as doles to the State Government. That idea has to be given up. We should get the fundamental idea that the money belongs to the State and the Centre is there only as the tax-collector for certain purposes. It should be as the Centre were entitled to levy a tax upon the State Government for certain purposes. The attitude that the tax money is the money of the Centre is a misleading conception and I would say, Sir, only State autonomy will reserve that idea. It is, therefor, very necessary that we should get a look into the whole taxation proceedings and also into the system of levy. As I said, Sir, the Centre has got a tendency to absorb the powers of the State. When we were thinking that the Corporation tax, being part of the income-tax would come to us.



what has happened ? The Corporation tax, though it would be rational, is a part of income-tax. Instead of the income-tax being paid up by a single person, when it is paid by a corporation or a group of persons, it belongs to the Centre. The Corporation tax is a sizable income-tax and it now goes to the Centre. On agricultural income-tax also, recently an inroad has been made and on that subject, speeches have been delivered in this House itself. The agricultural income-tax becomes the basis on which the slabs are now marked in the Centre. That is an inroad. Though it is not mentioned so, it is an inroad actually into the powers of the State Government. What about industries ? Industries is one of the subjects we find in the State List also. But, actually what has happened? Can the Government themselves start an industry, without applying to the Centre for its clearance and for monetary help? And where is, now, the old capital market? The capital market has evaporated completely and has been absorbed by the Centre. What we find now is that the whole economy of the State has been turned topsy-turvy by the interference of the Centre the all-absorbing gigantic octopus which has spread its limbs throughout the whole of the country.

Sir, under these circumstances, it is quite essential that the State should come into its own and I am proud, as a Tamilian, that Tamil Nadu is spearheading this demand and this idea. I found from the newspapers, a few days ago, that another Chief Minister was also interested in this and that he would like to contact the Chief Minister of Tamil Nadu. I am proud to say that we are now spearheading this movement.

Sir, what should be the real function of a Federal Government? What was conceived as a Federal Government in this country, actually became a mongrel. It is neither Federal Government nor Unitary Government. What has become of it? The whole thing has become a compromise between two or three conflicting systems and then, as most of the mongrels and as most of the compromises do, it did not satisfy either side. Please permit me to read from Professor Where's Book on Federal Government : "Yet the federal principle does not prohibit such re-adjustments and if they can be made, then there will be sufficient right to keep with the modern

economic life." Unless re-adjustments are made, modern economic life will be ruined. "Then this unity in federalism allows each region to govern itself in its own way. This exercise in self-government is sufficiently valuable to work the Constitution. If a region cannot support itself, then it is entitled to be guaranteed in the federal constitution with sufficient resources under its own control to help it to perform its function." Sufficient resources, under its own control to help it to perform its functions. "It is not enough to say that only those who can afford to pay deserve to have it. The federal principle of equality of States between regions which form the federal Government union and between those regions and the general ensures when it is applied to each region, whatever its resources, will be enabled to govern itself and regulate its life in its own way."

Sir, that is the principle of Federalism. What do we find? We are simply asking the Central Government to consent to Federalism which was the seed, which was the nucleus of the Constitution, which was the purpose behind the Constitution. The purpose has now been thwarted. We do not know what the purpose is. We do not know where we are going. My hon. Friend Thiru S. S. Ramaswami Padayachi was telling us: "We do not know where we are. We do not know what is the aim; we do not know what is the purpose; we do not know what is the core of the whole of the Constitution now."

Sir, then there is only one more subject to which I have often alluded in this House and it is this : It is inflation. We find that every wage increase will also increase inflation. The Central Government without consulting the State Government increases the wages. What happens is increase ends in inflation. The German Economic Wizard Mr. Eerhard says that every wage increase will be reflected in inflation. We also find that inflation is sponsored by the Central Government; and just like the syphilitic blood it goes on circulating in every State which suffers. Mr. Eerhard has proved that every inflation affects not only every state but also every individual. Everyone who goes to a shop has to pay more and every shop-keeper again sells at a high price and every man is going to pay more and more. What actually happens is



this : when there is an inflation of one crore of rupees, it multiplies into one thousand crores of rupees when it comes to the people A mere one crore of rupees inflation multiplies into thousands of crores of rupees ultimately. Not only that. We start a projest, for instance, at an estimated cost of one crore of rupees. It takes a year or two or perhaps three to implement the project. What do we find?. We find that one crore of rupees is not sufficient and it actually costs Rs. 3 crores. Where will the money come from? The real reason for the rise in the cost of the project is the policy of the Central Government because it has inflated the money and on account of that, cement becomes costly, lobour becomes costly, transport becomes costly. Therefore, on account of the inflation, who suffers? Are the Delhi Government alone suffering? No. We are also suffering. Our plans are being spoilt. We start the project with an estimate for one crore of rupees and it later costs Rs. 3 crores on account of the inflation. Who is to bear the increase in cost?

Once I made a suggestion here. It was not accepted by our Government as its demand. It relates to the power of coinage and my suggestion was that it should reside with the State Government. The other day when I mentioned this, the hon. the Leader of the Opposition Thiru Rajaram expressed surprise. I have seen countries where there are two systems of currency. One was the Federal Republic of Germany where there was the Retichsmark and the Deutsch mark.

Not only that. I have known of another country also in which there were two systems of coinage. After all we need not go far away to find it. It was our own country: We had known that in pre-Independence days, the Hyderabad State was having its own coinage the Travancore State was having its own coinage. What happened? Did it spoil the economy? Was there any economic coinage; the Travancore State was having its own coinage. What one currency. Without the power of currency, it will not be possible to check the rise in prices.

There are economists here as elsewhere, I should be enlightened on the way in which we can cheek the rise in prices with the powers we have got at present. How can the price index be controlled? With the powers we have got, is it possible to control

it? Is it at all possible? I do not know whether it will be proper for me to throw a challenge on this point. But I want to be enlightened on the manner in which the prices could be controlled and the run-away prices could be brought back again, unless we have got a control over money supply. The increase of production is one way and the other way is to control the issue of currency. These are the only two ways to control prices. If the control of currency is done by the Centre alone, then how is it possible for the State to reduce the prices in this State?

Sir, one of the suggestions in the Rajamannar Committee Report is that Articles 256 and 257 of the Constitution should be omitted. These are the two Articles under which the Centre has got a power to control the State by orders. Alternatively, it is suggested that no direction under any of those Articles could be issued except in consulation with, and with the approval of the Inter-State Council. Sir, I would say that for the printing of more paper money which causes inflation, similar consultation should be made with the State Governments. Unless there is such consultation, how is it possible to control our expenses and implement our plans? There should be at least consultation with the State Governments.

Alternatively, I would also make another suggestion which is this: We start a project at an estimated cost of one crore of rupees. It happens that it ultimately costs Rs. 3 crores due to inflation. In that case, who is to bear this additional cost of Rs. 2 crores? I submit that it is the Central Government that should again come and pay us the difference in cost which was created by inflation. Since the Central Government is the culprit that has created the inflation, it should be penalised. The Central Government should be penalised if a one-crore project comes to cost three crores of rupees. The Central Government should have consulted the State Governments btfore hand. If they do not, they should at least pay the difference because it is only due to the misdeeds of the Central Government and the inflation created by the Centre. Sir, is it not reasonable and just? You created the inflation. Am I to bear the consequence of it: You should at least give a part of the money. The printed currency, which is a profit of the inflation created, should really always go to the States. That is an elementary principle of equity and justice. Many have



mentioned elaborately about this. But, unfortunately, in this report given to us by the Government, I do not find a reference to inflation. Sir, I believe that if such a power of controlling the inflation were there, the unfortunate incidents that now happened.

THIRU S. NARAYANASWAMY: Sir, inflation is not a statutory power.

THIRU S. T. ADITYAN: Sir, I do not hear the hon. Member.

THIRU S. NARAYANASWAMY: Sir, creating inflation is not a statutory power.

THIRU S. T. ADITYAN: Sir, unless the Statute gives the power of printing more currency, how can there be an inflation? May I ask it? Inflation does not come off by itself. Inflation comes by printing more paper currency at a particular time. That is definite. Before they exercise their statutory power, they should at least consult the patient and that is all what I am saying.

Sir, I was saying that if this power of controlling the prices had been with the States, the unfortunate incidents that happened in some of the Northern States might not have happened, and the unfortunate loss of lives might not have taken place.

Sir, only one more word and with that I finish. The most important question that we now ask is—what about the residuary powers? As I said, here the outlook has to be changed. The State is ours, the money is ours. The Centre should come in only, for a share or a dole. In the same way, how about the residuary powers? For an autonomous State, certainly such power should reside here. It is rather incongruous that this residuary power should now reside in the Centre. It is by using these residuary powers, using their powers of directivts, that we are now solely pushed into debts which are too much and beyond our bearing capacity.

Sir, therefore, I am proud to say that I have been given an opportunity, that I have gained an opprtunity to support this most revolutionary proposition. It is a proposition that resides in the heart of every Tamilian and I should say that it is a proposition that resides in the heart of every other Indian; wherever he be, it is a proposition that resides in all humanity. Wherever man is,

he is always hungering for and thirsting for independence. This is a part of his rights. Man is not prepared, always, to mortgage away his rights. Man wants his rights and that is human tendency. With this, I support this Resolution. Thank you.

*THIRU D. MONTE DENZIL VINCENT: Mr. Chairman Sir, I am thankful to you for giving me an opportunity to participate in this debate. I wish to make it clear that I am neither opposing nor supporting this Resolution.

Let us consider the background of the whole question of Centre-State relations. For over two decades. we have had a Cnstitution with a bias in favour of the Centre and the States in the position of dependants. Dr Ambedkar claimed that the Constitution framed by him was both unitary and federal, depending on the requirements and the circumstances. Sir, in this context, we must consider the recommendations of the Rajamannar Committee. There is no doubt that the Rajamannar Committee consisted of highly eminent and distinguished persons and by no stretch of imagination could we accuse them of being partisan. One need not agree with all the recommendations or many of the recommendations. But inasmuch as the Government of Tamil Nadu have taken the trouble of discussing the issues threadbare to present a report to the people of India, the time is opportune for the Union to take note of these recommendations and have a full-dress debate.

Sir, let us not forget that the States have their own important role to play—law and order, development functions, etc. Where States are constituted on a linguistic basis the urge for freedom to plan the nation building departments would increase. If States have a Legislature, there is not much meaning in reducing the Legislature to a shadow of what it should be. After all, State administrations which are closer to the decisive factors are subject to public pressures and are bound to respond. To exclude them from the decision-making processes is to neglect the foundation on which the superstructure is to rest.

Sir, I suggest that the time has come for an immedaiate consideration of the powers of the States. Once the States are made more responsible and have definite resources alloted to them





on an autonomic basis, they would be able, through the Legislatures, to control and shape the policies in the interest of the common man. But, it is one thing for the States to suggest that New Delhi should have a second look at the Centre-State equation and it is quite another thing to claim that Tamil Nadu alone, out of the 21 States and 9 Union Territories, should be given preferential treatment. In taking up this issue, it is not advisable that we should have a confrontation with the Centre or that we should merely haggle over funds. Finance is an important aspect, but this could create a breach in the Centre-State relations. What should be a very constructive debate to evolve a viable relationship for the future should not degenerate into a mere haggle over funds. Sir, one thing more. The Centre cannot function as a banker for providing overdrafts. Even at the present time, more than 14 of our States have a deficit to the extent of Rs. 2,500 crores.

There may be much in the Rajamannar Committee report which will be unacceptable to New Delhi. But those provisions that are calculated to strengthen State Governments, without weakening the Union, surely deserve our attention.

The need for a dialogue is, therefore, urgently necessary, Sir. If today Tamil Nadu wants autonomy, it is not for Tamil Nadu alone. It is for all other States in an inter-dependent India. If the Centre could start a dialogue with all the States, we would be in a much better position to work out a happy and healthy relationship between the demands for autonomy and the necessities for inter-dependence. The Rajamannar Committee report has made a significant contribution by drawing our attention to the various fields in which there is scope for more autonomy and inter-dependence. We cannot gain anything by shutting our eyes to the problems that face us. It is clear that a country of this size, to be democratically governed and to display greater initiative and progress, cannot afford to have the kernel of power at the Centre and shell of a form of democratic Government in the States.

Sir, I have done.

* THIRU P. YELLAMANDA: Hon. Deputy Chairman, I am very glad that I have been given an opportunity to speak a few words on State Autonomy which is the birth-right of every State

so far as the immediate welfare of the masses is concerned. It is needless to say that our Hon. Chief Minister has been fighting tooth and nail with the Central Government to get our legitimate powers more and more to our State and to get this State Autonomy which, in fact, is the panacea for all the ills of the State. Thanks to the ceaseless efforts of our Hon. Chief Minister in this direction, in driving justice into the mind of the Centre. The leading jurists, great economists, great educationists and eminent politicians of outstanding knowledge, experience and prudence have agreed *in toto* with the views of our Hon. Chief Minister in regard to the giving of more powers to the States in the interests of both the Centre and the States. Where is the question of loss of powers to the Central Government, if it retains only defence, currency, foreign affairs and communication, etc., and by their giving more powers to the States in the fund of Education, Agriculture, Health etc., etc.? I think the relationship between the Centre and the State will become more cordial and it will go a long way towards building up the progress of the country effectively. After all, to-day the State is asking for more powers. By way of delegation of powers to the States, by way of giving some more powers to the States in what way will the Centre be affected? In what way is it affecting the unity and integrity and sovereignty of the country? After all, it is our legitimate right and it is the legitimate right of every State. Why can 't we achieve this? I think there are no two opinions about this anywhere in any part of India. For small matters like the change in the name of a road or a street, we have to seek the approval of the Centre which is more concerned with the State than with the Centre. For those small things, the Centre is taking a lot of time. Thus, it is hindering the growth and the development of the State. We should realise it and fight for our rights. In various matters, there is duplication of work. There are items of work done by both the Centre and the States. It is really a colossal waste of national resources; it is a waste of energy, waste of time and waste of everything. So, this must end immediately. It is for this reason that Dr. Kalaignar Karunanidhi, one of the exponents of State Autonomy is fighting tooth and nail for more powers. It is high time for us to think and analyse all the facts and causes of all these things. Otherwise, there may arise a grave situation. To-day it is up to our Chief



Minister to protect the legitimate rights of the State as the other State Governments are puppets in the hands of the Centre. So, I am requesting the Hon. the Chief Minister and my dear colleagues here to fight for our legitimate rights. . .

*திரு. கே. ராஜாராம்:* தலைவரவர்களே, இங்கே நாம் நம்முடைய மாநில அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது பேசுகின்றபோது மற்ற மாநில அரசாங்கங்களைப் பற்றி அபிப்ராயம் கூறுவது நல்லதல்ல. மற்ற மாநில அமைச்சரவைகளை 'பப்பெட்' என்று கூறுவது சரியல்ல. நம்முடைய மாநிலப் பிரச்சினை பற்றி மட்டும் கூறுவது நல்லது. 'பப்பெட்' என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாமென்று துணைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU P. YELLAMANDA: So, lastly, the responsibility lies upon the shoulders of the Tamil Nadu Government to protect the legitimate rights of the States. In conclusion, I once again thank the Hon. the Chief Minister and other leaders who are vigorously fighting for State Autonomy. As far as I am concerned, I will stand by the side of Dr. Kalaignar Karunanidhi, one of the greatest dynamic forces in India. Thanks.

*(பிற்பகல் 5.30)*

*திரு. சி. வி. ராஜகோபால்:* மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாநில சுயாட்சிபற்றியும், ராஜமன்னார் குழு அறிக்கைபற்றியும் தமிழ் நாட்டினுடைய முதல்வரவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல எனக்கு வாய்ப்புத் தந்ததற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்காமல், ஒருமைப்பாடு எப்படி இருக்க வேண்டுமென்ற நிலையை உணர்த்துவதற்குத் தான் இந்த மாநில சுயாட்சிக் கொள்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று நாம் இந்த வார்த்தையைச் சொல்வதனால் ஏதோ இந்த மாநிலத்தைப் பிரித்துக்கொண்டு, தென்னாப்பிரிக்காவிற்கு ஓடி விடுவார்களோ, ஜர்மனியாருக்கு ஓடி விடுவார்களோ, அல்லது அமெரிக்காவிற்குப் பக்கத்தில் ஒரு பெரிய இடத்தில் கொண்டுபோய் வைத்து விடுவார்களோ என்ற சந்தேகம் யாருக்கும் இருக்காது என்பது திட்டவட்டமாகத் தெரியும். ஆனால் நாம் மாநில சுயாட்சி தேவை என்பதற்காக இருக்கிற ஆதாரங்களைக் காட்டுகிறோம். மத்திய அரசு இருக்கிறதே, அந்த அரசுக்கு

அதிக அதிகாரம் இருக்குமானால், பெரும் பூதாகாரமான அதிகாரம் இருக்குமானால், அதற்கு எங்காவது ஆபத்து வந்துவிடுமோ என்ற பயம் தமிழ் மாநிலத்திற்கு வந்திருக்கிறது. கொச்சை வார்த்தையில் சொல்வதானால் பையனுக்குக் கொஞ்சம் தலை கனத்து விட்டது என்று சொல்வார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது கொச்சை வார்த்தை அல்ல.

திரு. சி. வி. ராஜகோபால்: பையனுக்குத் தலையாடுகிறது. தீர்ந்துவிட்டான் என்று தமிழ் நாட்டில் பழமொழி சொல்கிறதுண்டு. இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத் தான் எங்களுடைய மாநில சுயாட்சிக் கோரிக்கை இருக்கிறதே தவிர, வேறு ஏதாவது காரணம் இருக்கிறதாவென்றால் இல்லை. ஒவ்வொரு மாநிலத்தில் அந்தந்த மாநிலத்திலுள்ள மக்களை வாழவைக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் வருகிறபோது, அந்த மக்களின் வாழ்க்கையை வளமாக்க இந்த மாநில சுயாட்சி வேண்டுமென்று நாம் சொல்கிறோம்.

மத்திய அரசு அதிக அதிகாரங்களை வைத்திருக்கிற காரணத்தினால் தான், முன்னாலே திரு. ஆதித்தன் அவர்கள் பேசியபடி, 'இன்ஃப்ளேஷன்' அதிகமாக உண்டாகியிருக்கிறது. நோட்டுகள் அதிகமாக அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி மாநிலங்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. இந்தக் காரணத்தினால் தான் 'இன்ஃப்ளேஷன்' வளர்ந்துகொண்டு வருகிறது. இப்படி நோட்டடிக்கிற விஷயத்தை அவர்களுக்கே விட்டு விடலாம். இராணுவத்தை அவர்களே வைத்துக்கொள்ளட்டும். 'எக்ஸ்டர்னல் அபேர்ஸ்' போன்றவைகளை அவர்களிடம் விட்டுவிட்டு, மிகச் சாதாரணமான அதிகாரங்களை இங்கே நாம் வைத்துக்கொள்ளலாம். இங்கே இருக்கிற கோட்டைக்குள்ளே புல்லை வெட்ட வேண்டுமானால், சின்ன புல்லை அகற்ற வேண்டுமானால் கூட அதற்கான அதிகாரத்தை 2,000 மைல்களுக்கு அப்பால் வைத்திருக்கிறார்களே, இந்தப் பரிதாபகரமான நிலை மாற வேண்டுமென்பதற்காகத் தான் மாநில சுயாட்சி கேட்கிறோம் It is mere adjustment and nothing else. It is State Autonomy. வெறும் அட்ஜெஸ்ட்மெண்டிற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். திட்டம் போடுகிறார்கள் என்றால், 1,000 கோடி, 1,500 கோடி ரூபாய்க்கு என்று போட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பணம் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரிவதில்லை. அதனால் இன்றைக்கு ஒரு விலை, நாளைக்கு ஒரு விலை என்று இப்படி விலை ஏறிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. இன்றைக்கு 10 மடங்கு விலை ஏறியிருக்கிறது. மத்தியில் அதிக



அதிகாரங்கள் வைத்திருப்பதனால் இந்த நிலை ஏற்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே, தமிழ் நாட்டு மக்களுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்தது. நாம் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். காவிரிக் கரையில் பெட்ரோல் கிடைக்கிறது, தூத்துக்குடிக்கு அருகில் யூரேனியம் கிடைக்கிறது, பூமிக்கு அடியில் கனி வளங்கள் கிடைக்கின்றன என்றெல்லாம் சொன்னோம். பதவிக்கு வந்ததற்குப் பிறகு, அதிகாரமில்லாமல் நம் கையைக் கட்டிவிட்டபிறகு, ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் வருகிறது. மத்திய சர்க்கார் இவ்வளவு அதிகாரங்களை வைத்துக்கொண்டு மாநிலங்கள் எல்லாம் புழுங்கிச் சாவதேன்? எல்லா மாநிலங்களும் புழுங்கிக்கொண்டு, வெந்துகொண்டு, நாட்டு மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லையென்ற எண்ணம் மாநிலங்களில் பரவி, அதனால் மத்தியில் ஏதாவது ஆபத்து வரும் நிலை ஏற்படாமல் இருக்க மாநில சுயாட்சி கேட்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. அண்ணா காலத்தில் இதைப்பற்றிச் சொல்லவில்லை என்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு மாநாடு நடத்தினீர்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நான் நடத்தவில்லை. தமிழரசுக் கழகத் தலைவர் மாநாடு நடத்தினார்.

திரு. சி. வி. ராஜகோபால்: அப்போது தாங்கள் தமிழரசுக் கழகத் தலைவராக இருக்கிறபோது அந்தக் கட்சியின் சார்பில் நடந்த மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தந்தால் தான், மாநிலங்களுடைய வாழ்வு, மரியாதை, கௌரவம் பாதுகாக்கப்படும் என்று சொன்னார்கள். இன்னொன்றை அவர்கள் சொன்னார்கள். இரகசியமான விஷயம் என்று எண்ணாதீர்கள். அவர் ஆட்சிக்கு வந்தவுடனே, ஒரு கணம் எண்ணிப் பார்த்தார். முதன் மந்திரியானார். கோட்டைக்குள்ளே நுழைந்தார். இருக்கிற ரிகார்டுகளைப் பார்த்தார். சட்டங்களைப் பார்த்தார். மக்களையும் பார்த்தார். "வறுமையையும், ஏழ்மையையும் பார்த்து என்னென்ன செய்ய வேண்டுமென்று எண்ணி வந்தோமோ அவைகளையெல்லாம் என்னால் செய்ய இயலாது, எனக்கு விலங்கு போடப்பட்டிருக்கிறது. விலங்கோடு நாட்டு மக்களுக்குத் திட்டவட்டமாக எதையும் செய்ய முடியாது. ஆகவே தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்" என்பதனைக் குறிப்பிட்டிருக்கிறார். எதிரில் உள்ள நண்பர்கள் அண்ணாவிற்கு ஒன்றுமே தெரியாது, அவர் சொல்லவில்லையென்று குற்றச்சாட்டைச் சொல்கிறார்களே; அதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். பதவிக்கு வந்தவுடனே சொன்னார்கள். இன்னும் கூட அழுத்தந்திருத்தமாகக்

[திரு. சி. வி. ராஜகோபால்] [1974 ஏப்ரல் 24

கூறிக்கொள்கிறேன். அவருக்கு ஒரு வருஷத்திற்குப் பிறகு சலிப்பே வந்தது, நான் என் நாட்டு மகனுக்கு பல திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணினேனே, அவைகளைச் செய்ய முடியவில்லையே என்று நெஞ்சாரப் புழுங்கி, ஐயோ நான் மத்திய சர்க்காரை அனுவேண்டியவனாக இருக்கிறேன் என்று மனம் புழுங்கினார். இங்கே தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், இல்லை என்கிறார்கள். உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டால், இந்த மாநிலத்திலிருந்து கம்பையும், கேழ்வரகையும் கடத்திச் செல்கிறார்கள். 25 ரூபாய் விற்கக் கூடியது 125 ரூபாய் அளவில் விற்கிறது. எந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு தடுப்பது, சக்தி இல்லையே என்று சொன்னார்கள். இந்த வேதனை என்பது இங்கே மட்டுமல்ல. மற்ற மாநிலங்களிலும் இந்த நிலை இருக்கிறது. அங்கே சொல்வதற்குக் கூச்சப்படுகிறார்கள். முன்னாலே பின்னாலே இருந்த உறவுகள் காரணமாக, மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி என்றால், மாநிலங்களிலே காங்கிரஸ் கட்சி ஆட்சி என்கிற காரணத்தினால், அவர்கள் ஜே போட்டால் இவர்களும் ஜே என்று சொல்லவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால் அவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். அச்சப்படுகிறார்கள். அவர்களுக்கில்லையா வேதனை? அவர்கள் தங்கள் மாநிலத்தை இப்போது இருக்கிற அதிகாரத்தை வைத்து வளப்படுத்திக் கொள்வது கஷ்டமாக இருக்கிறது. மற்றவர்கள், எதிரில் இருக்கிற எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூட, அதிக அதிகாரம் பெற்று விட்டால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து விடுவார்கள் என்று நினைக்கிறார்கள். அப்படி எண்ணக் கூடாது. பொதுமக்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். அப்படியிருந்தால், 5 வருஷத்தில் தீர்த்துக் கட்டுவார்கள். இந்த சந்தேகத்தை வைத்துக்கொண்டு இதைப் பார்க்கக்கூடாது. நாட்டின் எதிர்காலத்தில் ஏற்படும் பலாபலனை மனதில் கொண்டு, ,அந்தப் பலாபலன் கிடைக்க இருக்கிறதே. அந்தப் பலனைத் தடுத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த மனப்பான்மை உடையவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரி எண்ணம் வேண்டாம். பெரிய கஷ்ட நஷ்டங்களுக்கு அப்பால் சேலத்தில் இரும்பாலை ஏற்படுத்தலாம் என்றால், அங்கே இரும்புக் கனி வளம் இருக்கிறதே என்று சொன்னால், அதைத் தொடங்க மனம் இல்லாமல் அது இல்லை, இது இல்லை என்று கால தாமதம் செய்துகொண்டு வருகிறது மத்திய அரசு. இதைப் பார்க்கும்போது வாழ்வேனா, வீழ்வேனா என்ற சந்தேகம் ஏற்படுகிற காரணத்தினால் தான் மத்திய அரசில் குவிந்திருக்கக் கூடிய ஏராளமான அதிகாரங்களைக் குறைத்து, மாநில சுயாட்சியை நாம் கேட்கிறோம்.



1974 ஏப்ரல் 24] [திரு. சி. வி. ராஜகோபால்]

(பிற்பகல் 5.40)

மாநில சுயாட்சி நாம் மட்டும் கேட்கிறோமென்று எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்னார்கள். திரு. சந்திரா ரெட்டி, டாக்டர் ராஜமன்னார் போன்ற ' people for integration, எல்லாம் (சிரிப்பு) அதிக அதிகாரம் வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதை மட்டும் மனதில் கொள்ளாமல், ஒரு வாரத்திற்கு முன்னாலே, அரசியல் சட்டம்பற்றிப் பேசும் பெரிய நிபுணராகிய திரு. பல்கிவாலா அவர்கள் குறிப்பிட்டிருப்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அவரே 'State autonomy' —அதாவது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; சுயேச்சை வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் அச்சுறுத்தி, அச்சுறுத்தி மாநிலங்கள் மிகக் கோழைகளாகப் போய்விட்டனவென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு உடன் பட்ட, ஆசையான எண்ணம் வந்து, நம்முடைய தேசத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற, தேச ஒருமைப்பாட்டுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் வர வேண்டும். நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எந்தவிதக் குந்தகம் ஏற்பட்டாலும், நாட்டில் பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டாலும், அதை எல்லோரும் சேர்ந்து அழித்து ஒழிக்கவேண்டும். ஆதலால்தான் மத்திய அரசில் குவிந்திருக்கக் கூடிய ஏராளமான அதிகாரங்களைக் குறைத்து, அதை மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்று கூறுகிறோம். உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். இங்கே ஒரு சுகாதார அமைச்சர் இருக்கிறார். அங்கேயும் ஒரு சுகாதார அமைச்சர் இருக்கிறார். இங்கே சுகாதாரத்துறையைப் பரவலாக்கலாமென்று இவர் எண்ணுகிறார். அங்கே அவர் தனியாக வேறு திட்டங்களைக் கொண்டு வருகிறார். அதே போன்றுதான் உணவு அமைச்சர். இங்கே இருக்கிற உணவு அமைச்சர், உணவுப் பொருள்களைப் பெருக்கி, தமிழ் நாட்டு மக்களுக்குக் கொடுத்துவிட்டு, மிச்சத்தை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்க நினைக்கிறார். ஆனால், அவர்கள் Free Movement என்று சொல்லி, நாங்கள் எடுத்துச் செல்வோம் என்று சொல்லுகிறார்கள்.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள்கூட 'பப்பெட்' என்று சொல்லலாமா என்று கேட்டார்கள். They are puppets in the hands of Central Government.' என்று திரு. எல்லமந்தா அவர்கள் சொன்னார்கள். அது நியாயமில்லை என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். இதை நான் என்னவென்று கூறுவது? எனக்கு வார்த்தை தெரியவில்லை. அது அவர் சொன்ன கருத்தாகும். எங்களுடைய அமைச்சர்களைக் குறைவாகச் சொல்லக்கூடாது. The Hon. Ministers are 'very puppets' in the hands of the Central Government. என்கின்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, 'very puppet' என்பதன் பொருளைக் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** ஆட்டி வைக்கப்படுகிற பொம்மைகளாக இருக்கக்கூடுமென்பதுதான் 'பப்பெட்' என்பதன் பொருள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'very puppet' என்றால் என்ன?

**திரு. சி. வி. ராஜகோபால் :** 'ரொம்பவும்' .. 'வெகுவாக' .. (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி கோபித்துக்கொள்ள மாட்டாரென்று கருதுகிறேன். குரங்கைக் கொண்டு வருபவன் இரண்டு தடவை, 'டக்', 'டக்' என்று கோலைத் தட்டினால்தான், குரங்கு எகிறிக் குதிக்கும். உங்களைத் தொலைத்துவிடுவேன் என்று சொன்னால், தொலைத்து விடுவானோ என்று பயம் உண்டாகி, அதனால் கோழைத்தனம் உண்டாகும் என்பதால்தான், இதன் மூலம் பெரிய பலத்தை உண்டு பண்ணி வைத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுக்கிருக்கும் எண்ணம். மாண்புமிகு அங்கத்தினர்களே, உங்களையெல்லாம் பணிவோடு கேட்டுக்கொள்வேன் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தலைவரைப் பார்த்துக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, உங்கள் மூலமாக அவையைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தமிழகத்திற்கு . . .

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, நான் வெளி மாநில அமைச்சர்களையும், வெளி மாநிலத்தில் இருக்கிறவர்களையும் 'பப்பெட்' என்று சொல்லக் கூடாதென்று சொன்னேன். இப்போது நம்முடைய அமைச்சர்களையே 'பப்பெட்' என்று சொல்லும் விதமாகப் பேசிவிட்டார்கள். எல்லா மாநில மந்திரிகளையும், நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மந்திரிகளையும் 'பப்பெட்' என்று சொல்லிவிட்டார்கள். அது நல்லதல்ல.

**திரு. சி. வி. ராஜகோபால் :** நான் அவர்களையோ அல்லது இவர்களையோ குறை கூறுவதாக எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கருதக் கூடாது. அவர்களைப் போய் 'பப்பெட்' என்று சொல்லவில்லை. அவர்களெல்லாம் மன்னர்கள்; சர்வாதிகார மன்னர்களாக இருக்கிறார்கள். சர்வாதிகாரத்தை அங்கே வைத்துக்கொள்ளக் கூடாதென்பதுதான் மாநில சுயாட்சியின் பொருள். ஆகவே எதிர்காலத்தில் இப்போதிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நல்ல சொத்தை, பெரிய அசெட்சைத்



தமிழ் நாட்டுக்கு வாங்கிவைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு பெரிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே இதை மனப்பூர்வமாக ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

* **THIRU C. RUSSEL RAJ :** Hon. Deputy Chairman, Sir, at the outset, I wish to thank you for giving me an opportunity to take part in this discussion relating to the subject of State Autonomy. Now the subject has received momentum all over India on account of the fact that though this is a subject which was talked about by eminent leaders even in olden times, recently the Dravida Munnetra Kazhagam Government under the leadership of Dr. Kalaignar have taken up the subject to the extent that it is discussed in both the Houses of the Legislature and the opinion expressed will be conveyed to the Central Government. It is an admitted fact that this is a subject with which the problem of the Constitution is mingled. It is also an admitted fact that our Constitution is federal in nature. The very word 'Federal' means unity in diversity. It is admitted that India is a country in which people of different races and different cultures, speaking different languages reside. The creation of unity in such diversity is contemplated by the Indian Constitution. An argument that is raised against State Autonomy is that this will affect the feeling of the unity of India. My humble submission regarding that point is that wherever there is the feeling that unity is impaired, the difference between unity and uniformity is not correctly understood. It is a fact that India is a Nation having unity in diversity. But uniformity is quite different from unity. In this House, there are people of different ages, different sizes and different capacities. The fact that we all together form the House shows that we have unity in this House. Similarly India is a Nation having different States with different views, with people speaking different languages. Further, this subject was talked about even at the time of Jawaharlal Nehru and it is very important to consider that at this stage after so many years, the subject has gained momentum. Long ago when the Constitution was framed for the purpose of independent India, the circumstances then prevalent were perhaps different from what we are able to see to-day. In those days perhaps when India was a new-born babe as an independent country, what was contemplated

was quite different from what has to be done under the present circumstances. Today we have gained sufficient experience in the matter of democracy, in the matter of governing the country through the elected representatives of the people. We have gained experience for over 27 years. This experience has taught us how the future of each State should be shaped for the betterment of the people of that State. If the question of State Autonomy can be considered in that view, I am sure every one and every political party and every leader will accept the fact that every State should have more powers to do something good to the people for which the Government are responsible. If that view is conceded, if that view is given top priority, I am sure there cannot be any argument against the principle of State Autonomy. When our Hon. Chief Minister addressed a letter to the Prime Minister, as

(பிற்பகல் 5.50)

we see from his speech, it has been stated in reply to that by the Hon. the Prime Minister of India that this is an important issue. If, after such an important issue is discussed and we decide upon that, the Centre postpones the issue day by day, I am sure there will come a time when this subject will be discussed and talked about not only in Tamil Nadu but in other States equally and the Centre will be forced to look into it. Every State has got a responsibility to do its best for the people of that State. The matters in which the State can pass laws, the matters in which the Centre can pass laws and also certain other matters in which the Centre as well as the State can pass laws are very clearly stated in the Constitution. On a subject which is in the Concurrent List, if the State Government, in the interests of the people of that State and the welfare of that State, passes a law and in the meanwhile, if the Centre also passes another law and if there is any conflict between those two laws, the Central Law will prevail. This would mean that the law passed by the State with the sole view of doing something good for the people of that particular State is defeated.

Another simple argument that is raised against State Autonomy is that it means separation. Our leaders and our party have repeatedly asserted that it is not the principle of our party to



separate the State from the Indian Union. If different States are allowed to grow in their own way, subject to certain common things which the Centre can have hold on, that will help the growth of India. When this is taken into account, certain powers which we have at present are not sufficient to enact proper legislation and to carry out what all we intend to do for our people. For eample, in previous discussions, it has been discussed here. When the problem of weavers came up, when the problem of sugar shortage came up, it was asserted by our Hon. Minister for Industries that if we were given sufficient powers, we could distribute the yarn in a proper way with the total quantity of yarn produced in our State and consequently the problem of weavers would not have arisen. Similarly when the price of sugar was increased, the Hon. the Minister for Industries asserted that if the State was given power to decide the quantity of sugar to be produced and the price to be fixed, we could sell sugar at a lower price than what was prevailing in the market today. From these we are able to understand very clearly that if each State is vested with sufficient powers, it will be good. Of course, I can understand that if the State goes against the national interests, then there may be power for the Centre to intervene; but in all other circumstances, if the motive, the intention and the purpose of the State Government is only to do things in a constructive manner for the betterment of the people of the State, the Centre should have no power to intervene and stop that programme. We are not raising up our arms against the Centre; we are only putting our demand and it is for the Centre to think over and as stated in the letter, consult all the Chief Ministers and come to a conclusion on the question of what all powers the Centre can have and what all powers the States can have, so that there may be a clear understanding and the motive, may be correctly understood. It should not be simply evaded by saying that it is an argument for separation. It is only an evasive argument. If that be so, there are certain instances in which the State Governments are not able to fulfil the responsibilities fixed on them by the Constitution. Unfortunately, the ruling parties in those States and at the Centre are the same. Even then, the Central Government are not able to go to the rescue of those

people. From 1947 to 1967, when the Central Government and the State Governments were more or less on the same principles and governed by the same party, perhaps, they proposed with some reluctance that the State Governments should never claim this. But, from the statements of leaders of different parties in different States, it is quite evident that in their heart of hearts, every leader and every party feels that with the existing powers now conferred on them, they are not able to do full justice to what they want to do. So, under the present circumstances, it is high time for this House in full, to support this Resolution and, if necessary, to canvas popular support in favour of this. It is not enough to stop with conveying our views and taking further steps, as desired by our leaders, in a phased and programmed manner, but public opinion should be won over at an all-India level. I am sure the time is near to come to a conclusion, and when the Centre will be forced to think that, under the present set-up they may not be able to continue for long and so, for their own safety and existence, they will think that some powers have to be delegated to the States, over which we may be happy and we may do what all we want to do for the betterment of the people. Hence, in supporting this, I wholeheartedly pray that all Members may support this in the view that it is for the benefit of not a single party nor a single State. The hon. the Leader of the Opposition was saying that a subject relating to other States should not be talked about here. My view is that this subject of State autonomy relates not only to Tamil Nadu but to all States. Further, this is a discussion relating to Centre-State relationship. If that argument is to be taken, we may not have even the right of discussing what the Centre can do. That cannot be the correct argument. Hence, it is high time for us to think unanimously over the subject and canvass public opinion. I support this Resolution and conclude with this.

(பிற்பகல் 5.58)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.



### *A. Statutory Rules and Orders.*

251. Notification issued with G.O. Ms. No. 2796, Rural Development and Local Administration, dated the 18th December 1973 in regard to certain amendments to the Local Administration Department Notification No. 48-A, dated 28th November 1974 published at pages 1 to 3 in the Rules Supplement to Part I-A of the Tamil Nadu Government Gazette, dated the 28th November 1944. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

252. Notification issued with G.O. Ms. No. 388, Excise and Prohibition, dated the 24th November 1973 in regard to levy of export pass fee on the export of Beer manufactured in the State of Tamil Nadu. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

253. Orders issued with G.O. Rt. No. 340, Revenue, dated the 21th January 1974 in regard to exemption from liability to entertainments tax and additional surcharge in respect of Canadian film shows to be held in Madras in connection with Canadian Film Festival. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

254. Notification issued with G.O. Ms. No. 2703, Rural Development and Local Administration, dated the 31st December 1973 in regard to approved list of all the parks, play-fields and open-spaces in the area within the jurisdiction of the Madurai Corporation under sub-section (2) of section 4 of the Tamil Nadu Parks, Play-fields and Open-spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open-spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

255. Notification issued with G.O. Ms. No. 966, Home, dated the 19th April 1974 in regard to direction issued to the State Transport Authority, Madras, relating to fixing of fares for stage carriages plying in Tamil Nadu. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

## B. *Reports, Notifications and Other Papers.*

155. Notification issued with G.O. Ms. No. 3205, Revenue, dated the 5th June 1973 in regard to amendment to Revenue Department Notification II-1 No. 2423 of 1971, published at page 598 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1971.

156. Notification issued with G.O. Ms. No. 7634, Revenue, dated the 29th December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the lease deed to be executed by the Commissioner, Panchayat Union, Pallipalayam, Salem district for the lease of the rights of collection of tolls on the bridge across Cauvery river between Erode and Pallipalayam.

**157. Report of the Committee on Estimates on Food Production Department.**

158. Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Tamil Nadu for the year 1970–71.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

### வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. அரசின் தீர்மானங்கள்.

#### (1) வினா நேரம் கைவிடப்படுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

#### (2) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி, 1974–75-ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை: "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி, 1974–75-ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின் 2 (1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1974–75-ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் என்று மேலவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியமனப்படிவங்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 6 மணி.

நியமனப்படிவங்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேர—27—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

## (3) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியை யொட்டி 1974–75 ஆம் நிதி ஆண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பி னர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை: "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1974–75 ஆம் நிதி ஆண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந் தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்து வதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு முறை விதியின் 2 (1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1974–75 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் என்று மேலவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியமனப்படிவங்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 6 மணி.

நியமனப்படிவங்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும்—27—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப்பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.



## (4) மாநில சுயாட்சி, இராஜமன்னார் குழு அறிக்கை (விவாதத் தொடர்ச்சி).

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, நமது அவையில் மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் அறிக்கை பற்றியும் நமது அரசுடைய கருத்தினைத் தெரிவிக்கும் முறையில் இங்கே கொண்டு வந்திருக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். நமது இந்திய நாட்டின் வரலாற்றிலேயே ஒரு திருப்பத்தைக் கொடுக்கும் பெருமை தமிழகத்திற்கு அமைந்து, அதிலும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தப் பெரும் பணியை ஆற்றுகிற ஒரு நிலை ஏற்பட்டு, அதிலே அவருடன் நானும் இணைந்து நின்று இந்திய அரசியல் சட்ட அமைப்பிலேயே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, இந்தியாவின் ஒற்றுமையை என்றென்றைக்கும் நிலை நாட்டிடும் ஒரு நற்பணியை நாம் தொடங்கி வைக்கிறோம் என்ற பெருமிதத்தோடு என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

நமது அரசின் இந்தத் தீர்மானத்திலே மாநில சுயாட்சி என்றும் மத்தியிலே கூட்டாட்சி என்றும்—ஆங்கிலத்தில் "ஃபெடரல் ஸ்ட்ரக்சர்" அல்லது "ஃபெடரல் அமைப்பு" அதாவது சமஷ்டி அமைப்பை—ஏற்படுத் தும் வகையில் நமது அரசியல் அமைப்பைத் திருத்தியமைப்பது என்ற கருத்தை நாம் வலியுறுத்துகிறோம். இந்தக் கருத்தை நாட்டிலுள்ள எல்லா அரசியல் நிபுணர்களும், நன்கு சிந்தித்து, அதிலே தெளிவு கண்டு, அதை எல்லோரும் ஆதரித்து நிற்கின்றார்கள் என்பதிலே ஐயமில்லை. ஆக இதை எல்லோரும் ஆதரிக்கின்றார்கள் என்றே சொன்னாலும், அது தவறில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் அவரவர்களுக்குச் சில ஐயப்பாடுகள், அச்சங்கள் இருப்பதால் சிலர் வெளிப்படையாகச் சொல்லத் தயங்குகின்றார்கள். எல்லாக் காலத்திலும் இரண்டு விதக் கருத்துக்கள் இருப்பது ஒரு நாட்டின் சிந்தனையோட்டத்திற்கான ஒரு நல்ல அறிகுறி என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஒன்று சமஷ்டி ஆட்சி முறை நமது நாட்டிலே வரவேண்டும். அதற்கேற்ற முறையிலே நமது அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று நாம் சொல்லும்போது, சமஷ்டி ஆட்சி முறை என்பது இன்றைக்குள்ள அரசியல் சட்டத்தில் மிகக் குறைவாகவே இருக்கின்றது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை. நமது அரசியல் அமைப்புச் சட்டம் சமஷ்டி ஆட்சி அமைப்புச் சட்டம்தான் என்று சிலர் சொல்லக்கூடும். அதற்கான சில காரணங்களையும் அவர்கள் குறிப்பிடலாம். இதைத்தான் காங்கிரஸ் ஸ்தாபனம் இந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டு வந்த காலத்திலே 1947 வரையிலே சொல்லிவந்தது. இந்தப் போவையிலே வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக—1945-லே காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் பிரகடனத்தில் தெரிவித்திருந்ததையும், பிறகு 1947 ஜனவரித் திங்கள் 22-ம் நாளன்று அரசியல் நிர்ணய சபையில் இந்திய விடுதலையில் பெரும்பங்கு வகித்த, பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தையும் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி

இந்த நாட்டிலே விடுதலை இயக்கத்தை நடத்தி வந்தபோது, எல்லா மாநிலங்களிலும் மக்களைத் தட்டியெழுப்பி, விடுதலைக்குப் பின்னர் இந்திய நாட்டினை மொழி வழி மாநிலங்களெனப் பிரித்திட வேண்டும், மாநிலங்கள் தக்க அதிகாரங்களுடன் செயல்பட வேண்டும், மத்தியிலே கூட்டாட்சி அமையவேண்டும் என்று அவர் ஆற்றிய உரைகளையெல்லாம் மக்கள் காதால் கேட்டு, அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம்தான் இந்த நாட்டின் அரசியல் சட்டம் என்பதை இந்த நேரத்தில் மறந்துவிடுவதற்கில்லை.

பி.ப. 4-10

உண்மையிலேயே நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவமே இல்லையென்று சொல்லிவிட முடியாது. கூட்டாட்சித் தத்துவத்தில் ஒரு பகுதியை ஏற்று, ஒற்றை ஆட்சித் தத்துவத்தில் பெரும் பகுதியை ஏற்று, அதிலே எஞ்சியிருக்கின்ற கூட்டாட்சித் தத்துவம் அடியோடு அகற்றப்பட்டு விட்டது என்று சொல்லிவிட்டாலும்கூட, அதனுடைய சாரம், சக்தி அற்ற ஒரு ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பை நாம் கொண்டிருக்கிறோம். இன்று இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரச்சினை என்றோ, அதை ஆதரிக்கின்ற கட்சிகளுடைய பிரச்சினை என்றோ, அதை எதிர்க்கின்ற கட்சிகளுடைய பிரச்சினை என்றோ இங்கு யாரும் கருதக்கூடாது. இங்கே இதை யாரும் எதிர்க்கவில்லை என்பதை அறிகிறபோது, நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட திருத்தத்தோடு நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியிருக்கிறாரே தவிர, எதிர்க்கவில்லை. மற்ற இடங்களில் முழு அளவில் எதிர்த்திருந்தும், இங்கு திருத்தத்தோடு நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருப்பதிலிருந்து, அந்த அளவுக்கு நாம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்றுதான நான் கருதுகிறேன்.

மாநில சுயாட்சித் தீர்மானத்தை வலியுறுத்திப் பலர் விவாதித்த பிறகு, நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய 110 நிமிட வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவுக்குப் பின்னர், அதற்கு ஒரு திருத்தம்தான் கொடுக்க வேண்டுமென்று தோன்றியிருப்பது குறித்து நான் மகிழ்ச்சிகொள்கிறேன். இவ்வளவு குறுகிய காலத்தில், இது எதிர் பார்த்த விளைவைக் கொஞ்சம் கொடுத்திருப்பது கண்டு, அதனுடைய சாதக பாதகங்களைப் பற்றி நாம் நல்ல முறையில், கட்சி காழ்ப்புணர்ச்சியின்றிப் பேசுவதாக இருந்தால், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அமைப்பை நாம் எல்லோரும் காண முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. சமஷ்டி ஆட்சிமுறை நமக்குப் புதியதல்ல. இந்த உலகிற்கும் புதியதல்ல. அரசியல் உலகத்திற்கும் புதியதல்ல. ஒருவேளை 1787-ல் அமெரிக்காவில் அமைந்த சமஷ்டி ஆட்சி முறைதான் புதியது, முதலானது என்று சொன்னாலும்கூட, கார்க்கி போன்ற அரசியல் மேதைகள் அதற்கு முன்னாலேயே அது போன்ற கருத்துக்களை வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பெடரேஷன் என்ற வார்த்தையைப் பயன்





படுத்தவில்லை என்றாலும், அவர்களுடைய நூல்களில் எல்லாம் "மல்டி செல்லுலர் சொசைட்டி" என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தோடு அது வளர்ந்து, பல கோட்பாடுகளைக் கொண்ட சமுதாயம், பல இன அமைப்புகளைக் கொண்ட சமுதாயம், கூட்டாட்சி என்ற அமைப்பு முறையை அமைத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தை அரசியல் மேதைகள் தங்களுடைய சிந்தனைகளில் இடம் பெறச் செய்து, அதற்குச் செயல் வடிவம் கொடுத்து, 1787-ல் அமெரிக்க ஐக்கிய குடியரசை அமைக்கின்றபோது, அந்தக் கருத்து பிலடெல்பியாவில் நடைபெற்ற மாநாட்டில், கன்வென்ஷனில் உருப்பெற்றது என்பதை நாம் பார்க்கிறோம். அதையொட்டி சுவிட்சர்லாந்து அமைந்தது. அதையொட்டி யூ.எஸ்.எஸ். ஆர். அமைந்தது. அதையொட்டி கனடா அமைந்தது. இம்மாதிரியாக நான்கு சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்ட நாடுகள் சீரிய முறையில் நடந்துகொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். நமக்கிருக்கின்ற பிரச்சினையெல்லாம் இந்த நாட்டில் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கருத்தை முழு மனதோடு ஏற்றுக்கொள்வதற்குத் தயங்குகிறவர்களிடையே இருக்கின்ற ஐயப்பாடு எண்ணம்தான். இது ஒருவேளை நம்முடைய நாட்டு ஒற்றுமையைக் குலைத்துவிடுமோ, நம்முடைய நாட்டில் பிரிவினை வாய்ப்பை உண்டாக்கிவிடுமோ, பல நாள் போராடிப் பெற்ற இந்தச் சுதந்திரம் பாழாகிவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். அவர்களுடைய அச்சத்தில் நாமும் அவர்களோடு இணைந்து, அந்த அச்சமில்லாத ஒரு நிலைமையை உருவாக்குவதுதான் இந்தக் கருத்தை உலகிற்கு எடுத்து வழங்குகிறவர்களுடைய இன்றியமையாத கடமை என்று நான் நினைக்கிறேன். அமெரிக்க சமஷ்டி ஆட்சி முறை 1787-ல் பிலடெல்பியா மாநாட்டில் உருவாக்கப்பட்ட நேரத்திலே கூட ஒற்றை ஆட்சி முறை வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்தவர்களும் இருந்தார்கள். ஹேமில்டன் என்ற பெரியார் ஒருவர் அமெரிக்காவிற்கு ஒற்றை ஆட்சி முறைதான் இருக்க வேண்டும், அப்பொழுதுதான் அந்த நாட்டினுடைய ஒற்றுமையைக் காக்க முடியும், அதிலேகூட ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட செனட்டர்கள் ஆயுட்காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும், மீண்டும், மீண்டும் அந்த வாக்காளர்களைச் சந்தித்துக்கொண்டு, வாக்காளர்கள் தயவில் வாழக்கூடிய ஆட்சி அமைப்பு இருந்தால் நாட்டில் நல்லதைச் செய்துகொள்ள முடியாது என்ற கருத்தைத் தெரிவித்தார். இப்பொழுது நினைத்தவுடனேயே ஒருவரைத் திருப்பிப் பெறவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்பொழுதே ஒருவர் ஆயுட்காலம் வரை இருக்க வேண்டும் என்ற கருத்து இருந்தது.

திரு. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இதில் உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: அதில் எனது கருத்தைப்பற்றிப் பிறகு சொல்கிறேன். இப்பொழுது சொல்வதாக இருந்தால், நேரம் போதாது,

பிறகு இந்தத் தீர்மானத்தின்மீது நான் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல முடியாமல் போய்விடும்.

நான் ஆயுள் பூராவும் இருப்பது என்பதை விரும்பவில்லை. ஐந்து வருஷம் இருந்தாலே போதுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது நல்லவர்கள் தேர்தலில் நிற்பதற்கே பயப்படுகிறார்கள். ஏனென்றால் இப்பொழுதெல்லாம் அவர்களுடைய வீடுகளுக்கு முன்னால், அலங்கோலமான நிலைக்கு அவர்களை ஆளாக்கி, நீ வெளியே போ என்று சொல்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அவர்கள் வேறுவிதமானவர்கள் என்று உறுப்பினர் கருதுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அமெரிக்க ஐக்கிய குடியரசின் சமஷ்டி ஆட்சி முறை அமைக்கப்பட்டபோது, ஒற்றை ஆட்சி முறை வேண்டுமென்று அதே மாநாட்டில் கருத்துத் தெரிவித்தார்கள். மத்திய அரசு கவர்னர்களை நியமிக்கும் முறை இருக்க வேண்டுமென்று ஹாமில்டன் சொன்னார். அப்பொழுதும் அந்தக் கருத்து இல்லாமலில்லை. கருத்து இருப்பது சரியா, அது வென்றதா என்று பார்க்க வேண்டும். அந்த மாநாட்டில் சமஷ்டி ஆட்சிக் கருத்து வென்றது. எந்தக் கருத்து வெல்ல வேண்டுமோ, அந்தக் கருத்து வென்றது. அதற்கு மறுப்புக் கருத்து இருந்தாலும், வெல்ல வேண்டிய கருத்து ஊக்கம் பெற்று, வலிவு பெற்று, உணர்வு பெற்று, எல்லோரும் ஒரு நிலைத்த கருத்தை ஏற்றுக்கொள்ள முடிந்தது. இதற்கு மறுப்புக் கருத்து வருவதை நான் பாராட்டுகிறேன். அந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றவர்கள் ஒரு கட்சி சார்போடு சொல்லாமல், இதை இந்த நாட்டினுடைய தேசியப் பிரச்சினையாக நினைத்து, வருங்கால சமுதாயத்தைப் பல்லாண்டுகாலம் இணைத்துச் செல்லவேண்டிய பிரச்சினையாக நினைத்து, நாட்டினுடைய நலன்களை மனதில் கொண்டு, ஆராய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். நமக்கு இருக்கின்ற அச்சமெல்லாம் இந்த சமஷ்டி ஆட்சி முறை நாட்டைப் பிரிவினைப் படுத்தி விடுமோ என்பதுதான். சமஷ்டி ஆட்சியில் நடைபெறுகின்ற எந்த நாட்டைப் பார்த்தாலும், ஒரு சக்தி வாய்ந்த நாடாக, இன்றைய உலகில் விளங்கி வருகிறது. அமெரிக்கா அன்று முதல் இன்று வரையில் 187 ஆண்டுகளாக அந்த ஆட்சி முறையில் "டெஸ்டுக்கு" நின்றிருக்கிறது, நின்று கொடுத்தது மட்டுமல்ல, வென்றும் இருக்கிறது. இன்று சமஷ்டி ஆட்சி நடைபெறுகின்ற அமெரிக்க நாட்டிலிருந்து தயவைப் பெற்றுக் கொள்ளாத நாடே உலக அரங்கில் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அங்கு அந்த அளவுக்கு சமஷ்டி ஆட்சி உருவாகியிருக்கிறது. இன்னும் கவனித்துப் பார்த்தால், ஒரே மதம் தான் அங்கிருக்கிறது. அதுதான் கிறிஸ்துவ மதம். பெரும்பகுதியினர் ஒரே மொழியைப் பேசுகின்றார்கள்.



ஒரு சில இடங்களில் ஸ்பேனிஷ், பிரெஞ்சு பேசி வருகிறார்கள். அத்தனை பேரும் அமெரிக்காவுக்கு இங்கிலாந்திலிருந்து கொண்டு போகப்பட்டவர்கள். கொஞ்சம் பேர் ஸ்பேனிஷ் நாட்டிலிருந்து போனவர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :—கனடா நாட்டில் மொழி போராட்டம் நடந்திருக்கிறதே.

திரு. எம். சங்கரலிங்கம் :—தலைவரவர்களே, கனடா நாட்டு விவகாரத்திற்குப பின்னால் வருகிறேன். அங்கு ஒரே மொழி, பெரும் பகுதி ஒரே இனம்—அதாவது ஆங்கிலேய இனம். ஒரே கலாசாரம், ஒரே மதம்.

THIRU G. VASANTHA PAI:—Sir, does the hon. Member know that the Canadians always [illegible] the threat of being assassinated because they are Catholics?

திரு. எம். சங்கரலிங்கம் :—தலைவரவர்களே, அந்தச் சமயத்தில் இருக்கின்ற உட்பிரிவு எனககுத் தெரியும்.

Through the Hon. Chairman, I wish to inform the hon. Member that I know that Catholics form one of the sects of Christianity. எதற்காக இதைச் சொன்னேன் என்றால், சமஷ்டி ஆட்சி முறையில் பல மொழிகள், பல கலாச்சாரங்கள் கொண்ட நாடாக இருக்க முடியாது. சமஷ்டி ஆட்சி முறை தத்துவத்திற்கே இதைத்தான் சொல்கிறார்கள். டைஸி என்ற பேரறிஞர் வலியுறுத்திச் சொல்வது என்ன வென்றால்

It is a political institution intended to reconcile national unity with the maintenance of States. An association of States forms a new one.

பல நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு ஆட்சியை ஒத்துக் கொள்கின்றன. பல பேரறிஞர்கள் பிலடெல்பியா மாநாட்டில் இந்த சமஷ்டி ஆட்சி முறையைப் பற்றிச் சொல்கின்றபோது பல நாடுகள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள் கொண்ட நாடுகள் ஒற்றுமையின் அடிப்படையில் ஒன்றுபட்டு ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக இயங்குவதற்கு இது ஒரு சிறந்த ஆட்சி முறை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கின்றபோது ஒரே மொழி, ஒரே நாடு, ஒரே கலாச்சாரம் கொண்ட ஒற்றை ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டிருந்தால், இவ்வளவு சக்தி வாய்ந்த நாடாக இருந்திருக்க முடியாது. சுவிட்சர்லாந்து, கனடா, யு.எஸ். எஸ்.ஆர். இவைகளும் அப்படித்தான். அவைகளைப பற்றிச் சொல்ல நேரம் இல்லாததால், அப்படியே விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :—நேரம் இல்லைதான்.

பி.ப. 4–20

திரு எம். சங்கரலிங்கம் :—எல்லை, நமக்கு அச்சம் ஏற்படத் தேவையில்லை. சமஷ்டி ஆட்சி முறைக்கு வன்மை இருக்கிறது, சக்தி இருக்கிறது. சமஷ்டி அரசு உள்ள அமெரிக்கா சக்தி பொருந்திய நாடாக இருக்கிறது என்பதைப் பார்த்தோம். இந்தியாவிலும் கூட சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் காங்கிரஸ் இதைத் தான் சொல்லி வந்தது. சமஷ்டி என்ற பெயரைப் பயன்படுத்தினார்களோ இல்லையோ, இந்தக் கருத்தைத் தான் காங்கிரஸ்காரர்கள் வன்மையாகச் சொன்னார்களாம். இதைப் பற்றி துணைத் தலைவரவர்கள் விளக்கமாகச் சொல்வார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து அந்த இயக்கத்தை வளர்த்து, விடுதலையும் கொண்டு வந்து, இந்தக் கருத்தையும் முதிய தலைவர்களின் பேராதரவோடு சொல்லி வந்தார்கள். அவர்கள் இதைப் பற்றி விளக்கமாகச் சொல்வார்கள். காங்கிரஸ் கட்சி இதைச் சொல்லி வந்தது. எல்லாவற்றிற்கும் எடுத்துக்காட்டாக அரசியல் நிர்ணய சபையிலே 1947 ஜனவரி 22-ம் தேதி ஜவஹர்லால் நேரு அவர்களே இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அறிக்கையிலும் இது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பிறகு ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்றால், அமெரிக்காவில், 1776–87 அமெரிக்க விடுதலைப் போராட்டத்தின் விளைவாக, பிலடெல்பியா மாநாட்டில் சமஷ்டி ஆட்சியை உருவாக்கினார்கள். அங்கு பாகிஸ்தான் போன்ற ஒரு பிரிவினை ஏற்படவில்லை. அமெரிக்காவில் விடுதலை என்ற கருத்தை என்றைக்கு வைத்தார்களோ, அதாவது பல அமெரிக்க நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டாட்சியாக, சமஷ்டியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை 1776-ல் சொன்னார்களோ அதே நிலையில் 1787 வரை இருந்தார்கள். அவர்களால் அப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தையும் அமைக்க முடிந்தது. நான் இங்கு சொல்ல வந்தது, இந்தக் கருத்தை நாம் 1947 செப்டம்பர் வரை சொல்லியிருக்கிறோம். இந்த நிலையில் நாட்டின் பிரிவினை ஏற்பட்டது. பாகிஸ்தான் பிரிந்தது. அரசியல் தெளிவு படைத்த, நல்ல அரசியல் நாகரீகம் படைத்த, உயர்ந்த அரசியல் தத்துவங்களையெல்லாம் கற்ற, சிறந்த அரசியல் அமைப்பைக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்த, ஜவஹர்லால் நேரு அவர்கள் அரசியல் நிர்ணய சபையின் கூட்டாட்சி அமைப்பைக் கொண்டு வர வேண்டுமென்ற தீர்மானத்தை மொழிந்த பிறகு, அவரே பிறகு வாயடைத்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசியல் நிர்ணய சபையின் நேரு அவர்கள் ஹாமில்டன் சொன்ன ஒற்றை ஆட்சிக் கருத்து தோற்றது, சமஷ்டி ஆட்சிக் கருத்து வென்றது என்று சொன்னார்கள். நேரு போன்ற முடி சூடா மன்னர், ஒப்புற்ற தலைவர், எல்லா மக்களுடைய ஆதரவைப் பெற்ற ஒருவர், இந்திய அரசியல் நிர்ணய சபையிலே கூட்டாட்சி அமைப்பு கொண்டு வரவேண்டுமென்று தீர்மானம் பிரேரேபித்தவர், அவரால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ் நிலை ஏன் ஏற்பட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்றால், அன்று பிரிவினை ஏற்பட்டது. பாகிஸ்தான் பிரிந்தவுடன் அந்தப் பிரிவினையை ஒரு பூதமாக ஆக்கி

அவர்களிடம் காட்டினார்கள். இங்கு ஒற்றை ஆட்சி முறை இல்லையென்றால், பல மாநிலங்கள் பல நாடுகளாகப் பிரிந்து போய்விடும் என்று எச்சரித்தார்கள். பரந்த உள்ளமும், தெளிந்த அரசியல் அறிவும் படைத்த அவர்கள், இவர்கள் சொல்லுக்கு பதில் சொல்ல முடியாமல் தயங்கி நின்றார்கள். இப்படி ஏற்பட்ட அரசியல் விபத்துதான் இந்த அரசியல் அமைப்புச் சட்டமே தவிர, தெளிந்த சூழ் நிலையில், சொல்லி வந்த பரிந்துரைகளை, கருத்துக்களை உருவாக்கினார்களா என்றால், இல்லை என்பதை மறந்து விடுவதற்கில்லை. இதை வரலாறு காட்டுகிறது. இது உண்மை, புதிதாக யாரும் சேர்த்து, இணைத்துச் சொல்லவில்லை. என்னுடைய சொந்த விருப்பு வெறுப்பையொட்டிச் சொல்லவில்லை. வரலாற்றைப் பார்த்தால், பிரிவினை, அதனால் ஏற்பட்ட விளைவுகள், வட நாட்டில் ஏற்பட்ட ரத்தக் களறி இவைகளைக் கொண்டு, ஒற்றை ஆட்சி முறை வேண்டுமென்ற கருத்து உடையவர்கள் அவர்களை அஞ்ச வைத்து விட்டார்கள். இப்படி இந்த அரசியல் அமைப்புச் சட்டம் உதித்தது.

இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை இந்த நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களும் விருப்பத்தோடு ஏற்றுக் கொள்கின்றனவா என்ற கருத்தை அடுத்தாற்போல் பார்க்க வேண்டியது. நாம் கேட்பதால் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது, அவர்கள் பிரிவினை கேட்டவர்கள், இப்போது வேறு ஒரு உருவத்தில் கேட்கிறார்கள் என்று எளிதாகச் சொல்லி விடலாம். மற்ற மாநிலங்களைப் பார்ப்போம். இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி, பெரும் பொருளை இழந்த பெரும் தியாகி திரு இ. எம். எஸ். நம்புதிரிபாத் கேரளாவில் என்ன சொன்னார்கள் என்பதைச் சொல்கிறேன். எல்லாவற்றையும் சொல்வதற்கு நேரமில்லை. ஒன்றொன்றைக் குறிப்பிட்டு விடுகிறேன்.

**"Accounts to steamrollering a State or curb a State on the allotted ground, that it is likely to disrupt and disintegrate the whole country will not strengthen the Centre."**

மாநிலங்களுடைய உரிமைகளையும், அதிகாரங்களையும் அடக்க நினைப்பது மத்தியை வலிவு படுத்தாது என்று சொல்லியிருக்கிறார்கள். திரு பூபேஷ் குப்தா அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஒற்றையாட்சி கேட்கிற அரசியல் வாதிகள் இருக்கிற உத்தர பிரதேசம் இருக்கிறதே, அந்த மாநிலத்தில் சட்ட மன்றத் துணைத் தலைவர் திரு வாசுதேவ் அவர்கள் சொல்கிறார்கள்.

**"There is a feeling that the Centre's attitude towards the States in the scene is discriminatory. This feeling poses a grave danger to national unity."**

மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற வார்த்தை இருக்கிறது. இது நாட்டினுடைய ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கின்ற ஒன்று. இதற்கு

மருந்து

"The solution lies in maximum political decentralisation, without which democracy cannot thrive in the country."

இது இல்லாமல் ஜனநாயகம் வாழப்போவதில்லை.

"There is, therefore, an urgent need for re-structuring the Centre-State relations."

உத்தரப் பிரதேசத்திலுள்ள ஒரு அரசியல் தலைவர், அந்த மாநிலத்தின் சட்ட மன்றத் துணைத் தலைவர், மத்திய மாநில உறவுகளைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார். இது போலவே ஆந்திராவில் உள்ள திரு. ரங்கா அவர்களும், அஸ்ஸாம் எம்.எல்.ஏ. திரு. பட்டாசாரியா அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறிப்புகளை வாசித்துக் கொண்டு போனால் நேரம் இருக்காது. திரு. ரபிராய், எம்.பி. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரு. தென்னேடி விஸ்வநாதம் அவர்களும், கேரளாவில் ஆட்சியில் இருக்கக் கூடிய திரு. அச்சுத மேனன் அவர்களும் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி எல்லா மாநிலங்களிலுள்ள தலைவர்களும், மாநிலங்களின் அரசு இயந்திரங்களை இயக்கிக் கொண்டிருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கட்சி வேறுபாடின்றி இன்றுள்ள அரசியல் அமைப்பில் கோளாறு இருக்கிறது, மத்திய மாநில உறவுகளில் தவறு இருக்கிறது, இதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். நாமும் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்கிறோம். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சட்டத்தைத் திருத்தாமலேயே மாநிலங்களின் முதலமைச்சர்கள் இதைப்பற்றிப் பேசிப் பார்க்க வேண்டும், முடியாது போனால் சட்டத்தை எந்த அளவிற்குத் திருத்த வேண்டுமோ அந்த அளவிற்குத் திருத்த வேண்டுமென்று திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். 1950 ஜனவரியில் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டதிலிருந்து இன்று நான் பேசிக் கொண்டிருக்கின்ற வரை எல்லா மாநிலங்களிலும் இருக்கக் கூடிய எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் கட்சி வேறுபாடின்றி பல்வேறு சமயங்களில் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இது பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால், ஆம். பிரிவினை என்ற சொல்லைச் சொல்லி அந்தப் போர்வையில் இதைப் புறக்கணிப்பது தவறு. அப்படிப் புறக்கணிப்பதாக இருந்தால், அது நாட்டினுடைய ஒற்றுமையைக் குலைப்பதாகும். இந்த நாட்டின் ஒற்றுமையைக் காப்பதிலும், வளர்ப்பதிலும் ஒன்றுபட்ட சக்தியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கும் சளைத்ததில்லை என்பதை நமது முதலமைச்சரவர்கள் அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தில் பின்னால் வந்து சேர்ந்தவன் தான். நான் நமது துணைத் தலைவரவர்களோடு தமிழரசுக் கழகத்திலும், அதற்கு முன்னால் காங்கிரசிலும் இருந்தவன். 1942 இலே சிறைச்சாலை சென்றவன். வைக்கம் போராட்டத்தில் என்னுடைய தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் சிறை சென்றார்கள். நானும் பல போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவன்.



1947-க்குப் பிறகு தமிழகத்தோடு இணைய வேண்டுமென்ற போராட்டத்தில் கலந்துகொண்டவன் நான். நான் தெளிவாகச் சொல்வதாக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையைச் சொன்ன போது, அதை வன்மையாக எதிர்த்தவன் நான். 1962-ல் அவர்கள் பிரிவினை வாதத்தை விட்டு விட்டு, சீனப் போரில் இந்த நாட்டினுடைய எல்லா தேசிய சக்திகளுக்கும் மிஞ்சி நின்று தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்றிய பிறகு, என்னுடைய கருத்தையெல்லாம் அது ஏற்றுக் கொண்டது. நமது துணைத் தலைவர் திரு. ம. பொ. சி அவர்களைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பலமாக எதிர்த்தவர்கள் யாரும் இல்லையென்று சொல்லலாம். அவருக்கு தனிப்பட்ட தலைவர்கள் மீது காழ்ப்பு அல்ல, பிரிவினைக் கொள்கைக்கு அவருக்கிருந்த கடுமையான எதிர்ப்பு அதற்குக் காரணம். இன்று பிரிவினைக் கொள்கை விடப்பட்டதென்றால், அது அரசியல் தந்திரமாக விடப்பட்டதல்ல. உண்மையாக உணர்ந்து, நாட்டினுடைய ஐக்கியத்தைக் காக்க வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் இந்தக் கொள்கையை விட்டதன் காரணமாகத்தான் திரு. ம. பொ. சி. அவர்கள் அந்த அணியில் நிற்கிறார்கள். மாநில சுயாட்சிக் கருத்து அவர் அர்ப்பணித்தது. அந்தக் கருத்து தேசிய முகாமில் பிறந்து தேசியத்தில் வளர்ந்தது. நான் 1965-ல் தமிழ் உணர்வோடு, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில், பேராசியர்களைக் கைது செய்து சிறையில் போடுகிற காலத்தில், கல்லூரியில் பேராசிரியராக இருந்துகொண்டிருந்தேன். அப்போது காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்துக்கொண்டேன் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் தேசியவாதிகளுடைய எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. தேசியக் கொள்கையை அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். 1962-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் காந்தியக் கொள்கையையும், தேசியக் கொள்கையையும் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் காந்தியவாதிகள் பின்பற்றுவதை விட மிஞ்சி பின்பற்றி வருகிறது. நான் முன்னே சொன்னது போல், காந்தியின் ஆத்மா இப்போது யாரையாவது ஆசீர்வதித்துக் கொண்டிருக்குமென்றால், தமிழகத்தையும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களையும் தான் இருக்குமே தவிர, வேறு யாரையும் இருக்க முடியாது. ஜவர்ஹர்லால் நேரு அவர்கள் கூட 1947-ல் ஜனவரி 22-ம் தேதி நான் அரசியல் நிர்ணய சபையில் கொடுத்த தீர்மானத்தை என்னால் நிறைவேற்றி வைக்க முடியாமல் விட்டு விடுகிற சூழ்நிலை இந்த நாட்டில் ஏற்பட்டது, இப்போதாவது கலைஞர் கருணாநிதி அவர்கள் நிறைவேற்றுகிறார்களே என்று ஆசி வழங்கிக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் அரசியல் அமைப்புத் திருத்தத்தை இங்கே பிரேரேபித்திருக்கிறோம் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 4·30.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணியடித்தார்).

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இன்னும ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கெனவே ½ மணி நேரம் ஆகிவிட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் : சுதந்திர இந்தியாவுக்கு முன்னால், இந்தியாவினுள்ளே எப்படி இருந்ததென்று பார்ப்போம். பிரிட்டிஷ் பிராவின்சஸ் என்று சொன்னவைகள் அனைத்தும் ஆங்கிலேயர்கள் கையில் இருந்தது ; சுமார் 500 க்கும மேற்பட்ட சமஸ்தானங்கள் இந்தியாவில் இருந்தன. இது அத்தனையும் சேர்ந்து கூட்டாட்சியாக இருந்தது. அந்நியன் நமக்குக் கொடுமைகளைச் செய்வான் என்ற கார எண்ணம் இருந்ததால், அவர்களை நாம் பலமாக எதிர்த்துக்கொண்டிருந்தோம். நான் திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவன். 1856 ஆம் ஆண்டிலிருந்து 1947 ஆம் ஆண்டு வரை, சுமார் 90 வருடங்கள் இந்தியக் கூட்டாட்சியில், ஆங்கிலேயர்கள் கையில் திருவிதாங்கூர் சமஸ்தானம் இருந்தது. இருந்த போதிலும் திருவிதாங்கூர் மன்னருக்குத் தனி சக்கரம் இருந்தது ; நாணயம் இருந்தது ; படை— "போர்ஸ்" இருந்தது. அது போன்று எல்லா சமஸ்தானங்களுக்கும் இருந்தது. அங்கே பலம் குறைவாக இல்லை. அங்கு கவர்னர் இல்லை. அதற்குப் பதிலாக, பிரிட்டிஷாரின் ஏஜெண்ட்டாக "ரெசிடெண்ட்" இருந்தார். அவருக்கு என்ன வேலை என்றால், இவர்கள் பிற நாட்டோடு தொடர்பு கொள்கிறார்களா, இந்த அரசுக்கு எதிராகச் செயல்படுகிறார்களா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அந்த அரசுகளுக்கெல்லாம் முழு அதிகாரம் இருந்தது. 1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சட்டம் வந்தது ; 1919 ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்ட் சட்டம் வந்தது ; 1935-ல் ஒரு ஆக்ட் வந்தது. இவையனைத்தும் ஒருங்கிணைத்துக் கவனித்துக்கொண்டிருந்தது. இது சுதந்திரத்திற்கு முன்னால் இருந்த நிலைமையாகும். சுதந்திரத்திற்குப் பிறகு நம்முடைய மாநிலங்கள் சக்தியுடையனவையாக இருந்திருக்க வேண்டுமென்றால் இந்த நாட்டில் கூட்டாட்சி ஏற்பட்டிருக்க வேண்டும். நான் ஒன்று கேட்கிறேன் : மத்திய அரசுக்கு இன்று பலம் இருக்கிறதா ? தங்களிடம் படைகள் எல்லாம் இருக்கிறதென்று நினைத்துக்கொண்டு, பலமாக இருக்கிறோமென்று நினைக்கிறார்கள். பலமாக இருந்தால் கறுப்புப் பணத்தை ஒடுக்கியிருக்க வேண்டும். நம்முடைய நாட்டு நூல்கள் வெளி நாடுகளுக்குக் கள்ளக் கடத்தல் மூலமாகச் செல்லுகின்றன. நம்முடைய தமிழ் நாட்டில் நூல் அதிகமாக உற்பத்தியாகிறது. அதைக் கட்டுப்படுத்த, அதற்கு விலை நிர்ணயம் செய்ய நமக்கு அதிகாரம் இல்லை. சாதாரண மக்களாகிய நாம் 15 ரூபாய், 17 ரூபாய் கொடுத்து வேட்டி வாங்கிக்கொண்டிருக்கிறோம். இந்த நூல்கள் பம்பாய்க்குச் செல்லுகின்றன. அங்கிருந்து பங்களா தேஷுக்குக் கடத்தப்படுகின்றன. அங்கிருந்து கீழை நாடுகளுக்குச் செல்லுகின்றன. மத்திய அரசுக்குச் சக்தி இருந்தால், கோடிக்கணக்கான படைகளை வைத்துக்கொண்டிருக்கும்போது, இந்தக் கடத்தலைத் தடுத்திருக்க வேண்டும். தடுக்க முடிகிறதா, கறுப்புப் பணத்தை ஒடுக்க முடிகிறதா என்றால், இல்லை. மத்திய அரசு பலகீனமாக இருப்பதற்குக் காரணம் இந்த ஒற்றை ஆட்சி முறைதான். எனவே அதனுடைய அதிகாரத்தைப்



பரவலாக்கி, மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுக்க இந்தத் தீர்மானம் வழி வகை செய்கிறதென்பதற்காக, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு முதல்வரவர்களைப் பாராட்டி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம். பக்கர் : மாண்புமிகு தலைவரவர்களே, பாரதத் திருநாட்டின் உளப்பூர்வமான ஒருமைப்பாட்டுக்கும், இந்தியாவிலேயே நிலவுகின்ற எல்லாக் கலாச்சாரங்களின் நல் வளர்ச்சிக்கும், வித்திடக் கூடிய முறையில் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற தத்துவத்தின் அடிப்படையில் இராஜமன்னார் கமிட்டியின் ரிப்போர்ட்டினை அனுசரித்தும், மற்ற மேற்கோள்களை வைத்துத் தமிழ் நாட்டின் முதல்வரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் பேசுவதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அருமை நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னது போல் இந்திய நாட்டிலே சுதந்திர தாகம் எழுந்து, இந்திய நாடு விடுதலை பெற வேண்டுமென்று நாடெல்லாம் மக்கள் இயக்கமாக மாறியபோது, இந்திய நாட்டிலே எல்லாத் தலைவர்களும்—மிதவாதத் தலைவர்கள் ; காங்கிரஸ் தலைவர்கள் ; மற்ற எல்லாத் தலைவர்களுக்கும்—இந்திய நாடு கூட்டாட்சியாக இருக்குமென்றுதான் சொல்லி வந்திருக்கிறார்கள். எந்தத் தலைவரும் ஒற்றை ஆட்சி முறை தேவையென்று இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு சொன்னதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் நம்முடைய அரசியல் சாசனத்திலே கூட்டாட்சியைக் குறைவாக வைத்து, ஒற்றை ஆட்சிக்கு அதிக இடம் கொடுத்து விட்டதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்ன மாதிரி, நாட்டிலே ஏற்பட்டிருந்த பிரிவினை அதிர்ச்சிதான். மற்றொன்று, ஒரே கட்சியைச் சேர்ந்த மிகப் பெரும்பான்மையினர் மாநிலங்களிலும், மத்தியிலும் அதிகாரம் வகித்துக்கொண்டிருந்ததால், அவர்கள் பெரும்பான்மையினராக அரசியல் நிர்ணய சபையில் இருந்தது தான். திரு. ஐவர் ஜென்னிங்ஸ் அவர்கள் சொல்கிற மாதிரி, அரசியல் அமைப்பில் ஒற்றை ஆட்சி முறையை அமைக்கக்கூடிய வாய்ப்பிருந்தால், யாரும் கூட்டாட்சி முறையைத் தொடக்கூட மாட்டார்கள் என்ற மனித சுபாவம் காரணமாக இருந்திருக்கலாமென்று நினைக்கிறேன். உலகத்திலே நான்கு பெரிய நாடுகள் இருக்கின்றன. சைனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா என்ற நான்கு பெரிய நாடுகள் இருக்கின்றன. இந்த நான்கு பெரிய நாடுகளிலே, உலகத்தின் பெரிய வல்லரசுகள் என்று கருதப்படுகின்ற அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் "பெடரல்" ஆட்சி முறை—கூட்டாட்சி—முறைதான் இருக்கிறது. அதைப் பற்றி திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னார்கள். மற்றொரு பெரிய நாடான சைனாவிலே ஒற்றை ஆட்சி முறை இருக்கிறது, ஆனால் அந்த ஒற்றை ஆட்சி முறையை (குறுக்கீடு) எதேச்சாதிகாரத்தின் மூலமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் விருப்பத்தின் பேரில் வைத்துக்கொண்டிருக்கவில்லை. ஜனத்

தொகையில் சைனாவுக்கு அடுத்த இந்திய நாட்டிலே எப்படி ஆட்சி முறை இருக்க வேண்டுமென்றால், ஒன்று எதேச்சாதிகாரத்தின் கீழுள்ள ஒற்றை ஆட்சி முறை இருக்க வேண்டும்; அல்லது மாநிலங்களுக்கு சுயாட்சி அளித்து, அந்த மாநிலங்கள் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிற கூட்டாட்சி முறை அமைய வேண்டும். இந்த முறையிலே நம்முடைய அரசியல் சாசனத்தை வகுத்தவர்கள் அந்தக் காலத்திலேயிருந்த பிரிவினை அதிர்ச்சியிலே, கூட்டாட்சி முறைக்கு அதிக இடம் தராமல், ஒற்றை ஆட்சி முறைக்கு அதிக இடம் தந்திருக்கிறார்கள் என்பதை அரசியல் சாசனத்தைப் படித்தால் நன்றாகத் தெரிகிறது. அரசியல் சாசனத்தை வகுத்தவர்கள் கூட்டாட்சி முறைக்குக் கொடுத்திருந்த உரிமைகளை, மத்திய அரசு நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்தோ, தெரியாமலோ, எடுத்துக்கொண்டு, இன்றைக்கு மாநிலங்களுக்கு அதிகாரமில்லாத நிலையை உருவாக்கியிருக்கிறது. அரசியல் நிர்ணய சபையில், "பெடரல்" அமைப்புத்தான் வேண்டுமென்று ஆதரித்துப் பேசிய மிதவாதத் தலைவர், டாக்டர் குன்சுரு அவர்கள் அரசியல் அமைப்பைப்பற்றிக் கூறுகின்றபோது, இப்போதுள்ள அரசியல் அமைப்பின் கீழ், மாநிலங்களுக்கு உடம்பு முழுவதும் போர்த்திக்கொள்ளத் துணி கிடைக்காது, கோவணம்தான் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 4·40.

எங்களுடைய பிரதிநிதியாகவும், அகில இந்திய முஸ்லீம் லீக் பொதுச் செயலாளராகவும் இருந்த திரு முகமது ஹனீப் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது, "மாநிலங்களை வெறும் ஜில்லா போர்டுகள்" ஆக்கி விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது சரிப்பட்டு வராது என்று சொன்னார்கள். ஆனால், இப்படிப்பட்ட நிதானப்போக்கு உள்ளவர்களின் பேச்சுக்களையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல், ஒற்றை ஆட்சி முறைக்கு அதிக அதிகாரம் கொடுத்து விட்டார்கள். ஆனால், நாள் செல்லச் செல்ல, மத்திய அரசில் அதிகாரம் குவியக் குவிய, மாநில அரசாங்கங்களின் அதிகாரம் குறையக் குறைய நாட்டிலே எப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டு வருகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

அடுத்து, நான் மாநில சுயாட்சிபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மாநில சுயாட்சி என்ற சொல்லைக் கேட்டவுடனே சிலருக்கு "அலர்ஜி" ஏற்படுகிறது. இதைப்பற்றி நான் பல நண்பர்களோடு விவாதித்தேன். அவர்கள் சொல்லுகிறார்கள், "மாநில சுயாட்சி என்று ஏன் கேட்கிறார்கள்? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்று கேளுங்கள், மிக்க அதிகாரங்களைக் கொடுங்கள் என்று கேளுங்கள், வேறு எப்படி வேண்டுமானாலும் கேளுங்கள், மாநில சுயாட்சி என்று ஏன் சொல்லுகிறீர்கள்" என்று கேட்கிறார்கள். நான் சொன்னேன்: "ஸ்டேட் அட்டானமி" என்ற ஆங்கில வார்த்தைகளுக்கு நேரடியான தமிழாக்கம் அப்படி சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல தமிழ்ச் சொல்லை, ஏன் உபயோகிக்கக் கூடாது? அந்தப் பெயரைச் கேட்டாலே ஏன் அவர்களுக்கு "அலர்ஜி" ஏற்படுகிறது என்று தெரிய



வில்லை. இதை நினைக்கும்போது எங்கள் ஊர் பக்கத்தில் சொல்லப்பட்ட ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. எங்கள் ஊரில் "நூர் ராவுத்தார்" என்று ஒருவர் இருந்தார். அவரை எல்லோரும் "நூறு" என்று கூப்பிடுவார்கள். அவர் எங்கோ வெளியே போயிருக்கிறபோது, அரசு அதிகாரி ஏதோ ஒரு விஷயம் விசாரிப்பதற்காக வந்திருக்கிறார். அவருடைய மனைவியைக் கூப்பிட்டு, உங்கள் கணவனின் பெயர் என்ன என்று கேட்டிருக்கிறார். நம்முடைய பெண்கள்தான் தங்களுடைய கணவன் பெயரைச் சொல்ல மாட்டார்களே, அதே போல அந்த அம்மாளும் கணவன் பெயரைச் சொல்ல மறுத்து விட்டார்கள். அதிகாரி கணவனின் பெயரைச் சொல்லுமாறு திரும்பக் கேட்டிருக்கிறார். நீங்கள் பெயரைச் சொல்லா விட்டால், எப்படி நான் பெயரை எழுதுவது என்று கேட்டிருக்கிறார். கடைசியில் அந்த அம்மாள் சொல்லியிருக்கிறார். முப்பது போல் மூன்று தடவை சேர்த்துக்கொள்ளுங்கள், அதோடு ஒன்பதைச் சேர்த்துக் கொள்ளுங்கள், அதோடு ஒன்றையும் கூட்டிக்கொள்ளுங்கள், அதுதான் அவருடைய பெயர் என்று சொன்னாராம். அதிகாரியும் கூட்டிப்பார்த்து "நூறு" என்று எழுதிக்கொண்டாராம். அதுபோல, மாநில சுயாட்சி என்ற அருமையான தமிழ் பதம் இருக்கும்போது, அதை ஏன் சொல்லக் கூடாது, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேளுங்கள் என்று ஏன் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. இது தன்னுடைய கணவன் பெயரைச் சொல்லுவதற்கு வெட்கப்படுகின்ற பெண்ணுடைய செயல் போல் இருக்கிறதே என்று பெரிதும் வருந்துகிறேன்.

அடுத்து, ம. பொ. சி. அவர்கள் காட்டிய வழியில் முதலமைச்சர் அவர்கள் செல்லுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு பேச்சு. இதிலே என்ன தவறு? தான் பிறந்த பொன்னாட்டுக்காக. அதன் சுதந்திரத்திற்காக தடியடி பட்டவர், சிறை சென்றவர், பல தியாகத் தழும்புகளை ஏற்றவர் ம. பொ. சி. அவர்கள். அது மட்டுமல்ல, நாடு சுதந்திரம் அடைந்தவுடனே, தமிழ் நாட்டின் எல்லையைக் காப்பதற்காக தம்முடைய வாழ்க்கையில் பல தியாகங்கள் செய்தவர், தம்முடைய நாட்டின் மொழியை பிற மொழி ஆதிக்கத்திலிருந்து காப்பதற்காக பல தியாகங்கள் செய்தவர், இந்தத் தமிழ் நாட்டின் மானத்தைக் காப்பதற்காக வரிந்து கட்டிக்கொண்டிருக்கிற தமிழ்ப்பெருமகன் சிலம்புச் செல்வர் ஆவார். அவரிடம் யோசனை கேட்காமல், தலைவன் என்று வேஷம் போட்டுக் கொண்டு, தரங்கெட்ட முறையில் பேசிவருகின்றவர்களிடமா அவர் யோசனை கேட்க வேண்டும்? இப்படிப் பேசுவது விவரம் தெரியாத பேச்சு ஆகும். அருமை நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்ன மாதிரி, "மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி", என்பதைத் தர்க்க ரீதியாக யாரும் எதிர்த்துக் கூறவில்லை. இதன் பொருள் என்ன என்பதைப் பலர் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகும் பலர் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். அவர்களுக்கு என்ன சொல்வது? இதை விளக்குவதற்காக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய நாட்டின் ஆட்சியை ஒரு கடிகாரத்திற்கு ஒப்பிட்டு, கடிகாரத்தில் மணியைக் காட்டுகின்ற

முள் மத்திய ஆட்சி என்றால் அதைச் சுற்றி வந்துகொண்டிருக்கின்ற நிமிஷம் காட்டும் முள் மாநில ஆட்சி என்று அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அது இயற்கை. நிமிஷ முள் ஒழுங்காகச் சுற்றி வருகின்ற போது, அதற்கேற்ப மணியைக் காட்டுகின்ற முள்ளும் அதனுடைய இடத்திலிருந்து நகர்ந்தால்தான் நல்லது. அதை விட்டு விட்டு நிமிஷ முள்ளை மணி காட்டுகின்ற முள் சுற்ற ஆரம்பித்தால், காலம் தலை கீழாகப் போய்விடும். அதைப் போல் மாநில சுயாட்சி என்றால் என்னவென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் அழகாக விளக்கினார்கள். நாம் மனப்பூர்வமாக, நம்முடைய நாட்டில் வசூலிக்கப்படுகின்ற வரிப்பணத்திலிருந்து ஒரு பகுதியை மத்தியிலே இருக்கின்ற கூட்டாட்சிக்கு வழங்குவது தான் " மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி " என்பதன் அர்த்தம். நம்முடைய பணத்தை, நம்மைக் கேட்காமல் எடுத்துக்கொண்டு போய்விட்டு, நாம் கஷ்டப்படும்போது, 13 கோடி தருகிறேன் என்று கூறி அதை 9 கோடியாகக் குறைத்து, அதையும் 3 கோடியாக்கி, அதிலேயும் 1½ கோடி அளவில் கொடுப்பதற்குப் பெயர் காட்டாட்சிதான். இதைத் தான் நாம் எடுத்துச் சொல்கிறோம். மாநில சுயாட்சி தான் மனப்பூர்வமான ஒருமைப்பாட்டை வளர்க்க உதவும். மாநில அரசுக்கு எப்படிப் பணம் தேவைப்படுகிறதோ அதே போல் மத்திய அரசுக்கும் வேண்டும். எந்த மாநிலம் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று பார்த்து, மனப்பூர்வமாக நாம் வசூலித்து ஒரு பகுதியை மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டும். அந்த உரிமையை அளிப்பது தான் மாநில சுயாட்சியாகும். அதை விட்டு விட்டு, இங்கேயிருந்து அவர்கள் வசூலித்துக்கொண்டு போய், நாம் கேட்கிறபோது அவர்கள் கொடுக்க மறுப்பது மாநில சுயாட்சியாகாது, அது காட்டாட்சி. இது தான் இன்றுள்ள பிரச்சினை.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் மாநில சுயாட்சி கேட்பதை எதிர்த்து ஒரு இடத்தில் பேசியதை நான் படித்தேன். இந்துப் பத்திரிகையின் 24—12—1973-ஆம் தேதி வெளியூர் பதிப்பில் அவருடைய பேச்சு வந்திருக்கிறது. தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு அதைப் படிக்கிறேன். அதிலே அம்மையார் சொல்லுகிறார்கள்.

"Mrs. Gandhi warned that no State could prosper by fighting with the entre and called for co-operation between the States and the Centre".

ஆகவே ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும். எந்த மாதிரி ஒத்துழைப்பது ? அம்மையார் அவர்கள் நான் சொல்லுவதை நீ கேட்க வேண்டும் என்று எச்சரிக்கின்றார். அந்த முறை கூடாது. அடுத்து மாநில சுயாட்சியை எதிர்ப்பதற்கு அம்மையார் காரணங்களைச் சொல்லுகின்றார்.



"If autonomy was granted to the States without the Centre's controlling influence, the bigger and the richer ones would gallop forward in prosperity beyond the reach of the backward ones and would aggravate the imbalance which needed to be removed", Mrs. Gandhi said.....

இது இந்திய நாட்டுப் பிரதமருடைய பேச்சு.

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir, can a newspaper be read when the proceedings of the House are going on?

MR. CHAIRMAN : The hon. Member Thiru Bakkar is reading out an excerpt from a newspaper report which contains relevant facts.

THIRU G. SWAMINATHAN : Sir, am I to undertsand that Members of the House can be reading newspapers while the proceedings of the House are going on ?

MR. CHAIRMAN : The hon. Members cannot exhibit anything. But they can quote some facts from the papers.

THIRU G. SWAMINATHAN : Sir, I am mentioning not about the hon. Member who is speaking, but about the reading of newspaper by another hon. Member who is here.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசும் போது இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் பேப்பர் பார்த்துக்கொண்டிருக்கின்றார். பேப்பர் படித்துககொண்டிருப்பவர் யார் என்று தெரிகின்றது.

THIRU C. V. RAJAGOPAL : If it is so urgent a thing as a telegram, what am I to do, Sir ?

MR. CHAIRMAN : But, newspapers are not telegrams. I saw you reading a newspaper. There is no objection to your going outside and reading the newspaper.

THIRU C. V. RAJAGOPAL : Sir, it contains some telegrams.

MR. CHAIRMAN : There is no objection to the hon. Member reading a telegram, but a newspaper cannot be read by him when the proceedings of the House are going on.

THIRU C. V. RAJAGOPAL : Sir, inside the newspaper I have got a telegram.

MR. CHAIRMAN : I wonder whether it is a telegram.

THIRU G. VASANTHA PAI : Sir, can we dissect that paper to find the telegram ? (Laughter).

திரு. எம். எம். பக்கர் : இப்படிப்பட்ட பேச்சை இந்தியாவிலே காலனி ஆதிக்கம் நடந்துகொண்டிருந்த காலத்திலே, ஸர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் பேசியிருந்தால் நாம் அதைப் புரிந்து கொள்ள முடியும்.

4–50 பி.ப.

ஆனால் சுதந்திர நாட்டின் பிரதமர், சுதந்திரத்திற்காக தன் வாழ்நாள் முழுவதும் போராடிய பண்டித நேரு அவர்களின் தவப்புதல்வி சொல்லுகிறார், "மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட்டால், வசதியும் வாய்ப்பும் உள்ள மாநிலங்கள் பின் தங்கியுள்ள பிற மாநிலங்கள் போட்டியிட முடியாத அளவிற்கு உயர்ந்துசென்றுவிடும். தொழில் துறை போன்ற வளர்ச்சித் துறைகளில், அதைக் கட்டுப்படுத்த மத்திய அரசு அங்கேவேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

இதை எப்படிப் புரிந்துகொள்ளுவது என்றே எனக்குத் தெரியவில்லை. பின் தங்கிய மாநிலங்களை பொருளாதாரத்தில் ஏழ்மையிலுள்ள மாநிலங்களை உயர்த்தி விடுவதற்கு ஊக்குவிப்பதற்கு மத்திய அரசு வேண்டுமென்றால், புரிந்து கொள்ள முடியும்; அது இருக்கத்தான் வேண்டும். ஆனால் வாய்ப்பும் வசதியும் உள்ள மாநிலங்கள் அப்படிப்பட்ட வாய்ப்பையும் வசதியையும் பயன்படுத்திக் கொண்டு முன்னேறாமல் அவற்றைத் தடுப்பதற்காக இங்கே மத்திய அரசு தேவையென்றால், என்னால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அம்மையார் அவர்களுடைய பேச்சிலிருந்து இதைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட மனப்பான்மை அங்கே நிலவுகிறது. எனவேதான் வலியுறுத்திச் சொல்லுகிறோம், இந்த நாட்டிலே உண்மையான வளர்ச்சி, மனப்பூர்வமான ஒற்றுமை ஏற்படவேண்டுமானால், மாநில சுயாட்சி வந்துதான் தீர வேண்டும். இன்றைக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதைத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆனால் நான் நினைக்கிறேன், இந்தியத் திருநாடு முழுவதும் இது பரவித்தான் தீரும். வெகு சீக்கிரத்திலேயே இந்தியா முழுவதிலும் இப்படிப்பட்ட குரல் கேட்கத்தான் போகிறது. காரணம் இன்றைக்கு இந்திய நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் தகராறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. பல வகையான கிளர்ச்சிகள் வெடித்துகொண்டே இருக்கின்றன. அவற்றை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு மாநிலத்தில் ஒரு கட்சி மைனாரிட்டி ஆட்சி அமைத்து, பிறகு அதை நடத்த முடியாத நிலை ஏற்பட்டு, பிறகு அது வீழ்ந்து விடுகிறது என்றால அதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் தேர்தலில் நின்று, மக்களின் மிகப் பெரும்பான்மையான ஆதரவையும் பெற்று, நல்ல மெஜாரிட்டியைப் பெற்று, மந்திரிசபை அமைத்துள்ள பல மாநிலங்களிலே இப்போது நிலை என்ன என்று பாருங்கள். மந்திரி சபை அமைக்கப்படுகிறது. பிறகு மாற்றப்படுகிறது. அடிக்கடி மாற்றுகின்றார்கள். காரணம் என்ன ? மாநிலங்களிலே உள்ளவர்கள் அப்படி மாற்றுகின்றார்களா என்றால், இல்லை. அங்கே நிலைமையைச் சமாளிக்க முடியாமல், பிறகு ஏற்படும் நிலைமைகளிலே மந்திரி சபையையே காப்பாற்ற முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அது மட்டுமில்லை, அங்கே உள்ள சட்ட மன்றத்தையே கலைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. கலைக்கவேண்டிய நிலைக்கு அவர்கள் உந்தப்படுகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம், அங்கே உள்ள மாநில அரசே நிலைமையைச் சமாளிப்பதற்கு வேண்டிய அதிகாரங்கள் அவர்களிடம் இல்லை. ஆகவேதான் இப்படிப்பட்ட பொதுஜனக் கிளர்ச்சிகள், வன்முறைகள் அடிக்கடி நடைபெறுகின்றன. நாளுக்கு நாள் புதிய புதிய பிரச்சினைகள் தோன்றுகின்றன. அதே நேரத்திலே உள்ள பிரச்சினைகள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. 1952-ல் இப்படிப்பட்ட பிரச்சினைகள் அதிகமாக இல்லை. எனவே அன்றுள்ள நிலையில் யாரும் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்றோ, மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டுமென்றோ குரல்கொடுக்க முன்வரவில்லை. ஆனால் இப்போது அன்றாடப் பிரச்சினைகள் அதிகமாக வளர்ந்துகொண்டே இருக்கின்றன. பண வீக்கம், விலைவாசி ஏற்றம், கள்ளச்சந்தை என்று இப்படி ஏராளமாகப் பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. மாநில அளவிலே அவற்றைச் சமாளிப்பதற்கான அதிகாரங்கள் போதுமானதாக இல்லை. எனவேதான் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகள் என்று வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. அவர்களிடம் போதிய அதிகாரங்கள் இல்லை. எனவே டெல்லியைக் கேட்கின்றார்கள், "எங்களால் முடியவில்லை, நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?" என்று. மொகலாயர்கள் காலத்திலேயே சொல்லுவார்களாம், "டெல்லி பஹுத் தூர் ஹை" அதாவது டெல்லி வெகு தூரத்தில் இருக்கின்றது என்று. அதைப் போல இன்றைக்கு மாநிலங்களிலிருந்து டெல்லியை நோக்கி உடனடியாக இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்டால், அவர்கள் சீவி முடித்து சிங்காரித்து வருவதற்குள் இங்கே காரியங்கள் மிதமிஞ்சிப் போய் நூற்றுக்கணக்கான பிணங்கள் விழுந்து, கோடிக்கணக்கான சொத்துக்கள் பாழாகிவிடுகின்றன. இந்த நிலைமைகள் தவிர்க்கப்பட்டு, இந்த நாட்டிலே நல்லாட்சியும், மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டு, இந்நாட்டின் கலாசாரம் வளர்ந்து இந்த நாடு நல்ல முறையில் மேம்பாடு அடைந்து உலகில் மிக உன்னதமான நாடாக விளங்குவதற்கு இன்று நம் முன்னுள்ள இந்தத் தீர்மானம் அடிகோலுகிறது, வழி காண்பிக்கின்றது என்ற அடிப்படையில் இதை முழு மனதோடு ஆதரித்து அமருகிறேன். வணக்கம்.

*THIRU S. NARAYANASWAMY: Hon. Deputy Chairman, I am grateful for this opportunity to speak on the Rajamannar Committee Report on Centre-State relations and on the Resolution moved by the Hon. the Chief Minister.

I am aware that this Report has been prepared by two former Chief Justices and a distinguished international educationist. Therefore, this document deserves to be treated with the utmost consideration and respect. Long years before, as early as in 1935, we had a Constitution for India, on which our present Constitution is supposed to be fully based, though we claim that we have been very original. The talk of provincial autonomy has been very much in the air. This was the subject of Congress resolutions from year to year. The term 'Provincial autonomy' apparently appeared very innocuous. It did not appear mischievous, but apparently anything else appeared mischievous in later years. But, the thirst for a substantial modicum of administrative and fiscal powers to be vested at State levels has always been with every public-spirited citizen in the country. I am aware of the speeches made in the Karachi Congress and many other Congresses on this subject. If one reads them, one will find far more fanatical attachment to the idea of substantial powers being vested in the States than is heard today as possible.

Sir, a great deal has been said in the last two days on the merits of federal versus unitary Government. My hon. Friend Thiru Bakkar almost made out that there was only a unitary Government in India. The structure of the Indian Constitution is that of a federal Constitution but it is inevitable that this Constitution should operate as a unitary Constitution. This is the fate of every under-developed country that develops a Federal Constitution because there is a basic weakness in the functioning of the Government, which converts it into a unitary form of Government. There is something which I want to emphasise, as my hon. Friend Thiru Sankaralingam was at pains to point out how the American system was a federal system and all the rest. All I want to say is that the history of American federalism is very different from the history of Indian federalism. It does not matter at all. I am not going to waste the little time available to me in discussing about foreign matters. I am concerned more with what is going on in this country. So I confine myself to saying what is essential.



Sir, I have studied the Rajamannar Committee Report. I have also been studying the operation of the Indian Government with the Constitution of India for the last 25 years. Somebody quoted Jennings just now. Ivor Jennings said that there are two types of Constitution in the world—one is the "sensible type" of Constitution and the other is the "satisfying type" of Constitution—and he said the Indian Constitution was of the second type, the satisfying type, meaning that it contained everything but was not of a very sensible type. Now, whatever is the nature of the Constitution, what is important is to have a Constitution in operation in the country.

Sir, I am now going to the main point which I want to make. What is important is that we must have a substantial modicum of fiscal powers under which the State gets all the resources, at least the overwhelming part of the resources it needs, for its own governance, for its own development and for its own cultivation, from taxes collected by itself and not taken from some other source. What I mean is, whatever may be the autonomy that we have, so long as we do not change the Concurrent List, the Union List and the State List of taxation substantially to the point of theStates getting a satisfactory modicum of revenue to operate satisfactorily and bring about its own development, any other transfer of power may become illusory, to the extent to which we have to go, hat in hand, to the Centre. We have to avoid a confrontation with them, but we would not like to have an awkwardness with them. Therefore, I plead not merely for a permanent Finance Commission as the Rajamannar Committee has pleaded for. I plead for a radical change in that part of the Constitution which deals with the subjects of taxation, the Central head, the Concurrent head and the State head. If that is done, the work of a Finance Commission, permanent or temporary, will be reduced to very marginal adjustments from year to year. I am not pleading for an abolition of the Finance Commission. I only say that the Finance Commission must deal

5-00 பி.ப.

with marginal matters, not with radical matters, and that it should not try to change and chop off what has become difficult and what has been made difficult by the Constitution itself, by the rigid heads of taxation. A review, therefore, is what I like.

Sir, I could not agree with the Rajamannar Committee more than on the suggestions, after the bitter experience, as to the manner in which this non-statutory body called the Planning Commission has been operating over the years. During the times of Dr. John Mathai and Shri Chintaman Deshmukh, one of them made a statement on the floor of Parliament that the Planning Commission became a kind of economic Cabinet and that it became, on some occasions, a super-Cabinet, and Dr. John Mathai made it clear that he would resign his Finance Ministership on that account. Therefore, if a Planning Commission is to be there—and I still doubt whether it has to be there—I entirely agree that it must be made a statutory body and that its powers should be very clearly defined. But, its powers should be strictly limited to the economic development of the country and making recommendations therefor, rather than, practically ranging over the entire gamut of economic policies of the Central Government. Therefore, this is a problem.

If we make this change in the heads of taxation, there will be no need for the suggestions very correctly made by my hon. Friend Thiru Adityan yesterday, namely, what is the sanctity of the Corporation tax being called a Central tax? In fact, it need not be so. I have not read any book on taxation which says that if you call something "corporation tax", it is part of an indivisible pool. Even the idea of divisible pool was a very recent affair. So, there is no sanction or authority for saying that Corporation tax shall only be a Central tax.

Sir, the Planning Commission to-day does act as a development authority; it is not necessary that it should act as a development authority, not even if it is made a statutory body, because it appears to me that in dealing with the development programmes, persons on the spot are in a much better position to say what is viable, what is unworkable, what is feasible and what would be profitable for the State to embark upon, rather than persons at a distance taking decisions on paper plans and projections. I say this because I know something of the operation of the Planning Commission. The quantity of paper on which they depend is pathetic. I would like to say this even in respect of the statutory Planning Commission. One other reason why I say this is this :—(I would not have done this five years ago)—it is my misfortune to deal with the Central Government almost everyday, in connection with the economic decisions which they have to take not only on industrial licences, but on various other matters, and I find that India Government is *ipso facto* the most highly centralised Government in the world. They have no time to take decisions on various matters. I think this alone—if nothing else—calls for decentralisation. I have often asked, whenever I have been to Delhi, why the Cabinet Appointments Committee had not taken a decision in particular matters. There are a number of such Cabinet Appointments Committees dealing with the various sections of appointments. About 103 institutions—Research Institutes, Statutory bodies and other Boards—have no Chairmen and I have suffered as a result of some of them not being appointed in time. Everytime I was told by some Secretary to the Government that the Prime Minister had no time. Why should the Prime Minister be the Chairman of all such Committees? This seems to me to be the very reason why there should be a rational decentralisation of powers. This can take place if there is a substantial transfer of power to the States.



Sir, the point in which I find myself in sharp disagreement with the Rajamannar Committee Report, followed by the recommendations of the State which I read during the last two days, is the annihilation of the jurisdiction of the Supreme Court. I do not agree with that. The citizen should have the feeling that he can go somewhere else for the purpose of getting redress, particularly in cases where the citizen feels that local pulls and pressures, local communal prejudices and other prejudices will not play any role in a distant place and where he is likely to get justice on merits. Do not deny him that opportunity. This is what I ask for. It is not because I distrust the High Court. It is possible that a man always likes to have one more appellate opportunity to seek redress and this is important because the judiciary is still regarded by the citizen as a protective arm. Therefore, I think an appeal to the Supreme Court should not be denied either in civil or criminal cases where people consider it necessary. I am afraid I am in total disagreement with the recommendation made by the Committee, despite the fact that two of the three Members of the Committee are former Chief Justices of the Madras High Court and the Andhra High Court.

Now, Sir, a word about the licensing procedure. There is a request for the repeal of the Industrial Licensing Act. I am day by day having trouble with this particular statute and I will only say this so far as the licensing procedure is concerned. What I do want is a modification of the licensing procedure. I agree that it is extremely unsatisfactory, but my feeling is that if the Industrial Licensing Act is repealed and licensing is regulated by a State statute....I am not very particular about there being lop-sided development in the country or about the danger of a poor State becoming rich or a rich State becoming slightly richer...., there will be much tension between two States as is now growing between Maharashtra and Mysore States in the matter of supply of aluminium. There is an agreement for the supply of aluminium to the Indian Aluminium Company situated in Mysore by the Maharashtra State. The Company which is not concerned with the politics of any State is suffering because bauxite has to come across the border. The agreement could not be implemented. Because the raw material

பிற்பகல் 5·10.

is in one State and the industry is situate in another State, tension is building up and I do not want such tension to build up by reason of what I call the State's power of licensing industries. But I do want that certain residuary powers in regard to allocation of development finance must stay with the States. There is the request that foreign exchange allocation should be given in blocks and I quite understand this. What is important is that there should not be too much lop-sided production of particular goods all over India and that can only be ensured by a Central system of control over the development of industries, not by suffocating industries, but by development of industries, in a sensible way and that is very important. This is what I want to say. I say this because of my experience for the last 25 years and my dealings with the Central Government have convinced me that there is room for substantial transfer of power to the States and I have always pleaded for such transfer of power. Nobody, however eminent he may be, in Delhi can claim to understand the problem in a State in a vast country like India, better than those who are in the States. I have no reason to question the patriotism of those in the State Governments or the leaders there in taking a right decision in the interests of the people as to what should be



done. If these people cannot be trusted, I have little reason to trust the Members of the Planning Commission in taking a decision about a project in Kanyakumari or at Tuticorin, however, eminent they may be. Even the British system of administration believed in decentralisation. The Collector was asked to report and the Members of the Board of Revenue mostly depended upon the Collector's report rather than acting on their own. If the Member of the Board had reason to disbelieve the report of the Collector, he went to the spot to ascertain what had happened. If it is necessary even within a State, it is much more necessary in relation to the affairs of the whole country.

The Report of the Rajamannar Committee is a fine one and I entirely agree with it subject to the above things. I want to make only one final appeal and that is this. It is fit and proper that the State Government should ask for larger powers, rather than going with hat in hand for subvention, financial or otherwise. As my hon. Friend Thiru Bakker said, we contribute much to the Central revenues and I think the fiscal anomaly must be avoided. This can be avoided only by following the methods I have outlined already. That will contribute in a large measure to development of friendly Centre-State relations. Confrontations are not necessarily the making of the States but they can be the making of the Centre. I would say that friendly relations could be developed on the basis of allowing sensible powers to reside in areas where they can be executed efficiently and for the public good as a great Statesman said—I am not going to give the quotation and my memory is full of that. People talk about trusteeship only when it relates to money. If a man has 5 lakhs, he must act as a trustee and he should not spend all that money. Mahatma Gandhi said this about trusteeship in wealth. Trusteeship does not apply only to money but it applies to power and to political power. Political power must be characterised by a sense of trusteeship. If the sense of trusteeship can apply to the way the Centre dispenses power, I think the sense of trusteeship can be trusted to operate at the State level with equal public spirit. Therefore, it is a question of mutual trust. It is a question of doing things after 25 years. It would help the country to develop in a proper way.

My hon. Friend was talking about inflation. So long as currency is with the Centre, it will lead to inflation. If the financial powers are transferred in the manner I am speaking of, the powers of the Government to make the Nasik Printing Press work three shifts issuing currency which is not wanted by conditions in the country, can at least be arrested in a small way. I do think so and I do not go into the implications. As a student of monetary history, I do think that this can be done. The price-levels cannot be controlled by us, even after the implementation of the recommendations of the Rajamannar Committee. If by any chance the Centre accepts all the recommendations, even then, it would not be possible for us to control prices. This will not be the remedy. The remedy will have to be radical, by greater production and greater control over such production and that is important.

Therefore, the major part of the report is such as to be acceptable to every sensible and patriotic citizen of Tamil Nadu. I have great pleasure in saying that a substantial portion of the report has my full support. Thank you.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவரவர்களே, மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி வேண்டுமென்ற தீர்மானத்தை நம்முடைய முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அதை ஆதரித்துச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு நான் பெருமைப்படுகிறேன். நீண்ட காலமாக சுயாட்சிக் கொள்கையினை கழகக் கொள்கையாக வைத்திருந்தவர்கள் தலைமையில் நான் அந்தக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுவதற்கு மகிழ்ச்சியடைகிறேன். இதைப்பற்றிக் கருத்துச் சொல்லும்போது இந்திய நாட்டைப் பற்றி முதலில் சொல்வது சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இந்தியா என்பது ஒரு நாடே அல்ல என்பது அனைவரும் அறிந்தது. நீண்ட காலமாக இந்தியா ஒரு நாடாக இருந்ததில்லை. இது ஒரு துணைக் கண்டமாக இன்றைக்கும் இருந்து வருகிறது. வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்திய காலத்தில்தான் இது ஒரு நாடு என்று சொல்லக்கூடிய நிலை வந்தது என்பதை சரித்திர வாயிலாக நாம் அறிய வருகிறோம். இந்த நாட்டிற்குச் சுதந்திரம் கேட்டபோதுகூட, இதற்குக் காரணங்கள் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. சுதந்திரம் எனது பிறப்புரிமை என்று லோகமானிய பால கங்காதர திலகர் அவர்கள் சொன்னார்கள். சுதந்திரம் தனது பிறப்புரிமை என்ற கொள்கையை வைத்து நாட்டு மக்கள் கேட்டார்கள். இதற்கு நியாயம் சொல்லவேண்டிய அவசியமில்லை. நாட்டு



மக்களுக்கு நன்மை செய்வதற்கு எந்தக் காரணங்களையும் காண்பித்து, இதற்காக பெரிய நியாயங்களைக் காட்டிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இதைக் கடந்த கால வரலாறு கூறுகிறது. அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு உலக வல்லரசுகளாக எதிர் எதிர்த் திசையில் இருக்கக்கூடிய அமெரிக்காவும், இரஷ்யாவும் உள்ளன. அமெரிக்காவின் நடைமுறையைப் பார்க்கும்போது, அமெரிக்கா ஐக்கிய நாடுகளாக இருக்கிறது. நாடுகள் ஐக்கியமாகச் சேர்ந்து ஒரு கூட்டாக இருக்கிறது. பல நாடுகள் சேர்ந்த ஒரு ஐக்கியம் அது. அதுதான் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்பது. இரஷ்யாவைப் பார்க்கும்போது அங்கே பல்வேறு குடியரசுகள் இருக்கின்றன. அமெரிக்காவில் ஒரு மொழிதான் இருக்கிறதென்று சொல்லலாம். ஆனால் இரஷ்யாவில் பல்வேறு மொழிகள், பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அங்கே பல்வேறு குடியரசுகள் இருக்கின்றன. குடியரசுகளுடைய ஒன்றியமாக இரஷ்ய நாடு திகழ்கிறது. இந்த இரண்டு நாடுகளிலுமே பிரிந்து போகக்கூடிய உரிமையோடு முறையே நாடுகள், குடியரசுகள் இருக்கின்றன. அவைகளுக்கு இந்த உரிமை இருப்பதனால் அவைகள் பிரிந்து போய்விடவில்லை என்பதை நாம் பார்க்கலாம். ஆனால் அதே சமயத்தில் பக்கத்திலுள்ள பாகிஸ்தானில் பிரிந்துபோகும் உரிமை இல்லாத நிலைமையில் அரசியல் சட்டம் இருந்தது. அப்படி இருந்தும்கூட, அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆதிக்கம் செலுத்தும்போது, பிரிவினை உரிமை சட்டத்தில் இல்லாவிட்டாலும், அந்த உணர்ச்சி மக்கள் மத்தியில் உரிமை உணர்ச்சியாக வந்து பக்கத்தில் வங்காள தேசம் தனி நாடாக மாறியது வரலாறாக ஆகியிருக்கிறது. இப்படிப் பார்க்கும்போது ஏன் நம் இந்தியாவை, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா என்று சொல்லக்கூடாது என்று கேட்கிறேன். இது மாநிலங்களின் கூட்டு நாடு என்ற அந்தஸ்தோடு ஏன் இருக்கக்கூடாது என்று கேட்கிறேன். ஏன் இந்த நாடு யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா என்று ஆகக் கூடாது என்று நான் மீண்டும் கேட்க விரும்புகிறேன், அல்லது இந்தியா ஏன் குடியரசுகளின் ஒன்றியமாக இருக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இப்படிக் கேட்பதனாலேயே இந்த நாடு குட்டிச் சுவராகிவிடும் என்பது போலவும், இந்த உரிமையைக் கேட்பதனாலேயே இந்த நாட்டை எங்கேயோ கொண்டு செல்வார்கள் என்பது போலவும் இந்த உரிமைக்கு எதிராகப் பேசுபவர்கள் இந்த நாட்டின் ஒற்றுமைக்காகப் பிறந்தவர்கள் போன்றும் ஒரு உணர்ச்சி இந்த நாட்டில் நிலவி வருகிறது. இது தவறாகும். இந்தக் கருத்தைச் சந்திக்க பயந்துகொண்டிருந்தால், இந்த நாடு முன்னேற முடியாது. இரண்டு விதமாக விஷயங்கள் கேட்கப்படுகின்றன : ஒன்று, அதிகாரங்கள் அதிகம் வேண்டும், இரண்டு, மாநிலங்களில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி. நான் சொல்வது, பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய நாடுகளின் இணைப்பு என்ற பிரேரணையை வைத்திருக்க வேண்டும். இந்த மூன்றாவது கருத்தை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மாநில சுயாட்சி நாம் கேட்கிறோம். இதைத் தயங்கிக் கேட்க வேண்டிய அவசியமில்லை. இந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியிலே இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது

[திரு. செ. முத்துசாமி] [1974 ஏப்ரல் 25

பாராவில் மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னர் குழு பரிந்துரை மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டுமென்று இம்மேலவை முடிவு செய்கிறது என்று இதில் நான் சொன்ன திருத்தத்தைத் தைரியமாகக் கொண்டுவர வேண்டும். சில பேர் சந்தேகிக்கிறார்கள். கடந்த காலத்தில் நாம் திராவிட நாடு கேட்டவர்களல்லவா என்று நாம் பயந்துகொண்டிருக்க முடியாது. எந்தக் கருத்தையும் நியாயம் என்று நம்பினால், தைரியமாகச் சொல்லவேண்டும். உண்மையைச் சொல்லும்போது எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். கலிலியோ உலகம் உருண்டை என்று சொன்னான். அப்படிச் சொன்ன அவனுக்கு என்ன பரிசு கிடைத்தது? அவன் உயிரைப் போக்கினார்கள். நமக்கு உண்மை, நியாயம் என்று படும்போது, தமிழ் நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்கு இதுதான் உகந்தது என்று சொல்லும்போது நாம் தைரியமாகச் சொல்லவேண்டும். இதில் எந்த விதமான ஒளிவு, மறைவு தேவையில்லை என்பதைச் சொல்லி இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்கள் பயப்படக் கூடாது. மற்றவர்கள் சந்தேகிக்கிறார்களே என்று எண்ணக் கூடாது என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதைச் சொல்லுவதன் மூலம், இவர்கள் பிரிவினைவாதிகள் என்று யாராவது சொல்வார்களானால், அவர்கள் எந்தப் புதிய கருத்துக்களையும் சந்திப்பதற்குப் பயப்படக்கூடியவர்கள் என்றுதான் கூற முடியும். அவர்

5.20 பி.ப

களால் எந்த ஒரு நாட்டையும் ஆட்சி செய்ய முடியாதென்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு புதிய கருத்தைச் சந்திப்பதற்காக, பரிசீலிப்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். பல்வேறு மாநிலங்களும் இந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டிய அடிப்படையில் இருக்கின்றன. இங்கே கூட ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழி கல்லூரிகளில் பாட மொழியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இந்திப் பாட மொழியைத் தூக்கி எறிந்தார்கள். ஒரு கருத்துக்கு மக்களுடைய ஆதரவு, உணர்ச்சி இருக்கும்போது, அந்த உணர்ச்சியை ஒரு அரசு பிரதிபலிப்பதில் தவறில்லை. அந்தப் பிரதிபலிப்பு மக்களுக்கு நன்மை செய்யும்படியாக இருக்க வேண்டும். இன்றைக்கு, தமிழைப் பாட மொழியாகக் கொண்டுவர வேண்டுமென்று சட்டம் வந்திருக்கிறது. ஆனால், அது இன்றைக்கு அமுல்படுத்தப்பட்டிருக்கிறதாவென்றால், அது வேறு விஷயமாக இருக்கிறது. சில கருத்துக்களுக்கு எதிர்ப்புகள் வரும். சில நேரங்களில் சில சட்டங்களை அமுல்படுத்தும்போது எதிர்ப்புகள் வரத்தான் செய்யும், அந்த எதிர்ப்புகளை ஜீரணிக்கத்தான் வேண்டுமென்று சொல்லிக்



1974 ஏப்ரல் 25] [திரு. செ. முத்துசாமி]

கொள்ள விரும்புகிறேன். நாம் அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்கிறோம். இப்படித்தான் மாற்ற வேண்டுமென்று சொல்கிறோம். பிரிந்து போகும் உரிமையுடன், இரண்டு நாடுகள், வல்லரசுகள் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

பிரிந்து போக உரிமை கொடுக்காத நாடு, ஆதிக்க சக்தியின் காரணமாக இன்றைக்கு உடைபட்டிருக்கிறது. இதைக் காரணமாகக் காட்டி, கேட்பதற்கு நமக்கு முழுக்க முழுக்க உரிமையிருக்கிறது. இப்படி சுயாட்சி கேட்பதனாலேயே நாடு பிரிந்துவிடுமென்ற பயம் இருக்கிறவர்கள், இதைக் கேட்காததாலேயே நாடு எதிர் காலத்தில் பிரியாதென்ற உத்தரவாதத்தை அளிக்க முடியுமா வென்று கேட்க விரும்புகிறேன். காலத்தால், ஆதிக்க சக்திகள் எங்கெங்கு ஆதிக்கம் செய்கிறதென்று மக்கள் கருதுகிறார்களோ, அந்த நேரத்தில் ஆதிக்கத்திற்கு உட்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து, அவர்களுக்கு உரிமை வேண்டுமென்று கேட்பது, சுதந்திரம் வேண்டுமென்று கேட்பது நாட்டு வரலாறாக இருக்கிறது. ஆகவே ஆதிக்கம் செலுத்துகிறவர்கள்தான் அதைப் பற்றிப் பயப்பட வேண்டும். ஆதிக்கத்தினால், அழுத்தப்படுபவர்கள் உரிமைகளைத் கேட்கத் தயங்க வேண்டியதில்லை. தமிழ் நாட்டு மக்களுக்கு இந்த நன்மைகளைச் செய்ய எங்களால் முடியவில்லை ; தமிழக அரசால் முடியவில்லை ; ஆதலால் இந்த அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் கேட்கப்படுகிறது. அதிகாரங்களைக் கேட்பதில் தவறில்லை. அதிலே யாராவது சந்தேகத்தைப் புகுத்துவார்களானால், அந்த சந்தேகத்தைப் புகுத்துபவர்கள்தான் சந்தேகத்திற்கு உரியவர்களாவார்கள். இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று, அங்கிருக்கக்கூடிய அதிகாரத்தை எங்களிடத்திலே அளியுங்களென்று கூறுவதில் எந்தவிதமான சங்கடமும் யாருக்கும் இருக்க முடியாது. அதனாலே பிரிந்து விடுமென்ற பயம் இருக்குமானால், இப்படி பயத்தை வைத்துக் கொண்டு இந்தியா எத்தனை நாட்களுக்கு ஒற்றுமையாக வாழ்ந்து விடுமென்று கேட்க விரும்புகிறேன். இப்படி எழுந்திருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் அமைந்திருக்கக்கூடிய ஒரு மாநில அரசு கொண்டு வந்துள்ள தீர்மானம் அந்த மாநில மக்களுடைய கருத்தாக அமைகிறது.

கருத்து வேறுபாடு உடையவர்கள் இருக்கலாம். அரசியல் உலகிலே எதிர்க் கட்சி, ஆளுங் கட்சி என்று இருக்கும்போது, ஆளும் கட்சி மெஜாரிட்டி மக்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சி செய்ய வருகிறது. அப்படி வரும்போது, அந்த மக்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்கிறார்கள். நாம் பழைய காலத்தில் திராவிட நாடு கேட்டதால் மற்றவர்கள் சந்தேகப்படுவார்களென்று நாம் சங்கடப்பட வேண்டியதில்லை. மக்கள் நம்பித்தான் ஆட்சிப் பொறுப்பில் வைத்திருக்கிறார்கள். ஆதலால் அந்தக் கொள்கையைத் தைரியமாக வைக்க வேண்டும். முதலமைச்சரவர்கள் தைரியமாக அந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டும். அமெரிக்க நாட்டிலும் இரஷ்ய நாட்டிலும் பிரிந்து போகும் உரிமையைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில நாடுகளிலும் கொடுத்திருக்கிறார்கள். அதை வைத்துக் கேட்கவேண்டும். சந்தேகப்படுபவர்கள் என்றைக்கும் சந்தேகப்படுவார்கள். அதைப்பற்றி நாம் சங்கடப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

உரிமை நமக்குத் தேவைப்படுகிறது, நியாயம் நமக்கு வேண்டியதில்லை. இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகளைச் செய்ய இது தேவையென்று சொல்லுவதற்கு இந்த அரசுக்கு உரிமை இருக்கிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்த உரிமை இருக்கிறதென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இங்கு, மாநிலத்திலே ஒரு கல்வித் துறை இருக்கிறது. மத்தியிலே ஒரு கல்வித் துறை இருக்கிறது. மாநிலத்திலே இருக்கக்கூடிய கல்வித் துறைக்கு உயர்நிலைப் பள்ளிகளின்மீது அதிகாரம் செலுத்தும் உரிமை இருக்கிறது. மத்தியிலே இருக்கக்கூடிய கல்வித் துறைக்கு யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷனைப் போட்டு, அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்யும் அதிகாரம் இருக்கிறது. அரசியல் சட்டத்தில், 6 முதல் 14 வயது வரையில் இருக்கக்கூடிய பிள்ளைகளுக்குக் கட்டாயம் கல்வியைப் போதிக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. அந்த அரசாங்கம் மேலே இருக்கக்கூடிய கல்விக்கு மட்டும் பணம் கொடுக்கிறதே தவிர கீழே இருக்கும் கல்வி எப்படிப்போனால் என்ன என்று கவலைப்படாத ஒரு நிலையில் இருப்பதைப் பார்க்கிறோம்.

கல்வித் துறையை மாநில அரசுகளும், மத்திய அரசும் சரியாக நிர்வகிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஒரு மாநிலம்தான் இந்தத் திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டுவிட்டால், அந்த மாநிலங்கள்தான் அமுல்படுத்த முடியும். தமிழ் நாட்டிலுள்ள எய்டட் பள்ளிகள் குறித்து ஒரு சட்டம் இருக்க வேண்டுமென்று தமிழ் நாடு அரசு கொண்டு வந்தது. இதற்கும் மத்தியிலேதான் அங்கீகாரம் பெற்றாக வேண்டும். இங்கே ஒரு சட்டத் துறை இருக்கிறது. 3,000 ரூபாய் 4,000 ரூபாய் அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். இங்கே சட்டச் செயலாளர், சட்ட நிபுணர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் பரிசீலித்து, அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருகிறார்கள். அதற்குப் பிறகு அங்கீகாரம் வேண்டும். இந்த "பில்"-க்கு பின்னால் வந்த பில்களெல்லாம் வந்துவிட்டன. ஆசிரியர்கள் தெருக்களில் நிற்கிறார்களென்ற அவசர உணர்வோடு இந்த அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. ஆனால், அது அங்கே ஜனாதிபதி அலுவலகத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது. "ரெட்டேப்பிசம்" ஜனாதிபதி அலுவலகத்தில் இருக்குமானால், இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு என்ன பாதுகாப்பு கிடைக்குமென்று கேட்க விரும்புகிறேன். மத்தியிலே இப்படிப்பட்ட அதிகாரங்கள் குவிந்துகொண்டே இருப்பதால் இப்படிப்பட்ட காலத் தாழ்வுகள் ஏற்படுகின்றன. எனவே அது கூடாதென்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஜனாதிபதி அப்ரூவல் கொடுத்த பிறகும், அதனால் பாதிக்கப்படுகின்றோமென்று நினைக்கிறவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம். அந்தச் சட்டத்தைத் தடுக்கலாம். பின்பு எதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம்? எதற்கு அந்த முத்திரை? அந்த முத்திரைக்கு இவ்வளவு காலம் எதற்கு மாநில அரசு காத்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. மாநில அரசிலுள்ளவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அந்த அரசு மக்களுடைய உணர்ச்சிகளை உணர்ந்து சட்டம் இயற்றுகிறது. அதற்கு அங்கீகாரம்



கொடுக்க இவ்வளவு தாமதமா என்று கேட்க விரும்புகிறேன். இப்படித் தேவையில்லாத வெள்ளைக்காரர் கால சிந்தனைகளே இன்னமும் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தச் சிந்தனையிலேயே அரசியல் சட்டம் எழுதப்பட்டிருக்கிறது. 32 முறைகள் அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கு ஏன் இன்னொரு முறை திருத்தப்படக் கூடாது? மக்களுடைய எண்ணத்திற்குத் தகுந்தாற்போல் அந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்தக் கருத்தைச் சொல்லும்போது ஏன் பயப்பட வேண்டும்? பயப்படுகிறவர்கள் யார்? அதிகாரம் போய்விடும் என்று நினைப்பவர்கள்தான். இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிமை உடையதுதானா நடுவண் அரசு? நடுவண் அரசிடம் இருக்கும் அதிகாரத்தில், மாநில அரசுக்கு இவ்வளவு வேண்டுமென்று சொல்கிறோம். மக்களின் பிரதிநிதிகள்தான் இங்கு ஆள்கிறார்கள். ஏன் மத்தியில் இருப்பவர்கள் பயப்பட வேண்டும்? மாநில அரசில் இருப்பவர்களுக்கு அதிக அதிகாரம் கேட்க முழுக்க முழுக்க அதிகாரம் இருக்கிறது. அந்த உரிமையை நாங்கள் தர மாட்டோம்; நாடு பிரிந்து விடும் என்று பயப்படுகிறோம்; மற்ற பின் தங்கிய மாநிலங்கள் மேலும் பின்தங்கி விடுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் உழைப்பால்தான் ஒரு மாநிலம் உயருகிறது. மக்களின் சுறுசுறுப்பினாலும், அந்த நாட்டுமக்கள் கஷ்டப்பட்டுச் செய்கின்ற செயல்களாலும், அவர்கள் சக்தியினாலும்தான் ஒரு மாநிலமோ, ஒரு நாடோ முன்னேறுகிறது. பஞ்சாப் மாநிலம் இன்றைக்கு முன்னேறி இருக்கிறது. மத்திய அரசினால் அதன் முன்னேற்றத்தைத் தடுக்க முடியுமா? இன்றைக்கு வேறு சில மாநிலங்களில் முன்னேற்றம் இல்லாமல் இருக்கிறது. அங்கே இருக்கும் வாய்ப்புகளையும், வசதிகளையும் பயன்படுத்துவது மக்களைப் பொறுத்திருக்கிறது. தமிழ் நாடு கல்வித் துறையிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள். வரிப் பணத்தில் நான்கில் ஒரு பங்கைச் செலவழித்த காரணத்தினால், இன்றைக்கு மத்திய அரசு கல்விக்காக பணம் கொடுக்க மாட்டோமென்று சொல்கிறார்கள். அடுத்து, ஹெல்த் டிபார்ட்மெண்ட் அதுவும் ஸ்டேட் சப்ஜெக்ட்தான். நிறையப் பணத்தை அதற்காகச் செலவழித்துவிட்டதால், "நீ முன்னேறி விட்டாய், ஆதலால் கொடுக்க மாட்டோம்" என்று சொல்லுகிறார்கள். அன்றைக்கு வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொன்ன முழக்கத்திற்கு மீண்டும் வித்திடுகிறார்கள். சபையிலே இருக்கக்கூடியவர்கள், சட்டத்திற்கு உட்பட்டவர்கள், அரசியல் சட்டத்தின் பெயரால் சத்தியம் செய்திருப்பவர்கள் வேண்டுமானால் அந்த வாசகங்களைப் போடுவதற்கு யோசனை பண்ணுவார்களே தவிர, மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள எண்ணங்களை எப்படித் தடுக்க முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆதலால் மத்திய அரசிலே இருக்கக்கூடியவர்கள் இதையெல்லாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்களை கல்விக்கு ஒதுக்கிவிட்டு, அதில் 250 கோடி ரூபாயை உத்தரப் பிரதேசத்திற்கு கல்வி முன்னேற்றத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிற்கு எதுவும் தரப்படவில்லை. தமிழ் நாடு சர்க்கார் வரிப் பணத்தில் ஏற்கெனவே 25 சதவிகிதத்தை ஒதுக்கி விட்டதால் இல்லையென்று சொல்லுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

அதை அநியாயம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உத்தரப் பிரதேசம் என்பதால் 250 கோடி ரூபாயா? 3 பிரதம மந்திரிகள் இந்த நாட்டிலே வந்திருக்கிறார்கள். 3 பேர்களும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். உத்தரவிடக்கூடிய அதிகாரம் படைத்தவர்களாக உத்தரப் பிரதேசத்தில் பிறந்தவர்கள் தான் வந்திருக்கிறார்கள். நான் குறையாகக் கூறவில்லை. மக்கள் மத்தியில் யாருக்குச் செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தஞ்சையைச் சேர்ந்த நம்முடைய முதல்வரவர்கள், முதல்வராக வந்துவிட்டார்கள் என்பதற்காக, சேலத்தைச் சேர்ந்த நான் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் முதல்வராக வரவில்லையே என்று கூற முடியாது. மக்கள் மத்தியில் யார் உழைக்கிறார்களோ அவர்கள்தான் வருவார்கள்.

பிற்பகல் 5·30.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவரே இரண்டு முறை வந்திருக்கிறார்—திரு. ராஜாஜி அவர்கள்.

திரு. செ. முத்துசாமி : சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். ராஜாஜி அவர்கள்கூட பல பதவிகளை வகித்திருக்கிறார்கள். ஹோசூர் சேலம் மாவட்டத்தில் இல்லை என்றுதான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சேலம் மாவட்டத்தில் இல்லை என்று ஏன் சொல்லுகிறார்கள்? ஹோசூர் அந்த மாவட்டத்தில் ஒரு பகுதி தான்.

திரு. செ. முத்துசாமி : இன்றைக்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அதற்குப்பின் மத்திய அமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

திரு. செ. முத்துசாமி : அப்படி சேலத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள் என்பதற்காக மற்றவர்கள் பொறுமைப்பட முடியாது. அதை ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். யாருக்குச் செல்வாக்கு இருக்கிறதோ அந்தப் பகுதியிலே இருந்து வருகிறார்கள். அதை நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை. அப்படி அவர்கள் வந்ததற்காக, அந்த மாநிலத்திற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்குவது. தமிழ் நாட்டுக்கு இல்லை. இன்னொரு மாநிலத்திற்கு இல்லை. இவ்வளவு பணம் செலவழித்தால், கல்வியில் முன்னேற முடியும் என்ற உயர்ந்த நோக்கத்தில் நாம் செலவிடுகிறோம். மற்றொரு மாநிலத்தில் மற்றொரு துறைக்கு அதைச் செலவு செய்கிறார்கள். அதற்காக கல்வித் துறையில் முன்னேறவில்லை என்ற



காரணத்தைக் காட்டி, அந்த மாநிலத்திற்கு அதிகப் பணம் மத்திய அரசிலிருந்து ஒதுக்குகிறார்கள். இதுதான் மத்திய அரசின் கொள்கை என்றால் இதனுடைய விளைவு எப்படிப் போகும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இது பாராளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டிய கருத்து, இந்தக் கருத்துக்களை வெளியிடுவதற்கு, எந்த இடத்திலும், கன்னியாகுமரி முதல் இமயம் வரை யாருக்கும் உரிமை இருக்கிறது என்ற அடிப்படையில்தான் சொல்லுகிறேன். மாநில சுயாட்சி என்பது உரிமைப் பிரச்சினை. இந்த உரிமையைக் கேட்பதற்கு நியாயம் தேவையில்லை என்பதுதான் என்னுடைய வாதம். நாம் நியாயமாகக் கேட்கிறோம்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நியாயம் தேவையில்லையா, அநியாயம் தான் தேவையா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தர்ம நியாயம் என்று சொல்லுவதுண்டு. நியாயத்தை விட பெரியதான தர்மம் என்று சொல்கிறார்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். பேச்சாளர் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதை இலக்கணத்திற்காகத் தான் சொன்னேன்.

திரு செ. முத்துசாமி : நான் சொன்ன கருத்தைப் புரிந்துகொள்ளாமல் வேறு பொருளாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஒரே வார்த்தைக்கு ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பொருள் இருக்கிறது. நியாயம் என்று சொல்லும்போது, இன்ன இன்ன காரணத்திற்காகக் கேட்கிறோம் என்று சொல்லுகிறேன். இந்த இடத்தில் நியாயம் என்பதற்கு காரணம் என்று பொருள். பயன்படுத்தக்கூடிய இடத்திலே உள்ள பொருள் இது என்பதைச் சொல்லி, அநியாயம் என்று அதற்குப் பொருள் கொள்ள வேண்டாம் என்று கூற விரும்புகிறேன். காரணத்தைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. என்னுடைய உரிமை அது. என்னுடைய மகன் உரிமை கேட்கிறான். இப்படி நடப்பது சரியில்லை என்று சொல்லுகிறான். அவனுடைய உரிமையை விட்டு விடவேண்டியதுதான். அப்படி விடாவிட்டால் நான் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறேன் ; அதிகாரம் செலுத்துகிறேன் என்று தான் பொருள். அடிமைப்படுத்த விரும்புகிறேன் என்றுதான் அதற்குப் பொருள். என் மனைவியிடத்தில் அதற்காகச் சண்டை போடுகிறான். மனைவி பொறுத்துப் பார்ப்பாள். கடைசியில் நீங்கள்தான் விவகாரம் செய்கிறீர்கள் என்று அவன் சொல்லி விடுவான். அப்படிச் செய்வதால் குடும்பம் உடைகிறது. இப்படி ஒரு குடும்பத்திலேயே நடக்கிறது என்றால், மாநில சுயாட்சிப் பிரச்சினையைப்பற்றிச் சந்தேகப்படுகிறவர்கள் நிலையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

ஆதிக்கம் யார் செலுத்துகிறார்களோ, அதிகாரம் யார் செலுத்துகிறார்களோ, பிறரை அடிமைப்படுத்துவதன் மூலமாக அவர்களைக் கீழான நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் தான் பயப்பட வேண்டும். ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் தான் உரிமை கேட்கிறவர்களைப்பற்றி எப்போதுமே பயந்ததாக வரலாறு கூறுகிறது. இப்போது நாம் கேட்பது உரிமை. அந்த உரிமைக் குரல் தான் இந்த மேலவையிலே தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதையே தான் சட்டப் பேரவையிலும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையே, தெளிவாக, தைரியமாக, பிரிந்து போகும் உரிமையோடு என்று கேட்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்களுக்கு தன்னுடைய கருத்தை வெளியிடுவதற்கு எல்லா உரிமையும் உண்டு. அதே நேரத்தில் ஆளுங்கட்சி உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு அதை வெளியே சொல்லுவதற்குக் கூச்சப்பட்டு, மறைத்துச் சொல்வது போல் அங்கத்தினர் சொல்லும்போது, ஒருவேளை ஆசிரியராக இருந்த காரணத்தால் அவருக்கு மட்டும் பொருள் புரியும் என்று கருதுகிறார் போல் இருக்கிறது. அந்தத் தவறான பொருளை அவருடைய பேச்சின் மூலமாக ஏற்படுத்த வேண்டாம். பிரிந்து போகிற உரிமை தேவையில்லாதது, மாநில சுயாட்சி கிடைத்தாலே இந்த நாட்டுக்குப் போதும் என்ற அடிப்படையில் தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலே மறைவு இல்லை, வேறு விதமான கருத்துக்கு இடமும் இல்லை.

திரு செ. முத்துசாமி : அரசின் கொள்கையைத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். நான் இன்னும் வேகமாகக் கேட்க வேண்டுமென்று சொன்னேன். நாங்கள் இவ்வளவு தான் கேட்கிறோம் என்றால், அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை. என்னுடைய கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். அது அரசின் கருத்தாக இருக்கவேண்டுமென்று நான் திணிக்கவில்லை. இது என்னுடைய சொந்தக் கருத்து. இப்படி இருக்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். இதைத் தைரியமாகக் கொண்டுவர வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். இது தைரியப் பிரச்சினை அல்ல, அறிவுப் பிரச்சினை. எந்த அடிப்படையில், எந்த முறையில் இதை எடுத்து வைத்தால் எப்படி நிறைவேறும் என்பதைப்பற்றி அரசியல் வாத அடிப்படையிலும், நாட்டினுடைய மொத்த சூழ்நிலை அடிப்படையிலும் கருத்துக்களை எடுத்து வைக்கவேண்டியிருக்கிறது. இது இந்தியா முழுவதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கருத்து. இந்தியாவில் பிரிந்து போகலாம் என்று கருதுகிறவர்கள் ஒரு சிறுபான்மையினர் இருந்தாலும், பிரிந்து போக இடம் இருக்கக் கூடாது என்பது பெரும்பான்மையினர் கருத்து. பெரும்



பான்மையினர் கருத்து அப்படி இருக்கும்போது, அதிலே மாநில சுயாட்சி கொடுக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதே மாபெரும் வெற்றி. அந்த அடிப்படையில் இந்தக் கருத்துக்கு இயன்ற வரையில் ஒத்துழைப்புத் தரலாம். அல்லது தன்னுடைய மாறுபட்ட கருத்தை வெளியிடலாம்.

திரு செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே ஆதரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இப்படி இருக்க வேண்டும் என்று தான் கூறுகிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறேன். பிரிந்து போகிறோம் என்ற வார்த்தையைப் போடாவிட்டாலும், போடுகிறார்களா இல்லையா என்பது பிரச்சினைக்குரிய விஷயம் தான். என்னுடைய கருத்தைச் சொன்னேன். என்னுடைய கருத்தைத் திணிப்பதற்கு வலிமை இல்லை. இப்படித்தான் தீர்மானம் கொடுக்க வேண்டும். கொண்டு வருவதும் வராததும் உங்கள் இஷ்டம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது உறுப்பினர் அவர்களுடைய சொந்தக் கருத்தா, அல்லது ஆசிரியர் கூட்டணியின் கருத்தா ?

திரு செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய கூட்டணி ஒரு அரசியல் கட்சி அல்ல. அது எந்த அரசியல் கட்சியோடும் தொடர்புடையதும் அல்ல. அரசியல் கட்சி என்று இல்லாத காரணத்தால், இது முத்துசாமியின் தனிக்கருத்து என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய வினாவுக்குப் பதிலாகக்கூறி, இது மாநில சுயாட்சியின் உரிமைக்குரல், இந்த குரலுக்குப் பயப்படுவோர், அதிகாரம் போய் விடும் என்று பயப்படுபவர்கள்தான், உண்மையாகப் பரிசீலிப்பதற்குப் பயப்படக் கூடாது என்பதையும் கூறி, அந்த அளவில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பு அளித்ததற்கு நான் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு எல். பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன் மொழிந்து நிறைவேற்றித்தரும்படி கேட்டிருக்கிறார்கள். அதன்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி, மாநில சுயாட்சி என்பது எப்படி எப்படி வளர்ந்தது என்று நாம் யோசிக்க வேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் சுதந்திரம் வாங்கி 26 ஆண்டுகள் நிறைவு பெற்றாலும், இன்றைக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்று ஒரு சிந்தனைக்குரிய நிலையில் நாம் இருக்கிறோம். ஆனால், அதிக அதிகாரங்களா, அல்லது சுயாட்சியா, தனி ஆட்சியா என்ற நிலையைப் பார்க்கும்போது, இவைகளுக்கெல்லாம் தமிழிலே என்ன என்ன விளக்கங்கள் தரலாம் என்ற சூழ்நிலையில் இருக்கிறோம். சுயாட்சி என்றால் எப்படி எப்படி இருந்தால் சுயாட்சி மலரும் என்பதை

சிந்திக்க வேண்டும்: தன்னாட்சி என்பது ஒரு பிரச்சினையாகவே வளர்ந்து கொண்டிருக்கிறது. தன்னாட்சி என்பது என்ன என்ற நிலை இருக்கிறது. இது பரிசீலனைக்குரிய பிரச்சினை என்று கூறினார்கள். எங்களுடைய கட்சித் தலைவர் திரு. காமராஜ் அவர்களும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதிக அதிகாரங்கள் வேண்டுமென்றால் நாம் மட்டும், இந்தியாவின் தென் பகுதியில் இருக்கின்ற தமிழ் நாட்டுக்கு மட்டும் உள்ள பிரச்சினையாக அதைக் கருதாமல், எல்லா மாநில முதலமைச்சர்களும் ஒன்று சேர்ந்து அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று அவர்கள் தம்முடைய அபிப்பிராயத்தைக் கூறினார்கள். அதோடு மட்டுமல்ல. அகில இந்திய ரீதியில் ஒரு தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும். மாநிலத்திலும் கூட, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

5-40 பி.ப. முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த வாசகத்தைப் பார்க்கும் போதுதான் சிறிது அச்சப்பட வேண்டியிருக்கிறது. மாநில சுயாட்சி என்ற வார்த்தைகளைப் பார்க்கும்போது, ஆரம்ப காலத்தில் எழுப்பிய திராவிட நாடுக் கோரிக்கைதான் நினைவிற்கு வருகிறது. 1967க்கு முன்னர் "பெற்றால் திராவிட நாடு இல்லையென்றால் இடுகாடு" என்ற ஒருவாசகத்தைத்தான் மக்கள் முன்னால் வைத்தார்கள். பிறகு ஒரு சட்டத்திருத்தம் வந்த காரணமாக அதை அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். பின்னர் நான்கைந்து ஆண்டுக் காலம் ஆட்சியிலே அமர்ந்திருந்து 1971-லே அமைச்சரவையைக் கலைத்து தேர்தலில் நின்ற காலத்திலே இந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை மக்கள் முன்னால் வைத்திருக்கலாம். ஆனால் காலம் கடந்து இதை இப்போது......

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, 1971 திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரகடனத்திலே மாநில சுயாட்சிக் கோரிக்கையை வைத்திருக்கிறோம். இதை என் முன்னுரையிலே கூட குறிப்பிட்டிருக்கின்றேன்.

<u>திரு. எல். பலராமன் :</u> மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு அக்கோரிக்கையை வலியுறுத்திப் பேசுவதைப்போல அன்றைக்கு வலியுறுத்திப் பேசவில்லை. மக்கள் மத்தியிலே அன்றைக்கு இதை ஒரு பிரச்சினையாக எழுப்பவில்லை. இன்றைக்கு அதைப் பெரிதாக எழுப்பும் போது, இங்கே ஏதோ ஒரு புதிய நிலை ஏற்பட்டிருக்கின்றது என்றுதான் மக்கள் மத்தியிலே இன்றைக்குப் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களை திசை திருப்புவதற்காக மாநில சுயாட்சி கோரிக்கையை வைத்திருக்கிறது என்று மக்கள் பரவலாகப் பேசுகின்றார்கள் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் உணர வேண்டும் என்பதை, தலைவரவர்களே, தங்கள் மூலமாக இந்த அவைக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்திலே



"பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காப்பாற்றவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களிடை நெருங்கிய தொடர்பு கொண்டு, மாநில ஆட்சி தடையின்றி............" "தடையின்றி" என்ற ஒரு வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் அறிய விரும்புகிறேன், "தடை" என்றால் இப்போது என்ன தடையிருக்கின்றது? திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு மாநிலக் கட்சி என்று கருதி, அதற்கு என்று ஏதாவது ஒரு தனித்தடையை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கின்றதா என்று பார்த்தால் இல்லை. ஆட்சிப் பொறுப்பிற்கு முன்னேற்றக் கழகம் வந்த பிறகு, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உதவிகள் அவ்வளவையும், ஆலோசனைகளையும் மத்திய அரசு கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது. இருபது ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இந்த மாநிலத்திலே இருந்த சட்டங்கள் அவ்வளவையும் திரும்பப்பெற்றுக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு என தனியாக ஏதாவது சட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றார்களா மத்தியிலே என்றால், இல்லை. உள்ள சட்டங்களை வைத்துக்கொண்டே இன்னும் சிறப்பான நிர்வாகத்தைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் நிர்வாக இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக மக்கள் மத்தியிலே இன்றைய ஆட்சி செல்வாக்கிழந்து, இப்போது அவர்கள் கவனத்தைத் திசை திருப்புவதற்காக இந்த சுயாட்சிக் கொள்கையை வைத்துப் பேசுகின்றார்கள் என்று மக்கள் மன்றம் கருதுகிறது என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> மக்கள் கருதுவது இருக்கட்டும். உறுப்பினர் அவர்கள் என்ன கருதுகின்றார்கள்? இயந்திரக் கோளாறு இருக்கத்தான் செய்யும். இயந்திரத்தை ரிப்பேர் செய்து திரும்ப ஓட்ட வேண்டியதுதான் பொறுப்பு.

<u>திரு. ஒய். வேங்கடேஸ்வர தீக்ஷிதர் :</u> தலைவரவர்களே, தலைவரவர்களே கெட்டுவிட்டது என்கின்றார்கள். காங்கிரஸ்காரர்கள் ஓட்டிக்கொண்டிருந்த போது நன்றாகத்தான் ஓட்டிக்கொண்டிருந்தோம் அவ்வளவு காலமும்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> அவ்வளவு காலம் ஓட்டிய காரணத்தால்தான் கெட்டுப்போய்விட்டது போலிருக்கிறது.

<u>திரு. எல். பலராமன்:</u> தலைவரவர்களே, இயந்திரம் கெட்டுப்போகவில்லை இயந்திரத்தை ஓட்டுகின்றவர்களுக்குத்தான் திறமையில்லை என்று சொல்ல வேண்டும்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> ஓட்டுகிறவன் எப்படிக் கெடுக்க முடியும்? லைசென்ஸோடுதான் ஓட்டுகிறான். ஓட்டத் தெரியவில்லை என்றால் எப்படி லைசென்ஸ் கொடுத்திருப்பார்கள்?

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இன்றைக்கு இப்படி நிர்வாகம் போயிருக்கும் நிலைமைக்கு ஆட்சியிலுள்ளவர்கள் என்ன விளக்கத்தைத்தர இருக்கின்றார்கள் என்று தெரியவில்லை. ஆளும் கட்சியினர் சிலர், "இந்தக் கோட்டையிலுள்ள புல்லைக்கூட அறுக்க எங்களுக்கு அனுமதியில்லை" என்று நேற்றுக்கூடக் குறிப்பிட்டார்கள். அந்த அளவிற்கு அதிகாரம் இல்லாமலில்லை. அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பது வேண்டுமானால் பரிசீலனைக்கு உரியதாக இருக்கலாம். அதுபற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் இருக்கிறோம் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் அதை வைத்துக் கொண்டு, "ஏதோ தமிழக அரசு ஒன்றுதான் உண்மையிலேயே மக்கள் பிரதிநிதித்துவம் கொண்ட அரசு, மத்திய அரசு அப்படிப்பட்ட அரசில்லை" என்ற உணர்வினை இன்றைக்கு மக்கள் மத்தியிலே பரப்பி வருகின்றார்கள். ஏதோ அவர்கள் வடநாட்டவர்கள், நாம் தென்னாட்டவர்கள் என்ற உணர்வோடு பேசிவருகின்றார்கள் என்று பத்திரிகையில் பார்க்கிறோம். அப்படியின்றி, மாநில அரசுகள், மத்திய அரசு இவற்றுக்கு இடையிலே உள்ள உறவினைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்று சொல்லலாம். மத்திய அரசோ மாநில அரசுகளோ இரண்டும் மக்களுக்குத் தொண்டாற்றும் அரசுகளாகத்தான் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து, மத்திய அரசிடமிருந்து எதையெதை நாம் கேட்டுப் பெறலாம் என்பதை நாசூக்காக, நாகரீகமாகக் கேட்கலாம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கலாம் என்று இந்த அவைக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிக அதிகாரம், அதிக அதிகாரம் என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறுகின்றார்கள். அப்படிப்பட்ட கோரிக்கைக்கு இடமில்லாத வகையில், எல்லா மாநிலங்களையும் சமமாக நடத்தக்கூடிய நிலையில்தான் மத்திய சர்க்கார் செயல்பட்டு வருகிறது. கடந்த காலத்திலே நமது மாநிலத்திலே வறட்சி நிலை ஏற்பட்டபோது, மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்ததைக் காட்டிலும் அதிக அளவிற்கு நிதி உதவியினை அளித்திருக்கின்றார்கள். உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய நேரத்திலும் அதற்கான அவ்வளவு உதவிகளையும் மத்திய அரசு அளித்திருக்கிறது. இந்த நிலையில், மத்திய அரசிடம் நாம் வேண்டியதைக் கேட்டுக் பெற்று, மத்திய அரசை எப்படி வலுப்படுத்தலாம் என்றுதான் நாம் சிந்திக்க வேண்டுமே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய கோரிக்கையான திராவிட நாடு கோரிக்கையைக் கேட்கின்றார்களா, அல்லது அதிகாரங்கள் மேலும் மேலும் வேண்டும் என்று கேட்கின்றார்களா, அல்லது மாநில சுயாட்சி என்று கேட்கின்றார்களா என்று தெரியாத நிலையில் பேசுவது முறையாகாது. இன்றைய நிலையில் திராவிட நாடு கோரிக்கையைத்தான் வைத்திருக்கின்றார்கள் என்ற அச்ச உணர்வு ஏற்படுகிறது. சட்டத்துக்குப் பயந்தோ, இடையிலே ஏற்பட்ட மனமாற்றம் காரணமாகவோ திராவிட நாடு கொள்கையை விட்டிருந்தாலும், கடைசி காலத்திலே பெரியார் அவர்கள் "தனித் தமிழ் நாடு வேண்டும்" என்ற கோரிக்கையை விடுத்தார்கள். தனித் தமிழ் நாடு ஏற்படுவதன் மூலமாகத்தான் இந்த மாநிலத்திற்கு வேண்டிய அனைத்து நன்மைகளையும் பெற முடியும் என்று அவர் சொல்லிவந்தார். அவர் மறைந்த



பிறகு நடந்த இரங்கல் கூட்டத்தில்கூட இந்த அவையில் என்றுதான் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், "பெரியார் அவர்கள் விட்டுச் சென்ற கொள்கைகளை நாங்கள் நிறைவேற்றுவோம்" என்ற அடிப்படையில் தனித் தமிழ் நாடு கோரிக்கையை இன்று..........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தவறான தகவல்களை, விளக்கங்களை மன்றத்தில் தருவது முறையல்ல. அப்படி நான் பேசியதாகவும் இந்த மாமன்றக் குறிப்பில் இருப்பதாகவும் கருதிக் கொண்டு பேசுவதும் முறையில்லை. பெரியார் அவர்கள் விட்டுச்சென்ற கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் பாடுபடுவோம் என்று சொன்னால், அவர் ஏற்றுக்கொண்டிருந்த அனைத்துக் கொள்கைகளையும் என்று அர்த்தமில்லை. திரு. காமராஜர் அவர்களைக்கூட பெரியார் அவர்கள் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அப்படியானால் திரு. காமராஜர் தனித் தமிழ் நாட்டை வரவேற்றாரா என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் விளக்க வேண்டும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரியார் அவர்களுடைய அவ்வளவு கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று விளக்கம் கூறியமைக்கு நன்றி. ஆனால் திரு. காமராஜர் அவர்கள் எதை ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அதைத்தான் பெரியார் அவர்களிடமிருந்து ஏற்றுக்கொண்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியார் அவர்களுடைய எல்லாக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கும், எதை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அதைத்தான் திரு. காமராஜர் அவர்கள் ஏற்றுக்கொண்டார் என்பதற்கும் என்ன வேறுபாடு ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இலையைப் போட்டு எல்லாவற்றையும் பறிமாறி எதையும் எறிந்துவிடாதீர்கள், எல்லாவற்றையும் சாப்பிடுங்கள் என்றால், இலையையும் சாப்பிடுங்கள் என்று அர்த்தம் ?

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது, இன்று ஆட்சியிலுள்ளவர்கள் பெரியார் கொள்கையைத்தான் இது விஷயத்தில் கடைப்பிடிக்கின்றார்களோ என்ற அச்சம்தான் ஏற்பட்டுவருகிறது. இதையெல்லாம் சற்றுச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். நாம் எல்லோரும் மக்களுக்காகத் தொண்டாற்றுகிறோம். அந்த முறையில் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரிமைகள் பாதிக்கப்படுகின்றன, மேலும் உரிமைகள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்குக் கணவன் மனைவி உரிமைகள் கூட பாதிக்கப்படுகின்றன என்கின்றார்கள். அவர்களும் உரிமைக் குரல் எழுப்புகின்றார்கள். நேற்றுக்கூட பத்திரிகையில் பார்த்தோம். ஒரு சிலர் நிர்வாணமாக ஓடுவதற்கு உரிமை வேண்டும், அது எங்கள் உரிமை என்று சொல்லியதை ஒட்டி, அங்கே ஆயிரக்கணக்கான மக்கள் அதைப் பார்க்கக் கூடியிருக்கின்றார்கள்.

5-50 பி.ப <u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, ஏதோ பத்திரிகையில், யாரோ போட்ட செய்திகளை வைத்துக்கொண்டு இதைச் சொல்கின்றார் என்று கருதுகிறேன். எல்லா அதிகாரங்களையும் குவித்து வைத்துக் கொண்டிருக்கின்ற மத்திய சர்க்காரை ஆண்டுகொண்டிருக்கின்ற கட்சி ஆட்சி நடத்துகின்ற மாநிலத்தில் ஆண்டுதோறும் "கும்பமேளா" நடக்கிறது.

<u>திரு. எல். பலராமன் :</u> தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு, எந்த விதமான உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து இருக்கக்கூடிய சட்டங்களைக் கொண்டு அந்தக் குறைபாடுகளை எப்படி நிவர்த்திக்கலாம் என்பதை ஜனநாயக முறையில் அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கு கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தில் "மாநில சுயாட்சி" பற்றியும் இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும், தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று—மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இம்மேலவை முடிவு செய்கிறது என்று கூறப்படுகிறது. "உண்மையான" என்று கூறும்போது, இது வரையில் நடந்து வந்தது உண்மையில்லாத ஒரு ஆட்சியா என்று புரியவில்லை.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> தலைவரவர்களே, "உண்மையான கூட்டாட்சி" என்று சொல்வதன்மூலம் இதுவரையில் நடந்து வந்த ஆட்சியில் இருக்க வேண்டிய எல்லா சிறப்பு அம்சங்களும் இருந்து வந்து, அவற்றை மேலும் அதிகப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். இது வரையில் நடந்தது பொய்யான ஆட்சியா, உண்மையான ஆட்சியா என்பது இங்கு எழவில்லை.

<u>திரு. எல். பலராமன் :</u> நாம் எல்லோரும் அரசியல் சட்டத்தின் பெயரால் எடுத்துக்கொண்ட பிரமாணத்தின்படி உண்மையான நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம். நாம் அந்த வகையில் உண்மையாகத் தான் இருந்து வருகிறோம். மேலும் உண்மையான முறையில் மக்கள் நலனுக்காகத் தொண்டாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கே. ராஜாராம் :</u> தலைவரவர்களே, அது அவருடைய பேச்சுப் பழக்கமாகி விட்டது. அவர் சொல்வதில் எந்தத் தவறுமில்லை.



<u>திரு. எல். பலராமன் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தம் முடிவுரையில் "இந்திய நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தை பெறப்போகும் சிறப்புமிக்க தீர்மானத்தை நமது தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் முன் மொழிகிறேன்" என்ற வாசகத்தைக் கூறியிருக்கிறார்கள். இதிலே ஏதோ உள்ளெண்ணம் இருக்கிறது என்பதைத் தான் நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏதோ வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தைப் பெறப்போகிறோம் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், ஏற்கெனவே பெற்றுவிட்ட ஒரு இடத்தை மேலும் சிறப்புடையதாக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. "ஏதோ ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்க வேண்டும்; மக்கள் மன்றத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் செய்யப்படாமல் இருக்கிறது; அவைகளுக்கு தடையாக இருக்கக்கூடியவைகளை நீக்கி, அவற்றைச் செய்யக் கூடிய ஒரு நிலையை உருவாக்க" என்றெல்லாம் சொல்லப்படுகிறது. "நாம் கட்டுண்டிருக்கிறோம்" என்றெல்லாம் அழகான வார்த்தைகளைப் போட்டிருக்கிறார். ஏதோ விடுதலை பெற்ற கைகள் விலங்கிடப்பட்டிருக்கின்றன, அவைகள் அசைய முடியாத நிலைமை இருக்கிறது என்று அவருக்கே இருக்கும் கற்பனை உலகத்தில் நம்மையெல்லாம் சிந்திக்க அழைத்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். நாம் கற்பனை உலகத்தில் பார்த்தால் அது சரியாக தோன்றும். <u>உண்மையான நிலைமையைப்</u> பார்க்கின்றபோது, இந்தத் தீர்மானம் ஒரு பிரச்னையாகவே தோன்றும். உலக நாடுகளில் ஒரு பெரிய நாடு இந்தியா. இந்த இந்திய நாட்டுக்கே ஒரு பெரும் பிரச்னையாக அமைந்து விட்டது இந்தத் தீர்மானம். இது வரையில் ஜனநாயகத்தில் நாமெல்லோரும் விலங்குகள் போட்டுப் பூட்டப் பட்டிருந்தோம் என்பது போல் இதில் கூறப்பட்டிருக்கிறது. மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டிய நாம் அதற்கான வழி முறைகளைச் சிந்திக்க வேண்டியது உண்மையாகும். ராஜமன்னார் குழு அறிக்கையில் அதிக அதிகாரங்கள் தேவை என்று போட்டிருந்தாலும், அந்த அதிகாரங்களையெல்லாம் கேட்கின்றபோது, என்னென்ன சிக்கல்கள் ஏற்படும் என்பதையும் நாம் பரிசீலிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

காலம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது, உலகம் சுருங்கிக் கொண்டே இருக்கிறது. இந்த அணு, விஞ்ஞான காலத்தில் உலகம் சுருங்கிக்கொண்டிருக்கும் போது, எதை, எதை எப்படி, எப்படிப் பரிசீலிக்க வேண்டுமோ, அப்படி அப்படிப் பரிசீலித்து, சிந்தித்து, அதிக அதிகாரங்கள் தேவையா அல்லது மாநில சுயாட்சி தேவையா என்பதை ஆராய்ந்து, நல்ல முறையில் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிக அதிகாரங்கள் தேவை என்ற முடிவுக்கு முதலமைச்சர் அவர்கள் வந்தால், அதைப் பெறுவதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அதே நேரத்தில் இருக்கக்கூடிய அதிகாரங்களை வைத்து, மக்களின் உண்மைத் தொண்டர்களாக, சிறப்புமிக்க பல காரியங்களை நாம் இதுவரையில் செய்திருக்கிறோமா என்றும் பார்க்க வேண்டும்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கின்ற அதே நேரத்தில், பஞ்சாயத்து யூனியன்களுக்கு மேலும் அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கான சூழ்நிலையை இந்தத் தீர்மானத்தில் உருவாக்குவது நியாயமென்று கருதுகிறேன். ஜனநாயகத்தில் பஞ்சாயத்து யூனியன்கள்தான் மிக முக்கியமான அங்கங்கள். அவைகளுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் பல எடுக்கப்பட்டு விட்டன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து, மாநில அரசாங்கம் அதிக அதிகாரங்களைப் பெற விரும்புவதுபோல், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுக்க முன்வர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பாமர மக்களுடைய வளர்ச்சியை பஞ்சாயத்து யூனியன் மூலம்தான் காண முடியுமாதலால், அவைகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கூறிக்கொண்டு, மக்களுக்கு நல்ல தொண்டாற்ற நாம் எல்லோரும் பாடுபட வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. திராவிட மணி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நான் இந்த மேலவைக்குப் புதியதாக வந்துள்ள உறுப்பினர். அகில உலக அரசியல் மாமேதைகளும், சரித்திரப் பேராசிரியர்களும், சட்ட வல்லுநர்களும், சமுதாயச் சீர்திருத்தச் சிற்பிகளும், பொருளாதார நிபுணர்களும் வீற்றிருக்கும் இம்மன்றத்தில் என் போன்ற சாதாரணத் தொண்டர் வீற்றிருக்குமளவுக்கு நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும், என்னுடைய பெருமதிப்பிற்குரிய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் ஏற்பாடு செய்தமை குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன், பூரிப்படைகிறேன்.

நான் முதன்முதலாக இந்த அவையில் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் நம்முடைய கழக ஆட்சி சமர்ப்பித்துள்ள மாநில சுயாட்சித் தீர்மானத்தின் மீது நடக்கின்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது குறித்து மன நிறைவு கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்களுக்கு நாம் தொடர்ந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமானால், மாநிலங்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்களைப் பெற்றாக வேண்டும் என்பது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்டகாலக் கோரிக்கையாகும். இந்தத் தீர்மானம் சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டு, இப்பொழுது மேலவைக்கு வந்திருக்கிறது. டெல்லிக்கு அனுப்பப்பட வேண்டிய இந்தத் தீர்மானத்தை சிந்தனைவாதிகள் அதிகமாகவிருக்கின்ற இந்த மேலவையில் டாக்டர் கலைஞர் அவர்கள் பிரேரேபித்திருக்கிறார். இப்பொழுது நமக்கிருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு, செய்யக் கூடிய நல்ல காரியங்களையெல்லாம் நாம் செய்திருக்கிறோம். இந்த மாநிலத்தில் முதல் பிரச்சினையாக, பசுமைப்



புரட்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, 75 லட்சம் டன் உணவு தானியத்தை உற்பத்தி செய்து இந்த மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டதோடு, வேறு பல மாநிலங்களுக்கும் உணவு தானியங்களை அனுப்புமளவுக்குச் செய்திருக்கிறது என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன். இந்த மாநிலத்தில் அரிசிப் பிரச்சினை என்பதே கிடையாது என்ற அளவுக்கு "கற்பக விருட்சம், காமதேனு" என்பது போல நம்முடைய மாநிலம் இருந்து வருகிறது.

இந்த மாநிலத்தில் இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி பி.யு.சி. 6-00 பி.ப.
வரை இலவசக் கல்வி கொடுக்க முடிந்தது. இந்த மாநிலத்தில் இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏழை மக்கள் வாழவேண்டுமென்பதற்காக தொழிற்சாலைகளை அமைக்க முடிந்தது. இந்த மாநிலத்தில் உள்ள பிள்ளைகள் படிக்கவேண்டுமென்பதற்காக 60-க்கு மேற்பட்ட புதிய கல்லூரிகளை அமைக்க முடிந்தது. இந்த மாநிலத்தில், இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, மின்சாரம் இல்லாத ஊர்களில் மின்சாரம் கொடுத்திருக்கிறோம். இந்த மாநிலத்தில், இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, என்.ஜி.ஓ.க்களுக்கு 40 கோடி ரூபாய் ஊதிய உயர்வு வழங்கியிருக்கிறோம். இந்த மாநிலத்தில், இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, மின்சாரத் தொழிலாளர்களுக்கு, கோரா ஸ்கேலை விட 5 சதவீதம் அதிகமாக 4 கோடி ரூபாய்க்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறோம். இந்த மாநிலத்தில், இருக்கிற அதிகாபத்தைப் பயன்படுத்தி, அரசாங்க சிப்பந்திகள் எதிர்பாராத முறையில் திடீரென்று மறைந்து விட்டால், அவர்களின் குடும்பங்கள் தவிக்கக் கூடாது என்பதற்காக 10 ஆயிரம் ரூபாய் உதவி செய்து அந்தக் குடும்பங்கள் காப்பாற்றப்படுவதற்கு திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இந்த மாநிலங்களுக்கு எவ்வளவு அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு அதிகாரங்களையும் பயன்படுத்தியிருக்கிறோம். நாம் மாநில சுயாட்சி கேட்க வேண்டிய முக்கியமான காரணமே நான் இப்போது சொல்லக் கூடியவைகளுக்காகத் தான் என்பதை இந்த மன்றத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் மாநிலத்தில் இருக்கக் கூடிய சிமெண்ட் ஆலைகள் 7. இதில் உற்பத்தியாகிற சிமெண்டின் அளவு 28 லட்சம் டன்னாகும். நமக்குத் தேவை 12 லட்சம் டன் தான். நமக்குத் தேவையான 12 லட்சம் டன் கிடைத்தால் வரையறுக்கப்பட்ட விலையில், அதாவது ரூ. 12-90-ல் ஏழை எளிய மக்கள் வாங்க முடியும். ஆனால் இங்கே உற்பத்தியாகிற 28 லட்சம் டன் சிமெண்டை மத்திய சர்க்கார் கொண்டுபோய் அவர்கள் நமக்கு ரேஷன் கொடுக்கிறார்கள். அவர்கள் இப்படி நமக்குக் கொடுப்பது 5 லட்சம் டன் தான். நாம் உற்பத்தி செய்வது 28 லட்சம் டன். ஆனால் அதை டில்லி சர்க்கார் எடுத்துக்கொண்டு, நமக்கு 5 லட்சம் டன் மட்டுமே கொடுப்பதனால் நமக்குத் தேவையான சிமெண்ட் சப்ளை கிடைக்காத காரணத்தினால், ஏழை எளிய மக்கள் 25 ரூபாய் 30 ரூபாய் கொடுத்து சிமெண்ட் மூட்டை வாங்கித் தீரவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படுகிறது. இதற்குத் தான் அதிகாரம் கேட்கிறோம். மாநிலத்திலுள்ள சிமெண்டை

புள்ளிட்டுக் கொடுக்கிற அதிகாரம் மாநிலத்திற்கு இருக்க வேண்டும். இது தான் கொள்கை. இந்த மாநிலத்தில் இருக்கிற சீனி ஆலைகள் 16. இந்த மாநிலத்தில் சீனி உற்பத்தி 525 ஆயிரம் டன். நம்முடைய தேவை 3 லட்சம் டன். நம் மாநிலத்தில் 325 ஆயிரம் டன் சீனி உற்பத்தியாகியும் நமக்குத் தேவையான 3 லட்சம் டன் நமக்குக் கிடைத்தால், இரண்டு ரூபாய்க்கு வழங்குவதை விட மிகக் குறைவாக ரூ. 1·75-க்கு வழங்கலாம். அப்படி நம்மை வழங்கவிடாமல் மத்திய அரசு தடுக்கிறது. நாம் உற்பத்தி செய்கிற 325 ஆயிரம் டன்னை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு, அவர்கள் கோடவுனில், வைத்துக்கொண்டு, நாம் நம் மக்களுக்கு எண்ணுகிற அளவிற்கு வழங்க முடியாத அளவிற்கு அவர்கள் நமக்குக் கொடுக்கும் அதிகாரத்தை தங்கள் கையில் வைத்திருக்கிறார்கள். நமக்கு அவர்கள் இன்றைக்குத் தருகிற சீனியின் அளவு மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் டன், அதாவது வருஷம் ஒன்றுக்கு 120 ஆயிரம் டன். நாம் 325 ஆயிரம் டன் சீனி உற்பத்தி செய்தும் நம் மக்களுக்குச் சீனி கிடைக்கவில்லை. நம் மக்கள் 5 ரூபாய்க்கு வாங்கித் தீரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஒரு படி 30 காசு என்ற அளவிற்கு விற்கிறது. இது யாரைப் பாதிக்கிறது? சாதாரண அப்பாவிகளான ஏழைகளைப் பாதிக்கிறது. நாம் கஷ்டப்பட்டு பயிரிட்டு, பம்புசெட்டு, லோன் வாங்கி வைத்து, தண்ணீர் பாய்ச்சி கரும்பைப் பயிரிடுகிறோம். அந்தச் சீனியை இவ்வளவு கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் நம் ஏழை மக்களுக்கு வழங்க முடியாத அளவிற்கு அவர்கள் கொண்டு செல்கிறார்கள். இதனால் தான் மாநிலங்களுக்கு அதிகாரம் வேண்டுமென்று நாம் கேட்கிறோம். இந்த மாநிலத்தில் இருக்கிற நூற்பாலைகள் 206. இந்த நூற்பாலைகளிலே உற்பத்தியாகிற பேல்கள் 1,050 ஆயிரம் பேல்களாகும். இவ்வளவு உற்பத்தியாகியும், நம்முடைய மாநிலத்திலுள்ள 5 லட்சம் நெசவாளர்களுக்குத் தேவையான 525 ஆயிரம் பேல்கள் கிடைக்கவில்லை. இந்த மாநிலம் நெசவாளர்கள் அதிகமாக உள்ள மாநிலம். 5 லட்சம் கைத்தறி நெசவாளர்களும் அவர்களை நம்பி வாழக்கூடிய 30 லட்சம் மக்களும் உள்ள மாநிலம் இது. கைத்தறி நெசவாளர்களின் கவலை போக்கப்பட வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையில் கரை போட்ட வேட்டி, சேலைகள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று அழகான தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். 36 இஞ்சுக்கு மேற்பட்ட எல்லாத் துணிகளுமே கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று அழகான தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். இப்படி நெசவாளர்களுக்கு நாம் உதவி செய்யக் கூடிய சூழ்நிலையில் கண்ட்ரோல் விலையில் அவர்களுக்கு நூல் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. இங்கு 1,050 ஆயிரம் பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டும், 5 லட்சம் பேல்கள் நெசவாளர்களுக்குத் தேவைப்பட்டும் அவர்களுக்குக் கிடைப்பது 175 ஆயிரம் பேல்கள் தான். இது நியாயமா? நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. 40-ம் நம்பர் நூல் கண்ட்ரோல் விலையில் கிடைக்கவில்லை. இரட்டிப்பு மடங்கு விலை கொடுத்து வாங்குகிறார்கள். இதனால் உற்பத்திச் செலவு அதிகமாகிறது. சாதாரண 4 முழ வேட்டி 8 ரூபாய் ஆகிறது. இதனால் தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில சுயாட்சி கேட்க வேண்டாமா? எத்தனை நாளைக்கு



நெசவாளர்கள் சங்கடப்பட முடியும்? இப்படி நாம் 1,050 ஆயிரம் பேல்கள் உற்பத்தி செய்து கொடுத்தும், அது நமக்குப் பயன்பட வேண்டாமா? இந்த மில்கள் ஓடாமலிருந்த காலத்தில் மத்திய சர்க்காரிடத்தில், நமது அமைச்சர்கள் போய் வாதிட்டு, பஞ்சாலைக் கார்ப்பரேஷனை அமைத்து 5 கோடி ரூபாய் மூலதனத்தில் 19 ஆலைகள் திறப்பதற்கு நாம் என்ன பாடுபட்டோம், எவ்வளவு கஷ்டப்பட்டோம்? இதை ஏன் செய்தோம்? இங்கே உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்பதற்காகத் தான் செய்தோம். அந்தத் தொழிற்சாலைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கிறோம். உற்பத்தி அதிகமாக ஆக்கப்பட வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்தோம். இப்படி அதிக உற்பத்தி செய்தும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இவ்வளவு காரணங்களை மனதில் வைத்துத் தான் இதற்கு ஒரே மாமருந்து, மாநில சுயாட்சி என்று நம்முடைய முதலமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை ஏக மனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாநில சுயாட்சி என்பதற்கு ஆளும் கட்சியினர் எப்படிப்பட்ட பொருளைச் சொன்னாலும், என்னைப் பொறுத்தவரையில், மாநில சுயாட்சி என்பது பிரிவினை என்பதன் மறு பெயர் என்று சொல்கிறேன். இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் ஸ்தாபிக்கப்பட்ட போது, முக்கிய மானவர்கள் சில அடிப்படையான கொள்கைத் திட்டத்தை வகுத்தார்கள். அப்படி வகுத்த போது, பேசிக் பிரின்சிபில்ஸ் என்று சொல்வார்களே, அடிப்படைக் கொள்கை என்று சொல்வார்களே, அது திராவிட நாடு திராவிடருக்கே என்பதாகும். அதற்குப் பின்னாலே 1962-ம் ஆண்டிலே பிரிவினைத் தடைச் சட்டம் வரும் என்று சொன்னபோது, மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு திராவிடருக்கே என்ற கொள்கையைக் கைவிட்டு அதற்குப் பின்னாலே திராவிட யூனியன், அதாவது இந்திய யூனியனுக்கு உட்பட்ட திராவிட யூனியன் என்று சொன்னார்கள். அப்படியென்றால், ஒரு யூனியனில் மற்றொரு யூனியன் இருக்குமென்றால், அதன் பொருள் பிரிவினை தான். அவர்கள் இந்திய யூனியனுக்கு உட்பட்ட திராவிட யூனியன் என்று சொன்னார்கள். 1967-ம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் பிரகடனத்தில் இதைப் பதித்துள்ளது. அதற்குப் பின்னாலே இதைப் பொறுத்து, இந்த திராவிட யூனியன் என்ற கொள்கை கைவிடப்பட்டதற்கான தெளிவான விளக்கம் வைக்கப்படவில்லை. அந்தக் கொள்கை கைவிடப்பட்டதா என்றால், இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறதென்றுதான் நான் சொல்வேன். ஆகவே, தெளிவான கருத்தை மக்கள் மன்றத்தில் யாருமே சரியாகச் சொல்லவில்லை. இதைப் பற்றி விளக்கவில்லை. ஆகவேதான் மாநில சுயாட்சி என்பது அதனுடைய பிரதிபலிப்பாக இருக்குமென்ற ஐயப்பாடு எழுகிறது. அடுத்தபடியாக, பல நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, அதாவது வெளியில் அவர்கள் நடத்துகிற மாநாடுகளை, கூட்டங்களைப் பார்க்கிறபோது, இது பிரிவினைச் சக்திதான் என்பது தெளிவாகிறது.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாடு ராஜபாளையத்தில் நடந்தது. அந்த மாநாட்டுப் பந்தலில் ஒரு புறத்தில் முஜிபீர் ரஹ்மான் அவர்கள் திருவுருவப்படத்தையும் மற்றொரு புறத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்களின் உருவப் படத்தையும் போட்டு, அதன் கீழே இவர் தென்னாட்டு முஜிபீர் ரஹ்மான் என்று எழுதியிருந்தது. பாகிஸ்தான் நாட்டோடு ஒட்டிக்கொண்டிருந்த தேசத்தை வெட்டிக்கொண்டுபோன முஜிபீர் ரஹ்மான் படம் ஒரு புறத்தில், தென்னாட்டு முஜிபீர் ரஹ்மான் மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் படம் மறு புறத்தில் போடப்பட்டிருந்ததால் தி.மு.க. பிரிவினையைத்தானே கோருகிறது என்ற ஐயப்பாடு உள்ளத்தில் வந்தது. ஆகவேதான் பிரிவினை என்று நான் ஐயுறுகிறேன். இந்த அதிகாரங்கள் போதவில்லை, அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப் பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், இது வரையில் இருந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டு 1967 வரையில் இந்த நாட்டில் நாங்கள் எவ்வளவு உற்பத்தியைப் பெருக்க முடிந்தது, எவ்வளவு தொழிற்சாலைகளைப் பெருக்க முடிந்தது என்பதைப் பார்க்க வேண்டும். எனக்கு நினைவிற்கு வருகிறது. கிராமங்களில் சொல்வார்கள் : கூரையில் ஏறி கோழி பிடிக்க முடியாதவன், என் பின்னோடு ~~வந்தால் வானத்தைப் பிளந்து~~ வைகுண்டத்திற்கு வழி காட்டுகிறேன் என்று சொன்னானாம். அது போல, இருக்கிற அதிகாரங்களை வைத்துக்கொண்டே காரியங்களை நிறைவேற்ற முடியாதபொழுது, இன்னும் அதிகாரம் கிடைத்தால் என்ன செய்ய முடியுமென்று நினைக்கிறார்கள் ? 1967-க்கு முன்னாலே இந்தச் சட்ட மன்றத்தில் எவ்வளவு பெரிய பிரச்சினைகள் வந்தன ? உதாரணத்திற்குச் சொல்லப் போனால் கவர்னர் உரை மீது, ஆட்டிற்குத் தாடி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு நாட்டிற்கு ஒரு ஜான் முக்கியமென்று அன்றைக்கிருந்த கவர்னர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். "கவர்னர் பதவி என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வைத்துக் கொண்டிருந்த முறை. அதை நாம் பின்பற்றி வருகிறோம். இது ஏழை நாடு. இந்திய தேசம் வெல்ஃபேர் ஸ்டேட் என்று சொல்லிக் கொள்கிறது. இந்த ஏழை நாட்டிற்கு பிரிட்டிஷ் முறைப்படி ரெப்ரசெண்டேடிவ் ஏன் வேண்டும் ? " என்று கேட்டார்கள். இதனால் "பாய்காட் " செய்கிறோம் என்று எதிர்க் கட்சியில் அமர்ந்திருந்தபோது வெளி நடப்புச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு அதே கவர்னரை வைத்துக்கொண்டு சபையில் பேச அனுமதிக்கிறார்கள். இங்கிருந்து டில்லிக்குப் போகிறபோது மிக வேகமாக, உற்சாகமாக, வீராவேசமாகப் போகிறவர்கள் திரும்பி வரும்போது எந்த விதமான வெற்றியும் பெறாமல் திரும்பி வருகிறார்கள். அவர்கள் இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு எவ்வளவோ செய்திருக்க முடியும். இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் வரையில் மூலதனம் போட்டு ஒரு தொழிற்கூடத்தை அமைக்கிறோமென்றால், அதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டியதில்லை. ஒரு கோடி ரூபாய்க்கு மேலே போனால் தான் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரு கோடி ரூபாய் அளவுக்கு மூலதனம் போட்டு எத்தனையோ தொழிற்கூடங்களை ஏற்படுத்தியிருக்க



முடியும். அப்படி எத்தனை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதிக அதிகாரம் வேண்டுமென்பது பிரச்சினை அல்ல. இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு எவ்வளவு செய்திருக்கிறோம் என்பதுதான் பிரச்சினை. இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு இவ்வளவு செய்து விட்டோம், இன்னும் செய்ய அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கலாம்.

டாக்டர் பி. சி. ராய் : திரு. காமராஜ் போன்றவர்களெல்லாம் அன்றைக்கு முக்கிய பொறுப்பில் இருந்தார்கள். அன்றைக்கு மத்திய அரசிலும், மாநில அரசிலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். ஒரே கட்சியைச் சேர்ந்த அரசாக இருந்தாலும், வேண்டிய வசதிகளையெல்லாம் கேட்டுச் செய்தார்கள். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தும் சட்ட திட்டங்களைப் பொறுத்தும் மத்திய அரசிடம் சென்று கேட்டு, வேண்டியதை வாங்கி வந்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்தச் சூழ்நிலை இல்லை. இருக்கிற அதிகாரங்களையே நாம் சரியாகப் பயன்படுத்தவில்லையென்பது என்னுடைய கருத்து. அதிக அதிகாரம் வேண்டுமென்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது, ஆனால் என்னைப் பொறுத்தவரையில், மாநில சுயாட்சி என்பது நீறு பூத்த நெருப்பு என்று எண்ணுகிறேன். கடந்த காலத்தைப் பார்க்கிறபோது, அது நீறு பூத்த நெருப்பாகத்தான் இருந்துகொண்டிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஏ. கே. வில்வம் : மேலவைத் தலைவரவர்களே, இன்றைய தினம், சட்ட மன்றத்திலே முதல்வரவர்களால் முன்மொழியப்பட்டு, விவாதத்திற்கு வந்து பெரும்பான்மையுடன் நிறைவேறிய தீர்மானம் மேலவையினுடைய ஒப்புதலுக்கு இங்கே வந்திருக்கிறது. கடந்த இரண்டு நாட்களாக இந்தப் பிரச்சினை குறித்து சாதக பாதகமான கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் மாநில, தன்னாட்சி பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரச்சினை என்று கருதாமல், தமிழ் தேசியத்தினுடைய பிரச்சினையென்று எண்ணி, எல்லாக் கட்சிக்காரர்களுமே இதை ஆதரிக்கக் கடமைபட்டவர்களென்று நான் கருதுகிறேன். காரணம் மாநில சுயாட்சி என்று கேட்கிறபோது, நம்முடைய முதல்வரவர்கள் தீர்மானத்தை முன் மொழிகிறபோது, அவர்களுடைய பாரம்பரியத்தை எண்ணி, திராவிட நாடு திராவிடருக்கே என்று அன்று கேட்டதால்தான், அவர் இன்று மாநில சுயாட்சி கேட்கிறார் என்று எண்ணி, அவர்களுடைய அந்தத் தூய்மையான நோக்கத்தில் திராவிட நாடு ஒளிந்து கொண்டிருப்பதாகக் கருதுகிறார்கள். நான் அவர்களுக்கு வினயத்தோடு சொல்லிக்கொள்வதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எந்தப் பிரச்சினையைச் சொல்வதானாலும், அது துவங்கிய காலம் தொட்டு, இன்றைய வரையில் உலகறியச் சொல்வதுதான் வழக்கம். "we want to secede from the North" வடக்கேயிருந்து பிரிய விரும்புகிறோம் என்று சொல்லித்தான் மன்றத்

பேரறிஞர் அண்ணா அவர்கள், தம்முடைய கொள்கைக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றார்கள். வெளிப்படையாக ஒரு கோரிக்கையைச் சொல்லி, அந்தக் கோரிக்கையிலிருந்து விடுபடுகிறபோது, அதையும் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். நாங்கள் நேற்றுவரை திராவிட நாடு கேட்டுக் கொண்டிருந்தோம்; இன்றுள்ள அரசியல் நிலைமையில் திராவிட நாடு பெறுமலேயேகூட, இந்திய யூனியனுக்கு உடன்பட்டு திராவிட நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய முடியுமென்று அண்ணா அவர்கள் கருதிய காரணத்தால்தான் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டார்கள். கைவிட்டதற்குப் பின்னரும், அவர்கள் பழைய கதையை எண்ணி, இன்று கேட்பதை எப்படி நம்ப முடியுமென்று கேட்கிறார்கள். வழிப்பறிக் கொள்ளையடித்த திருமங்கை ஆழ்வாரை வைஷ்ணவப் பெரியாரென்று ஒப்புக்கொள்கிறவர்கள், **15, 20** வருடங்களுக்கு முன்னால் சொன்ன கருத்துக்களை அதே எண்ணத்தில் பார்ப்பது அரசியல் துர் பாக்கியம் என்று கருதுகிறேன். மாநில சுயாட்சிக் கொள்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். நம்முடைய ராஜ தந்திரமுள்ள முதலமைச்சரவர்கள் அதற்கு வடிவம் கொடுத்தார்கள். அதை அரசியல் வடிவத்தின் மூலம் கேட்கிறார், மாநிலத்திலே தன்னாட்சி என்று, அந்த நல்ல கருத்தையும், கொள்கையையும், திசை திருப்புகின்ற வகையில், அநியாயமான முறையில், பிரிவினை கேட்கிற கருத்தென்று இன்னமும் சொல்லிக்கொண்டிருப்பது, அவர்களுக்கு மனப் பக்குவம் சரியாக வரவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. காங்கிரஸ் கட்சியின் வரலாற்றைப் பார்த்தால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முதல் வல்லபாய் பட்டேல் அவர்கள் வரையில், இந்தியத் துணைக் கண்டத்தின் சுதந்திரத்தை வெள்ளைக்காரனிடத்திலிருந்து வாங்குகிற போது பல்வேறு கலாச்சாரங்கள், பல்வேறு வாழ்க்கை முறைகளைக் கொண்ட இந்த நாட்டை எப்படி ஒரு குடையின் கீழ் ஆளப்போகிறீர்களென்று கேட்ட போது, நாங்கள் அடக்கி ஆள மாட்டோம்; மாநிலங்களில் தருகிற உரிமையை வைத்துக் கொண்டு நாங்கள் அவர்களோடு அன்போடு பழகுவோம்; எங்களிடம் முதலில் நாட்டைக் கொடுத்து விடுங்களென்ற பாணியில் பேசினார்கள். அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சாசனம் சமர்ப்பிக்கப்பட்ட போது, இங்கே எழுவது போன்ற சந்தேகம் அங்கேயும் எழுந்தது. திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்றவர்கள் அரசியல் சாசனம் சமர்ப்பிக்கப் பட்ட போது, "இவ்வாறு மொத்தமாக அதிகாரங்களை தனி மனிதன் கையில் கொடுக்கிறீர்களே, இதனால் பின் விளைவுகள் பயங்கரமானதாக இருக்காதா?" என்று கேட்ட போது, டாக்டர் அம்பேத்கார் அவர்கள், "சட்டங்கள் வரி வடிவம். இப்படிப்பட்ட ஒரு சாசனத்தை வைக்கிறபோது அந்த சாசனத்தை நிர்வகிக்கிறவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்ய மாட்டார்கள்" என்று நம்பித்தான் இந்தச் சாசனத்தைக் கொடுக்கிறேமென்று சொன்னார்கள். ஆகவே அவ்வளவு பெரிய அரசியல் சாசனத்தை உயர்ந்த இடத்தில் உட்கார்ந்த பிரகாரம் துஷ்பிரயோகம் செய்ய மாட்டார்களென்று எண்ணித் தந்த போது, நம்முடைய டாக்டர் அவர்களுக்கு கூடுதலான அதிகாரம் தந்துவிட்டால், அந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து விடுவாரென்று அஞ்சத் தேவையில்லை. காரணம் அன்றே எப்படி ஒரு நம்பிக்கையின் பேரில் சட்டப் புத்தகத்தை



அவர்கள்பால் கொடுத்தார்களோ, அதைப் போன்றே இங்கேயும் முதல்வரவர்கள் அதைத் தமிழகத்தின் மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் தான் பயன்படுத்துவார்களென்று கருத வேண்டும்.

அடுத்தாற்போல், மௌலானா அபுல் கலாம் ஆஜாத் விளக்குகிறபோது மூன்று அம்சங்களைத் தவிர மற்ற அம்சங்கள் மாநிலங்களுக்கு இருக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய விடுதலை என்ற நூலில் எழுதுகிறபோது, அந்த நூலை தான் உயிரோடு இருக்கும்போது வெளியிட வேண்டாம்; தான் செத்த பிறகு வெளியிடுங்களென்று சொல்லிவிட்டார். தலைவருடைய அனுமதியுடன் அதை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். "இந்தியா பெரிய நிலப்பரப்பு உள்ள நாடு. மொழி, பழக்க வழக்கங்கள், பூகோள நிலைமைகள் ஆகியவற்றில் நிறைய வேறுபாடுகள் உண்டு. எனவே, இந்தியா முழுவதுக்குமாக ஓர் ஐக்கிய சர்க்கார் இருந்து வருவது சிறிதும் சரிப்படாது என்பது தெளிவு. ஒரு பெடரல் ஆட்சி அமைப்பின் கீழ் அதிகாரம் பரவலாக விநியோகிக்கப்பட்டிருப்பதுதான் சிறுபான்மையோரின் பயத்தைத் தணிக்க உதவுபடியாக இருக்கும். விவகாரத்தின் தன்மையைக் கருத்திற் கொண்டு பார்த்தால், இந்தியாவின் அரசியல் அமைப்பானது சமஷ்டி (பெடரல்) அமைப்பாகத்தான் இருக்க இயலுமென்ற முடிவுக்கு நான் வந்தேன். கூடியவரை அதிகபட்ச இனங்கள் விஷயத்தில் மாகாணங்களுக்கு சுயாட்சியை உறுதி செய்யும் வகையில் அது அமைக்கப் பெற வேண்டும்.

மேலும் மாகாணங்கள் விரும்பும் பட்சத்தில் மத்திய ஆட்சியினர் தம் பொறுப்பில் நிர்வகிப்பதற்கு ஒரு விசேஷ ஜாபிதா தயாரிக்கப்பட வேண்டும். இது மத்திய ஆட்சியின் இஷ்ட பூர்வமான அதிகார ஜாபிதா என்று கருதலாம். இந்த விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரை எல்லா அதிகாரங்களை அல்லது சிலவற்றை மத்திய சர்க்காரிடம் எந்த மாகாண சர்க்காரும் ஒப்படைக்கலாம்.

தேசப் பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு விவகாரங்கள் ஆகியவை அகில இந்திய அடிப்படையில் மட்டுமே சரிவர கவனிக்கக்கூடியவை என்பது எனக்குத் தெளிவாகப் பட்டது. மாகாண அந்தஸ்தில் அவற்றை வகிக்க முயற்சித்தால், பெடரல் சர்க்காரின் நோக்கமும் அடிப்படையும் தகர்ந்துவிடும். இதுபோல் வேறு சில விஷயங்கள் மாகாணப் பொறுப்புகளாகத்தான் இருக்க முடியும். ஆனால் மூன்றாவது ஜாபிதா ஒன்று இருக்க வேண்டும். அதிலுள்ள விஷயங்கள் மாகாணப் பொறுப்புகளாக இருக்க வேண்டுமா அல்லது மத்திய ஆட்சியிடம் ஒப்படைக்கலாமா என்பதை மாகாண சட்டசபை முடிவு செய்வதாக இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆக மாநில சுயாட்சிக் கோரிக்கை என்பது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உள்ளுணர்வுகளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்த வரிவடிவம் தானே தவிர பிறர் அஞ்சுவது போல் இந்திய ஒருமைப்பாட்டை எரித்து சாம்பல் ஆக்குகிற தீப்பந்தம் அல்ல. இது இன்றைக்கு

இந்திய அரசியலில் இருக்கின்ற இருளை நீக்குகின்ற தீபம் என்பது என்னுடைய கருத்து ஆகும். எல்லா மாநிலங்களுக்கும் தன்னாட்சி கொடுத்துவிட்டால் மத்திய அரசு பலவீனப்பட்டுப்போகும் என்று படித்தவர்கள் கூட வாதிப்பது கேவலமாக இருக்கிறது.

முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், மாநிலங்கள் தன்னாட்சி பெற்றுவிட்டால் மத்திய அரசு பலவீனப்பட்டுவிடும் என்பது தவறான கருத்து ஆகும். மத்திய அரசு ஒரு கல் மண்டபம் என்று வைத்துக் கொண்டால், மாநிலங்கள் அந்த மண்டபத்தைத் தாங்கி நிற்கிற கல் தூண்களாக இருக்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் மத்திய அரசு என்பது மண்டபத்தின் கூரை என்றால், மாநிலங்கள் அந்தக் கூரையைத் தாங்கி நிற்கின்ற வலுவான தூண்கள் ஆகும். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கூடாது என்று சொல்லுபவர்கள், மண்டபம் தனியாக இருக்கட்டும், அதற்கு வலு வேண்டாம் என்று சொல்லுவது போல் இருக்கிறது. மாநிலங்களுக்கு தன்னாட்சி உரிமை கொடுத்தால், இந்தியா ஒரு பெரிய வல்லரசாக மாற முடியாது என்பது புத்திக்குப் பொறுத்த மற்ற வாதம் என்பது என்னுடைய கருத்து. காரணம் என்னவென்றால், இன்றைக்கு உலகத்தில் மிகவும் வல்லமை வாய்ந்த அரசாக யூ.எஸ். எஸ்.ஆர்.—யூனியன் ஆப் சோவியத் சோஷலிஸ்ட் ரிபப்ளிக்—இருக்கிறது. அந்த நாட்டுக்குப் பெயர் பல குடியரசுகள் சேர்ந்த நாடு என்பதுதான். லட்வியா, லட்விக், வின்னிஷ், கரிலோ, பஜாஜ், உஸ்பெக், உக்ரெயின் போன்ற நாடுகள் அதில் கூட்டாக உள்ளன. அப்படியிருக்கின்ற காரணத்தால், சோவியத் ரஷ்யா உலகத்தில் ஒரு வல்லரசாக இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அதேபோல் அமெரிக்க நாடு, அமெரிக்க ஐக்கிய குடியரசுகள் என்று பன்மையில்தான் அழைக்கப்படுகிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தருவது என்பது அதிகாரங்களைப் பறித்துக்கொள்வதல்ல, பகிர்ந்துகொள்வது என்பதாகும்.

குருஷேவ் அவர்கள் சோவியத் பூமியின் பிரதமராக இருந்தபோது, அமெரிக்கா சென்றிருந்தார். அங்கே அவரைப் பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்துகொண்டு, "உங்கள் நாட்டு அரசியல் அமைப்புப் பெருமைகள் என்ன?" என்று கேட்டபோது, அதற்கு அவர் பதில் சொன்னார். அதைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

"Yes. We are for full freedom of every people in our country. For instance, each of the 15 Independent Union Republics is free to secede from the Soviet Union if it desires. It has a right to do so".

இங்கேயிருக்கிற 15 குடியரசுகள் விரும்பினால், அவர்கள் பிரிந்துகூடச் செல்லலாம் என்பது அந்த உரிமை. அப்படிப்பட்ட உரிமை அரசியல் சாஸனத்தில் இருக்கிறது என்று அமெரிக்க நிருபர்களிடம் குருஷேவ் குறிப்பிட்டிருக்கிறார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தருவதால், மத்திய அரசு பலவீனப்பட்டுப்போகும் என்பது ஒத்துக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல. எனவே, மாநில சுயாட்சி என்ற வாதத்தை திராவிட



முன்னேற்றக் கழகத்தினுடைய பிதிரார்சித உரிமை என்று கருதாமல், தமிழ் நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்டுவதை எப்படிப் பொதுப் பிரச்சினையாகக் கருதினார்களோ, அதேபோல், இதையும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒரு பொதுப் பிரச்சினையாக ஏற்று, அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாயத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதைப் புறக்கணித்தால், அதுவே நிர்ப்பந்தமாக விஸ்வரூபம் எடுத்துவிடும். நியாயமான கோரிக்கையைப் புறக்கணித்தால், அவமதித்தால், புழுவும் புலியாக மாறுகிறது. இப்போது பங்களா தேஷ் பிரதமர் முஜிபூர் ரஹிமானைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இரண்டாக இருந்த இந்தியா மூன்றாக உடைந்து போனதற்குக் காரணம் ஒரு பகுதி மக்களுடைய உள்ளுணர்வு, அரசியல் அபிலாஷைகள் முறையாக மதிக்கப்படாததுதான். அவர்கள் 12 அம்சத் தீர்மானங்கள் என்ற ஒன்றை அங்கேயிருந்த பாகிஸ்தான் அதிபரிடம் வைத்தபோது, அவர்கள் அலட்சியப் படுத்தப்பட்டார்கள், அவர்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதனுடைய விளைவாகத்தான் அன்றைக்கு இரண்டாக இருந்த இந்தியா மூன்றாக உடைந்தது.

எங்களைப் பொறுத்தவரையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், அதனுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், தம்முடைய இருதய சுத்தியாக, "நான் தமிழ் மக்களுக்கு, தமிழகத்திற்கு நன்மைகள் பல செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அந்த நன்மைகள் செய்வதற்கு இன்னும் கொஞ்சம் அதிகாரம் வேண்டும்" என்கிறார். இருக்கிற அதிகாரத்தை வைத்துச் செய்யக்கூடாதா என்று நண்பர்கள் பலர் தங்கள் கருத்தைச் சொன்னார்கள். அதிகாரம் ஓரளவு இருப்பது வாஸ்தவம்தான். அதிக அதிகாரங்கள் "அப்கீப்"பிற்குத் தான் போதுமானது, "டெவலப்மெண்டுக்"குப் பயன்படவில்லை. அதனால்தான் அதிகாரம் மேலும் தேவை என்கிறார் முதல்வர். இந்தக் கோரிக்கையை, நல்ல தீர்மானத்தை நான் முழு மனதோடு ஆதரித்து மாநில தன்னாட்சி கோரிக்கை என்பது இன்றைக்கு இந்திய அரசியலைப் பீடித்துள்ள பயங்கரமான நோய்க்கு ஒரு சர்வரோக நிவாரணியாகப் பயன்படும் என்று கூறிக் கொண்டு விடைபெறுகிறேன்.

*திரு. ஜார்ஜ் கோமகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பாரம்பரியம் மிக்க நம்முடைய மேலவையில் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறுகின்ற ஒரு அருமையான வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய மாநிலத்திற்கு சுயாட்சி, தன்னாட்சி, எந்த அளவுக்குத் தேவை என்பதையும் அதற்குரிய காரண காரியங்களையும் எடுத்துக் காட்டினார்கள். எனக்கு

முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே. வில்வம் அவர்கள் பல வரலாற்று ஆதாரங்களை எடுத்துச் சொல்லி, மாநிலத்திற்குத் தன்னாட்சி தேவை என்பதற்கான காரணங்களைச் சொன்னார்கள். கிரேக்க நாட்டு அறிஞன் ஒரு மாபெரும் கருத்தை இந்த உலகத்திற்கு வழங்கினான். "நீங்கள் எங்கள் எஜமானர்களாக இருக்க விரும்பலாம், ஆனால்—நாங்கள் உங்கள் அடிமைகளாக இருக்க வேண்டுமே" என்று கேட்டான். எஜமானத்துவமும் அடிமைத்தனமும் இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்ற அடிப்படையில், உறவு முறை தேவை, அதுவும் சுமுகமான உறவு முறை தேவை என்ற அடிப்படையில் எழுந்தது தான் மாநில சுயாட்சிக் கோரிக்கை என்பதை நான் விமர்சிக்க விருப்புகிறேன். அந்த உறவு முறையில் பார்க்கிறபோது, ஒரு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், இந்த இந்தியத் துணைக்கண்டத்தை நாம் ஒரு துணைக் கண்டமாக மதித்திட வேண்டும். இந்தத் துணைக்கண்டத்தில் பல தேசிய இனங்கள், பிரிவுகள் இருக்கின்றன என்பதை நாம் நிச்சயமாகப் புரிந்து கொண்டாக வேண்டும். அந்த தேசிய இனங்களுக்கு பல கலாசாரங்கள், பல வாழ்க்கை முறைகள், பல பாரம்பரியங்கள், பல பழக்கவழக்கங்கள் இருப்பதை நாம் வரலாற்றுக் கண்ணோடு பார்த்தால், மாநில சுயாட்சி எந்த அளவுக்கு தேவையான ஒன்று என்பதை நாம் நினைவு கூர்ந்து கொள்ள முடியும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு பலராமன் அவர்கள், மாநில சுயாட்சி பற்றி விமர்சனம் செய்கிற நேரத்தில் தி.மு.க. அரசு, திராவிட முன்னேற்றக் கழகம் இதை வைத்து மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறது என்று சொன்னார்கள். அவர் பேசியதிலிருந்து அவர்தான் திசை திருப்பப்பார்க்கிறார் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன், தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக. உள்ளபடியே, திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே திசை திருப்புவதற்காக எந்த இலட்சியத்தையும், எந்தக் கொள்கையையும் பயன்படுத்திக் கொள்ள விரும்பாது. இன்றைக்கு மாநில சுயாட்சிக் கொள்கையை இந்த நாட்டு மக்களுக்கு முன்னால் வைத்திருப்பதற்குக் காரணம் என்னவென்பதை நான் சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். வள்ளுவப் பெருந்தகை ஒரு அருமையான குறளை வழங்கியிருக்கிறார்கள். இதற்காக நாம் வரலாற்று ஆசிரியர்களைத் தேட வேண்டியதில்லை. சரித்திர ஆசிரியர்களுடைய ஆதாரங்களைப் புரட்டிப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய திருவள்ளுவரே ஒரு அருமையான கருத்தை வழங்கியிருக்கிறார் "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப்பெயின்" என்று. மயிலின் இறக்கை ரொம்ப மென்மையானது தான். அந்த இறக்கையைக்கூட அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றினால், வண்டியின் அச்சு முறிந்து விடும் என்று வள்ளுவப் பெருந்தகை ஒரு அருமையான குறளைத் தந்திருக்கிறார். இந்தக் குறளை நான் இந்த மாமன்றத்தில் வைக்க ஆசைப்படுகிறேன். மயிலிறகே மென்மையானது. அப்படியானால் அதிகாரம் இருக்கின்றதே, அது எப்படிப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நேற்று

(6-30 பி.ப.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் மத்தியிலுள்ள



அதிகாரம்பற்றிக் குறிப்பிடும்போது "பூதாகாரமானது" என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரங்களை மத்தியில் குவித்து வைத்துக் கொண்டிருக்கும்போது, மாநிலங்கள் எவ்வளவு சங்கடப்படும், அதனால் எவ்வளவு தீதுகள் ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், இந்த நாடும் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதை, தலைவரவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பல உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கை பிரிவினைக்கு அடிகோலுமோ என்று அச்சம் தெரிவித்தார்கள். தலைவரவர்களே, நான் தங்கள் முன்பு வேறு ஒரு அச்சம் பற்றிக் குறிப்பிட விழைகிறேன். நமது அண்டை மாநிலமான மைசூர் மாநில முன்னாள் முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் ஒரு அச்சத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலேயே ஒன்றைச் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய அரசிடம் அதிக அதிகாரங்கள் குவிக்கப்பட்டு, மாநிலங்கள் புறக்கணிக்கப் பட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை அவர் சொல்லும் நேரத்திலே, தற்போதுள்ள நிலை மாறி எல்லா மாநிலங்களும் சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பினால், டெல்லியிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தின் விருந்தினர் மாளிகைகளும், பவனங்களும், தூதுவராலயமாக மாறும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்ற அச்சம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த அச்சத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பிரிவினைவாதம் என்று சொல்கின்றார்களா அல்லது வேறு என்ன சொல்லுகின்றார்கள் என்று அறிய விழைகிறேன். இப்படிப் பேசியவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் இல்லை. அப்படிப் பேசியவர் டாக்டர் கலைஞர் இல்லை. நமது மாநில அமைச்சர் பெருமக்களில்லை. இதைச் சொன்னவர் மைசூர் மாநில முன்னாள் முதல்வர். இந்த அச்சத்தை நாம் நிச்சயமாகப் புறக்கணிக்க முடியாது. இன்றைக்கு மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களே போதும், இவற்றை வைத்துக் கொண்டே நாம் நல்லாட்சி நடத்திட முடியும், நல ஆட்சி நடத்திவிட முடியும் என்று சொல்லுகின்றார்கள். உள்ளபடியே இன்றுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் நாம் முறையாகச் செயலாற்ற முடியாது. திக்கித் திணறுகின்றதை, அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுகிறதை யாரும் மறுக்க முடியாது. நமது பாரம்பரியத்தை, நமது கலாச்சாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கூட முடியாத சூழ்நிலை இருப்பதைப் பார்க்கும்போது வருத்தப் படாமலிருக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திலே நமது பாரம்பரியத்தின் சின்னமாக இராஜ ராஜ சோழனின் சிலையை வைப்பதற்குக் கூட மத்திய அரசிடம் நாம் கையேந்தி நிற்கும் நிலை இருக்கின்றது. அதை குறிப்பிட்டுத்தான் சொல்லுகிறேன். மத்தியிலே அதிக அதிகாரங்கள் குவிக்கப்பட்டால் எதிர்காலத்தில் அதன் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்ற அச்சத்தில் தான் ஒருமைப்பாட்டை விரும்பும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, தேசிய ஒருமைப்பாட்டில் பெருநம்பிக்கை கொண்டுள்ள நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் இந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை இந்த மாமன்றத்தின் முன் வைத்திருக்கின்றார்கள். உள்ளபடியே இக்கோரிக்கை தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும். மாறாக யாராவது

இதைப் பிரிவினை வாதம் என்று சொல்லுவார்களானால், நிச்சயமாக அவர்கள் நாட்டு மக்களை திசை திருப்புகின்றார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாரம்பரியம்பற்றியெல்லாம் அலசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு என ஒரு சிறந்த பாரம்பரியம் உண்டு. இந்த நாட்டை எதிரிகள் தாக்க வந்த நேரத்திலே, நமது முன்னேற்றக் கழகம் தக்க குரலெழுப்பி, போர் முனைக்கு, முகாம்களுக்கு நமது இளைஞர்களை அனுப்பி குருதி கொட்டவும் அவர்களைத் தட்டியெழுப்பியது முன்னேற்றக் கழகம். அதற்காக பல தியாகத் தழும்புகளையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்தார்கள் முன்னேற்றக் கழகத்தவர். அதை இந்த நேரத்தில் மறந்துவிடுவதற்கில்லை. இன்னும் ஒன்றை நினைவிற்கு கொண்டுவர விரும்புகிறேன். விலைவாசிப் போராட்டம் நடந்த காலம். நமது கழகத்தவர் பலரும் சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எங்களை காராக்கிரஹத்தில் அடைத்து வைத்தார்கள், இம்சித்தார்கள், பலவகையான சித்திரவதைக்குள்ளாக்கினார்கள். பிறகு சிறையிலிருந்து வெளி வந்த நேரத்தில்தான் நமது மண்ணின்மீது சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டது. அந்நியர்கள் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்தார்கள். அந்த நேரத்திலே, "நாம் நமது சிறைவாசத்தில் நமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, இன்னல்களையெல்லாம் மறந்துவிட்டு, இந்த நாடு காப்பாற்றப்படுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்" என்று இந்த தேசத்தின் ஒற்றுமைக்காக, தேசீய ஒருமைப்பாட்டிற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் வானொலியிலே குரல் கொடுத்தார்கள். அன்று அவர்கள் ஆற்றிய உரை, அதிசயிக்கத்தக்க உரை என்று நாட்டிலே அனைவராலும் பாராட்டப்பட்டிருக்கின்றது. இதைச் சொல்லுவதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாரம்பரியம், தேசியப் பாரம்பரியம் என்பதுதான். மாநில சுயாட்சி கேட்பதும் அத்தகைய தேசியப் பாரம்பரியத்தின் அடிப்படையில்தான். தமிழ் இனம் என்பது ஒரு தேசீய இனம். அதை "ஒரு ரேஸ்" என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. அதை ஒரு "நேஷனலிட்டி" யாகவே குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தேசிய இனத்தை இந்த நாட்டிலே பாதுகாக்க வேண்டும் என்று அடிப்படைத் தத்துவத்தில்தான் இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை மக்கள் முன்பு வைக்கிறோம். மிகப் புகழ் பெற்ற பேரறிஞர் ஏ. ஜே. டாயின்பீ கருத்துக்களை "ஸ்டேட்ஸ் ரீஆர்கனைஸேஷன் கமிஷன்" அறிக்கையில் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார். வளர்ந்துவரும் தேசீய இன உணர்ச்சி, எல்லைக்கோட்டின் அடிப்படையிலோ, பல பகுதிகளுக்கு இடையிலே உள்ள தொடர்பு காரணமாகவோ ஏற்படுவதில்லை; தாய்மொழி காரணமாகத்தான் ஏற்படுகிறது, வளர்ந்து வருகிறது என்ற மிக அருமையான தத்துவத்தினை டாயின்பீ அவர்கள் சொல்லியதை எடுத்துக்காண்பித்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தமிழினத்தின் பெருமையை நீண்ட நெடுங்காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது. அதைப் போலவேதான் தாய் மொழியின் வழியில் இந்த நாட்டிலே நல்லாட்சி ஏற்பட வேண்டுமென்று சொல்லிவருகிறோம். அப்படிப்பட்ட இந்த நேரத்திலே அது பிரிந்துபோகும் உரிமையா அல்லது பிரிந்து போகாத உரிமையா என்ற சர்ச்சைக்கு நான் போக விரும்ப



வில்லை. பிரிந்துபோகும் உரிமை என்று அவர் சொல்லவில்லை. சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் சொல்லிக்கொண்டு, "இது பிரிவினை வாதம்" என்று சொல்லுவது உள்ளபடியே இந்த நாட்டு மக்களைத் திசை திருப்புவதற்காக, மாநில சுயாட்சி, தன்னாட்சி என்ற அருமையான தேசிய ஒருமைப்பாட்டுத் தத்துவத்திற்கு வேண்டுமென்றே அவர்கள் வண்ணம்பூசிட முற்படும் கதை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உள்ளபடியே மாநில சுயாட்சி கிடைத்தால், இந்த நாட்டிலே தேசீய ஒருமைப்பாடு ஊன்றி நிற்கும். அது இல்லையென்றால், அது நிலைத்து நிற்பதற்கு வாய்ப்பில்லை. தேசிய இனங்கள், தேசிய உணர்வுகள் ஆங்கிலேயர்கள் காலத்தில் எப்படி அடக்கப்பட்டிருந்தனவோ ஒடுக்கப்பட்டிருந்தனவோ அதுபோன்றே இன்றைக்கும் மாநில மக்களின் உணர்வுகள் மதிக்கப்படாமல் ஒடுக்கப்படுகின்றன. காங்கிரஸ் கட்சியானது காந்தியடிகளின் தலைமையில் விடுதலைக்காக இந்த நாட்டிலே மக்களை ஒன்று திரட்டிப் போராடிய நேரத்திலே ஒரு அருமையான ஒற்றுமை உணர்வினை இந்த நாட்டிலே காந்தியடிகள் தட்டியெழுப்பினார்கள். அது எத்தகைய உணர்வு என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சிலம்புச் செல்வர் அவர்கள் நன்கு எடுத்துக் காண்பிப்பார்கள் என்று கருதுகிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள ஒவ்வொரு மாநில மக்களுக்கும் அத்தகைய உணர்வு தேவை, அந்த அடிப்படையிலேதான் இந்த நாட்டிலே ஒரு ஒற்றுமையும் நல்லாட்சியும் நிலவ வேண்டும் என்ற வகையிலேதான் மாநில சுயாட்சி தேவை என்பதை நாம் நிச்சயமாக உணர்ந்தாக வேண்டும். மாநில சுயாட்சி தேவை என்று சொல்லும்போது மத்தியிலே கூட்டாட்சி என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கிறோம். இதிலே எங்கே பிரிவினைவாதம் இருக்கின்றது? மத்தியிலே கூட்டாட்சி, மாநிலங்களிலே தன்னாட்சி, சுயாட்சி என்று சொல்லுகிறோம். சுயாட்சி என்று சொல்லும்போது, ஒரு பீதி, அச்சம். வேதனை அவர்களுக்கு ஏற்படுகிறது. மக்களை வேறு கோணத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றார்கள். உள்ளபடியே இதை மிகத் தெளிவாக இந்த நாட்டு மக்களுக்கு விளக்கியாக வேண்டும் என்ற கட்டத்தில் நாம் இருக்கிறோம். மேற்கு வங்கத்திலே முதலமைச்சராக டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள் இருந்த நேரத்திலே அவர்கள் நிதிக்குழுவிற்குத் தந்த அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

(6-40 பி.ப.)

"பலவீனமான மாநிலங்களின் அடிப்படையில், பலமான மத்திய அரசை அமைக்க முயற்சி செய்வது மணலை அஸ்திவாரமாகக் கொண்டு ஒரு பலமான கட்டிடத்தைக் கட்ட முயற்சி செய்வதைப் போன்றதாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அருமையான மேற்கோளைக் காட்டி நான் உங்களைச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளபடியே அப்படிப்பட்ட ஒரு கட்டிடத்தை அமைப்பதை யாரும் இந்த நாட்டில் விரும்ப மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு பலமான கட்டிடம்தான் தேவை என்று எல்லோரும் விரும்புவார்கள். உள்ளபடியே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது. அந்த அதிகாரங்கள் எப்படிப்பட்டவைகளாக இருக்கின்றன என்பது பற்றி இங்கே உங்களுக்கு ஒரு கருத்தை எடுத்துச் சொல்ல

விரும்புகிறேன். எங்களுடைய தலைவர் சொன்ன கருத்தா என்றால், இல்லை. டாக்டர் கலைஞர் சொன்ன கருத்தா என்றால் இல்லை. அவர்களுடைய முகாமிலிருந்து வந்த ஒருவர் சொன்ன கருத்து என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவிருந்த டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறிய கருத்துத்தான். அவர், "பென்ஷனர்ஸ் ஆப் தி சென்ட்ரல் கவர்ன்மெண்ட்", மாநிலங்கள் மத்திய அரசிடம் பென்ஷன் வாங்குகிறவர்கள் போல இருக்கின்றன என்று மாநிலங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதைச் சொன்னவர் டாக்டர் கலைஞரா, அதைச் சொன்னவர் டாக்டர் நாவலரா, அதைச் சொன்னவர் நம்முடைய பேராசிரியரா? அதைச் சொன்னவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு பலமான ஒரு நல்லாட்சி அமைய வேண்டுமென்று வைத்திருக்கின்ற பிரச்சினையை மத்தியில் மட்டும் அமைய வேண்டும் என்ற கோணத்தில் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் மிக வேதனையோடு அவரது 1967-68-ஆம் ஆண்டு நிதி-நிலை அறிக்கையின் மீது உரையாற்றுகின்றபோது குறிப்பிட்டிருக்கிறார்.

"அரசியல் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில், 36 முதல் 38 வரையிலுள்ள விதி முறைகள், பணம் வெளியிடுதல், அன்னியச் செலவாணி போன்ற துறைகளை மத்திய அரசினுடையவையாக்கி வைத்திருப்பதன் மூலம் பணவீக்கம், பற்றுக்குறை நிதி—நிலை என்பவைகளுக்கு மத்திய அரசு முழுப் பொறுப்பு ஏற்றிருக்கச் செய்கிறது. இதனால், விலை ஏற்றம் ஏற்படுவதற்கான பொறுப்பும் மத்திய அரசையே சார்கிறது. எனவே, விலை கட்டுப்படுவதற்கான பொறுப்பும் மத்திய அரசே மேற்கொண்டாக வேண்டியிருக்கிறது. மத்திய அரசின் நடவடிக்கையால் விலைகள் கட்டுக்கடங்காமல் ஏறிவிடுவதன் விளைவாக ஏற்படும் இன்னலையும், இழைப்பையும் மாநில அரசு தாங்கிக் தத்தளிக்க வேண்டியிருக்கிறது. விலைகளைக் குறைத்து, நிலைமையைச் சரிபடுத்தும் வலிமையை இந்திய அரசியல் சட்டம், மாநில அரசுகளுக்கு அளித்திடவில்லை"— என்று மிக உருக்கமாகச் சொல்லியிருக்கிறார்.

விலைவாசிகள் ஏறுகின்ற நிலைமையில் பாமர மக்களுக்கு என்ன ஏற்படுகிறது? அவர்களுக்கு நேரடியாக மத்திய அரசுதான் காரணம் என்பது தெரிவதில்லை. இந்த மாநில அரசுதான் சாதாரண பாமர மக்களின் கண்களுக்குத் தெரிகிறது. ஆனால், உண்மை நிலவரம் என்ன? விலைவாசி ஏற்றத்திற்கு உண்மையான காரணம் என்னவென்று சில அரசியல்வாதிகள் எடுத்துச் சொல்ல மறுக்கிறார்கள். அதற்குக் காரணம் தங்கள் கட்சிக்குப் பலம் தேடிக் கொள்ள வேண்டும் என்ற சுயலாப நோக்கம். உண்மையான காரண காரியங்களை மக்களுக்கு எடுத்துக் காட்டியாக வேண்டும்.

அடுத்து, கைத்தறியைப்பற்றி ஒன்றைக் கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் 18—10—1973 அன்று திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது, கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவர்



63135
V 211,32 N74
N74.12232

"இன்றைக்கு தமிழ்நாட்டில் மிக முக்கியப் பிரச்சினை நெசவாளர்கள் பிரச்சினை. அவர்களுக்கு நூலைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் டெக்ஸ்டைல் கமிஷனரிடம்தான் இருக்கிறது. [illegible] அளவுக்காவது பகிர்ந்தளிக்க மாநில அரசிற்கு அதிகாரம் தேவை [illegible] சர்கள் அளவிலும், அதிகாரிகள் அளவிலும் பல ம[illegible] பம்பாய்க்கும், டெல்லிக்கும் போய் வருகிறோம்"— என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட பிரச்சினைகளை நாங்கள் உங்கள் முன்னால் வைக்கிறோம். ஆகையினால்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை, அதற்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று கோருகிறோம். இந்தத் தேவைகளை டெல்லிக்கு உணர்த்திட, நமது கோரிக்கையைப் பெற்றிட, இந்த மாமன்றத்தில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாநில சுயாட்சியை "நெல்லிக்கனி" என்கிறார் மாண்புமிகு முதல்வர். அந்தக் கனியைச் சுவைத்திட அதை நான் வரவேற்று, ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. இராம சுப்பையா: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே; இந்த மாமன்றத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மாநில சுயாட்சித் தீர்மானத்தை நானும் ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்குப் பெருமகிழ்வு அடைகிறேன். இந்த நாட்டு மக்களுக்கு இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு இன்னும் அதிக அதிகாரங்களைக் கேட்கிற நாம், இந்த மாமன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்ப இருக்கிறோம். இந்த நாட்டில் நெசவாளர்கள் படுகின்ற துயரம் எவ்வளவு? இந்த நாட்டில் உற்பத்தியாகின்ற நூலை இந்த நாட்டில் இருக்கின்ற நெசவாளர் உபயோகித்து சம்பாதித்துச் வயிறாறச் சாப்பிடக்கூடிய நிலைமை இருந்தாலும் கூட அதை விநியோகிப்பது மத்திய அரசின் அதிகாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கான அதிகாரங்களை எல்லாம் அவர்களுடைய கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் அதனால் திண்டாட விடப்படுகிறோம். சீன ஆக்கிரமிப்பின் போது அண்ணா அவர்கள் வீடு இருந்தால்தான் ஓடு வேய முடியும்; ஆகவே முதலில் நாட்டைக் காப்போம்: யுத்த நிதி தாருங்கள் என்றார். அதற்கேற்ப நிதி கொடுத்தோம். அப்படியிருந்தும் கூட நம்மைப் பார்த்து திராவிட நாடு பிரிவினை வாதிகள் என்று கூறு

[திரு. இராம. சுப்பையா] [1974 ஏப்ரல் 25

கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவோ விளக்கங்கள் கூறியும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுக்குப் புரிந்து கொள்ளும் எண்ணம் இல்லை. ஆலை இலை தெரியுமா என்றால் எனக்கா தெரியாது? அது அகலமாக புளியன் இலை போல் இருக்கும் என்கிறார்கள். இவ்வளவு விளக்கங்கள் சொன்ன பிறகும் விளக்கங்கள் கேட்டால், அவர்களுக்கு எப்படித்தான் கூறுவது என்று புரியவில்லை. சமீபத்தில் சட்டப் பேரவையில் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகின்ற போது, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் மாநிலத்தில் சுயாட்சி என்றால் என்ன, மத்தியில் கூட்டாட்சி என்றால் என்ன என்று கேட்டார்கள். அதற்குக் கலைஞர் அவர்கள் "உங்களுக்குத் தனியாகச் சொல்கிறேன்" என்று சொன்னார்கள். அதன் பிறகும் அவர்கள் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அதற்கு கலைஞர் அவர்கள் "நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? அல்லது உங்களுக்கு புரிந்து கொள்ள விருப்பமில்லையா என்று தெரியவில்லை. ஆகையினால்தான், இப்படிப் பலமுறை கேட்கிறீர்கள். விவரமாக அச்சடித்துக் தந்திருக்கிறோம்: அவற்றைப் புரிந்து கொள்ள அறிவையும் தா என்றால் எப்படித் தர முடியும்..?" என்று சொன்னார்கள். அது போல் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு நம்முடைய மாநிலத்திற்கு இன்னும் அதிக அதிகாரங்கள் தேவை என்று கூறி, இங்கேயிருக்கின்ற பெரியவர்களெல்லாம், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஆதரித்து நம்முடைய மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.



## 2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

**256.** Notifications issued with G.O. Ms. No. 263, Rural Development and Local Administration, dated the 8th February 1974 in regard to division of Pollachi Municipality into thirty-two wards and reservation of three seats for Scheduled Castes and three seats for women in the Pollachi Municipal Council. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

**257.** Notifications issued with G.O. Ms. No. 98, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to division of Kumbakonam Municipality into thirty-six wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Kumbakonam Municipal Council. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

**258.** Notifications issued with G.O. Ms. No. 30, Rural Development and Local Administration, dated the 3rd January 1974 in regard to division of Sivaganga Municipality into twenty wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Sivaganga Municipal Council. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

**259.** Notifications issued with G.O. Ms. No. 28, Rural Development and Local Administration, dated the 3rd January 1974 in regard to division of Srirangam Municipality into thirty-two wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Srirangam Municipal Council. [*Laid on the table of the House under section* 304(*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

**260.** Notifications issued with G.O. Ms. No. 269, Rural Development and Local Administration, dated the 9th February 1974 in regard to division of Devakottai Municipality into twenty wards

and one seat for Scheduled Castes and one seat for women in the Devakottai Municipal Council [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

261. Notifications issued with G.O. Ms. No. 66, Rural Development and Local Administration, dated the 11th January 1974 in regard to division of Namakkal Municipality into twenty wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Namakkal Municipal Council. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

*B. Reports, Notifications and Other Papers.*

**159. Return of Assets of 2 Members of the Legislative Assembly as on 31st March 1971, 2 Members of the Legislative Assembly as on 31st March 1972 and 20 Members of the Legislative Assembly (inclusive of 2 Hon. Ministers) as on 31st March 1973.**

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

**வெள்ளிக்கிழமை, 1974 ஏப்ரல் 26.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. அரசினர் தீர்மானங்கள்

### (1) வினா நேரம் கைவிடப்படுதல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை:

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

செட்டியபட்டி கிராமத்தில் ஒரு பள்ளியில் நண்பகல் உணவில் நச்சு கலந்திருந்ததன் காரணமாக இரண்டு மாணவர்கள் இறந்ததும், 91 மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டதும் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவை விதி 44-ன் கீழ் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொடுத்துள்ளார்கள்:—

"மதுரை மாவட்டம் திண்டுக்கல்லுக்கு அருகில் செட்டியபட்டி கிராமத்திலுள்ள ஒரு பள்ளியில் வழங்கப்பட்ட நண்பகல் உணவில் நச்சு கலந்திருந்ததன் காரணமாக இரண்டு மாணவர்கள் இறந்ததோடு 91 மாணவர்கள் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டது குறித்து".

திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும் இதே பொருள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள்.

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எந்த வகையில் 44-வது விதியின் கீழ் வருகின்றது என்பதற்கான விளக்கத்தினை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், உறுப்பினர் அவர்களும் எடுத்துக் கூற வேண்டுகிறேன்.

திரு. கே. ஸஜாராம்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, தீர்மானத்திலிருந்தே இதனுடைய முக்கியத்துவமும், அவசரமும் நன்றாக விளங்கும். நமது குழந்தைகள் பள்ளிக்குச் சென்று படித்து வரட்டுமென்று பெற்றோர்கள் அனுப்புகிறார்கள். குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல நிலைமையில்

வர வேண்டுமென்ற பேராவலோடு அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். பள்ளியிலிருந்து குழந்தைகள் வீட்டுக்குத் திரும்பி வராமல், அவர்கள் மதிய உணவு அருந்தியதனால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் படுவார்களோ அல்லது அவர்களுடைய உயிர் பிரிந்து பிணமாகக் கொண்டு வரப்படுமோ என்பதைப்பற்றி சற்று எண்ணிப் பார்த்தால் பெற்றோர்களுக்கு எவ்வளவு தூரம் மனக் கஷ்டம் ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரி, பள்ளியிலே ஆசிரியர்கள் கவனத்துடன் இருந்து தயாரிக்கும் உணவில் விஷம் கலந்திருந்து கவனக் குறைவு இருந்ததன் காரணமாகவோ அல்லது என்ன தவறால் அப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை. தெரிந்து கொள்வதற்கு பொதுமக்களும் நாம் அனைவரும் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறோம். மேலும் இந்த அசம்பாவித காரியம் இனிமேல் நடவாமல் இருக்க அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது முக்கியமாகும். ஆகவே சபையின் அலுவலை ஒத்தி வைத்து, இதற்குப் பிரதானம் கொடுத்து இதைப்பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அண்மையில் நடந்த இந்த விபத்துபற்றி எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உரிய காரணத்தை எடுத்துச் சொன்னார்கள். இது போன்று மதிய உணவு அருந்தியதன் காரணமாகப் பள்ளி மாணவர்கள் இறப்பது என்பது நம்முடைய மாநிலத்தில் பல சந்தர்ப்பங்களில் நடந்திருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலிலேயே டிசம்பர் 1970-ல் கூட இது மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்து, ஒரு கேள்வி மூலம் சுகாதார அமைச்சரவர்கள் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்தேன். மதிய உணவில் பெருச்சாளி கிடந்தது என்று மதுரை மாநகராட்சி உறுப்பினர் ஒரு பிரச்சினையைக் கிளப்பினாரே என்று கேட்டதற்கு, உண்மை தான், அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்று சொன்னார்கள். அதேபோல, 1972 மார்ச்சில் ஓசூருக்கு அருகில் பாதாளப் பள்ளி என்ற இடத்தில் 12 குழந்தைகள் மதிய உணவு சாப்பிட்டதன் காரணமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவ மனையில் சிலர் இறந்தார்கள் என்ற செய்தியும் நமக்குக் கிடைத்தது. இதே போன்று பல நிகழ்ச்சிகள் ஆண்டுக்கு ஆண்டு நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் பார்த்தால், மதிய உணவு சுத்தமான, சுகாதாரமான முறையில் நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்படவில்லை என்றும் அதன் காரணமாக பல பள்ளி மாணவர்கள் இறக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றும் இந்தப் பிரச்சினையை பல முறை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தும், இதற்கு சரியான நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், அந்தக் காரணத்தினால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்துக்கொள்



கிறேன், எப்படி இதைத் தடுக்கவேண்டுமென்ற நிலைமையில் இதைப்பற்றிப் பேசுவதற்கு அவகாசம் கொடுத்து தற்போதுள்ள நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று தான் தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையிலுள்ள செட்டியபட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. அதில் 97 மாணவர்களும் 67 மாணவிகளும் பயில்கின்றனர். இப்பள்ளியில் 23—4—1974 அன்று மதிய உணவு சாப்பிட்ட மாணவர்களில் இருவர் உயிர் நீத்தனர் என்ற துயரச் செய்தி அரசுக்குக் கிடைத்தது.

இந்தச் சம்பவம்பற்றி மாவட்ட அதிகாரிகளிடமிருந்து, கல்வி அதிகாரி, போலீஸ் அதிகாரி, ரெவின்யூ அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து, தொலை பேசி மூலமாக தகவல்கள் பெறப்பட்டிருக்கின்றன. வழக்கமாக அளிக்கப்படுகின்ற 'பாலாகார் கொண்டு உப்புமாவும்', 'சி.எஸ்.எம்.' சத்துணவு கொண்ட சட்னியும் மதிய உணவாக அன்று 102 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. உப்புமாவை உண்ணத் தொடங்கியதுமே சிறுவர்கள் உணவு கசப்பதாகக் கூறியதன் பேரில், அந்த உணவு உண்பதை உடனடியாக நிறுத்திவிடும்படி பள்ளித் தலைமை ஆசிரியை கூறியதாகத் தெரிகிறது.

உணவு ஓரளவு உட்கொண்ட சிறுவர்கள் பலர் வாந்தி எடுக்கத் தொடங்கினர். மூன்றாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பி. பிரகாஷ் என்ற ஒன்பது வயதுச் சிறுவன் தன் வீட்டில் இறந்து விட்டான். முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பி. பெருமாள் என்ற 6 வயதுச் சிறுவன் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்படும் வழியில் இறந்து விட்டான். இவர்கள் இருவரைத் தவிர, வாந்தியெடுத்த சுமார் 90 மாணவர்கள் மருத்துவமனைக்கு (திண்டுக்கல் மருத்துவமனை, காந்தி கிராமம் கஸ்தூரிபாய் மருத்துவமனை) அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் 69 பேர்களுக்கு அவுட் பேஷண்ட்களாக சிகிச்சை அளிக்கப்பட்டு, வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். 21 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்குப் பின் குணமாகி வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இறந்து போன சிறுவர்களின் வயிற்றுத் தேக்கலும், உடல் உள்ளுறுப்புகளும் மருத்துவ பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்டு, கெமிகல் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அன்று வழங்கப்பட்ட உணவும் கெமிகல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த உணவு தயாரிப்பதற்காக அன்றைய தினம் பயன்படுத்தப்பட்ட சாமான்கள் மற்றும், மாவு, கடுகு, எண்ணெய் போன்ற சரக்குகளும் கைப்பற்றப்பட்டன. அன்று உபயோகப் படுத்தப்பட்ட சத்துணவுப் பொருள்கள் முன்பே கோவையில் உள்ள

## 109 [illegible] உணவில் நஞ்சு [illegible] மாணவர்கள் இறந்ததும் 31 மாணவர்கள் [illegible] சேர்க்கப்பட்டதும் குறித்து



சென்ட்ரல் டெக்னலாஜிகல் இன்ஸ்டிட்யூட்டிஞல் தரப் பரிசோதனை செய்யப் பட்டு, உணவில் பயன்படுத்த ஏற்றவை என்று சான்றிதழ் பெறப்பட்டிருந் தாகத் தெரிகிறது.

திண்டுக்கல் சப் கலெக்டரும், காவல் துறை அதிகாரியும் மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள். அம்பாத்துறை காவல் நிலையத்தில் இச்சம்பவம் பற்றி வழக்கு ஒன்று, குற்ற எண் 108/74 கிரிமினல் நடைமுறைச் சட்டம் 174 ஆவது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'விஷ' உணவின் தன்மையும் ஆராயப்பட்டு வருகிறது.

மேலும் சென்னையிலிருந்து பள்ளிக் கல்வி இணை இயக்குனர் இச்சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று நேரில் விசாரித்துத் தகவல் கொடுக்க அனுப்பப் பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மதிய உணவை சுகாதாரமான முறையிலும், பாதுகாப்பாகவும் வழங்க வேண்டுமென்று விரிவான அறிவுரைகள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. மதிய உணவு மையங்களை ஹெல்த் இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு அடிக்கடி பார்வை யிட வேண்டுமென்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கையாக செய்யப்பட்டுள்ள இந்த ஏற்பாடுகளையும் மீறி, இந்தத் துயர நிகழ்ச்சி நடந்தது குறித்து அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. இந்த விசாரணையின் முடிவுகள் தெரிந்தவுடன் இது குறித்து நடவடிக்கைகள் எடுக்கவும் இது போன்ற நிகழ்ச்சிகள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு முன்னெச் சரிக்கையாக மேலும் என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பது குறித்து ஆராயவும் அரசு முன்வரும்.

இந்த இரு மாணவர்களின் மரணம் அவர்கள் குடும்பங்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த அநு தாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இழப்பிற்கு ஆறுதல் கூறு வதோ ஈடு செய்வதோ இயலாது என்ற போதிலும் அரசின் அநுதாபத்தைத் தெரிவிக்கும் வகையிலே இறந்த இச்சிறுவர்களின் குடும்பத்தினருக்கு முதல மைச்சர் நிதியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 2 ஆயிரம் வீதம் வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொண்டு இதற்கு மேல் இப்பிரச்சினை குறித்து விவாதிப்பது தேவையில்லை என்பதைத் துணைத் தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் விளக்கத்தினைக் கேட்ட பின்பு, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற் கான இசைவை மறுக்கிறேன்.



### 1. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (2) மாநில சுயாட்சி, இராஜமன்னர் குழு அறிக்கை—(விவாதத் தொடர்ச்சி).

(பிற்பகல் 4.10)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலை வரவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்களால் முன் மொழியப்பட்டிருக்கிற 'மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி' பற்றிய தீர்மானத்தின் மீது ஓரிரு கருத்துக்களை இந்த அவையிலே தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தின்மீது பல்வேறு கட்சியினரும் தங்களுடைய கருத் துக்களை வழங்கினார்கள். முக்கியமாக ஆளும் கட்சியினர் இந்தத் தீர்மானத் தின்மீது பேசும்போது, எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் இந்தத் தீர்மானத் தைப் பார்க்கும்போது பயப்படுகிறார்கள், மிரள்கிறார்கள், என்றெல்லாம் வர்ணனை செய்தார்கள். ஆனால் நாங்கள் அதைப்பற்றி எப்போதும் பயப்பட்ட தில்லை. அன்று, ஆங்கிலேய ஆட்சியைக் கண்டு பயப்படாமல், அந்நியனை விரட்டுவதற்கு சங்கல்பம் செய்துகொண்டு, பல போராட்டங்களை நடத்தியவர் கள் நாங்கள். வெள்ளையர்களின் பீரங்கிக்கும், அடக்கு முறைக்கும் பயப்படாத எங்கள் அங்கத்தினர்கள் இந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கண்டு பயப்படுகிறார்களென்றால், அவர்கள் இந்த அவையிலே இருக்க வேண்டிய அவசியமில்லை. இதைக் கண்டு யாரும் பயப்படுவதில்லை. இந்த சுயாட்சியைப் பற்றி யோசிக்கும்போது, இது நாட்டினுடைய பிரிவினைக்கு ஒரு வித்து என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. (குறுக்கீடு) நாங்கள் அதற்குப் பயப்படவில்லை. அதைப்பற்றி முதலிலேயே சொல்லிவிட்டேன். இந்திய நாட்டின் சரித்திரத்தை நாம் படித்திருக்கிறோம். அந்தக் காலத்திலே இருந்த 700 ஸமஸ்தானங்கள், நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு பிரிந்திருந்த தாலே, இந்த நாட்டிற்குள் அலெக்சாந்தர் வந்தான்; அதற்குப் பிறகு முகம்மது கோரி வந்தான்; அதற்குப் பிறகு முகம்மது கஜனி வந்தான்; அதற்குப் பிறகு முகலாயர்களின் ஆட்சி நடந்தது; அதற்குப் பிறகு நம்முடைய சண்டை, சச்சரவுகள் காரணமாக ஆங்கிலேயர்கள் வந்தார்கள். அந்நிய ஆட்சி நம்முடைய நாட்டில் முதலில் இல்லை. 2,000 வருடங்களுக்கு முன்பு அப்படிப்பட்ட ஆட்சி இல்லை. அதற்குப் பிறகு வந்ததற்குக் காரணம்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 ஏப்ரல் 26

நம்மிடம் இருந்த சண்டைகளும், சச்சரவுகளும் தான். நம்மிடம் இருந்த பிரிவினைதான். நாம் ஒற்றுமையாக இருந்திருந்தால், அவர்களுடைய ஆட்சி வந்திருக்காது. ஆதலால் நம்முடைய பெரும் தலைவர்களெல்லாம் இந்தியா ஓரே ராஜ்யமாக இருக்க வேண்டும், இந்தியாவின் ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள், வாயளவில் ஒருமைப்பாட்டைக் காப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒருமைப்பாட்டைக் காக்க வேண்டுமென்றால், முதலில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். மத்தியிலே அதிக அதிகாரம் கூடாது; அது பரவலாக இருக்க வேண்டுமென்று சொல்லுவதை நாங்கள் ஒத்துக் கொள்ளுகிறோம். ஆனால் மாநில சுயாட்சி என்ற வார்த்தையைப் பார்க்கும்போதுதான் சங்கடமாக இருக்கிறது. வெகு பாடுபட்டு, கஷ்டப் பட்டு சுதந்திரம் வாங்கப்பட்டிருக்கிறது. எவ்வளவோ அழிந்திருக்கிறது. எவ்வளவோ சங்கடங்கள் ஏற்பட்டு, பல வருஷங்கள் போராடி நாம் சுதந்தி ரத்தைப் பெற்றிருக்கிறோம். அதற்கு ஒரு வேலிமாதிரி தான் அரசியல் சட்டம் இருக்கிறது. சொத்து வாங்குகிறோம்; அதற்கு வேலி போட்டால்தான் ஆடு, மாடு வந்து மேயாமல் இருக்கும். வீடு வாங்குகிறோம்; அதற்கு ஒரு 'கேட்' போட்டு பூட்டி வைக்கிறோம். அதுமாதிரி சுதந்திரத்தைப் பாதுகாப்பதற் காகத்தான் அரசியல் சட்டம் இருக்கிறது. நல்ல முறையில் நிர்வாகம் நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் அரசியல் சட்டம் இருக்கிறது. நம்முடைய நாட்டிலே எவ்வளவோ பாஷை பேசுகிறவர்கள் இருக்கிறார்கள்; நம்முடைய நாட்டிலே எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. மேல் நாடுகளில் உள்ள சட்டங்களையெல்லாம் ஆராய்ந்து நம்முடைய அரசியல் சட்டத்தை உருவாக் கியிருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார், திரு. அல்லாடி கிருஷ்ணசாமி, திரு. முகர்ஜி போன்றவர்களெல்லாம் சேர்ந்து உருவாக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரிய நிபுணர்கள் சேர்ந்து வகுத்த சட்டம்தான் அரசியல் சட்டம். நல்ல ஆட்சி நம்முடைய நாட்டில் நடக்க வேண்டுமென்பதற்காகத் தான், பல நாடுகளின் அரசியல் சட்டங்களிலுள்ள நல்ல கருத்துக்களை யெல்லாம் தொகுத்து, நம்முடைய அரசியல் சட்டத்தை உருவாக்கியிருக் கிறார்கள். எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த அறிவாளிகள் இந்த அரசியல் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். நாட்டைப் பாதுகாக்கும் வேலிதான் அது. அந்த வேலியை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது, எடுத்த உடனேயே அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லுவது தவறு. மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்லுகிறபோது, ஜாக்கிரதை யாகக் கேட்க வேண்டும். ஏற்கெனவே நம்மிடம் எத்தனையோ அதிகாரங்கள்



1074 ஏப்ரல் 26] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைக் கொண்டு நாம் சரியாக ஆட்சியை நடத் துகிறோமா என்று பார்க்க வேண்டும். மத்திய அரசில் ஏராளமான அதிகாரங்கள் குவிந்திருக்கின்றனவென்று சொல்லுகிறோம். இங்கே, எதிர்க் கட்சிக்காரர்கள் ஊழல், ஊழல் என்று சொல்லுகிறார்களே. அதை முதலில் சீர்திருத்த வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, எதிர்க் கட்சிக் காரர்கள் ஊழல், ஊழல் என்று சொல்லுகிறார்களென்று சொல்லி, உறுப்பினரவர்கள் தப்பித்துக்கொள்ளக்கூடாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** என்ன ஊழல் என்று சொல்லுவதற்கு நேரம் கிடையாது. ஊழல்கள் நிறைய இருக்கின்றன. இந்திரா காந்தியிடம்கூட ஊழலைப்பற்றிப் பட்டியல் கொடுத்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்குப் பதில் எழுதி இந்த மன்றத்திலே வைத்திருக்கிறோம். அதையும் உறுப்பினர் அவர்கள் படித்துப் பார்த்தார்களா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** நம்மிடம் இருக்கும் இலாக்காக்களில் உள்ள குப்பைகளை அள்ளுவதற்கு 'புல்டோசர்' வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஸ்ரீரங்கம் நகராட்சியில் ஊழல், ஊழல் என்று புழுதி வாரி இறைத்துக்கொண்டிருக்கலாம். எதைச் சொன்னாலும் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். இந்திரா காந்தியிடம் ஊழல் புகார்கள் கொடுத்தார்களென்று சொல்கிறார்கள். அதற்கு பதில் எழுதி இந்த மன்றத்தில் வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகு, அது ஊழல் என்று நிரூபிக்கத் தயாராக இருக்கிறார்களா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குத்தான் இருக்கிறது. ஊழல் என்று நாங்கள் சொல்லுகிறோம். இல்லையென்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். உங்கள் ஆட்சியில் ஊழல் என்று சொன்னால், அதை நீங்கள்தான் இல்லையென்று நிரூபிக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்குத்தான், திரு. காமராஜர் அவர்கள் ஒரே வரியில் சொன்னார்கள். ஊழல், ஊழல் என்று யார் சொல்லு கிறார்களோ அவர்கள்தான் கடைந்தெடுத்த ஊழல் பேர் வழிகள் என்ற அழகான பொன் மொழியைச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அந்தந்தக் கட்டம் வரும்போது, ஒவ்வொன்றையும் அழகாகச் சொல்லும் சாமர்த்தியம் நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு இருக்கிறது. அதைப்பற்றி சந்தோஷம்.

சுயாட்சி என்பது எட்டளவில்தான் இருக்கிறது. அசெம்பிளியில் உறுப்பினர்கள் இதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைக் கடலில் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பல நிபுணர்கள் கஷ்டப்பட்டு வகுத்த சட்டத்தை கடலில் தூக்கிப் போடுங்கள், அதை எரித்தால் பாதகமில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நாங்கள் அதைக் கண்டு பயப்படவில்லை. இன்னொரு இடத்தில் பார்த்தால்—ராஜபாளையம் மாநாட்டில் பார்த்தால், ஒரு பக்கத்தில் திரு. முஜிபூர் ரக்மான் பட்டம்; இன்னொரு பக்கத்தில் நம்முடைய கலைஞர் அவர்களுடைய படம். அதைப் பார்த்தால் தூண்டுவதாக இருக்கிறது. அவர்களுடைய பத்திரிகையில் அதையெல்லாம் போடுகிறார்கள். மற்ற பத்திரிகைகளிலும் போடுகிறார்கள். அதைப் பார்க்கும்போது ஜனங்களிடையே பிரிவினை மனப்பான்மையை தூண்டுவதாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முஜிபூர் என்ன அவ்வளவு கொடுமையான மனிதரா? அவரோடு சேர்த்து முதலமைச்சரின் படத்தைப் போடுவது தவறா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அவர் பிரிவினை கேட்டார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிரிவினை வேண்டிய முஜிபூரை இந்திய அரசு ஆதரிக்கக் காரணம் என்ன?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** நான் அதை ஆதரிக்க மாட்டேன். அவர்களுடைய அரசு சர்வாதிகார அரசு—அதாவது பாகிஸ்தான் அரசு. நம்முடைய சர்க்கார் ஜனநாயக முறைப்படி ஆண்டு கொண்டிருக்கிறது. 1947-ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது; 1950-ம் ஆண்டில் ஜனநாயக உரிமை கிடைத்தது, இப்போது பக்குவமான பருவம். மேஜராகும் நேரம் இது. இந்தக் காலத்தில் பிள்ளைகளை வெளியில் விட்டால் ஓடிவிடுகிறார்கள். சிறு பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாம்; அப்போது அடக்க முடியும். ஆனால் மேஜராகும்போது அடக்குவது கஷ்டம். அந்த நிலைமையில்தான் நம் நாடு இருக்கிறது. மேஜராகும் கட்டத்தில் இருக்கும்போது, நல்ல முறையில் காக்க வேண்டும்; பொறுப்பாகக் காக்க வேண்டும். அந்தக் கட்டத்தில்தான் நம் நாடு இன்று இருக்கிறது. மத்திய அரசை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு



(பிற்பகல் 4.20)

பார்க்கக்கூடாது. நாம் இங்கே 3½ கோடி ஜனங்கள் ஓட்டுப்போட்டுத்தான் நம்முடைய பிரதிநிதிகளாக 39 பேரை பார்லிமெண்டுக்கு அனுப்புகிறோம். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒன்றிரண்டு மந்திரிகளும் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நம் ஆட்கள் தானே. நாம் இங்கேயிருந்து அனுப்புகிற 39, 40 உறுப்பினர்கள் அறிவாளிகள் இல்லையா? பல்வேறு கட்சிகளிலிருந்தும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் திறமை இல்லையென்று சொல்ல முடியுமா? அங்கே உள்ள மந்திரிசபை வேறு கட்சி மந்திரிசபையாக இருந்தாலும், நம்முடைய தமிழ் நாட்டு மந்திரிகள் அங்கே இரண்டு பேராவது இருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசை நாம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்க்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு மாநில அரசுக்குக் கட்டளையிடுகிறது என்று கூறுகிறார்கள். அப்படி என்ன தேவையில்லாத கட்டளைகள் என்று தெரியவில்லை. சில இடங்களில் மத்திய அரசு உத்தரவிடவேண்டியதாகத்தான் இருக்கிறது. மாநிலத்திற்கு மாநிலம் தகராறு வரும்போது, மத்திய அரசு குறுக்கிடத்தான் வேண்டியுள்ளது. ஹேமாவதி நதியில் அணை கட்டுவது சம்பந்தமாக நமக்கும் கர்நாடகத்திற்கும் தகராறு வந்தது. அந்த மாதிரி இடத்தில் மத்திய அரசு தலையிட்டுத்தான் தீர்த்து வைக்க வேண்டியிருக்கிறது. எந்த மாநிலத்திற்கும் பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மொழிவாரி மாநிலங்கள் ஏற்பட்டதன் விளைவு தான் ஹேமாவதி நதியில் அணை கட்டுவது போன்ற தகராறுகள் ஏற்படக் காரணம். உங்கள் ஒப்பந்தம் பேப்பரில் தான் இருக்கிறது, அதை நான் ஒத்துக்கொள்ள முடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். இது ஜனநாயக நாட்டில் நல்லதல்ல. அப்படிச் சண்டை போட்டால், இந்தியாவின் ஒருமைப்பாடு என்னவாகும்? அதிகாரத்தைப் பரவலாக்க என்ன என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுவது நல்லது. அதற்காக மாநில சுயாட்சி கேட்காதீர்கள். அப்படிக் கேட்பதானால், இந்தக் கோரிக்கையை 1967-ல் நடந்த தேர்தலில், பிறகு 1971-ல் நடந்த தேர்தலில் ஏன் மக்கள் முன் வைக்கவில்லை? 3 வருஷங்கள் கழித்து இப்போது கொண்டு வருவதற்கான காரணம் என்னவென்பது ஒரு புரியாத விஷயமாக இருக்கிறது.

அடுத்து, மாநிலங்களுக்கு ஆளுநர் ஒருவர் எதற்கு வேண்டும் என்று முன்பு கேட்டார்கள். ஆளுநர் என்று ஒருவர் இருப்பது அவசியமாகும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக் கொள்ளவேண்டும். மொத்தம் 14 பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஊரில் திருட்டு நடக்கவில்லை என்பதற்காக போலீஸ் ஸ்டேஷன் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? ஒரு நாடு மற்ற நாட்டோடு சண்டை போடக்கூடாது என்று சர்வ தேச அளவில் ஒரு தீர்மானமே கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் திடீரென்று சண்டை வந்துவிடுகிறது. அது மாதிரி, ஒரு மாநிலத்தில் மந்திரிசபை இருந்தாலும் நாட்டிலே திடீரென்று குழப்பங்கள், சண்டைகள் ஏற்படும்போது ஆளுநர் என்பவர் தான் பொறுப்பாக இருந்து அந்தக் காரியங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

நம் நாட்டில் பலவிதமான மதங்கள் இருக்கின்றன. நம் மதத்தில் பல தவறுகள் இருக்கலாம். அதற்காகக் கேலி செய்கிறார்கள். எல்லா மதத்திலும் தவறுகள் இருக்கலாம். அதற்காக ஒருவரையொருவர் கேலி செய்யக் கூடாது. மதத்தின் அடிப்படையில் பல்வேறு காரியங்களில் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்காக சட்டங்கள் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அப்படிச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்றால் மத்திய அரசு தலையிடத்தான் வேண்டும். திருமதி அனந்தநாயகி அவர்கள் பேரவையில் கேள்வி கேட்கும்போது, முதல்வர் அவர்கள் அங்கே அதை மறுத்திருக்கிறார்கள். வெள்ளைக்காரன் இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கொடுத்தாலும், தமிழ் நாட்டிலேயாவது அவர்களது ஆட்சிதான் இருக்க வேண்டுமென்று சுயமரியாதைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் போட்டுச் சொல்லியிருக்கிறார்களே என்று அவர்கள் கேட்டதாகப் பத்திரிகையில் படித்தேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படி ஒன்றும் தீர்மானம் போடவில்லை. திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னது தவறு என்று அந்த அவையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** போட்டிருந்தால் தவறு தானே.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** பெரிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு தொழில் ஆரம்பிப்பதற்கு அந்நியச் செலாவணி வேண்டும். அது நம் கையில் இல்லை. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மூலப்பொருட்கள் தேவைப்படும் தொழில்களுக்கு அந்நியச் செலாவணி தேவைப்படும். ஆகவே அந்த அதிகாரம் மத்தியில்



இருக்கிறது. ஒரு தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள் அந்த மாநிலத்தில் கிடைக்காமல் மற்றொரு மாநிலத்திலிருந்து கொண்டுவர வேண்டிய நிலையிருக்கிறது, அல்லது வேறு ஒரு நாட்டிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்தக் காரியங்களைச் செய்வதற்கு மத்திய அரசால் தான் முடியும். ஒரு தொழிற்சாலை என்று ஆரம்பித்தால், திடீரென்று ஸ்டிரைக் செய்துவிடுகிறார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. குடும்பத்தில் பெரியவர் இருக்கிறார், அவர் அந்தக் குடும்பத்தின் காரியங்களைப் பார்த்துக்கொள்ளுகிறார். குடும்பத்திலேயே அப்படி இருக்கும்போது, பல மாநிலங்கள் இருக்கிற ஒரு நாட்டில் மத்திய அரசின் கையில் தான் சில அதிகாரங்கள் கட்டாயமாக இருக்க வேண்டியுள்ளது. அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், ஓரளவுக்கு ஒத்துக்கொள்ளலாம். அதை விட்டு, இராணுவம், போக்குவரத்து, அந்நியச் செலாவணி போன்றவைகள் மட்டும் இருந்தால் போதும் என்று சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசிற்கு அதிகாரம் இல்லாமல் போனால் எப்படி நாட்டைச் சரிவர ஆள முடியும்? இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று கேட்கலாமே தவிர, மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கின்ற அந்தக் கொள்கையை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி விடை பெறுகிறேன்.

**திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற, தமிழகத்தின் வரலாற்றில் சிறப்பு மிக்க மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும் வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன்.

முதலில் இந்தத் தீர்மானம் இந்தியாவிலுள்ள 56 கோடி மக்களுக்கும் நல் வாழ்வளிக்கின்ற சிறந்த ஒரு அரசியல் சாஸனமாகும். கட்சிக் கட்டுப்பாடின்றி, இந்தியாவிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை இந்தத் தீர்மானத்தின் பேரில் தெரிவிக்கலாம் என்ற நிலையை அரசியல் கட்சிகள் உருவாக்கினால், ஆதிக்க எண்ணம் உள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் ஏகமனதாக இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற பல எதிர்க் கட்சி நண்பர்கள், அடிக்கடி பிரிவினை என்ற ஒரு வாதத்தையே இந்தத் தீர்மானத்தின் மீது கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு கொடுத்த அறிக்கை

யில் எந்த இடத்திலாவது பிரிவினை என்ற சொற்றொடர் அல்லது பிரிந்து போகின்ற நிலையில் அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருப்பதாக யாரும் இங்கே பேசியதாக என்னைப் பொறுத்தவரையில் கருத வில்லை. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் பிரிவினை நோக்கத்தில் இருந்தது, அதையே அவர்கள் இப்போதும் கேட்கிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதே தவிர, முழுமையாக அவர்கள் படித்து விட்டு, "நீங்கள் இந்த இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று சொல்லுகிறீர்கள், அவைகளை எல்லாம் திருத்த வேண்டிய அவசியமில்லை, அதே சமயத்தில் இந்த இந்த விதிகளைத் திருத்தலாம்" என்று சொல்லியிருந்தால், உள்ளபடியே அவர்கள் சொல்லுவதில் பொருள் இருக்கிறதாகக் கருதி, நாமும் அது தேவையில்லை என்று சொல்லி அவைகளை மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அப்படிப்பட்ட நிலை இல்லாமல் 'பொத்தாம் பொதுவில்' பிரிவினை வாதம் என்ற முறையில் சொல்லி, அதற்கு முஜிபூர் ரஹ்மானையும் துணைக்கு இழுத்து வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். முஜிபூர் ரஹ்மான் அப்படி ஒன்றும் பாவமான காரியத்தைச் செய்யவில்லை. 7½ கோடி கிழக்கு வங்க மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டுமென்று பாகிஸ்தானிடம் கோரிக்கை வைத்து, அந்தக் கோரிக்கையை பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் மறுத்த காரணத்தால், அந்த நாட்டையே பிரிக்க வேண்டுமென்ற போராட்டத்தில் அந்த மக்கள் இறங்கினார்கள். முஜிபூர் ரஹ்மான் ஏதோ தேசத்திற்குத் துரோகம் செய்து விட்டது போல பல நண்பர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி முஜிபூர் ரஹ்மான் பெயரைப் பயன்படுத்தக்கூடாது என்றால், லெனின், ஸ்டாலின், மார்க்ஸ் போன்றவர்களின் பெயரையும் கூடப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆகவே பேசுகின்ற எதிர்க் கட்சி நண்பர்கள் இன்ன இன்ன வகையில் பிரிவினை வாதம் இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தால், நிச்சயமாக அதற்கு நாம் செவிசாய்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

(பிற்பகல் 4.30)

அடுத்து, நமது எதிர்க் கட்சித் தலைவர்கள் மாநில முதலமைச்சர்கள் எல்லாம் கூடிப்பேசினால் போதும் என்று ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். இந்திய நாட்டிலே உள்ள அனைத்து முதலமைச்சர்களும் கூடிப் பேசவேண்டுமானாலும், எந்தெந்த சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று கூடிப்பேசுவதற்கு ஒரு அடிப்படைக் கருத்து தேவை. அந்த அடிப்படையைத் தான், இராஜமன்னார் குழுவின் அறிக்கையைப் பார்த்து, அரசியல் சட்டத்திலே இதை இதைத் திருத்தலாம் என்று ஒரு சில கருத்துக்களை உருவாக்கிக்

கொடுத்திருக்கின்றார்கள். நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நிச்சயமாக இந்தத் தீர்மானத்தை உடனடியாக மத்திய அரசு கவனிக்கும் என்று, என்னைப் பொறுத்த வரையில் கருதவில்லை. காரணம் இப்போது மத்தியிலே ஆட்சியிலுள்ள காங்கிரஸ் கட்சியும் சரி, இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் கட்சியும் சரி, கடந்த காலத்திலே பிரச்சினைகளை அணுகியபோது, நாட்டிலே எந்த ஒரு பகுதியிலும் மக்கள் ஏதாவது கோரிக்கையைக் கொடுத்தால், அதை எப்போதும் அலட்சியப்படுத்தும் சுபாவம் இருந்து வந்திருக்கின்ற காரணத்தினாலே தான், இப்போது இந்தப் பிரச்சினையையும் அவர்கள் முறையாகப் பரிசீலிப்பார்கள் என்று நான் கருதவில்லை என்றேன்.

இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே முஸ்லீம்களுடைய சமூக நீதிக்கான போராட்டத்தை அவர்கள் ஆதரித்து உருவான ஏற்பாட்டைச் செய்திருந்தால், இந்தியாவை 1947-லே இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால் அன்றைக்கு முஸ்லீம் பெருமக்களுடைய சமூக நீதிப் பிரச்சினையை அவர்கள் அடியோடு அலட்சியப்படுத்திவிட்ட காரணத்தினாலேயே, பாகிஸ்தான் என்று பிரிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதைப் போலவே மொழிவழி அடிப்படையிலே மாநிலங்கள் பிரிய வேண்டும் என்று போராடிய காலத்திலே முதலிலே அவர்கள் அதை அலட்சியப்படுத்தினார்கள். பிறகு ஆந்திரத்திலே பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து இறந்தபிறகு, அதன் விளைவாக ஏற்பட்ட போராட்டங்கள், கலவரங்கள் இவற்றுக்குப் பிறகுதான் அதற்கும் மத்திய அரசு இணங்கி வந்தது. ஆக இந்திய காங்கிரஸின் ஆட்சிக் காலத்திலே மக்கள் குரலை மதிக்கும் சுபாவம் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு இதுவரையில் ஏற்பட்டதில்லை. இனி ஏற்படுமா என்பதைப்பற்றியும் நம்மைப் பொறுத்த வரையில் சந்தேகப்பட வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

இப்படி ஒரு மிக முக்கியமான, அவசியமான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான விளக்கங்களை மிக அழகாக நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் இரண்டு மணி நேரத்திற்கு மேலே எடுத்துரைத்தார்கள். அவற்றில் இரண்டொரு கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு பேச விரும்புகிறேன்.

நமது நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, மத்திய அரசானது மாநிலங்களிடமிருந்து வந்த நெடுஞ்சாலைகளையெல்லாம் 'தேசிய நெடுஞ்சாலைகள்' என்று நடிமென்று எடுத்துக்கொண்டுவிட்டார்கள். இந்தச் சாலைகளைப் போட்டது

மத்திய அரசு அல்ல. பண்டைய தமிழ் மன்னர்கள் போட்ட நெடுஞ்சாலைகளையெல்லாம் திடீரென்று எடுத்துக்கொண்டு அவை தேசிய நெடுஞ்சாலைகள் என்று சொல்லிவிட்டார்கள். சாலைகளிலே என்ன தேசியம் இருக்கின்றதோ தெரியவில்லை. இமயமுதல் குமரி வரையிலுள்ள சாலைகளின் பராமரிப்பு இராணுவ நோக்கங்களுக்காக இந்திய அரசிடமே இருக்க வேண்டுமென்று சொல்லி எடுத்துக்கொண்டிருந்தால்கூட, பரவாயில்லை. அப்படி எடுத்துக்கொண்டு, அவை மாநில அரசுகளாலேயே பராமரிக்கப்படட்டும். அதற்காக ஆண்டொன்றுக்கு இவ்வளவு மானியம் என்று கொடுக்கிறோம், அதை வைத்துக்கொண்டு சாலைகளை ஒழுங்காகப் பராமரித்துக்கொண்டு வரவேண்டும் என்று சொல்லியிருந்தால், வரவேற்றிருக்கலாம். இப்படி தேசிய நெடுஞ்சாலைகள் என்று ஏற்பட்ட காரணத்தினால் வந்துள்ள பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல. கிருஷ்ணகிரியில் குடிநீர்க் குழாய்களைப் போடுவதில் ஏற்பட்ட சங்கடங்களை முதலமைச்சர் அவர்கள் நன்றாக எடுத்துரைத்தார்கள். கோவையிலே நகரசபையிலே பல இடங்களிலே இந்த தேசிய நெடுஞ்சாலைகள் குறுக்கிடுகின்றன. அங்கேயெல்லாம் குடிநீர்க் குழாய்களைப் போடும் நேரத்திலே எது ஒன்றுக்கும் சம்பந்தப்பட்ட மத்திய அரசு அதிகாரிகளிடம்தான் அனுமதி வாங்கி, குழாய்களை அமைப்பதற்கான பள்ளங்களைத் தோண்டவேண்டியிருக்கின்றது. இப்படி சாலையிலே தேசியம் என்பதை இந்திய நாட்டிலேதான் பார்க்கிறோம். வேறு எந்த நாட்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத் தலைவரவர்களே, நகராட்சியிலே ஒரு குழாய் போட வேண்டுமென்றால்கூட, மாநில அரசைக் கேட்டுத்தான் போட வேண்டியிருக்கிறது. அதற்குக்கூட நகராட்சிக்கு அதிகாரம் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: பல நேரங்களிலே நகராட்சி உறுப்பினர்கள் தங்கள் தங்கள் வீட்டிற்கு முன்பு குழாய்களைப் போட வேண்டுமென்று முன்பெல்லாம் கேட்கும் ஒரு நிலை இருந்த காரணத்தினால்தான், அந்த அதிகாரத்தை மாநில அரசு கட்டுப்படுத்தியிருக்கின்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவரவர்களே, அது மட்டுமில்லை. அமைக்கப்பட்டுள்ள உயர்நிலை நீர் தொட்டிகளின் அளவைக் கணக்கிலெடுத்துக் கொண்டும், கிடைக்கும் நீரின் அளவைக் கொண்டும், அந்தத் திட்டம் எவ்வளவு குழாய்களைத் தாங்கும் என்ற கணக்கு அரசிடம்தான் இருக்கின்றது. இந்த அதிகாரத்தை நகராட்சியிடம் கொடுத்துவிட்டால், 2 ஆயிரம் குழாய்களைப் போட வேண்டிய இடத்திலே ஐயாயிரம் குழாய்களைப் போட்டு



விட்டால் தண்ணீர் வராது போய்விடும். நகராட்சிக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கக்கூடாது என்று இல்லை. நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்பினால், கூடுதலாக அதை அதிகரிப்பதற்கு அரசு ஆவன செய்துகொண்டுதான் இருக்கின்றது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதைப் போல மத்திய அரசு எவ்வளவோ கோடி ரூபாயைக் கொடுக்கின்றார்கள் சாலைகள் போட வேண்டுமென்று . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கும் இதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலைகளுக்கு என்று அதற்கான நிதியை ஒதுக்கி மாநில அரசிடம் கொடுத்து அதை மாநில அரசே கவனித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டால் பரவாயில்லை. ஆனால் அப்படிச் செய்வதில்லை. முதலிலே ஒரு வில்லைக் கொடுக்கின்றார்கள், பிறகு அதிலே ப்ரியாரிடி என்று ஒன்றைக் கொடுக்கின்றார்கள். அடுத்து பணத்தைக் கொடுக்கும் நேரத்திலே வில்லையோ, ப்ரியாரிட்டியையோ மாற்றிவிடுகின்றார்கள். பிறகு நாம் மீண்டும் அதற்கான விவரங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் டெல்லியை அணுகித்தான் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது. பணத்தைக் கொடுத்து, இதைக் கவனித்துக்கொள் என்று சொல்லிவிட்டால் பரவாயில்லை. இதைத்தான் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இதைப் போல நகராட்சியைப் பொறுத்த வரையிலும் கூட, அரை கிராண்டு கொடுப்பதிலும் மாநில அரசு இதே முறையைத்தான் பின்பற்றுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, மாநில அரசு, மத்திய அரசு இவற்றுக்கு இடையே உள்ள உறவுமுறைகளைப்பற்றிப் பேசும் போது அதை நகராட்சி மன்றங்களோடு ஒப்பிட்டுப் பேசுவது அரசியல் சட்டப்படி நியாயமாகாது. நகராட்சி என்பது மாநில அரசின் படைப்பு. ஆனால் மத்தியிலுள்ள பார்லிமெண்டு அமைப்பு முறை, மாநிலங்களிலே உள்ள சட்ட மன்றங்கள் போன்ற அமைப்புகள் அனைத்தும் இந்திய அரசியல் சட்டத்தின் நேரடிப் படைப்பு. மத்திய அரசு மாநில அரசை உருவாக்கவில்லை. அரசியல் சட்டப்படிதான் மத்திய அரசும் மாநில அரசுகளும் இயங்கி வருகின்றன. அந்த அடிப்படையிலேதான் அவற்றுக்கிடையே உள்ள உறவு முறைகள், அவற்றுக்குள்ள அதிகாரங்கள்பற்றி விவாதம் செய்கிறோம். இதிலே மாநகராட்சி, நகராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் இவைகள் அனைத்தும்

சட்டமன்றங்கள் நிறைவேற்றும் தீர்மானங்களுக்கு, சட்டங்களுக்கு உட்பட்டவை. எனவே அதையும் இதையும் ஒருங்கிணைத்துப் பேசுவது சரியில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: அடுத்து, இன்றைக்கு விழித்தெழுந்தால் மக்கள் எங்களைத் தான் கேட்கின்றார்கள், விலைவாசிபற்றியும் மற்ற பிரச்சினைகள் பற்றியும் அவர்களுக்கும் நாம் பதில் சொல்லவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். திடீரென்று கடந்த ஒரு மாத காலமாக புஞ்சை தானியங்களின் விலை அரசாங்கம் நிர்ணயம் செய்துள்ள விலைக்கு மேலே 100 சதவிகித அளவிற்கு உயர்ந்துவிட்டது. காரணம் கடந்த ஏழாண்டு காலமாக புஞ்சை தானியங்களின் விலையை அரசு ஒரு அளவிற்குக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. ஆனால் திடீரென்று இப்போது மத்திய அரசு அவற்றின்மீது இருந்து வந்த கட்டுப்பாட்டை எடுத்துவிட்ட காரணத்தினால், அவை பல வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இப்போது கிராமப் பகுதிகளிலே புஞ்சை தானியமே இல்லாமல் அவர்களும் அதிக விலையைக் கொடுத்து அரிசியை உபயோகிக்கும் அளவிற்கு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள், அரிசியின் விலையும் இதனால் உயர்ந்துகொண்டே போவதைப் பார்க்கிறோம். இந்தக் கட்டுப்பாட்டை நீக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. மாநில அரசிடம் அவர்கள் கேட்டிருக்கலாம். "இவ்வளவு தானியத்தை மத்திய அரசுக்குக் கொடுத்து விடுங்கள். மிச்சமுள்ளதை நீங்கள் கட்டுப்பாடோடு விநியோகப்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சொல்லியிருக்கலாம். கிராமப் பகுதி மக்களைச் சந்திக்கும்போது, இந்த இந்தக் காரணத்தினால்தான் புஞ்சை தானியத்தின் விலை ஏறிவிட்டது என்று அவர்களுக்கு எங்களால் எடுத்துச்சொல்ல முடியவில்லை. நீங்கள் ஏன் கட்டுப்பாடு செய்யக்கூடாது என்று எங்களைத் திருப்பித் திருப்பிக் கேட்கின்றார்கள். இந்த இந்தக் காரணத்தினால்தான் ஏறிவிட்டது என்று சொன்னால், அவர்கள் ஒப்புக் கொள்ளுவதில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு குறிப்பாக எதிர்க் கட்சியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வருகின்றதோ இல்லையோ எனக்குத் தெரியாது. எங்களிடத்தில் மக்கள் பல பிரச்சினைகளைக் கொண்டு வருகின்றார்கள். மண்ணெண்ணெய் விலை ஏறி விட்டதே, மண்ணெண்ணெய் கிடைக்காமல் இருக்கின்றதே, விலைவாசி ஏறி விட்டதே என்று பல பிரச்சினைகளைக் கொண்டுவரும்போது, அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். அவர்களிடம் நமக்கு முழுமையான அதிகாரங்கள், போதிய அதிகாரங்கள் இல்லை என்று சொன்னால், அவர்கள் அதைச் சுலபமாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை. மாநில அரசையே அவர்கள் எதற்கும் குறை கூறுகின்றார்கள். விலை ஏறிவிட்டதே,



கடலை எண்ணெய் விலை ஏறிவிட்டதே—அவர்களுக்கே சில நேரங்களிலே புரிகின்றது. மத்திய அரசின் கொள்கைத் தவறுகள் காரணமாக இப்படியெல்லாம் ஏற்படுகிறது என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவர்கள

(பிற்பகல் 4.40)

விடுவதில்லை. அரசாங்கத்தைத் திட்டினால்கூட பரவாயில்லை, நாம் பொறுத்துக் கொள்ளலாம். எதற்கெடுத்தாலும் கருணாநிதி ஆட்சியில் கெடுத்து விட்டார்கள், கருணாநிதி ஆட்சியில் தான் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, கருணாநிதி ஆட்சியில்தான் சிமெண்ட் கிடைக்கவில்லை என்று கூறிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இந்தக் கஷ்டங்களையெல்லாம் நாங்கள் 25 ஆண்டுக் காலம் தாங்கிக்கொண்டிருந்தோம். இப்பொழுது நீங்கள் கொஞ்ச காலத்திற்குத் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, நாம் இரண்டு பேரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறோம். அது காமராஜர் அவர்களாக இருந்தாலும், அல்லது கருணாநிதி அவர்களாக இருந்தாலும், மாநில அரசு பொறுப்பல்ல என்று தான் சொல்லப்படுகின்றது.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, எந்தக் குறைபாடு ஏற்பட்டாலும், பொது மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருப்பவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களாகத்தான் இருக்கிறார்கள்.

அதை விட இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்கள் அந்த நிலைமைக்கு வரவில்லை, வரமாட்டார்கள். குஜராத் மாநிலத்திலும், பீஹார் மாநிலத்திலும் உணவுக் கலவரங்கள் ஏற்பட்டபோது, பொதுமக்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் வீடுகளுக்கு முன்னே தான் அந்தப் போராட்டங்களை நடத்தினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பவர்கள் இந்தியாவில் இருக்கின்றார்கள் என்ற எண்ணமே மக்களுக்கு ஏற்படுவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளுக்குச் சட்ட மன்ற உறுப்பினர்கள்தான் பதில் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருந்து வருகிறார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய பொறுப்பு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்தத் தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிறகு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏதோ அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் மாநில சுயாட்சிப் பிரசாரம் நடைபெறுகிறது என்று கூறி மக்களைத் தவறான வழியில் திசை திருப்பிக்கொண்டு செல்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய இரஷ்ய நாட்டில் நடைபெற்று வருகின்ற முறைகளை நேற்றையதினம் பேசிய நண்பர் திரு. ஏ. கே. வில்லவம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். குருச்சேவ் அவர்கள் இரஷ்யக் குடியரசு எவ்வாறு இயங்க வேண்டுமென்பதை விளக்கியிருக்கிறார்கள். அதிலே சிறப்பான அம்சங்கள் பல உள்ளன என்றாலும், முக்கியமாக அங்கு இரண்டு மாநிலங்கள் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கின்றன என்பதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும். யுக்ரேன், உஸ்பெக்கிஸ்டான் ஆகிய இரண்டு மாநிலங்களும், இரஷ்ய நாட்டினுள் இருந்தாலும் கூட, அவைகள் எல்லாம் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கின்றன. அப்படிப்பட்ட உரிமையைக் கூட நாம் கேட்கவில்லை.

அடுத்து, மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழிக்கு இருந்த மரியாதைகூட, இன்றையதினம் சுதந்திர நாட்டில் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சல்லி காசிலிருந்து ரூபாய் வரையில், எல்லா நாணயங்களிலும், தமிழ் எழுத்திலும் போட்டிருந்தார்கள். இன்றையதினம் எந்த நாணயத்திலும், நோட்டுகளைத் தவிர தமிழ் எழுத்துக்களில் போடப்படவில்லை என்பதைப் பார்க்கிறோம். அதைப் போலவேதான் மணியார்டர் மனுக்களிலும் போடப்படவில்லை என்பதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 15 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் :** அதைப் போலவே பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், ரயில்வேக்களை நடத்திக் கொள்வதற்கு ஜில்லா போர்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. கோயம்புத்தூருக்கும் பொள்ளாச்சிக்குமிடையே உள்ள ரயில்வே அந்தக் காலத்தில் ஜில்லா போர்டால் நடத்தப்பட்டு வந்துள்ளது. இன்றையதினம் அவற்றில் நமக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. புதிய ஒரு ரயில்பாதை போடவேண்டுமானால், நாம் தீர்மானம் போட்டு மத்திய சர்க்காரிடம் இருக்கின்ற ரயில்வே போர்டுக்குத்தான் அனுப்பி வைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு அங்குல ரயில் பாதையைக் கூட நடத்துவதற்கு அதிகாரமற்ற நிலைமையில் மாநில அரசாங்கங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆகவே, நம்முடைய மாநில அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து, இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



மத்திய அரசாங்கம் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தையும், இந்த அவையில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானத்தையும் நல்ல முறையில் பரிசீலித்து, நல்ல முடிவை எடுக்கும் என்று நம்புகிறேன். அப்படி நல்ல முடிவுக்கு வராவிட்டால், மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு. வீரேந்திர பாடீல் கூறியுள்ள இந்தக் கருத்தை நினைவூட்ட விரும்புகிறேன். 'நிலைமை இப்படியே நீடித்தால், டெல்லியிலே இருக்கின்ற மாநிலங்களின் விருந்தினர் மாளிகைகள், தூதுவரகங்களாக மாறும் கட்டத்திற்கு ஆளாகும்'. இந்த வாசகத்தை மத்திய அரசுக்கு நினைவுபடுத்தி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, என் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும், கீழ்க்கண்ட திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன் :—

"அரசின் தீர்மானத்தின் 3-வது பத்திக்குப் பதிலாகக் கீழ்க்கண்ட பத்தியை இணைத்துக் கொள்ளவும் :—

'அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பின், இன்று வரை ஏற்பட்டுள்ள அனுபவங்களை மனத்திற் கொண்டு, மாநிலங்களுக்கு அவைகள் செயல்படும் முறையில் ஏற்பட்டுள்ள குறைகள், சிக்கல்கள் என்னென்னவென்று ஆய்ந்து, மாநிலங்கள் மேலும் செம்மையாகவும், திறமையாகவும் செயல்பட, இப்போதிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கட்டுக்கோப்பிற்குள், அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தாமலேயே என்ன மாறுதல் தேவையென்றும் அவ்வாறு செய்ய முடியாவிட்டால், எந்த அளவிற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று முடிவு செய்யவும், இதற்கென முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று மத்திய அரசுக்கு இவ்வவை பரிந்துரை செய்கிறது".

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் இதை வழி மொழிகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவரவர்களே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பேரவையில் நடைபெற்ற விவாதத்தில், ஸ்தாபன காங்கிரஸின் சார்பாக, அரசியல் சட்டத் திருத்தமே தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர் இங்கு கொடுத்திருக்கின்ற திருத்தம், அந்தக் கட்சி சார்புடையதா என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் பேசும் போது அதைப்பற்றி விளக்குகிறேன். நான் கொடுத்திருக்கும் திருத்தம் நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, மாநில சுயாட்சியை வற்புறுத்தக்கூடிய ஒரு தீர்மானத்தை நமது அருமை முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் பிரேரேபித்திருக்கிறார். அந்தத் தீர்மானத்திற்கு முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக முழு ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் இந்தத் தேசத்திலே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மான மாகும். தேச சரித்திரத்தையே ஒரு பெரிய அளவில் மாற்றியமைக்கக் கூடிய தீர்மானம். இந்தத் தீர்மானம் பேரவையில் விவாதிக்கப்பட்ட நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையவும், அதனுடைய தோழமைக் கட்சியினுடையவும் ஆதரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்க் கட்சிகளில் ஒரு எதிர்க் கட்சியாவது ஆதரவு கொடுக்கும் என்று நான் எதிர்ப்பார்த்தேன். அந்த அளவுக்குப் பரந்த நோக்குகொண்ட எதிர்க் கட்சிகள் இந்தத் தேசத்தில் இல்லை என்பதை அறிந்து நான் ஏமாற்றம் அடைந்தேன்.

நேற்று இங்கே பேசிய அருமை நண்பர் திரு. ராம சுப்பய்யா அவர்கள் மாநில சுயாட்சி என்றால் பிரிவினை இல்லை, அதிக அதிகாரங்கள் கோருவது தான் என்று எடுத்துச் சொன்னார்கள். எத்தனை முறைகள், எத்தனை கோணங்களில் விளக்கினாலும் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்களே என்று வியப்பு தெரிவித்து மேலும் பேசினார்கள். நாம் தலைகீழாக நின்று விளக்கங்கள் சொன்னாலும், அவர்களுக்குப் புரியாது. புரியாது என்பதல்ல, அவர்களுக்குப் புரிந்துகொள்ள விருப்பமில்லை. தூங்குகின்றவர்களை எழுப் பலாம், ஆனால் தூங்குவது போன்று பாசாங்கு செய்கின்றவர்களை எழுப்ப முடியாது. அவர்களுக்குப் புரிந்துகொள்ள மனமில்லை என்று தான் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது பிரிவினைக் கோரிக்கை அல்ல, அதிக அதிகாரங்கள் கோருவதுதான் என்று விளக்கப்பட்டுவிட்டது. மாநில சுயாட்சி என்றால், நாங்கள் பயப்படவில்லை என்று உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத் தலைவரவர்களே, பிரி வினைக்குத் தூபம் போடுவதாக இருக்கிறது என்றுதான் சொன்னேன்.





(பிற்பகல் 4.50)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாநில சுயாட்சி என்றால், நாங்கள் பயப் படவில்லை என்று சொன்னார்கள். அந்த வார்த்தையைப் பார்த்தால் சங்கட மாகயிருக்கிறது, அந்த வார்த்தையைப் பார்த்தால், அவருக்கு அலர்ஜியாக இருக்கிறது என்று நம்முடைய நண்பர் திரு. பக்கர் அவர்கள் சொன்னார்கள். மாநில சுயாட்சி என்பது பயப்பட வேண்டிய வார்த்தையும் அல்ல, அலர்ஜி உண்டாக்கக்கூடிய வார்த்தையுமல்ல. மத்திய அரசுக்குட்பட்ட வகையில், அதிக அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி என்று கூறுவதை விட பொருத்த மான வார்த்தையே கிடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவு நல்ல வார்த்தை, பொருத்தமான வார்த்தை என்பதை நான் சொல்ல விரும்பு கிறேன். இந்த வார்த்தைக்குப் பதிலாக தேசிய சுயாட்சி என்ற கோரிக்கை வந்து, அதை ஆட்சேபித்தால் அர்த்தம் இருக்கும். தமிழக சுயாட்சி என்ற கோரிக்கை இருந்தால், அந்த வார்த்தையை உபயோகப்படுத்தியிருந்தால் அதை எதிர்ப்பதில் அர்த்தம் இருக்கும். வார்த்தைகளைக் கொண்டு, பெயர்களைக் கொண்டு எதிர்ப்பு தெரிவிப்பது பொருத்தமற்றது. ஷேக்ஸ்பியர் சொல்கிறார்.

"Call a rose by any name, it will only smell sweet."

ரோஜா மலரை எந்தப் பெயரில் அழைத்தாலும் மணக்கும். சாக்கடை என்று அழைத்து விடுங்கள். அப்போதும் அதன் இனிமையான நறுமணம் மாறிவிடாது. ஆகவே வார்த்தைகளைக் கொண்டு விளையாட வேண்டாம். இதிலுள்ள கருத்துக்களைக் கொண்டு இதை அணுக வேண்டும் என்பதைத் தான் நான் சொல்லிக்கொள்ளுகிறேன். இதில் அலர்ஜி கொள்ளவேண்டிய அவசியமில்லை. மற்றொன்றைச் சொன்னார்கள். "மாநில சுயாட்சி எல்லா மாநிலங்களிலும் வேண்டுமென்கிறார்களா? தமிழகத்தில் மட்டும்தானே கேட்கிறீர்கள். ஏனைய மாநிலங்கள் இதற்கு ஆதரவினைக் கொடுக்கவில்லை" என்ற கருத்தினைச் சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக இந்தியாவினுடைய படத்தைப் பார்த்தால், அத்தனை மாநிலங்களும் அம்மையாருக்குக் கட்டுப் பட்டிருக்கின்றன. தமிழகம் ஒன்று தான் எதிர்க் கட்சி ஆட்சியில் இருக்கக்கூடிய மாநிலம், எதிர்க் கட்சி ஆட்சி நடத்தும் மாநிலம். மற்ற மாநிலங் களில் கட்சிக் கட்டுப்பாடு என்ற காரணத்தால் அவர்கள் பேசக் கூடிய வாய்ப்பு இல்லை, துணிச்சல் இல்லை. ஆக அம்மையார் அவர்கள் இந்த மாநிலத்தையும் இன்றைக்கு தன்னாட்சிக்குள் கொண்டுவர வேண்டுமென்பது போல பூனை எலியைக் காண்பதைப்போல, இந்த மாநிலத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூனைக்கு யாராவது மணியைக் கட்டித் தான் ஆக வேண்டும். மணியைக் கட்டுவது இலேசில்லை. உயிரைப் பணயம் வைத்து இந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். அப்படிப்பட்ட நல்ல

முயற்சியை எடுத்துக்கொண்ட முதல்வர் அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்தக் கோரிக்கையை எல்லா மாநிலங்களும் ஆதரிக்கின்றன. ஆனால் கட்சிக் கட்டுப்பாடு காரணமாக வெளிப்படையாக அவர்கள் சொல்ல முன்வரவில்லை. இன்னும் நாம் சென்றால், பல மாநிலங்கள் நம் பின்னால் வரும். இதை நான் நிச்சயமாக உணர்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முஸ்லிம் லீக்கைப் பொறுத்த மட்டில், முன்பு நாட்டைப் பிரிவினை செய்தவர்கள் என்ற குற்றச் சாட்டு எங்கள் மீது சுமத்தப்படுகிறது. இந்த மாநில சுயாட்சி என்ற தீர்மானத்தை ஆதரிக்கும்போது, இதிலே பிரிவினை நோக்கம் இல்லை. அதிக அதிகாரம் வேண்டுமென்பதை நிச்சயமாக நாங்கள் தெரிந்துகொண்டு மனப்பூர்வமாக இதற்கு முழு ஆதரவைக் கொடுக்க முன்வந்திருக்கிறோம். முன்பு பேசிய எனது நண்பர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் முஸ்லிம் லீகர்கள் பிரிவினை கேட்கவில்லை, அதிகச் சலுகைகளைக் கேட்டார்கள் என்றார்கள். நான் சொல்வேன், அப்படிச் சலுகைகள் கிடைத்திருந்தால், நாடு பிரிந்தே இருக்காது. "Hero of the Pakistan Party Is Jinnah" என்பது அகில உலகம் அறிந்த உண்மை. ஆனால் ஆதியிலே பிரிவினையை எதிர்த்தவர் ஜின்னா சாயபு அவர்கள். பிரிவினை என்ற யோசனையை உருவாக்கிய ஒரு மேதை அல்லா-மெய்-அக்பால் என்ற கவிஞர் அவார்கள். ஜின்னா சாய்பு அவர்களிடத்தில் அந்த யோசனைபற்றிக் கேட்கப்பட்டபோது, அவர் இது ஒரு கவிஞருடைய கற்பனைக் கனவு என்று சொன்னார். நடைமுறையில் சாத்தியமில்லை என்று மறுத்து விட்டார்கள். ஆனால் நம்முடைய தேசியத் தலைவர்களுடைய பாத்த மனப்பான்மையிலும், அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்காத ஒரு நிலை உருவாகியதன் காரணமாக பிரிவினையைத் தவிர்த்து வேறு வழியில்லை என்று பிரிவினை கேட்கக் கூடிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள், ஜின்னா சாயபு அவர்கள். தாங்கள் விரும்பாமலும் பிரிவினையை ஆதரிக்கும் நிலைக்கு, நிர்ப்பந்தத்திற்கு உள்ளானவர்கள் முஸ்லிம் லீகர்கள். இந்தக் கருத்தை நான் மட்டும் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். முஸ்லிம் லீகர்கள் பிரிவினைக்கு காரணஸ்தர்கள் அல்ல, காங்கிரஸ்காரர்கள் தான் என்பதை "India Wins Freedom" என்ற புத்தகத்தில் அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம்: நம் காலத்தில் நடந்த சரித்திரத்திற்கு மாறுபட்ட ஒரு பேச்சைச் சொல்லி, நாடு பிரிவதற்கு காங்கிரஸ்காரர்கள் தான் பொறுப்பு என்ற ஒரு பெரிய குற்றச்சாட்டை முஸ்லீம் லீக் தமிழ் நாட்டுத் தலைவர் அவர்கள் சொல்வது நான் ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று. இது வருந்தத்தக்க பேச்சு என்று குறிப்பிடுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: நான் சான்றுடன் சொல்கிறேன். " India Wins Freedom " என்ற புத்தகத்தில் அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் சொல்கிறார்கள். இது என் சொந்தக் கருத்து அல்ல. எடுத்துப் படித்துப் பாருங்கள். நான் சொல்வது உண்மை என்பது புரியும். உங்களுக்குத் தெளிவாக இன்னொன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் சில கோரிக்கைகளைத் தான் வைத்தோம். பிரிவினை கேட்கவில்லை. அந்தக் கோரிக்கைக்குப் பெயர் " 14 points of Jinnah " என்பார்கள். அந்த 14 பாயிண்டுகளில் சில பாயிண்டுகளை ஒத்துக்கொண்டிருந்தால், இன்றைக்கு சிந்து மாநிலம் பாகிஸ்தானில் இருந்திருக்காது, இந்தியாவில் இருந்திருக்கும். பலுஜிஸ்தான் பாகிஸ்தானில் இருந்திருக்காது. பாகிஸ்தானே இருந்திருக்காது. இந்தியா ஒரு நாடாக இருந்திருக்கும்.

திரு. கே. ராஜாராம்: அந்த 14 கோரிக்கைகளில் அடிப்படையான கோரிக்கை தனித் தொகுதி என்பதாகும். தனித் தொகுதி கொடுத்து, முஸ்லீம்கள் மட்டும் ஓட்டுப் போட்டு முஸ்லீம்கள் சட்டசபைக்குச் செல்ல வேண்டும், பார்லிமெண்டுக்குச் செல்லவேண்டும் என்ற கோரிக்கைதான் அடிப்படையான கோரிக்கை. பெரிய மாறுபட்ட அபிப்பிராயத்தை இந்தியாவிலே உண்டு பண்ணியது இந்தக் கோரிக்கைதான் என்பதை நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தனித் தொகுதிக் கோரிக்கையை மட்டும் அவர்கள் விட்டிருந்தால், காங்கிரஸ் காரர்கள் மற்ற எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்திருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தனித் தொகுதி தீங்கான கோரிக்கையா? நாடு பிரிந்து போவதைவிட தீங்கான கோரிக்கையா? இது நீங்கள் செய்த முடிவு. பிரிந்து போக அனுமதித்து விட்டீர்கள். இதனால் இந்தப் பொறுப்பு உங்களைச் சாருமே தவிர எங்களைச் சாராது.

திரு. கே. ராஜாராம்: கட்டுச் சோற்றில் எலியை வைத்துக் கட்டிக் கொண்டு போவது போல் வருஷமெல்லாம் கஷ்டப்படுவதை விட பிரிந்து போவது நலம் என்று தான் பிரித்து விட்டார்கள்.

[1974 ஏப்ரல் 26

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு இந்தியாவிற்கு வந்து அது சில கருத்துக்களைச் சொன்னது. பாகிஸ்தான் பிரிவினையை ஜின்னா அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருந்த நேரத்தில், பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு தந்த கருத்து மாநில சுயாட்சி என்பதாகும். அந்த மாநில சுயாட்சியை அப்போது பண்டித நேரு அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். வல்லபாய் பட்டேல் அவர்கள் தயங்கி ஏற்றுக்கொண்டார்கள். உத்தமர் காந்தி அடிகள் ஏற்றுக் கொண்டார்கள். காங்கிரஸ் கமிட்டி ஏற்றுக்கொண்டது. ஆனால் அரசியல் நிர்ணய சபையிலே இதுபற்றி வேறு முடிவு எடுக்கப்படும் என்ற பொருள் தொனிக்கும்படி பண்டித நேரு அவர்கள் வேறு ஒரு கருத்தை பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் எடுத்து வைத்த பிறகு தான், மீண்டும் மாநில சுயாட்சி கிடைக்காது என்ற காரணத்தினால், ஜின்னா அவர்கள் பிரிவினையை வலியுறுத்தினார் என்பதை அபுல் கலாம் ஆஸாத் அவர்கள், அப்துல் வகாப் அவர்கள் குறிப்பிட்ட 'இந்திய விடுதலை' என்ற புத்தகத்தில் ஆணித்தரமாக வாதித்திருக்கிறார்கள். அதைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவரவர்களே, நமது முதல்வரவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இது முழுக்க முழுக்க உண்மை. இதை இன்னும் விளக்கமாக நான் சொல்ல வேண்டுமானால், சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இரண்டு சாராரும் அவர் சொன்ன மாநில சுயாட்சி என்பதை ஏற்றுக்கொண்டார்கள். வேறுபட்ட, இந்தியா, பாகிஸ்தான் என்பது இல்லை. மாநில சுயாட்சி. இந்தியாவிற்கு உட்பட்ட மாநிலங்கள் என்ற ஒரு ஃபார்முலாவை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். ஆக, சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் ஒரு சுமுகமான ஏற்பாடு செய்தார்கள். இப்படி ஏற்பட்டு, அவர்கள் ஒப்புக்கொண்டு மறுபடி நேரு அவர்கள் அரசியல் நிர்ணயசபை இதை அங்கீகரித்தாலும் அங்கீகரிக்கலாம், இல்லாவிட்டால் மாற்றிச் செய்யுமென்று சொன்ன காரணத்தினால் தான், இதை ஜின்னா சாயபு அவர்கள் மறுக்க முற்பட்டார்கள் என்பதை விளக்க முற்படுகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** அரசியல் நிர்ணயசபை அமைத்து சட்டம் நிறைவேறியது சுதந்திரம் கிடைத்த பிற்பாடு தான். அது 1947-க்குப் பின்னால் என்பதை மறந்துவிடக் கூடாது. 1950-ல் சட்டம் நிறைவேறியது. 1947 ஆகஸ்டில் பிரிவினை என்ற முடிவு வந்து விட்டது. அதற்கு முன்னாலேயே பிரிவினைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டார்கள். தேதிகளை மறந்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அரசியல் வரலாற்றில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது ஜனாப் ஜின்னா அவர்களும், பண்டித நேரு அவர்களும் மாநில சுயாட்சி அடிப்படையில் சுதந்திரம் என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால், காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசிய பண்டித நேரு அவர்கள், இந்த முடிவை கடைசி வரை ஏற்றுக்கொள்ள நேரிடுமா என்று கேட்டபோது, அரசியல் நிர்ணய சபை கூடினால், அதை மாற்றிக் கொள்ளவும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துவிட்டார்கள். இது ஜின்னா அவர்களுக்குக் கடுமையான ஏமாற்றத்தைக் கொடுத்தது. இப்படி அவருக்கு ஏமாற்றம் ஏற்பட்ட பிறகு, பின்னால் அரசியல் நிர்ணய சபையில் மெஜாரிட்டி பலத்தில் நீ எப்படி வேண்டுமானாலும் செய்வாய். அதற்கு உனக்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், இப்போதே பிரித்துக்கொள்ள முயற்சிப்பேன் என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** ஆக, மாநில சுயாட்சி, அதிக அதிகாரங்கள் என்ற அடிப்படையை அன்றைக்கே ஏற்றுக்கொண்டிருந்தால், பாகிஸ்தான் உருவாகியே இருக்காது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இதே போன்று முஜிபுர் ரஹிமானை இழுத்து இழுத்து இங்கே பேசுகிறார்கள். சமீப காலத்தில் பங்களா தேஷ் சுதந்திர நாடாக உருவெடுத்ததைப் பார்த்தோம். முஜிபுர் ஆரம்பத்தில் என்ன கேட்டார்கள்? எப்படி "14 points of Jinnah" என்கிறோமோ அதே போன்று "12 points of Mujibur" என்று சொல்லலாம். பாகிஸ்தானிடத்திலே சில சலுகைகளை, மாநில சுயாட்சியை, அதாவது கூடுதலான அதிகாரத்தைத்தான் முஜிபுர் கேட்டார்கள். 12 அம்சத் திட்டம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டிருந்தால், இன்றைக்கு பங்களா தேஷ் உருவாகியிருக்காது. இப்படி மாநில சுயாட்சியை மறுத்ததன் காரணமாகத் தான் இன்றைக்குப் பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்த காட்சியை நாம் பார்த்தோம்.

இராஜமன்னார் குழு அறிக்கையைப் படித்த சந்தர்ப்பத்தில் நான் பார்த்தேன். மாநில சுயாட்சி என்று நண்பர்கள் சொல்கிறார்கள். தற்காப்பு மத்திய அரசிடத்தில் இருக்கவேண்டுமென்று அந்த அறிக்கையிலே சொல்கிறார்கள். "ஃபாரின் அபேர்ஸ்" மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். "இண்டர் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்" மத்திய

(பிற்பகல் 5.00)

அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கம்யூனிகேஷன்ஸ், கரன்சி போன்று இப்படி 5 அடிப்படை அம்சங்கள் மத்திய அரசிடத்தில் இருக்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் சொல்கிறார்கள். இந்த ஐந்து அம்சங்களிலே, நான்கு அம்சங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஐந்தாவது அம்சத்தில் எனக்கு ஏற்பு இல்லை. கரன்சியைப் பொறுத்தவரையில், நாம் மத்திய அரசுக்கு விட்டுக் கொடுக்கக்கூடாதென்பது என்னுடைய ஆணித்தரமான கருத்தாகும். இந்தக் கருத்தையும் முன்பு சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு விலைவாசி தாறுமாறாக ஏறியிருக்கிறது. அதற்குக் காரணம் 'inflation' பணப் பெருக்கம்தான். மற்ற காரணங்களெல்லாம் மிக இலேசான காரணங்கள். அடிப்படையான காரணம் பணப் பெருக்கம்தான். அந்தப் பணப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாத வரையில் விலைவாசியைக் குறைக்க முடியாது. அந்த அதிகாரத்தை மாநில அரசுகளுக்குத் தந்தால், அவர்கள், தாறுமாறாகச் செயல்பட்டு வந்த அந்த அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி, இன்றைக்குள்ள விலைவாசி ஏற்றத்தில் குறைந்த பட்சம் பாதியளவாவது குறைக்கக்கூடிய நிலையை மாநிலத்தில் உருவாக்க முடியும்.

திரு. கே. ராஜாராம் : 20 மாநிலங்களும் தனித் தனியாக அச்சடித்துக் கொள்ள வேண்டுமா ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : ஆமாம் ; ஆமாம். புதுக்கோட்டை சுண்டைக்காய் ஸ்டேட். அங்கே நாணயம் அடித்தார்கள்.

திரு. கே. ராஜாராம் : அம்மன் காசுதான் அடித்தார்கள் ; செல்லாக் காசு தான் அடித்தார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அந்த உரிமையைக் கொடுப்பதால் பிரிந்து போகும் நிலைமை வராது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பாக்கி எல்லாவற்றையும் கொடுத்து விட்டது போலவும், இதில் மாத்திரம் தகராறு இருப்பதாகவும் சொல்கிறார்கள். அதைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இராஜமன்னார் குழு அறிக்கையிலே, நான் மாறுபடக்கூடிய இன்னொரு கருத்து இருக்கிறது. நம் மாநிலத்தில் வரி வசூல் செய்யும் உரிமையை மத்திய அரசுக்கு நாம் அளிக்கக்கூடாது.



இங்கே வசூல் செய்கின்ற அத்தனை வரிகளையும் மாநில அரசு சார்பில்தான் வசூலிக்க வேண்டும். அவர்களுக்கு, வசூலாகும் தொகையிலே, ஒரு ரேஷியோ போட்டு—கப்பம் என்று சொல்லலாம்—ஒரு தொகையை மாதா மாதம் அல்லது வருடா வருடம் கொடுத்துவிட வேண்டும். இன்கம் டாக்ஸ், சென்ட்ரல் எக்சைஸ்—அத்தனை வரிகளையும் மாநில அரசே வசூலிக்க வேண்டும். இப்போது எவ்வளவு வசூலிக்கிறார்களென்ற விவரம்கூட மாநில அரசுகளுக்குத் தெரியுமா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் ஒரு கேள்வியைப் போட்டேன். மத்திய அரசு சார்பில் நம் மாநிலத்தில் எவ்வளவு தொகை வசூலிக்கப்படுகிறதென்று நான் கேட்டேன். எனக்கு பதில் எழுதி அனுப்பினார்கள்— "This is a question to be asked in Parliament" என்று. எனவே இவற்றையெல்லாம் ஆராய வேண்டும். எவ்வளவு இன்கம்டாக்ஸ் மூலம் வசூலிக்கிறார்கள் ; எவ்வளவு சென்ட்ரல் எக்சைஸ் மூலம் வசூலிக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய வேண்டும். அவர்கள் வாங்குவது நான்கு பங்கு ; நமக்குக் கொடுப்பது கால் பங்குகூட இல்லையென்று நினைக்கிறேன். இது மிகவும் அநியாயமான போக்கு. இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு நாம் அந்த இன்கம்டாக்ஸ், சென்ட்ரல் எக்சைஸ் போன்ற வரிகளை வசூலிக்க வேண்டும். அவர்களுக்கு நம் நிர்வாகச் செலவு உண்டு. அதற்கு நம் மூலமாகப் பணம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு நேரடியாக வசூலிக்கும் உரிமையைக் கொடுக்கக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநில சுயாட்சியைக் கொடுக்க முடியாதென்று நமது பிரதம மந்திரி பேசியிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மாநிலங்கள் இன்னும் பின்னால் சென்றுவிடும் ; முன்னேற்றமடைந்த மாநிலங்கள் மேலும் முன்னேற்றம் அடைந்துவிடுமென்று காரணங்களைச் சொல்லி, அதைக் கொடுக்கக் கூடாதென்று அம்மையார் அவர்கள் சொல்லியது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை ; நியாயமாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. சிலருக்கு மதப்பற்று அதிகமாக இருக்கலாம் ; சிலருக்கு மொழிப் பற்று அதிகமாக இருக்கலாம் ; சிலருக்கு மாநிலப் பற்று அதிகமாக இருக்கலாம். இந்த மூன்றில், மூன்றாவது அம்சத்தில் நம்முடைய அம்மையாரை நான் சேர்க்கிறேன். எதை எடுத்துக்கொண்டாலும், உத்தரப் பிரதேசம் பிற்பட்ட பகுதியென்று சொல்லுகின்றார்கள். பண ஒதுக்கீட்டில் அதிகம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் ; கொடுக்கவும் செய்கிறார்கள். அவர்

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1974 ஏப்ரல் 26

களுடைய அந்தஸ்திற்கு இந்தப் போக்கு தகுந்ததல்லவென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஷேக்ஸ்பியர், "I am not a citizen of Athens, but a citizen of the world" என்று சொன்னார். அந்த அளவுக்கு அம்மையார் போகாவிட்டாலும் "I am not a citizen of Uttar Pradesh but a citizen of India" என்ற அளவுக்காவது அவர்கள் உணர வேண்டுமென்பதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ராபின் ஹூட், இங்கிலாந்தில் இருந்த பணக்காரர்களிடமெல்லாம் கொள்ளையடித்து, அதை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பான். அவனைப் பாராட்டியிருப்பதைச் சரித்திரத்தில் படிக்கிறோம். இந்தப் போக்கு தனிப்பட்ட மனிதர்களுக்கு ஒத்ததாக இருக்கலாம். ஆனால் ஒரு மாநிலத்திலிருந்து பறித்து, மற்றொரு மாநிலத்திற்குக் கொடுப்பது என்பது, பங்களாதேஷைப் பறித்து, பாகிஸ்தானுக்குக் கொடுக்க நினைப்பது போன்றது என்ற குற்றச்சாட்டைத்தான் அம்மையாரின் மேல் சுமத்த முடியும். அந்தப் போக்கை அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். மாநில சுயாட்சியைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசியல் நிர்ணயச் சட்டம் அமுலுக்கு வந்தபோது, ஒவ்வொரு மாநிலமும் பிரிந்து போகக்கூடிய உரிமை இருந்தது. இன்றைக்கு அந்த உரிமையில்லை. சமீப காலத்திலே, அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு 33 திருத்தங்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதிலே 17 அல்லது 18-வது திருத்தத்திலே, இனிமேல் பிரிந்து போகக்கூடிய உரிமை மாநிலங்களுக்கு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவில் பிரிந்து போகக்கூடிய உரிமையுடன், அவர்கள் சந்தோஷமாகச் சேர்ந்திருக்கிறார்கள். சோவியத் ரஷ்யாவில் தனித் தனியாக 'ஆடானமஸ் ஸ்டேட்ஸ்' ஆக இருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்தியாவில் எல்லோரும் சந்தோஷமாகச் சேர்ந்திருக்கக்கூடிய நிலை இருக்க வேண்டுமே தவிர, வலுக்கட்டாயமாக இருக்கும் நிலை இருக்கக்கூடாது. ஒத்து வாழக்கூடியவர்களுக்கு பிரிந்து போகும் உரிமை இருக்க வேண்டும். திருமணமான தம்பதிகளிடையே தகராறு ஏற்பட்டால், பிரிந்து போகும் உரிமை அவர்களுக்கு வேண்டும். "No divorce" என்று சொல்லுவது அக்கிரமம். அது ஆயுள் பூராவும் அழுதுகொண்டிருங்கள் என்று சொல்லுவதற்குச் சமமாகும். வலுக்கட்டாயமாக அழுத்தி வைத்திருப்பது விபரீதத்திற்குக் கொண்டு செல்லும்.

"Oppression is the cause of rebellion" வேறு வழியில்லை. அது 'ரிபெல்லியன்'-க்குக் கொண்டு செல்லும். ஆகவே இந்தப் போக்குகள் மாறுவதற்கு, பிரிந்து போகக்கூடிய உரிமையுடன் மாநில சுயாட்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 26]

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்மொழிந்துள்ள மாநில சுயாட்சித் தீர்மானத்தின்மீது மேலவையிலே விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. பேரவையிலும், 5 நாட்கள் என்று நினைக்கிறேன், இதைப்பற்றி விவாதம் நடந்து, எல்லாக் கட்சியினரும், எல்லா உறுப்பினர்களும் பேசியிருக்கின்றனர். இந்த விவாதங்கள் நடந்துகொண்டிருக்கும்போது, வெளியிலுள்ள நண்பர்கள் சில கேள்விகளை என்னிடத்தில் கேட்டார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற பிரச்சினையைப்பற்றியும், மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமை வேண்டுமென்ற பிரச்சினையைப்பற்றியும் பாராளுமன்றத்தில் சென்று பேசாமல், அல்லது ராஜ்ய சபையில் சென்று பேசாமல், இங்குள்ள பேரவையிலும், மேலவையிலும் பேசிக்கொண்டிருக்கிறீர்களே என்ற கேள்வியை என்னிடம் எழுப்பினார்கள். அண்மையில், இங்கே வருவதற்கு முன்னர் ஒரு நண்பர் என்னிடம் சொன்னார். "நீங்கள் 5 நாள் பேரவையில் பேசி, அந்தத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய இந்திரா காந்திக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள்; மேலும் இன்னொரு தீர்மானத்தை மேலவையில் போட்டு அதையும் அனுப்பப் போவதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்; இந்தத் தீர்மானத்தை அனுப்பிய பிறகு, அந்த அம்மையார் இதைப்பற்றி கவலைப்படப் போகிறார் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். இதைப்பற்றிக் கவலைப்படாமல், எந்தவிதமான முடிவும் எடுக்காமலிருந்தால், என்ன செய்வது? "exercise in futility" 4 சுவர்களுக்கு மத்தியில் அமர்ந்துகொண்டு இதை ஏன் பேசுகிறீர்கள் என்ற பிரச்சினையும் பரவலாகச் சொல்லப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்கூட இதைப்பற்றி நான் சொன்னேன். இந்தப் பிரச்சினை நம்முடைய மாநில அவையிலே பேசப்பட்டபோது, மதிப்பிற்குரிய முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர்கூட, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் சொன்னார். "இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தனிப்பட்ட முறையிலே, மாநில அரசு மத்திய அரசுக்குக் கடிதம் மூலம் எழுதாமல், பத்திரிகைகளில் எழுதி ஏன் பிரச்சாரம் செய்கிறீர்கள்" என்று கேட்டார்கள். உடனே நான் சொன்னேன், மத்திய

(பிற்பகல் 5.10)

அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள பிரச்சினைகளைப்பற்றி அறையில் மட்டும் அல்ல, அம்பலத்தில்கூட ஆடித்தான் ஆகவேண்டும் என்று. இந்தத் தீர்மானம் வந்த பிறகு, இதை இந்திரா காந்தி அம்மையார் கவனிக்கிறார்களோ, கவனிக்காமல் இருக்கிறார்களோ, எந்த நிலையாக இருந்தாலும்கூட நாடு பூராவும் இந்தப் பிரச்சினைபற்றி மக்களால் பேசப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1974 ஏப்ரல் 26

இந்தத் தீர்மானத்தின்மீது பேரவையில் 5 நாள் விவாதம், இங்கே 3 நாள் விவாதம் நடந்து, பத்திரிகையில் செய்தி வரவர, இதைப்பற்றி மக்கள் ஒரு சூடான பிரச்சினையாக, சுவையான பிரச்சினையாக கூடிப் பேசுகின்ற நிலை ஏற்படுகிறது. இந்திய நாட்டில் இப்போது இருக்கின்ற நிலையில்—மத்தியில் இருப்பது காங்கிரஸ் ஆட்சி, மாநிலங்களிலெல்லாம் காங்கிரஸ் ஆட்சி என்றாலும், நம்முடைய தமிழ்நாட்டிலே காங்கிரஸ் அல்லாத ஒரு ஆட்சி, கேரளத்தில் காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்த ஒரு ஆட்சி இருக்கிறது—வேறு எங்கேயும் இந்தப் பிரச்சினைபற்றிப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இது புதிதாக உள்ள பிரச்சினை அல்ல. பல காலமாக பலரால் பேசப்பட்ட பிரச்சினை. திரு. சங்கரலிங்கம் அவர்கள், 1919-லிருந்து 1935 வரை காங்கிரஸ் கட்சியால் பேசப்பட்ட, பல தரப்பட்ட மாநாடுகளில் 50, 60 ஆண்டுகளாக எங்கு நோக்கினும் பேசப்பட்ட பிரச்சினையாகும் என்று சொன்னார்கள்.

காங்கிரஸ் ஆட்சி நம்முடைய மாநிலத்திலும், மற்ற மாநிலங்களிலும் இருந்தபோது, அமைச்சர்கள் அவர்களுக்கு மத்திய அரசின்மீது ஏதாவது எரிச்சல் ஏற்படும்போது, பத்திரிகைகளுக்கு ஒரு செய்தியை விடுவார்கள், பிறகு அதை மூடி மழுப்பி விடுவார்கள். ஆனால் அதை யாரும் விவாதத்திற்குரிய பொருளாக்கவில்லை. இந்தப் பிரச்சினை முக்கியம் அடைந்ததற்குக் காரணம் 1967-ல் காங்கிரஸ் அல்லாத ஆட்சிகள் பல மாநிலங்களில் ஏற்பட்டதாகும். அப்படி ஏற்பட்ட சில மாநிலங்களில்தான் மத்திய மாநில அரசுகளின் உறவுகள்பற்றிய பிரச்சினை கிளம்ப ஆரம்பித்தது. 1967-ல் நம்முடைய மாநிலத்தில் காங்கிரஸ் அல்லாத ஒரு ஆட்சி அமைந்தபோது, இந்தப் பிரச்சினைகளைப்பற்றி, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பல சமயங்களில் பேசியதை நம்முடைய முதல்வர் அவர்கள் பேரவையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டபோது, அப்போது பேசப்பட்ட கருத்து என்னவென்றால், "அதிக அதிகாரம் என்றால் என்ன அதிகாரத்தைக் கேட்கிறீர்கள்? அதிக அதிகாரம் என்று சொல்லிக்கொண்டு போய், அதை ஒரு பிரச்சினையாக்கி அதைப் பற்றிப் பல இடங்களில் பேசிக்கொண்டிருந்தால், என்ன செய்வது? என்ன அதிகாரம் என்று 'ஸ்பெசிபிக்' ஆகச் சொல்ல வேண்டும். அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த அதிகாரத்தைக் கொடுக்கலாமா கொடுக்கக்கூடாதா என்று விவாதிக்கலாம். அதை ஒரு முடிவாக இந்த அரசாங்கம் சொல்ல வேண்டுமேயொழிய, தோராயமாகச் சொல்லிக்கொண்டிருந்தால் பலன் இல்லை". அவ்வாறு பேசப்பட்டது. அதற்குப் பின்னாலே 1969-ல் இராஜமன்னார் கமிட்டி அமைக்கப்பட்டு, 1971-ல் அதனு



1974 ஏப்ரல் 26] [திரு. ஜி. சுவாமிநாதன்]

டைய அறிக்கை வெளிவந்து, அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னாலே அந்த அறிக்கை அரசாங்கத்தாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969-ல் கமிட்டியை அமைத்து, 1971-ல் அறிக்கை வந்து, 1973 வரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் கேட்டார்கள். மத்திய மாநில உறவுகள்பற்றிய பிரச்சினைகள், அதற்காக எழுதப்பட்ட புத்தகங்கள், பத்திரிகைச் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் படிக்க வேண்டுமென்றால், அதைப் படித்து முடிப்பதற்கு 4 ஆண்டுகள் தேவைப்படும் என்ற அளவுக்கு அதிலே பல பிரச்சினைகள், நுணுக்கங்கள் இருக்கின்றன. பேரவையில் பேசப்பட்ட பேச்சுக்கள், முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகள் ஆகியவற்றைப் படித்துப் பார்த்தபோது, முக்கியமான எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. மனதிலே கிரகித்துக்கொண்டு பேசுவதற்கான பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, அது மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டுமென்றால், அதைப்பற்றிப் பேசுவதற்கு கிட்டத்தட்ட 3 நாள் தேவைப்படும் என்ற அளவுக்குப் பல அதிகாரங்கள் இருக்கின்றன. 1971-ல் வந்த அறிக்கையை 1973 வரை சிந்தனை செய்து, தீர ஆலோசித்துச் செய்திருப்பது நியாயம் என்று நினைக்கிறேன். உடனடியாக ஒரு கருத்தைச் சொன்னால், அதனால் மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையே மட்டுமல்ல, மக்களுக்கே பல இடையூறுகள் ஏற்படும். சில காரியங்களைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டும், சிலவற்றை அவசரமில்லாமல், நிதானமாகச் செய்ய வேண்டும் என்ற கருத்தில் பார்க்கிறபோது, இதுபோன்ற முக்கியமான பிரச்சினையில் இரண்டு ஆண்டுக் காலம் எடுத்துக் கொண்டது மிகவும் சரியானதே என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிகாரங்களையெல்லாம் சொல்லிவிட்டு, இந்த இந்த அதிகாரம் வேண்டும் என்று ஒரு வெள்ளை அறிக்கையை முதல்வர் அவர்கள் நம்முடைய மாநில அவையில் சொன்னார்கள். அந்த அதிகாரங்களில், மத்தியில் என்ன என்ன அதிகாரங்கள் இருக்கலாம், மாநிலத்தில் என்ன என்ன இருக்கலாம், எந்த எந்த அதிகாரத்தை மாநிலங்களுக்குக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். பொதுவாக இரண்டு அரசுகளுக்கும் இருக்கிற அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுத்து விடலாம் என்று பேசப்பட்டிருக்கின்றது. இதிலே ஒவ்வொரு பிரச்சினையும் மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஒன்றிரண்டு அதிகாரங்களைப் படித்துப் பார்த்தேன். நான் என்னுடைய நண்பர்களிடம் பேசும்போது, அந்த அதிகாரப் பட்டியலைப் பார்த்து, சில அதிகாரங்களை எடுத்துச் சொன்னேன். உப்பு, உற்பத்தி, அதன் பங்கீடு, அது வழங்கப்படுவதைக் கட்டுப்படுத்துதல், அபின் சாகுபடி, அதன் ஏற்றுமதி, விற்பனை, திரைப் படங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அனுமதி கொடுத்தல்,

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1974 ஏப்ரல் 26

தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள், மருந்துகள் விநியோகம், விலங்கினங்களைப் பாதுகாத்தல், அதாவது எஸ்.பி.சி.ஏ.—அது தற்போது 'கன்கரண்ட் லிஸ்டில்' இருக்கிறது—இதுபோன்ற காரியங்களில் உள்ள அதிகாரம் மாநிலத்திற்கு இருந்தாலே போதும். உப்பு உற்பத்தி செய்வதற்கான அதிகாரம் மாநிலத்தில் இருப்பதால், எந்தவிதமான கஷ்டமும் இல்லை. உணவுப் பொருள்கள், மருந்துப் பண்டங்கள், கலப்படத்தைத் தடுப்பது போன்றவற்றிற்கான சட்டங்கள் மாநிலத்தில் மட்டும் இருந்தால், எந்தவிதமான கெடுதலும் இல்லை. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக் காட்டி, எந்த எந்த அதிகாரங்களைக் கேட்கிறார்கள் என்று படித்துக் காட்டுகிறபோது, இந்த அதிகாரங்களைப் பார்க்கிற போது, அதிலே ஒன்றும் பிரிவினை நோக்கத்தைக் காணோம் என்று சொன்னேன். அவர்கள் கேட்பதெல்லாம் மிகச் சாதாரணமான அதிகாரங்களாகத்தான் இருக்கின்றன. இதிலே நாட்டுக்கு ஆபத்து ஏற்படுகின்ற அளவுக்கு எதுவும் இருப்பதாக என் மனதுக்குப் படவில்லை.

மீண்டும் மீண்டும் இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார்கள். ஒன்று, சுயாட்சி என்ற வார்த்தை. அதைக் கேட்டாலே எனக்கு அச்சமாக இருக்கிறது என்று தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள், பிறகு அச்சப்படவில்லை என்று சொன்னார்கள். அச்சப்படுகிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த வார்த்தையைக் கண்டு ஏன் பயப்படுகிறார்கள் என்று புரியவில்லை. சுயாட்சி என்ற வார்த்தை நீண்ட நெடுநாட்களாக பழக்கத்தில் இருந்து வருகிறது. மாநில சுயாட்சி என்பதற்கு, 'புரொவின்ஷியல் ஆட்டானமி', மாகாண சுயாட்சி என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தெரிந்துதான் சுயாட்சி என்ற வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கிறோம். அதனால்தான் நம்முடைய யூனிவர்சிட்டிகளுக்கு, சுய நிர்ணய உரிமை அல்லது சுயாட்சி வேண்டுமென்று சொல்லுகிறோம். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் அடிகளார் அவர்கள், அறத்துறையின் அதிகாரம் அரசாங்கத்திடம் இருக்கிறது; அது சுயாட்சி உடையதாக இருக்கவேண்டும், ஒரு தனி போர்டாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். 'ஹிண்டு ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டு' என்ற அளவில் சுயாட்சியோடு விளங்க வேண்டும் என்று சொன்னார்கள். வீட்டு வசதி வாரியம் என்ற ஒரு போர்டு இருக்கிறது. அது போல எலெக்டிரிசிடி போர்டு என்பது சுயாட்சியோடு கூடிய ஒரு போர்டாக இருக்கிறது. ஆகவே சுயாட்சி என்ற வார்த்தை ஒரு பயங்கரமான வார்த்தை என்று யாரும் நினைக்க வேண்டாம். பல காலங்களில் பல சமயங்களில் பேசப்பட்ட வார்த்தைதான் இது. இதிலே பிரச்சினைக்குரிய காரியம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 26] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அடுத்து, ஒரு முக்கியமான கருத்து பல கட்டங்களில் பேரவையில் பேசப்பட்டது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் நல்ல முறையில் விளக்கம் கொடுத்த காரணத்தால், அதற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள், அதிலே பிரிவினை இருக்குமா என்று பார்த்தால், அதிலே பிரிவினையைக் காணோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது சம்பந்தமாக ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதுதான் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்காக உள்ள திட்டக் குழு பற்றியது. பெருமதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் இந்தத் திட்டக் குழு பற்றி சுதந்திராக் கட்சி ஆரம்பித்தபோது, பல தடவை சுயராஜ்யா பத்திரிகையில் எழுதினார்கள். மந்திரி சபைக்கு அப்பால் திட்டக் குழு என்று ஒன்றை அமைத்து, அந்தக் குழுதான் எல்லா மாநிலங்களுக்கும் பணம் ஒதுக்குகிறது. அந்தக் குழு திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது. மாநிலங்களுக்கு இவ்வளவு பங்கு என்று 'கான்ஸ்டிடியூஷன்' மூலமாக நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல், நிதி ஆணைக்குழு என்று ஒன்று இருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தக் குழு கூடி ஆலோசித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கிறது. அதற்கு அடுத்தபடியாக திட்டக் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது. இந்த நிதி ஆணைக்குழு ஒரு நிரந்தரமான குழுவாக இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த நிதி ஆணைக் குழுவானது, எப்படிப் பணம் ஒதுக்கீடு செய்கிறது என்றால், எந்த மாநிலங்களில் பற்றாக்குறை இருக்கிறதோ, எந்த மாநிலம் பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறதோ, அதாவது எந்த மாநிலம் சரியான முறையில் வரி வசூலிக்காமல் இருக்கிறதோ, அதற்கெல்லாம் அதிகமாகப் பணம் ஒதுக்கி விடுகிறது. நம்முடைய மாநிலத்தில் கூட, அந்த மாதிரி ஒரு யோசனையைக் கொஞ்சம் முன்னால் எடுத்திருந்தால், நன்றாக இருந்திருக்குமே என்று மனதிற்குப் படுகிறது. 1967-க்குப் பிறகு அநேகமாக ஒவ்வொரு மாநிலத்திலும் 20 கோடி, 30 கோடி, 120 கோடி என்றுகூட பற்றாக்குறை பட்ஜெட்டாகவே போட்டுக்கொண்டு வந்தார்கள். இந்த நிதி ஆணைக்குழுவும், பற்றாக்குறை என்று சொல்லும்போதெல்லாம் 40 கோடி என்றும் 30 கோடி என்றும்

(பிற்பகல் 5.20)

கொடுத்து, அதை நிறைவு செய்ய முன்வந்திருக்கிறதே தவிர, இப்படி பற்றாக்குறை பட்ஜெட்டைப் போடும் மாநில அரசுகள் முறையாக வரியைப் போடுகின்றார்களா, போடும் வரியை முறையாக வசூலிக்கின்றார்களா என்று பாராம

லேயே இவ்வளவு காலம் வேலை செய்து வந்தது. இந்தத் தடவைதான் நமது மாநிலத்திலும் பற்றுக்குறை பட்ஜெட்டைப் போட்டிருக்கின்றார்கள். இந்த மாதிரி நான்கைந்து முறை பற்றுக்குறை பட்ஜெட்டுகளாகப் போட்டு வந்து, அடுத்த நிதி ஆணைக் குழு வரும்போது 150 கோடி பற்றுக்குறை என்று வைத்தால், சற்று கவனிப்பார்கள். ஃபைனான்ஷியல் ப்ருடென்ஸ் financial Prudence என்று சொல்லத்தக்க அளவிற்கு, ஒரு தனியார் கம்பெனியில் கூட பேலன்ஸ் ஷீட்டைப் பார்த்து, லாப நட்டக் கணக்கைப் பார்த்து, அதனுடைய ஃபைனான்ஷியல் ஸௌண்ட்னெஸ் பற்றி அறிவார்கள். கம்பெனியில்கூட வருவாயை அதிகரித்து, செலவைக் கட்டுப்படுத்தி லாபத்தை உபரியாகக் காண்பித்தால்தான் 'ஃப்ரூடெண்ட் பைனான்ஷியல் மானேஜ்மெண்டு' என்று சொல்ல முடியும். ஆனால் இப்போது உள்ள அமைப்பில் யார் அதிக அளவிற்குச் செலவு செய்துகொண்டு, எங்களால் வரியைப் போட முடியவில்லை என்று சொல்லிவிட்டு, உள்ள வரிகளையும் வசூலிக்காமல் இருந்துவிடுகின்றார்களோ, அந்த மாநிலங்களுக்குத்தான் மத்திய அரசும் அதிகமாக நிதி உதவியினை அளிக்கின்றது. இந்த நிலைகளுக்குப் பிறகு இந்தத் திட்டக் குழுவை வைத்தார்கள். இன்றைக்கு இதுதான் மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையில் ஏற்படும் பல தகராறுகளுக்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. மத்தியிலேதான் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால், ஒருமைப்பாடு குலைந்துவிடும் என்றெல்லாம் சொல்லுகின்றார்கள். ஆனால் இவ்வளவு அதிகாரங்களை மத்தியில் குவித்து வைத்துக்கொண்டுள்ள காரணத்தினால், எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. கிட்டத்தட்ட என்னுடைய தேர்வுக்கு முன்புகூட பேசும்போது, இந்த திட்டக் கமிஷன் போட்ட ஐந்தாண்டுத் திட்டங்களால் பல துறைகளிலும் நாட்டிலே கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறேன். திட்டங்களின் காரணமாக, விலைவாசி ஒரு புறம் ஏறிக்கொண்டே இருக்கின்றது. இன்னொரு புறம் உணவுப் பண்டங்களின் விலை ஏறுவதோடு எதுவும் கிடைக்காத நிலைமை இருப்பதுடன், பொருளாதாரத்திலே, நமது தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, "It is a country of shortages" என்று சொல்லும் அளவிற்கு எதை விரும்பினாலும் கிடைக்காது என்ற அளவிற்கு நமது நாடு போய்க்கொண்டே இருக்கின்றது என்றால், அதற்கெல்லாம் முக்கிய காரணம் இந்தத் திட்டக் கமிஷன் வந்ததுதான். கடந்த இருபது ஆண்டுக் காலமாக இந்தத் திட்டக் கமிஷனை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு, வரும் பணம் முழுவதையும் அதற்கே ஒதுக்கிக் கொடுத்து வருகிறோம். பணம் வேண்டும் என்று கேட்டால், அவர்கள் 20 சத



விகிதம், 25 சதவிகிதம் என்று ஒதுக்கீடு செய்கின்றார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் கொடுக்கின்றார்கள் என்று பார்த்தால், மத்திய ஆட்சியில் உள்ளவர்கள் எதைக் கொடுக்க வேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கருதுகின்றார்களோ, எந்த மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றார்களோ, (அவர்களுக்குத்தான் கொடுக்கின்றார்கள். எந்த மாநிலமாவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்ற நிலைமையில்தான் திட்டக் கமிஷனின் ஒதுக்கீடுகள் இருந்து வருகின்றன. எனவே மாநில முதல்வர்கள் பணம் வேண்டுமென்று கேட்கும் நிலைமை ஏற்பட்டால், அந்தப் பணத்தின் மீதான ஆதிபத்தியம் முழுவதையும் மத்திய அரசு வைத்துக்கொண்டு அந்த மாநிலம் பற்றி அங்கேயுள்ள அதிகாரிகளின் நல்லெண்ணம், அங்குள்ள அமைச்சர்களின் நல்லெண்ணம் இருந்தால்தான் பணம் வரும் என்ற நிலைமையில் அவர்களைச் சரிக்கட்டி வைத்துக்கொள்ள வேண்டிய அளவிற்கு மாநில அரசுகள் தள்ளப்பட்டிருப்பது உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானதாகும். பல தனியார் நிறுவனங்களிலே, பெரிய நிறுவனங்களிலே, அடிக்கடி மத்திய அரசாங்கத்திடம் அவர்களுக்காக வேண்டிய பெர்மிட்டுகள் அல்லது லைசென்சுகளைச் சீக்கிரம் பெறுவதற்காக, லையெஸான் ஆபீசர்ஸ் என்று ஒரு அதிகாரியை வைத்துக்கொண்டு அவர்கள் டெல்லியிலே உள்ள அதிகாரிகளை உரிய நேரத்தில், உரிய முறையில் அணுகி ஃபைல்களைச் சீக்கிரம் நகரச் செய்வதற்கும் ஏற்பாடு செய்வார்கள். இதுபோன்ற லையெஸான் ஆபீசர்களை சில மாநில அரசுகள்கூட வைத்திருப்பதாகச் சொல்லுகின்றார்கள். நமது மாநில அரசு அப்படி ஒரு அதிகாரியை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆக மத்திய அரசின் வெறுப்பிற்கு ஆளாகாமலிருந்தால்தான், நிதி உதவி கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. இதிலே மாற்றம் ஏற்படாமலிருந்தால், நிலைமைகள் எப்படி முன்னேற்றமடையும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே உள்ள சட்ட அடிப்படையிலேயே இவற்றையெல்லாம் செய்ய முடியுமா என்று யோசிக்கலாம் என்று ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன், சென்ற காலங்களிலே பல கமிஷன்களும் அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன், ஹனுமந்தையா கமிஷன் எல்லோரும் மத்திய மாநில அரசுகளின் இடையிலே உள்ள உறவு முறைகளிலே மாறுதல் ஏற்பட வேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கார்ப்பொரேஷன் டாக்ஸ் பற்றி, இன்கம் டாக்ஸ் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அது 1961 வரையில் என்று நினைக்கிறேன், மாநிலங்களுக்கு அவர்களுக்குக் கிடைப்பதில் 50 சதவிகிதத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள், இன்கம் டாக்ஸ் என்று.

அதிலே 70 சதவிகிதம் கம்பெனிகள் வருமானம். இப்போது கம்பெனி வருமானத்திற்குப் பெயரை மாற்றி கார்ப்பொரேஷன் டாக்ஸ் என்று வைத்துக் கொண்டு விட்டார்கள். இப்படி பெயரை மாற்றி வைத்துக்கொண்ட உடனேயே இதிலே பங்கிட்டுக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அது தவறானது என்று சொன்னார்கள். இந்தத் தவறை மாற்ற வேண்டுமானால், பிரிவு 220 என்று நினைக்கிறேன், நாம் அரசியல் சட்டத்தை மாற்றி இந்த கார்ப்பொரேஷன் டாக்ஸ் என்பதை இன்கம்டாக்ஸ் என்று மாற்றினாலொழிய, வேறு ஒன்றும் முடியாது என்ற நிலையில் இருக்கிறோம். அரசியல் சட்டத்தைத் திருத்தலாமா, அது புனிதமானதில்லையா என்றெல்லாம் கேட்கின்றார்கள். ஆனால் இதுவரையில் அந்த அரசியல் சட்டம் முப்பது தடவைக்கு மேலே திருத்தப்பட்டிருக்கின்றது, ஆகவே அதை மேலும் திருத்தியமைப்பதிலே தவறு ஏதுமில்லை. அரசியல் சட்டமே மக்களுக்காகத்தான் இருக்கின்றது. எனவே மக்களுடைய நலன்களுக்காக அதைத் திருத்துவதில் தவறு ஏதுமில்லை.

பொதுவாக இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது இந்திய நாட்டின் அரசியலிலே 1967-ல் நடந்த தேர்தலில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சி, மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சி என்ற நிலைமை மாறி, மாநிலங்களிலே வெவ்வேறு கட்சிகளின் ஆட்சிகள் ஏற்பட்டன. பொதுவாக 1967-லே மாநிலங்களிலும் சரி, மத்தியிலும் சரி, காங்கிரஸ் ஆட்சி மாறி பிற கட்சி ஆட்சிகள்தான் வரும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். அப்போதுகூட, திரு. பட்னாயக் அவர்கள், மாநிலங்களிலே உள்ள கட்சிகள் தான் இனி வளர்ச்சி அடையும், அவைதான் மாநிலங்களிலே ஆட்சிக்கு வரும், மத்தியிலும் அந்தக் கட்சிகளின் கூட்டாட்சி தான் வரும், இனி அகில இந்திய கட்சி அங்கே இருக்க முடியுமா என்பது சந்தேகம்தான் என்று தெரிவித்தார்கள். ஆனாலும் 1971-ல் எப்படியோ திரும்பவும் திருமதி இந்திரா காந்தி அவர்களின் ஆட்சி வந்தது. அவருடைய கட்சி பல மாநிலங்களிலும் ஆட்சிக்கு வந்தது. ஆனால், இன்றைய நிலைமைகளைப் பார்த்தால், இரண்டு வருஷம் கழிந்து மத்தியிலே ஒரே கட்சியின் ஆட்சி இருக்குமா என்பது சந்தேகம்தான். காங்கிரஸ் ஆட்சி இருந்து வரும் பல மாநிலங்களிலே இன்றைக்கு அவர்கள் நிலைமை சரிந்துகொண்டே வருகின்றது. விலைவாசி ஏற்றம், மேலும் மேலும் வளர்ந்துவரும் மக்களுடைய துயரம், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலை, இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்திரா காந்தி அம்மையாருக்கு ஒரு சரிவு ஏற்பட்டு வருகிறது என்பதைத்தான் பார்க்கிறோம். எதிர்காலத்திலே இனி மாநிலக் கட்சிகள்தான் தலைதூக்கும் என்பதையும் நான்



சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்தியிலே ஆறு கட்சிகள், ஏழு கட்சிகள் கொண்ட ஆட்சியைக் கூட்டாக வைத்துக்கொள்ளலாமா என்று பேசப்படுகிறது. ஆனால், இப்போதிருக்கும் நிலைமைகளைப் பார்த்தால், அந்த ஏழெட்டுக் கட்சிகளும் மாநிலக் கட்சிகளாகத்தான் இருக்கின்றன. சுதந்திரா கட்சியைப் பொறுத்தவரையில், முதலில் அவர்கள், இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக ஒரு கட்சியை கூட்டாகச் சேர்ந்து உருவாக்கலாம் என்று சொன்னார்கள். அந்த யோசனை யு.பி. எலெக்ஷனுக்கு முன்பு வந்திருந்தால், நல்லதாக இருந்திருக்கும். ஆனால், எல்லாக் கட்சிகளும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக்கொண்டு, கடைசியில் இந்திரா காங்கிரஸ் கட்சி வந்தது. ஆனால், பொதுவாக மாநில அளவில் உள்ள கட்சிகள்தான் இனி வரக்கூடும். அகில இந்திய ரீதியில் உள்ள கட்சி என்று பார்க்கும்போது, தமிழ் நாட்டிலே எஸ்.எஸ்.பி. இருக்கிறது என்றால், ஏதோ இருக்கின்றது, அதுவும் ராஜ் நாராயண் கட்சிதான் என்று சொல்லுகின்றார்கள். பிறகு மாநிலங்களிலே பி.கே.டி. என்றும், இப்படி அங்கங்கே மாநிலக் கட்சிகள்தான் இருக்கின்றன. இனி இருக்கும் நிலைமைகளைப் பார்த்தால், மத்தியிலே உள்ள இந்திரா காந்தி அவர்களுடைய அமைச்சரவை கவிழ்ந்து மத்தியிலே வேறு அரசு வரமுடியாத நிலை ஏற்பட்டால், மாநிலங்களிலே வேறு வேறு கட்சி ஆட்சிகளும் மத்தியிலே இந்தக் கட்சிகளின் கூட்டாட்சியும்தான் வரும் என்பதை மறுப்பதற்கில்லை. 1967-லேயே இந்த நிலை ஓரளவிற்கு இருந்தது என்றாலும், அன்றைக்கு எல்லோரும் இந்திரா காந்தி கட்சிக்கே வோட்டுப் போட்டார்கள். அந்த நிலை இப்போது மாறி வருகிறது. இந்த நிலையில் மத்தியிலே இவ்வளவு அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால், அதை அங்கே நிர்வகிக்கின்றவர்கள் சரிவர நிர்வகிக்கவில்லை என்றால், நிச்சயமாக மாநிலங்களுக்குப் பெரும் தலைவலி ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு, நாட்டிலே ஒற்றுமை வளர வேண்டுமானால், அமைதி வேண்டுமானால், மாநிலங்களில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அந்தக் கட்சியின் ஆட்சிக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்தால், மத்திய அரசு பலவீனமடையும்போது, மாநிலங்கள் அதைக் காப்பாற்ற முடியும். அந்த நிலையில் பார்த்தால், உண்மையாக இதுபோல அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை என்றுதான் சொல்லவேண்டும்.

முடிவாக ஒன்று. இன்று ஜனநாயகத்தின் அடிப்படையையே மக்கள் சந்தேகிக்கத் தொடங்கிவிட்டார்கள், அதிலே நம்பிக்கையை இழக்கத் தொடங்கிவிட்டார்கள். எங்கே பார்த்தாலும், விலைவாசி ஏறிவிட்டது, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று மக்கள் குரல் கொடுக்கின்றார்கள். இந்த நிலைமையில் மக்களுடைய அன்றாட வாழ்க்கை மிகமிகக் கஷ்டமான நிலைக்கு வரக்கூடிய நிலையிலே, இனியும் இந்த நாட்டிலே ஜனநாயகம் இருக்க

வேண்டுமா, இந்த அரசியல்வாதிகளை இனியும் நம்பலாமா என்று பேசு கின்றார்கள். அரசியல் கட்சிகளை இனியும் நம்புவதா, அரசியல்வாதிகளை இனியும் நம்புவதா என்று பல இடங்களிலும் பேசப்படுகிறது. இந்த நிலை நீடித்தால், நமது நாட்டின் ஜனநாயகத்திற்கு ஆபத்து என்ற நிலை உருவாகக் கூடும். ஜனநாயகத்திற்கு ஆபத்து இன்னொரு முறையில்கூட வந்து கொண்டிருக்கின்றது. பல சட்ட மன்றங்கள் ஒழுங்காக இயங்க முடியாத அளவிற்கு இருந்து வருகின்றன. பலவிடங்களில் சட்டசபை உறுப்பினர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளும், நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5.30)

நான் சொல்வது வேறு மாநிலங்களில். சில மாநிலங்களில் மாநில ஆளுநர் வருகின்றபோது,—பழைய காலங்களில் எழுந்து தான் பேசுவார்கள், ஆனால் —இன்றையதினம் அவர்களைக் 'கேரோ' செய்கின்ற அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஜனநாயகக் குடியரசுத் தலைவரை சூழ்ந்துகொண்டு 'கேரோ' செய்ய முற்படுகின்றபோது, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள், அதற்கு எதிராக், அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கின்றபோது, சில சூழ்நிலைகள் உருவாகின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதற்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நிச்சயமாக இந்த மேலவையில் அது ஏற்படாது. நான் மேலவையிலிருந்து பேசுவதால், இந்த மேலவையில் நடக்காது என்று கூறுகிறேன். மற்ற மாநிலங்களில் ஏற்படுகின்ற சூழ்நிலை இங்கு நிச்சயமாக ஏற்படாது.

நான் ஒரு பள்ளிக்குச் சென்று, என்னைப் பேசச்சொல்லி அழைத்ததன் பேரில், அங்குள்ள மாணவர்களைப் பார்த்து, நீங்கள் ஒழுங்காக, ஒழுக்க முடையவர்களாக நடந்துகொள்ள வேண்டுமென்று நான் பேசியவுடன் 'இண்டர் ஆக்ட் கிளப்' மாணவர் ஒருவர் எழுந்து வந்து, "சட்டமன்ற உறுப் பினர்கள் ஒருவருக்கொருவர் கண்ணியக் குறைவாகப் பேசிக்கொள்கிறார்கள். அவைத் தலைவர் மணி அடித்து உட்காரச் சொன்னால் எழுந்து நிற்பதும், மணி அடித்தால் எந்தக் கோவிலில் மணி அடிக்கக் கற்றுக்கொண்டீர்கள் என்று கேட்பதுமாக இருக்கின்றீர்கள். பத்திரிகைக்காரர்களும் 'வாக் அவுட்' போன்ற செய்திகள் கிடைத்தால்தான் பெரிதாகப் போடுகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி நீங்கள் இருக்கின்றபோது, எங்களைப் பார்த்து



ஒழுங்காக இருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்"? என்று கேட்டார். ஜனநாயகத்தில் சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு உயர்ந்த மதிப்பு உண்டு என்றாலும், அது இம்மாதிரியான நிகழ்ச்சி களால் குறைந்திருக்கிறது. உண்மையான ஜனநாயகம் மலரவும், நாட்டி னுடைய பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடையவும் மாநில அளவில் தேவைப்படுகின்ற திட்டங்களை மாநிலங்கள் போட வேண்டும். அந்தத் திட்டங்களையெல்லாம் மத்தியிலே போட்டு, நிறைவேற்றுவதால் நாட்டுக்கு நஷ்டம்தான் ஏற்படும். மாநில அளவில் திட்டங்கள் போட்டு நிறைவேற்றினால் தான், பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ் நாடு அரசின் சார்பாக, முன் மொழியப்பட்ட, மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழுவினர் தந்திருக் கின்ற பரிந்துரைகளின் அடிப்படையிலும், தமிழக அரசு தெரிவித்திருக்கின்ற கருத்தின் அடிப்படையிலும் மாநிலங்களில் சுயாட்சி அமைந்திட வேண்டும் என்ற முறையில், உண்மையான கூட்டாட்சித் தத்துவம் வெற்றி பெறும் முறை யிலும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டு மென்று கூறும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச சொல்ல வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின் மீது பேரவையிலும், இந்த அவை யிலும் பல்வேறு வகையான கருத்துக்கள் சொல்லப்பட்டன. நான் என் னுடைய உரையைத் தொடங்குகின்ற நேரத்தில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ல் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, அதற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வருகின்ற இந்தத் தமிழக அரசு, 1967-லிருந்து 1974-வரை, ஏழு ஆண்டுக் காலத்தில் பெற்ற அனுபவத்தின் காரணமாக, இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் சட்ட திட்டங்களால், அதன் தடைகளால் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறும் நிலைமைக்கு இப்பொழுது வந்திருக்கிறது. அனுபவரீதியாக, மாநிலங்களுக்கென்று வரை யறுக்கப்பட்டுள்ள, ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற முடியாது என்று உணர்ந்ததற்குப் பிறகு, இந்தத் தீர்மானம் முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிறது என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதே சந்தர்ப்பத்தில் இந்தத் தீர்மானத்தின் மீது கருத்து தெரிவிக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

[திரு. மு. இராமநாதன்] [1974 ஏப்ரல் 26

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற ஆளுங்கட்சியினுடைய தலைவர்களிலிருந்து அந்தக் கட்சியினுடைய கடந்த கால வரலாற்று வரைக்கும் பாரம்பரியத்தை எல்லாம் ஆராய்வதில், தங்களுடைய சிந்தனைகளை எல்லாம் செலுத்தாமல், இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் தீர்மானத்தில் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஒரு சிறிதும் தீங்கு நேரக்கூடாது, அதனுடைய வலிவும் பொலிவும் அல்லது அதனுடைய ஒட்டுமொத்தமான பலமும் குறைக்கப்படுகின்ற வகையில் எதுவும் கூடாது, அப்படி இருந்தால் மத்திய அரசும் இந்த நாடும் கெட்டுவிடும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிவிட்டுத்தான் தம்முடைய உரையை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கருத்தின் அடிப்படையில் இவைகளை நோக்க வேண்டுமேயல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்திருக்கிறது, அதை எதிர்த்தாக வேண்டும், அது மக்களுக்கு அவசியமில்லை என்ற நிலையில் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக உங்களையும் சேர்த்து, இந்த நாட்டில் இருக்கின்ற 4½ கோடி மக்களையும் சேர்த்து, கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து பெற்ற அனுபவத்தையும், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த ஏழு ஆண்டுக் காலத்தில் நடைபெற்றிருக்கின்ற காரியங்களையும் வைத்து, மக்களுக்கும் நாட்டுக்கும் இன்னும் பல தேவைகளை, வசதிகளை, வளங்கள், வாய்ப்புக்கள் ஆகியவைகளை உருவாக்கித் தரும் பொருட்டு இந்த மாநில அரசுக்கு அதிக அதிகாரங்களைப் பெறுவதற்கு எந்தெந்த வகையில் மத்திய அரசினுடைய சட்ட திட்டங்களைத் திருத்தினால் வாய்ப்பாக இருக்கும் என்ற வகையில் கருத்து தெரிவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு உலக நாடுகளில் இருக்கின்ற அரசியல் அமைப்புகளையும், இந்திய நாட்டில் சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளையும், வேறு பல நாடுகள் உலக அரங்கில் எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் மனதில் எண்ணிப் பார்த்துத் தான் நாங்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். 1947 ஆம் ஆண்டு வெள்ளையன் இந்த நாட்டை விட்டு வெளியேறிப் போனான் என்றாலும், அவன் வெளியேற்றப்பட்ட பிறகு, நம்மையெல்லாம் ஆண்டுகொண்டிருக்கின்ற அந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எந்த அளவுக்கு மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே இருக்க வேண்டிய உறவு முறைகள் பற்றியும், உரிமைகள் பற்றியும் மறு பரிசீலனை செய்யப்பட்டு, திருத்தப்பட வேண்டும் என்று கூறு



1974 ஏப்ரல் 26] [திரு. மு. இராமநாதன்]

கின்ற கட்டத்தில் இன்று இருந்து வருகிறோம். இங்கே பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததுபோல் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி நீண்ட நெடுங்காலமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்த காரணத்தால், இந்த அமைப்பு முறையை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம், எந்தக் கட்சிக்கும் வராமல் இருந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் பொறுப்பேற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் இவ்வளவு பெரிய இந்தியத் துணைக் கண்டத்தில், ஒரே ஒரு தனிப்பெரும் கட்சியாக இருப்பதால், அவர் தன்னுடைய கடமையைச் செய்ய முன் வந்து விட்டார் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த கோரிக்கை அல்லது இந்த ஒரு மாநிலத்தினுடைய சுயாட்சி கோரிக்கை என்பதாக இந்தத் தீர்மானம் அமையப் பெறவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற எல்லா மாநிலங்களுடைய உரிமைகளையும் அந்த மக்களுடைய எதிர்கால வாழ்க்கையையும், எல்லா நலன்களையும் பெறுகின்ற ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்தில் முன்மொழிந்து அதன் சார்பில்தான் நாம் எல்லோரும் கருத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

[மாற்றுத் தலைவர் திரு. கே. எஸ். கணபதி தலைமை]

1962-ல் சீன ஆக்கிரமிப்பு நடந்தபோது, அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மன்றத்தில்கூட பலர் அதை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தைச் சொன்னபோது நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தோம். மத்திய சர்க்காரைத் தாக்கிப் பேசுவதை நிறுத்தி வைப்போம். மத்திய சர்க்காருக்கு ஒத்துழைப்புக் கொடுப்போம் என்று சொன்னார்கள். அண்ணாதுரை பயந்துவிட்டார் என்று பல நேரங்களில் அதைப்பற்றிச் சொல்லி வந்தார்கள். அந்தக் கருத்தைத் தெரிந்து கொண்ட அண்ணா அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். "படையெடுத்து வந்திருக்கின்ற சீனா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் எதிரியல்ல. அவர்கள் வீசுகின்ற குண்டுகள் எங்கே காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்கள் மீது மட்டும் விழ வேண்டும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை விட்டு விட வேண்டும் என்று சொல்லிவிட்டு வீசப்படுகின்ற குண்டுகள் அல்ல. ஒட்டுமொத்தமாக இந்த நாட்டுக்கு அவர்கள் எதிரிகள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு எதிரியை முறியடிப்பதில் கட்சிக் கண்ணோட்டத்திற்கு இடமில்லாமல், கட்சி காழ்ப்பு உணர்ச்சிகளுக்கு இடமில்லாமல், நாமெல்லோரும் அதற்கு ஈடுகொடுத்து, எதிரியை முறியடிக்கக் கடமைப்பட்டவர்கள் என்ற அடிப்படையில்தான் அந்த சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் பிரச்சினையில் இந்திய அரசுக்கு ஆதரவு கொடுக்

கிறோம்" என்று அறிவித்தார்கள். அதைச் சொல்லிவிட்டு இன்னொன்றையும் சொன்னார்கள். "போர்க்களத்தில், அந்தச் சீனனை எதிர்த்துப் போராடுவதற்கு ஒன்றுபட்டிருக்கிறோம். எதிரியை முறியடித்து விரட்டுவதற்காக ஒட்டிக்கொண்டிருக்கிறோம். அந்த எதிரி முறியடிக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில், அந்தக் காரியத்தை முடித்து விட்ட பிறகு, போர்க்களத்தில் நின்று கொண்டிருந்த நாங்கள் இங்கு இருக்கின்ற நம்முடைய மக்களுடைய பிரச்சினைகளை ஆராய எங்கள் கவனத்தைத் திருப்பி விடுவோம்" என்று கூறினார்கள். "நாங்கள் எங்களுக்குள்ள அடிப்படைப் பொறுப்புகளைக் கைவிட்டு விட்டதாக யாரும் கருதிவிடக்கூடாது. இன்று நாட்டில் இருக்கின்ற ஜனநாயக அமைப்பில், நாம் சில பொறுப்புக்களை அவ்வப்போது ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம், அந்த முறையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது தன்னுடைய பணிகளை ஒத்தி வைத்திருக்கிறது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 5.40)

அப்படி உள்ளம் நிறைந்த பற்றுதலோடும் விசுவாசத்தோடும் எங்கள் உள்ளத்தில் இருக்கிறதை எல்லா வகையான தெளிவோடும் சொல்லியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையை விட்டு விட்டது. அதற்குப் பிறகும் உங்களைத் தெரியாதா என்று பேசிக்கொண்டிருப்பதன் நோக்கம் எங்களுக்கு விளங்குகிறது. இந்த மன்றத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனே எல்லாக் காரியங்களும் நடந்தேறிவிட்டன என்று நான் நம்ப மாட்டேன். இது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஒரு சம்பவத்தை நான் இந்த மன்றத்தில் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். அஹமதாபாத் நகரத்தில் சுற்றுலா மாளிகையில் ஒரு காலத்தில் வெள்ளை அரசாங்கம் மகாத்மா காந்தியடிகளை பாதுகாப்புக் கைதியாக சிறை வைத்திருந்தது. அங்கு விசாரணை நடந்தது. அப்போது காந்தியடிகள் ஒரு பதிலைச் சொன்னார்கள். "சர்வ வல்லமை படைத்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிராக நான் சதி செய்தேன் என்று என் பேரில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு என் மீது எப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிரான ஒரு சதி செய்ய வேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல. இமயம் முதல் குமரி வரை இந்திய நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும், அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டுமென்ற நோக்கமே அல்லாமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிரானதல்ல" என்ற கருத்தைச் சொன்னார்கள். "இன்றைக்கு என்னுடைய வாதங்கள் பொய்த்துப் போகலாம். நான் குற்றவாளியாக்கப்படலாம். ஆனால் என்னுடைய அசைக்க முடியாத சத்தியத்தின் பேரால்



சொல்கிறேன். இந்தக் கொள்கை, இந்திய நாட்டின் விடுதலைத் தத்துவம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு எதிரானது என்று குற்றமே சாட்டினாலும், என்றைக்காவது ஒரு நாள் இந்தியாவில் இருக்கிற மக்கள் என் பக்கம் வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே இதற்கிடையில் நான் இறந்து போய்விட்டாலும் சர்வேஸ்வரனிடத்தில் நியாயம் பெறுகிற மனத் திண்மையும் சத்தியத்தில் நம்பிக்கையும் நான் வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்கள். ஆகவே காந்தியடிகள் சொன்னது போல, தமிழக முதல்வரவர்களால் இந்த மன்றத்தில் முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்திற்கு சர்வ வல்லமையுள்ள டில்லிப் பேரரசு என்ன செய்யும் என்பது எங்களுக்குத் தெரியும். இன்றைக்கு வாதங்கள் எடுபடாமல் போனாலும், வாதங்களை மறுத்தும், உள் நோக்கம் கற்பித்தும் கருத்துக்கள் சொல்லப்பட்டாலும், இந்த மன்றத்திலிருந்து தெரிவிக்கப்படுகிற இந்த மாநில சுயாட்சி வாதம், மத்தியில் உண்மையான ஒரு கூட்டாட்சி மலர்ந்திட வேண்டுமென்ற வாதம் என்றைக்காவது ஒரு நாள் 4½ கோடி தமிழக மக்களின் ஆதரவினைப் பெறும். நண்பர்கள் பலர் சொன்னது போல், இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மாநிலங்களில் இருக்கிற மக்கள் சக்தி இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களாலே ஒளி விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்திற்கு, ஒன்று திரண்டுவரும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானம் இன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு எங்களுக்குத் தெரியும். இந்தியத் துணைக் கண்டத்தை ஒரு தடவை சுற்றிப் பார்த்த சீன நாட்டு யாத்திரிகன் யுவான் சுவாங் இந்தியா 5 பிரிவாக இருக்கிறது. ஒரு பக்கத்தில் வடக்கு இந்தியா, இன்னொரு பக்கம் தெற்கு இந்தியா, மற்றொரு பக்கம் கிழக்கு இந்தியா, இன்னுமொரு பக்கம் மேற்கு இந்தியா, இன்னொரு இடத்தில் மத்திய இந்தியா, ஆக 5 இந்தியா, 80 சாம்ராஜ்யங்களாக இருக்கின்றன என்று சொன்னான். 56 தேச ராஜாக்களைச் சேர்த்து இப்படிப்பட்ட இந்தியாவைக் கண்டேன் என்று யுவான் சுவாங் சொன்னான். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள், கஜினி முகமத், கோரி முகமத், இவர்கள் கொள்ளை அடிப்பதோடு காரியத்தை முடித்து விட்டுப் போனார்கள். கோரியால் நியமிக்கப்பட்ட அடிமை ஒருவன், குத்புத்தீன் என்பவன் 420 அடி கோபுரத்தை டில்லியில் கட்டியிருக்கிறான். அந்தக் கோபுரம் குதுப்மினார் என்று சொல்லப்படுகிறது. அவன் மற்றொரு கோபுரம் கட்ட வேண்டுமென்று சொல்லி, ஒரு கோபுரம் கட்ட ஆரம்பித்து, அது 10 அடி உயரத்தோடு நின்றிருக்கிறது. ஏற்கெனவே உள்ளதை விட பெரிய கோபுரம் கட்ட வேண்டுமென்று ஒரு வேலையைத் தொடங்கினான். அது

குட்டிச்சுவராக நின்றுகொண்டிருக்கிறது. அது போல வெள்ளைக்கார சாம்ராஜ்யத்தைப் போல ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்க வேண்டுமென்று, ஒற்றைய ஆட்சி முறை என்ற பெயரால் மாநில அரசின் அதிகாரத்தை ஒவ்வொரு கட்டத்திலும் கறந்து விடக் கூடிய நிலை ஏற்பட்டுவிட்டிருக்கிறது சமஷ்டி என்ற பெயரால். நான் இந்த அரசியல் அமைப்புச் சட்டம் உள்ளபடியே ஏமாற்றுச் சட்டம் என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. எங்களுக்குக் கிடைத்த ஏழு ஆண்டுக் கால ஆட்சியின் அனுபவம் கொண்டு இங்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1952-ல் சிக்கலான கட்டத்தில், மறைந்துவிட்ட பெரியவர் ராஜாஜி அவர்கள் இந்த தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். பதவியை ஏற்ற அவர்கள் ஒரு கருத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்தார்கள். "இந்த மாநிலம் சீர்கெட்டுப் போயிருக்கிறது, இந்த சென்னை மாநிலத்தைச் செப்பனிடுவதற்கு பொறுப்பேற்றிருக்கிறேன். உடனடியாக இந்த மாநிலத்தைக் கட்டியாள்வதற்கு 10 கோடி ரூபாய் வேண்டும்" என்று கேட்டார்கள். காத்திருந்தார்கள். டில்லியிலிருந்து பதில் கடிதம் வரவில்லை. அன்று இருந்த அதிகாரம் இன்றைக்கு இல்லை. ஆனால் அன்று இருந்த அதிகாரத்தை வைத்து ரிசர்வ் வங்கியிலிருந்து மாநில அரசுக் கணக்கில் 10 கோடி ரூபாய் வரவு வைத்துக் கொண்டு எடுத்துக்கொண்டேன் என்ற தகவலை டில்லிக்கு அனுப்பினார்கள். அப்படி அனுப்பிய சந்தர்ப்பத்தில் அன்றைக்கிருந்த பிரதம மந்திரியும் நிதி மந்திரி திரு. சிந்தாமண் தேஷ்முக் அவர்களும் என்னதான் மரியாதைக்குரியவரானாலும் சென்னை முதன் மந்திரி ராஜாஜி அவர்கள் இப்படி ஒரு காரியம் செய்தது சரியல்ல என்ற கண்டன ஆணையைக் கடிதம் மூலமாகத் தெரிவித்தார்கள். அதற்கு ராஜாஜி அவர்கள் பதில் எழுதினார்கள். அவர் "இந்த விவகாரத்தைக் கிளப்பாதீர்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் என்னவென்பது எனக்குத் தெரியும். எந்த இடத்தில் அம்பேத்கார், நேரு, அபுல் கலாம் ஆஸாத் போன்றவர்களும், மற்றவர்களும் கையெழுத்திட்டார்களோ அதே இடத்தில்தான் நானும் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். ஆகவே எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறதென்று தெரியும். தெரிந்து தான் பணம் எடுத்திருக்கிறேன். இதற்கு மேலும் விவகாரத்தை மத்தியில் இருப்பவர்கள் கிளறுவீர்களானால், நான் தென்னாட்டில் இருக்கிற திரு. அண்ணாதுரையோடும் பெரியார் ராமசாமி அவர்களோடும் சேர்ந்துகொள்வேன், ஜாக்கிரதை" என்று டில்லிக்குப் பதில் எழுதினார்கள். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அன்றிருந்த நிலைமை கூட இன்று இல்லை. அன்றிருந்த அதிகாரம் இன்று இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத் தான் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அன்றைய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள், 1953 என்று எனக்கு ஞாபகம், ஒரு சட்டத்தை இந்த மன்றத்தில் கொண்டு வந்தார்கள். வெளி மாநிலத்திலிருந்து வருகிற,



அவுட் ஆஃப் ஸ்டேட் டாக்ஸ் என்று சொல்லப்படுகிற ஜவுளித் துணியின் மீது $1\frac{1}{4}$ அணாவிற்கு மேல் $\frac{1}{4}$ அணா டியூட்டியாகச் சேர்த்து $1\frac{1}{2}$ அணா என்று வரி போட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டில், வெளி மாநிலத்திலிருந்து வருகிற துணிகள் மீது சென்னை அரசாங்கம் இப்படி அடிஷனல் டியூட்டி, எக்ஸைஸ் டியூட்டி என்று விதிப்பதற்குச் சட்டம் இல்லை, "அதிகாரம் இல்லை என்று சொல்லி, அதை ரத்து செய்தார்கள். இது என் நினைவிற்கு வரக் காரணம் நான் அப்போது ஒரு ஜவுளிக் கடையில் சம்பளத்திற்கு இருந்தேன். அன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய கடையின் கணக்குப்படி 278 ஆயிரம் ரூபாய் கட்டவேண்டியிருந்திருக்கும். இந்த மாநிலம் முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்குக் கட்டவேண்டியிருந்திருக்கும். ஆனால் அவுட் ஆஃப் ஸ்டேட் டாக்ஸ் டில்லிக்கு உட்பட்ட காரணத்தினால், இந்தக் கட்டவேண்டிய அவசியமில்லை என்று ஆகியது.

இந்த மாநிலத்தின் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும், மாநிலத்தைத் தொழில் வளமாக்கவேண்டும் என்று வாயளவில் பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர, இதற்கான வழிகள், முறைகள் என்ன என்பதை உலகத்தைப் பார்த்து, இந்திய நாட்டைப் பார்த்து, மாநிலத்தைப் பார்த்து எண்ணவேண்டிய நிலையில் இருக்கிறோம். கட்சிகளை மறந்து, கட்சிக் காழ்ப்புகளை மறந்து, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட முறையில் செயல்பட வேண்டும். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற கலைஞர் அவர்களாக இருந்தாலும், அதை ஆதரித்துப் பேசுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த மாநிலத்தில் இருக்கிற $4\frac{1}{2}$ கோடி மக்களுக்கும், இந்திய நாட்டில் மற்ற மாநிலங்களில் இருக்கிற மக்களுக்கும் விடிவு தருகிற தீர்மானம் என்பதைக் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட முறையில் சிந்திக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். மற்றொன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தியத் தாயின் கழுத்தில் கூட்டாட்சி என்ற உண்மையான தாலி தொங்கிக்கொண்டிருக்கிறது. அது உண்மையான கூட்டாட்சித் தாலி. அந்தத் தாலியை இன்றைக்குச் சுமந்து கொண்டிருப்பது, அந்தத் தாலிக்குப் பாதுகாப்பாக இருப்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் என்று சொல்கிற தாலிச் சரடு. இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தெரியும். கட்டுக் கழுத்திகளுக்குத் தெரியும். அந்த தாலிச் சரடு பலவீனப்பட்டுப் போகிற காலத்தில் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது திருவாதிரை நாளன்றோ மஞ்சள் தடவி மீண்டும் ஒரு தடவை தாலியைத் தாங்குவதற்கு கயிறை மாற்றிக்கொள்வார்கள். இந்த மத்தியப் பேரரசின் கழுத்தில் கூட்டாட்சி என்கிற தாலியை அரசியல் அமைப்புச் சட்டம் என்ற தாலிச்

சாட்டைக் கொண்டு கட்டும்போது, அப்போதே அந்த சாட்டில் 2, 3 பிரிகள் பிரிந்திருந்தன. ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்தத் தாலிச் சரடு அறுந்து போகிற நிலையில் ஒவ்வொரு கட்டத்திலும் அதில் முடிச்சு போடப்பட்டு இது வரை முடிச்சுப் போட்டு, முடிச்சுப் போட்டு 33 முடிச்சுகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, தாலியைத் தாங்கக் கூடிய தாலிச் சரடும் பலவீனப்பட்டிருக்கிறது. இனி அரசியல் அமைப்புச் சட்டம் என்ற சரட்டை முழுமையாக மாற்றி புதிய மஞ்சள் சரட்டில் பொன்னொளி வீசுகிற இந்தியக் கூட்டாட்சி என்கிற தாலியை இந்தியத் தாயின் கழுத்தில் கட்டுவதற்குக் கட்சி மாச்சரியங்களை விடுங்கள். இல்லையென்றால் பலவீனப்பட்டிருக்கிற இந்தத் தாலிச் சரடு அறுந்து போகும் என்று மட்டும் கூறி மாநில சுயாட்சி, மத்தியில் உண்மையான கூட்டாட்சி மலர என்னுடைய கருத்தை மேலும் வலியுறுத்தி உரையை முடித்து அமைகிறேன். வணக்கம்.

THIRU G. VASANTHA PAI: Hon. Vice-Chairman, first of all it is my duty to clear up some misapprehensions that have been raised during this debate. My hon. Friend Thiru Wahab referred to the fact that in the year 1946, Mr. Jinnah was responsible for an agitation for powers for the States, while the Congress was against it and gave up the earlier resolution on Linguistic Provinces. I would like to clear Thiru Wahab of the conception which he has got about what his leader has said. I would like to quote the statement of Thiru Maulana Abdul Kalam Azad about the activities of the Muslim League in those days. The Muslim League evidetly and apparently was a non-political organisation, for all apparent purposes and for all transient purposes; but it was really helping the British Government to create and continue India as a slave country. This is what Thiru Abul Kalam Azad has stated . . . . . . . .

(Thiru K. S. Abdul Wahab rose).

Sir, I am not yielding.

"The Muslim League entered into the second phase of its activities when it found that the Government was compelled to introduce various reforms as a result of Congress pressure. It was somewhat disturbed when it saw the Congress achieving its objects step by step. The League still remained aloof from the political struggle, but as soon as an advance was made it put in a claim on behalf of the Muslim community. This programme of the



Muslim League suited Government well. In fact, there are reasons to think that the League was acting according to the wishes of the British. During the Morley-Minto Reforms as well as during the Montford Scheme of Provincial autonomy, this was the attitude adopted by the League."

Thiru Wahab told this House something as if to defend Mr. Jinnah. I think that Mr. Jinnah was responsible for the destruction of unity; he was the person who was responsible for the bifurcation of this country.

(Thiru K. S. Abdul Wahab rose.)

THIRU G. VASANTHA PAI: Sir, I am not yielding. I am not yielding the floor to the hon. Member. Let him give his views after I finish my point.

I am referring to the fact that Thiru Wahab referred to two things which are very ominous and which even this Government have not referred to. One thing is that Mr. Jinnah's separation of the country and the establishment of Pakistan arose because powers were not given to the States. The second thing which he referred to was the fact that Mr. Mujibur Rahman fought against Pakistan because provincial autonomy was not conceded. So, this is a warning to this House which is discussing the very important Resolution which says that India is a vast country with people of different languages, civilisations and cultures and hence the State should have freedom of action and sufficient powers to secure its progress without impairing the unity of the country. While moving this Resolution, the Hon. the Chief Minister has correctly stated that the integrity and unity of this country are the prime concern. When such is the case, was the hon. Member Thiru Wahab pointing out that if autonomy was not conceded, it would result in what Mr. Jinnah did or what Mr. Mujibur Rhman did recently? In that respect, his speech was absolutely mischievous. I would like to say that I differ from him and he should not have made such a speech.

THIRU K. S. ABDUL WAHAB: Sir, I have got a right to refer to what I feel. If oppression is caused, rebellion will be the result. Oppression leads to rebellion. Such conditions should not prevail. That was what I was trying to press. The reasonable

request of the Government is the giving of more powers to the State. If it is conceded, there will be no question of separation. Why should this request for more powers be rejected?

THIRU G. VASANTHA PAI : Now, Sir, the whole cat has come out of the bag. The hon. Member said that rebellion would come about if the request was rejected. That is not what the Government have stated. With great respect to our Chief Minister, the Government have not stated that..............

(Thiru K. S. Abdul Wahab rose.)

Sir, I am not yielding the floor to the hon. Member.

*மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். கணபதி)*: உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். தயவுசெய்து இந்த அவையின் கௌரவத்தைக் காக்குமாறு வேண்டுகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, I do not want to allow unnecessary interruptions in my speech. I must have my say, because the hon. Member had his say. The Resolution speaks of integrity of India. The Resolution clearly says that "in order to secure the integrity of India with people of different languages, civilisation and culture.......................

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

Here there is no question of the integrity of India being affected. So, the suggestion of my hon. Friend Thiru Wahab is totally out of place and actually it is absolutely mischievous. It has no place here and has no reference to this Resolution at all, because I must clear the D.M.K. Government from any such charge that might be made after the speech of Thiru Abdul Wahab that they are attempting to have a rebellion and that if the request for State autonomy is not granted, they are going to secede from India. I think the Hon. the Chief Minister will agree with me wholeheartedly. It is not his intention and he has made it clear both in the legislature as well as outside. Therefore, any such mischievous interpretation will not do credit to this Government. I have got to say only one or two things. The D.M.K. Government, like the previous Governments in Tamil Nadu, have acted in a robust manner in the matter of administration and I always thought



that our Chief Minister, with the whole galaxy of his colleagues, was like a tug of war, pulling together and it was quite right because they could fight even against the Centre. But, Sir, we should think of this Resolution from how the other States are. There is no other State in the whole of the country today which is as well administered as Tamil Nadu. I must give this credit to them, because we cannot equate Tamil Nadu and its administration with the other States. When this Resolution is passed, there are a lot of mischievous persons who will try to spread fissiparous tendencies which might undermine the unity of the country. I think the Government can have the Resolution passed because they are in a majority. I would like to say what I feel about it. I have gone all over India and I have seen conditions in other States. I congratulate this Government, though it may not be Congress Government, on the excellent way in which they are managing the affairs internally as well as the affairs with other States and the Centre. But this should become an eye-opener for everybody because the Governments in the other States in the country are not functioning properly; there is rampant corruption, there is corruption of a high order, there is maladministration, there is looting, arson and there is no food in other places in the country. In Madras at least, there is somewhat orderly Government in spite of price rises I appeal to this Government not to press this Resolution to its logical conclusion, because we must think of India as a whole. There are persons who, despite the fact that they support this Resolution and this Government, might try to encourage fissiparous tendencies, to go away as Pakistan has gone, to go away as other countries in the Middle East and the Far East have gone. I do not want this Resolution to have that effect. Yesterday, obviously an effort was made to refer to a confrontation with the Centre. I appeal to the Hon. the Chief Minister and his stalwart body of Ministers who are ably assisting him not to have a confrontation with the Centre. I am speaking as an Indian. I am an Indian first, before I am a Member of this House. I am an Indian first, before I m a citizen of this State. I love my State as well as my country. I appeal to the Hon. the Chief Minister not to have a confrontation with the Centre. We must control any mischievous tendency which has the effect of propagating that idea elsewhere. There must be restraint. I fully agree with the Hon. the Chief Minister on the question of

in other countries. In the United States of America, the residuary power with the States was less. In Canada, by section 92 of the British North America Act, 1867, it was laid down that the residuary power should be with the Centre. The same thing happened in Australia. Australia copied the model of the United States of America, with some safeguards by which they enumerated certain powers again in the Concurrent List. India accepted it in the 1935 Act, but the Jinnah Memorandum was the mischief-maker. The Jinnah Memorandum said that the Hindu majority would tyrannise the Muslim provinces. That was the memorandum given by Jinnah to Sir Samuel Hoare. The Nehru report said that India required a strong Central Government and that, therefore, we must have power at the Centre. But, to that, the Jinnah Memorandum was a contra. Sir, this reminds me of the story of two mothers going to King Solomon each saying "This is my baby". King Solomon gave the baby to the real mother by threatening to cut the baby when she cried. But what did the British Government do? They cut the baby and gave it to Sir Samuel Hoare. In section 108 of the Government of India Act, the residuary power was given to the Central Government. It is only after that, that the Congress agitated for the residuary power to be there and pleaded for linguistic provinces. When partition came, with the aftermath of so much of bloodshed, the Congress reverted and the Dhar Committee Report came in. Thereafter, the residuary power was again given to the Centre under item 97 of List I.

Sir, I am only pointing this out that persons who have opportunities will try to misuse them and disrupt the unity of this country and I hope this Government will not allow it.

* செல்வி சி. யோகாம்பாள்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதிலே பெரு மகிழ்வு எய்துகிறேன்.

என்னுடைய பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு, எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் அவர் வழி நின்று அரும்பாடு பட்டு வருகின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து ஆதரித்துப் பேசிக்கொண்டிருக்கின்ற ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், ஒருமைப்பாடு உடைய இந்தியாவை, ஒரே இந்தியாவை, வலுவான இந்தியாவை, அந்நிய ஆதிக்கத்தை எதிர்க்க வல்ல இந்தியாவை விரும்புகின்றது என்பதற்கு ஏராளமான சான்றுகளை எடுத்துச் சொல்லலாம். குறிப்பாக, சீன நாடு படையெடுத்த நேரத்தில், இந்தியா பாகிஸ்தான் போர்க்கால நேரத்தில், தம்முடைய தமிழகம், அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் அப்போது எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலும் அதற்குப் பிறகு ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்திலும் எந்த அளவில் இந்திய நாட்டுக்கு இக்கட்டு வந்த நேரத்தில் எல்லாம் கை கொடுத்து உதவ முன்வந்தது என்பதை இங்கே சான்றாக எடுத்துச் சொல்லாமல் இருக்க இயலாது. அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில், அது பிரிவினை கேட்கிறது என்றும், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பலவீனம் வந்து விடும் என்றும் யாரும் ஐயப்பட, அச்சப்படத் தேவையில்லை என்பதைப் பேச்சின் துவக்கத்திலேயே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக எந்தக் கட்சி தேர்தலில் போட்டியிட்டாலும், பல வாக்குறுதிகள் தந்து வாக்கைக் கேட்பது வழக்கம். அந்த வாக்குகளைப் பெற்று ஆளும் கட்சியாக வந்த பிறகு அவற்றை நிறைவேற்றப் பாடுபடுவது தான் முறையான செயலாகும். அந்த அளவில் இங்கே பேசுகின்ற நேரத்தில் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்திய பூபாகத்திலே, தமிழகத்திலே தான் மிகச் சிறப்பான ஒரு ஆட்சி நடைபெறுகிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் வேறு ஒரு கோணத்தில் கருத்தை விடுத்தாலும் கூட, நாங்கள் எதற்காக மாநில சுயாட்சி கேட்கிறோம் என்றால், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே சிறப்பாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற அரசு, இன்னும் சில பல சாதனைகளை, ஆற்றல் மிகு சாதனைகளை, இந்த நாட்டு மக்களுக்காக ஆற்ற வேண்டும் என்பதற்காகத் தான். அதிக அதிகாரங்கள் என்று சொன்னால், அதை மத்திய அரசு திரும்ப எடுத்துக்கொள்ள முடியும் என்ற காரணத்தினால் தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாநில சுயாட்சி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறோம் என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே பேசிய உறுப்பினர்களில் ஒரு சிலர் சொன்னார்கள். எதிரிருக்கின்ற விலைவாசிபற்றி, சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களை எல்லாம் மக்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் தாய்க் குலத்தின்

பிரதிநிதியாக இருக்கும் காரணத்தினால், தாய்மார்கள் என்னைப் பார்த்துக் கேட்கின்றார்கள், 'எவ்வளவோ சாதித்திருக்கின்றீர்கள், ஆனால் இவ்வளவு சாதனைகள் இருந்தாலும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லையே.

(பிற்பகல் 6.10)

என்று கேட்கின்றார்கள். இந்த விலைவாசி உயர்விற்கு மத்திய அரசுதான் காரணம் என்று என்னதான் அவர்களிடம் திருப்பித் திருப்பிச் சொன்னாலும், அல்லது நிர்வாக சீர்திருத்தக் குழு எடுத்துச் சொல்லிய கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும், மக்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இப்படி இருக்கும் நேரத்தில்தான் எனக்கு முன்னர் பேசிய திரு. வசந்த பாய் அவர்கள்கூட, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் சிறப்பான ஒரு ஆட்சி நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அப்படி அவர் எடுத்துச் சொன்ன நேரத்திலே எனக்கு ஏற்பட்ட வேதனை என்னவென்றால், இந்தியாவில் ஒரு சில மாநிலங்களிலே ஒரு சில திங்கள்களுக்குள்ளாக போராட்டங்கள் ஏற்பட்டிருப்பது. குஜராத்திலே துப்பாக்கி முழக்கம் ஏற்பட்டிருக்கிறது. பல்வேறு மாநிலங்களிலே அதே நிலை நிலவுகிறது. அவை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? உணவுப் போராட்டம். மக்களின் அத்தியாவசியத் தேவைகளை ஈடேற்ற முடியாத ஒரு தன்மை. இவ்வளவிற்கும் அல்லல் படுவது மாநில அரசுகள். இவற்றுக்கெல்லாம் காரணம், மத்திய அரசு. ஆனால் அவற்றின் பொறுப்புக்களை ஏற்கவேண்டியது மாநில அரசுகள். தவறு செய்பவர்கள் மாநிலங்கள் இல்லை என்றாலும், தண்டனை அனுபவிப்பவர்கள் அவர்களாகத் தான் இருக்கின்றார்கள். இந்த நிலைமை மாறவேண்டும் என்பதற்காகத் தான் மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்கிறோம்.

சோஷலிஸம், சோஷலிஸம் என்று பேசும்போது அதன் அடிப்படை என்ன? Downtrodden என்று சொல்லப்படும் அடித்தளத்தில் அல்லல்படுபவர்கள், ஏழை எளியவர்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், அல்லல் படுகின்றார்களே அவர்கள் காக்கப்பட வேண்டும், அவர்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்றால், இந்த நாட்டின் பொருளாதாரம் உயர வேண்டும். இந்த நாட்டிலே உள்ள ஏழ்மை நிலையைப் போக்க வேண்டுமென்றால், பல்வேறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படும்போது பொருளாதாரம் உயர்வது மட்டுமில்லாமல், இன்னொருபுறம் வேலையில்லாத் திண்டாட்டத்தால் துன்பப்படும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க முடியும். இதற்காக, நாம் பக்கத்து மாநிலங்களோடு கலந்து பேசி உதவி பெற்று தொழில்பிவிருத்தியை ஊக்குவிக்கலாம் என்றால், அப்படி தொழிற்சாலைகளை உருவாக்கும் முயற்சியிலே மத்திய அரசின் அனுமதி சுலபத்திலே



கிடைப்பதில்லை. இங்கேகூட நேற்றைக்கு முன்தினம் பேசிய திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'அவ்வளவு அதிகாரங்களுக்குக்கூட போக வேண்டாம், கோட்டையைச் சுற்றியுள்ள புல்லை வெட்டுவதற்குக்கூட நமக்கு அதிகாரம் இல்லை' என்று. இப்படி சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கெல்லாம்கூட மத்திய அரசு குறுக்கே நிற்கின்றதே என்பது தான் நம்முடைய வருத்தம். எனவே நாம் இந்த நாட்டு மக்களுக்கு ஆற்றியுள்ள சாதனைகளை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்றுதான் நாம் மாநில சுயாட்சியைக் கேட்கிறோம். இதை திராவிட முன்னேற்றக் கழகம் கேட்பதால், இன்று ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பதால், ஆளும் கட்சியாக உள்ள இந்த இயக்கம் கேட்கும் காரணத்தினால் இதற்குப் பல்வேறு வண்ணங்களைப் பூசுகின்றார்கள். பிரிவினை என்று சொல்லுகின்றார்கள். ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் என்றெல்லாம் சொல்லுகின்றார்கள். பல்வேறு அரசியல் விற்பன்னர்கள், தேசியத் தலைவர்கள், மாமேதைகள் ஆகியோர் தந்த கருத்துக்களைத் தான் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஒட்டு மொத்தமாக 'மாநில சுயாட்சி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஏராளமான எடுத்துக்காட்டுகளோடு சொல்ல முடியும். ஆனால் இது என் முதல் பேச்சு, நேரமும் இடம் தராது என்ற காரணத்தினால், நான் இரண்டொரு உதாரணங்களை மட்டும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உத்தமர் காந்தி அவர்கள் இந்த இந்திய அரசியல் அமைப்பு எப்படி அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கும் கருத்துக்களில் ஒரே ஒரு கருத்தை மட்டும் எடுத்துவைக்க விரும்புகிறேன். காந்தியடிகளைப் பின்பற்றி வந்த சீடர்களில் முக்கியமானவர்களில் ஒருவரான

One of the followers of Gandhiji, Mr. K. Hanumanthayya said : "The first and foremost advice which Gandhiji gave in his pictureseque language was that the Constitutional structure of this country ought to be broad-based and pyramid-like. It should be build from the bottom and should taper right up to the top".

ஆனால் நடந்தது என்ன?

"What has been done is just the reverse. The initiative from the Provinces and the States and from the people has been taken away and all power has been concentrated in the Centre: This is exactly the kind of Constitution, Mahatma Gandhiji did not want and did not envisage."

இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு நாம் சொல்லும் கருத்துக்களும் அதே கருத்துக்கள்தான். மாநிலங்கள் வலுப்பெறச் செய்ய வேண்டும். அப்போதுதான் அவை மத்திய அரசுக்குச் சிறந்த பாதுகாப்பாக

[செல்வி சி. யோகாம்பாள்] [1974 ஏப்ரல் 26

அமையும் என்ற அளவில் அது அமைக்கப்பட வேண்டும். கீழே அகன்று மேலே போகப்போகக் குறுகி கோபுரம் போல உயர்ந்து நிற்க வேண்டும். ஆனால் அவற்றுக்கு மாநிலங்கள்தான் அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும், அந்த அளவிலே அதிகாரங்கள் கீழே பரவலாக, மேலே செல்லச் செல்லக் குறுகி, இப்படி அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதை எல்லாக் கட்சிக்காரர்களும் மறைமுகமாகச் சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள் நேரடியாகச் சொல்லுகிறோம். அவ்வளவு தான். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேர்தல் அறிக்கையில்கூட சொல்லப் பட்டிருக்கும் சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"The Constitutional provision relating to Centre-State relations should be amended to provide for more powers to the State consistent with the basic unity of the country. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இது இருக்கின்றது. இன்னும் கூடச் சொல்லுவேன், இதைப் பிரிவினை, பிரிவினை என்று சொல்லு கின்றார்கள், இந்த அவை அனுமதிக்குமானால், 1967 ஆம் ஆண்டிலே கல்கி பத்திரிகையில் மதிப்பிற்குரிய சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் குறிப்பிட்டிருந்த ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லுவேன்:

"எல்லா இராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவிற்கு உண்மையான சுயாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக டெல்லி சர்க்கார் அமைய வேண்டும் என்கிற அகில இந்தியப் பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடிப்படையாகக் கொண்டது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வா கத்திலே பொறுப்புகளை மத்திய அரசு மட்டும் குவிப்பது திறமையின்மையைத் தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் இராஜ்ய சர்க்கார்களை அடக்கி ஆளும் கொடுமையும் கோருகிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே திராவிட முன்னேற்றக் கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்று சொல்லுவது, காங்கிரஸ்காரர்கள் செய்து காட்டிய பூச்சாண்டியே" என்பது 19—3—1967-லே 'கல்கி' இதழிலே சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் குறிப்பிட்ட கருத்தாகும். எனவே பிரிவினை என்று பேசுவதும், இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் ஏற்படும் என்று பேசுவதும் பொருந்தாத வாதமேயாகும். நமது மக்களுக்கு வளமான வாழ்வினை அளிப்பதற்காகத் தான் தமிழகத்திலே மட்டுமில்லை, இந்தியாவிலுள்ள அவ்வளவு மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி கோருகிறோம். எனவே இந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரிக்கிறேன், வணக்கம்.



1974 ஏப்ரல் 26]

*திரு. எம். ஆறுமுகசாமி: மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின்மீது எனது கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்னால், முதலமைச்சர் அவர்கள் நேற்றைய முன்தினம், அதாவது முதல் நாளன்று, இந்தத் தீர்மானத்தின்மீது விவாதம் வரும்போது, இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இருவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு அவர்கள் கூறிய சமாதானம் எனக்கு ஏற்புடைத்தானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த மேலவை என்ன செய்கிறது, இது தேவையா என்பது போன்ற வாதங்களையெல்லாம் சில தீவிரவாதிகள் மற்ற அவையில் எழுப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்த மேலவை இருப்பதா, வேண்டாமா என்றும் அதிக அதிகாரம் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் உங்கள் தீர்மானத்திலே நீங்களே கோரும் நேரத்திலே, இந்த மேலவை கூட இருக்கும் இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டப் பேரவையில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை பிரதமர் அவர்களுக்கு அனுப்பும் முன்னர், இந்த அவையின் முன்னவர் என்ற முறையிலும் இந்த அவையின் கௌரவத்தைக் காப்பாற்றும் முறையிலும் அந்தத் தீர்மானத்தின் மீது இந்த அவையின் கருத்தையும் தெரிந்துகொண்டு, இந்த இரண்டு அவைகளின் கருத்துக்களையும் ஒருங்கிணைத்து, இரண்டையும் ஒன்றாக அனுப்பியிருந்தால், அது மிகவும் முறையானதாக இருந்திருக்கும், இந்த மேலவையின் கௌரவத்திற்கும் பொருந்தியதாக இருந்திருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6.20)

துணைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது பேசும்போதோ, இந்தப் பிரச்சினையின் மீது கருத்து தெரிவிக்கும்போதோ மிகவும் நிதானமும், அமைதியும், உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் போக்கும் இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன். எப்பொழுதும் இல்லாத முறையில், இன்றையதினம் அவையில் சற்று அதிகமான உணர்ச்சி காட்டப்பட்டு விட்டது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இங்கே சில நண்பர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் 'அம்மையார் அவர்கள் எல்லா அதிகாரங்களையும் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்ற பொருளில் ஒரு வாசகத்தைச் சொன்னார்கள். அதையே அடிக்கடி குறிப்பிட்டார்கள். 'அம்மையார்' என்று இங்கே குறிப்பிடுவது நம்முடைய நாட்டின் பிரதம அமைச்சர் அவர்களைத்தான் குறிக்கும் என்று நான் கருதுகிறேன். நம்முடைய தேசத்தின் பிரதம அமைச்சர் அவர்கள் இந்த அதிகாரங்களையெல்லாம் தாமாக

எடுத்துக் கொண்டாரா அல்லது அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துகிறாரா என்று பார்க்க வேண்டும். இதிலே நமக்குத் தெளிவு வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்டிருக்கின்ற அதிகாரங்களில் என்னென்ன தேவை என்று கேட்பது வேறு, என்னென்ன தேவையில்லை என்று சொல்வது வேறு. பிரதமர் தானாகவே எல்லா அதிகாரங்களையும் எடுத்துக்கொண்டதுபோல் பேசுவது தவறு. இங்கே உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்கள் அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையின் மீது கட்சிக் கண்ணோட்டமின்றி கருத்து தெரிவிக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு பிரச்சினையின் மீதும் ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் அவர் சொன்ன கருத்தை நான் புரிந்துகொண்ட விதம் இந்தத் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சி ஆட்சி செய்கிறது, அதனால் அது இந்த அதிகாரங்களைக் கேட்கிறது என்றோ, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றிருக்கின்ற காங்கிரஸ் கட்சி மத்திய அரசை நடத்துகிறது அதனால் அது மறுக்கிறது என்றோ, இந்தப் பிரச்சினை தோன்றவில்லை. பொதுவாக எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், மத்தியிலானாலும், மாநிலத்திலானாலும், இந்தப் பிரச்சினை பொதுவாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இது முழுமையாகத் தமிழ் நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படாத, திருத்தக் கூடாத ஒரு சட்டம் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் இந்தியா பூராவும் இருக்கின்ற மாநில சட்ட மன்றங்களும் நாடாளுமன்றமும் திருப்திப்படுத்தப்பட்டு அது திருத்தப்பட வேண்டும். எனவே இந்தப் பிரச்சினையை அணுகுகின்றபோது, மிகவும் நாசூக்காக அணுக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பலர் பேசுகின்றபோது, அரசியல் அமைப்புச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அவையில் ஒருவரும் சொல்லாவிட்டாலும்கூட, இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டுமென்று வேறு ஒரு அவையில் சில உறுப்பினர்கள் பேசியதாக நான் பத்திரிகையில் படித்தேன். இந்த அரசியல் அமைப்புச் சட்டம் முதலில் எப்படி அரசியல் நிர்ணய சபையில் உருவாகியது என்று பார்க்க வேண்டும். இந்த அரசியல் நிர்ணய சபை எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று இங்கு பேசிய நண்பர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சமஸ்தானத்தில் இருக்கக்கூடிய மன்னர்கள் சுதந்திரமாக ஒரு தேர்தலை நடத்தி, அந்தப் பிரதிநிதிகளில் மூன்றில் ஒரு பங்கை அனுப்பினார்கள் என்று சொல்ல இயலாது. தேசம் பிரியாத நிலைமையில் இந்த அரசியல் நிர்ணய சபை உருவானது. இந்த அரசியல் நிர்ணய சபையை உருவாக்கு





வதற்கு முன்னால், இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு முன்னால், 1946-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் கேபினெட் மிஷன் இங்கு வந்தது. அந்த மிஷன் வந்தவுடனே ஒவ்வொரு கட்சியையும் கூப்பிட்டார்கள். எத்தகைய அரசியல் அமைப்புச் சட்டம், எத்தகைய அரசியல் சீர்திருத்தங்களை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டபோது இந்தியாவில் இருக்கக்கூடிய மிகப் பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சி அரசியல் அமைப்புச் சட்டம் எப்படி இருக்க வேண்டுமென்று தன்னுடைய கருத்தைச் சொன்னது. ஒரு பெடரல் யூனியன், பல சமஷ்டிகள் இணைந்த ஒரு ஒன்றியம் என்ற பொருளில் காங்கிரஸ் கட்சி தனது மெமோராண்டத்தில் குறிப்பிட்டது. இந்தியா இந்து மாகாணங்களாகவும், முஸ்லிம் மாகாணங்களாகவும், இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் லீக் கட்சி கூறியது. அப்படிப் பிரிக்கப்பட்ட மாகாணங்கள் அவர்களுக்குள் ஒரு பெடரேஷனை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் பின் எல்லோரும் ஒரு யூனியனில் இணையவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. " for a free, voluntary and democratic Iudian Union of sovereign units " தானாக இணைந்துகொள்கின்ற சுதந்திரமான ஒரு ஜனநாயக அங்கங்களின் ஒன்றியம் என்றுதான் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் குறிப்பிட்டார்கள். எனவே அதைக் கேட்கின்றபோது பிரிவினை என்னும் பிரச்சினையை யாரும் எழுப்பவில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நம்முடைய அரசியல் நிர்ணய சபை 1946-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி காலை 11 மணியளவில் கூடுகின்றபோது முஸ்லிம் லீக் கட்சியினர் அந்தச் சபைக்கு வரவில்லை. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட நேரம் எப்படிப்பட்டது என்று பார்க்க வேண்டும். 1946-ஆம் ஆண்டில் கூடிய அரசியல் நிர்ணய சபைக்கு முஸ்லீம் லீக் கட்சி வரவில்லை என்பது மட்டுமல்ல, பிரிவினையை வலியுறுத்தவும் தொடங்கியது. ஏற்கனவே 'பெடரல்' என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தாலும்கூட, அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணய சபை கூடுகின்ற வேளையில் ஒரு பிரிவினை வலியுறுத்தப்படுவதைக் கண்டோம். அதற்காகப் பல்வேறான முயற்சிகள், ரத்தக் களறிகள் தேசமெங்கும் நடைபெற்று வந்தன. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு நாம் எடுத்துக் கொண்ட காலகட்டம் முழுவதும் இந்தியாவில் ஒரு பக்கம் பிரிவினை, இன்னொரு பக்கம் காஷ்மீர் கிளர்ச்சி. இன்னும் மற்ற மாநிலங்களில் பிரிவினை வேண்டும் என்ற எண்ணம் நிலவி வந்தது. அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாரா சிங் தனி நாடு வேண்டும் என்று கூறி வந்தார்கள்—தோன்றிவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே தான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்

"The States are not administrative units or agencies of the Union Government"

என்று அழுத்தம் திருத்தமாக தமது உரையில் கூறியிருந்தாலும்கூட, அரசியல் நிர்ணய சபையில் இன்னொரு இடத்தில், அதற்கு எதிராகக் கூற வேண்டி நேரிட்டது. எதற்காகக் கூறினார் என்று நாம் கருதக் கூடத் தோன்றுகிறது. "The provisional Governments are required to work in subordination to the Central Government" இதே வாசகத்தை கான்ஸ்டிடியுவண்ட் அசெம்பிளி குறிப்பேடுகளில் காண முடியும். எனவே அவர் கூட முதலில்சொன்ன கருத்தை, கொஞ்ச நாட்கள் ஆனவுடனே, மாற்றிச் சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. required to work in subordination to the Central Government" என்றும் சொல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நான் எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், தேசத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபொழுது இருந்த சூழ்நிலை அவ்வளவு நல்லதாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். அன்று தேசத்தின் ஒற்றுமைதான் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களுக்குப் பிரதானமாக இருந்தது. ஆனால் அந்தச் சட்டம் முற்றிலும் மாற்ற முடியாத ஒரு பெரிய வேதம், அதைத் திருத்தவே கூடாது என்று சொல்வதை, நான் ஏற்றுக்கொள்ளவில்லை. 33 முறை அதைத் திருத்தியாகிவிட்டது. திருத்துவதற்காகவே போன இடைத் தேர்தலை, 1971-ல் நடத்தினோம். ஆகவே திருத்தக் கூடாது என்று சொன்னால், நான் ஏற்றுக்கொள்ள முடியாது. தேவைக்குத் திருத்தத்தான் வேண்டும். இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பொறுத்த வரையில், நாம் ஏற்றுக்கொள்கிறோம். நல்ல சட்டம் தான். இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தூக்கி வங்கக் கடலில் எறிய வேண்டிய அவசியம் இப்பொழுது வந்துவிடவில்லை. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கின்றபொழுது not because it is the best in the world, but because it is the best in the circumstances உலகத்திலேயே ரொம்ப உயர்ந்த அரசியல் அமைப்புச் சட்டம் என்று நான் சொல்லவில்லை. இன்றைய சூழ்நிலையில் இது ஒரு உயர்ந்த சட்டம் என்ற அளவில் ஏற்றுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6.30)

அவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, ஐக்கிய அமெரிக்க நாட்டில் அல்லது சோவியத் நாட்டில் இருப்பது போன்று ஏன் இருக்கக்கூடாது என்று கேட்டார்கள்.

உலகத்தின் அரசியல் அமைப்புச் சட்டங்களின் மிகப் பெரிய மேதை என்று கருதப்படக்கூடிய பேராசிரியர் வியரே அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றி India's new Constitution—Analysed—48 A.L.J. Page 22 என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

" The farmers of the Indian Constitution may have done well in not following slavishly any existing Federal Constitution. They have chosen rather to make use of such elements in Federal Constitutions as a thought likely to be of value to them." எனவே உலக நாடுகளில் பெடரல் கான்ஸ்ட்டிட்யூஷன்களில் இருக்கக் கூடிய நல்லவைகள் எவை என்று கருதினார்களோ அவைகளை இந்திய அரசியல், பொருளாதார சமுதாய சூழ்நிலைகளுக்கேற்ப இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கர்த்தாக்கள் எடுத்துக் கொண்டார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பவித்திரமானது, அதைத் தொடக் கூடாது என்று சொல்ல வரவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான அவசியத்தைப்பற்றிச் சொல்ல வருகிறேன். இங்கே முதலமைச்சரவர்கள் தம்முடைய தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி பற்றியும் இராஜமன்னார் குழு பரிந்துரைகள் பற்றியும் தமிழ் நாடு அரசின் பிரேரணைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும் இம்மேலவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், இதுவே கான்ஸ்ட்டிட்யூவண்ட் அசெம்பிளி போல, ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு எவைகளைச் சேர்க்க வேண்டும், எவைகளைச் சேர்க்கக் கூடாது என்று இங்கே கூடி விவாதிப்பதென்றால், துணைத் தலைவரவர்களே, அதற்கு எத்தனையோ நாட்களாகும். நாம் மேலெழுந்தவாரியாக விவாதிப்பதற்கே அவகாசம் போதாது. இதிலே பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கோரிக்கைகள் அத்தனையையும் மாநில சுயாட்சி என்ற பெயரில் கேட்கிறார்கள். திரு. பக்கர் சொன்னது போல, அந்தப் பெயர் மீது எனக்கு "அலர்ஜி" ஏற்பட்டதே கிடையாது. மாநில சுயாட்சி என்பது மாகாண சுயாட்சி என்று எல்லோராலும் உச்சரிக்கப்பட்டு வந்த வார்த்தை தான். இது புதிதாக வந்துவிடவில்லை. மாகாண சுயாட்சி 1935 ஆம் ஆண்டு கவர்ன்மெண்ட் ஆஃப் இந்தியா ஆக்ட் படி வந்தது. அதன்படி முன்னமேயே தேர்தல் நடத்தியிருக்கிறோம். எனவே மாகாண சுயாட்சி என்பது ஏற்கெனவே கூட அமுலில் இருந்து வந்திருக்கிறது. 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தில் கூட மாகாண சுயாட்சி இருந்தது. ஆகவே நான் மாநில சுயாட்சி என்ற

வார்த்தையைக் கேட்டு "அலர்ஜி" அடையவில்லை. "அலர்ஜி" என்பதற்குச் சரியான தமிழ் வார்த்தை, துணைத் தலைவரவர்களே, உடனடியாகச் சொல்ல எனக்குப புரியவில்லை.

மாண்புமிகு துணைத் தலைவர்: பிராஸல் என்று சொல்லலாம். ஆனால் அது சரியான மொழிபெயர்ப்பு இல்லை. அதிர்ச்சி என்று சொல்லலாம்.

திரு. எம். ஆறுமுகசாமி: ஆகவே அந்த அலர்ஜி என்ற சொல்லை அவர்கள் அதிகமாக உபயோகப்படுத்தினார்கள். அதற்கான தமிழ்ச் சொல் உடனடியாக நினைவிற்கு வராதத்தால், அதனை அப்படியே குறிப்பிடுகிறேன். நான் அந்த வார்த்தையைக் கேட்டு அலர்ஜி அடையவில்லை. அதே போல கூட்டாட்சி என்பதைக் கேட்டும் அலர்ஜி அடையவில்லை. பெடரல் என்பதன் தமிழ்ப் பொருள் சமஷ்டி என்று முந்தி உச்சரித்துக்கொண்டிருந்தோம். முன்பு 'கனம்' என்று சொல்லிக்கொண்டிருந்தோம். இப்போது 'மாண்புமிகு' என்று கூறுவதனால் என்ன மாற்றம் வந்து விட்டது? ஒன்றுமில்லை. சமஷ்டி என்பதை கூட்டாட்சி என்று சொன்னாலோ, மாகாண சுயாட்சி என்பதை மாநில சுயாட்சி என்று சொன்னாலோ, அதிலே எனக்கு அதிர்ச்சியோ, குழப்பமோ வரவில்லை. இந்தச் சொற்களின் மீது எனக்குக் கோபம் வரவில்லை. அழகான தமிழ்ச் சொல்லை நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காக எனக்குக் கோபம் வரவேண்டிய அவசியமில்லை. ஆனால் வியாக்கியானங்கள் சொல்வதில் பலப்பல இருக்கின்றன. சுயாட்சி என்பதற்குப் பல விதமான விளக்கங்கள் தரப்படுகின்றன. முதலமைச்சரவர்கள் பன்னிப் பன்னிச் சொல்கிறார்கள். நேற்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஒரு உறுப்பினர் அவர்கள் பேசிய போது குறுக்கிட்டுச் சொன்னார்கள். என்ன அவர் வாயிலிருந்து வரவேண்டுமென்று எதிர்பார்த்தேனோ அதை அந்த க்ஷணத்தில் அவர்கள் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால், "நீங்கள் தனி நாடு பிரிவது என்பதைப்பற்றியெல்லாம் சேர்த்துப் பேசிக் குழப்பாதீர்கள்" என்று சொன்னார்கள். துணைத் தலைவரவர்களே, உங்கள் வாயிலாக முதலமைச்சரவர்களுக்கும், இந்த அமைச்சரவைக்கும் சொல்லிக்கொள்வேன், மாநில சுயாட்சிபற்றி என்ன விளக்கம் சொன்னாலும், தேசத்தில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்களில் பெரும் பகுதியினர் உங்களுக்குப் பிரிவினை நோக்கம்தான் இதன் பின்வே உள்ளது என்று நம்புகிறார்கள், சொல்கிறார்கள். முதலமைச்சரவர்கள் தெளிவாகச் சட்ட மன்றத்தில் சொன்னார்கள், யாருடைய தேச பக்திக்கும் குறைந்த தேச பக்தி என்னுடையதல்ல என்று சொன்னார்கள். நான் என் காதால் கேட்டேன். ஆனாலும் கூட, ஏன் இந்த நிலைமை? தாய் ஒரு அடி பாய்ந்தால் குட்டி 8 அடி



பாயும் என்பார்கள். நீங்கள் மாநில சுயாட்சி என்று சொன்னாலும்—எந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தேவை என்று சொல்கிறீர்களோ அந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்கவேண்டுமா, மத்தியில் இருக்கவேண்டுமா என்ற பிரச்சினைக்குள்ளே நான் போக விரும்பவில்லை—உங்கள் கீழே இருக்கக் கூடிய அணிகள் பழக்கப்பட்டு விட்ட காரணத்தினாலும், தமிழ்நாட்டில் மத்திய அரசோடு மோதுவது போன்ற உணர்வை உண்டாக்கிவிட்ட காரணத்தினாலும் இந்த நிலையை உண்டாக்கி வருகின்றனர். திரு. வசந்தபாய் அவர்கள் சொன்ன கருத்தை நான் அப்படியே ஆதரிக்கிறேன். மத்திய அரசோடு நீங்கள் எங்கேயும் மோதிக்கொள்ளவில்லை, மோத விரும்பவில்லை. மத்திய அரசோடு எதற்காக மோதிக்கொள்கிறீர்கள்? மத்திய அரசு இந்த அரசுக்கு எதிராக என்ன நடவடிக்கை, கட்சி என்ற அடிப்படையிலோ, அரசு என்ற அடிப்படையிலோ எடுத்திருக்கிறது என்றால், ஒன்றுமில்லை. ஆகவே மத்திய அரசும், மாநில அரசும் மோதிக் கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் நீங்கள் திருத்தம் கோருகிறீர்கள். அண்மையில் ஒரு நூல் வெளி வந்திருக்கிறது. மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி என்ற நூலாகும் அது. அவர் மிகவும் பிரயாசை எடுத்துக்கொண்டு, அரும்பாடு பட்டு, உழைத்து, அந்த நூலை அளித்திருக்கிறார். அவருடைய உழைப்பிற்காக, இந்தக் கருத்தை தமிழக மக்களுக்கு விளக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் பட்டிருக்கிற பிரயாசைக்காக நான் நிச்சயமாக அவரைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் சாதாரணமாக அரசியல்வாதிகள் அத்தகைய பிரயாசை எடுத்துக்கொண்டு எழுத இயலாது. காரணம் அவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைக்காது. ரொம்பக் கஷ்டமான காரியம். இது யாராவது ரிசர்ச் செய்பவர்கள், ஆய்வு நடத்துபவர்கள், பேராசிரியர்கள், ஓய்வு இருப்பவர்கள் செய்யக் கூடிய காரியம். அவர் தனக்கு இருக்கும் பல வேலைகளுக்கு மத்தியில் இந்த நூலை எழுதினார் என்பதற்காக அவரது இந்த முயற்சியைப் பாராட்டுகிறேன். அவர் அந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஏறத்தாழ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருங்கால வேலைக்கான வழி காட்டி என்று கொண்டால், தவறு இருக்காது என்று. துணைத் தலைவரவர்களே, நான் கருதுகிறேன். அப்படிப் பட்ட நூலில் அவர் சொல்கிறார். 'முன்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற கால் அணிக்குள் இந்த அரசை ஆள்வோர் தங்கள் கால்களை விட்டுக் கொண்டு ஒரு உள் நாட்டு காலனி ஆதிக்க முறையைத் தொடங்கி ஏகாதிபத்தியம் நடத்துகிறார்கள். இதை நாம் இன்னமும் அனுமதிக்கலாமா' என்று இது பக்கம் 541-இல் இருக்கிறது. ஏகாதிபத்தியம் என்று சொன்னால் நான் கேள்விப்பட்டதெல்லாம் வேற்று நாட்டிலிருந்து இன்னொரு நாட்டைப பிடித்து . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதற்குப் பெயர் அந்நிய ஏகாதிபத்தியம். இது ஏக ஆதிபத்தியம். தங்களிடமே எல்லா அதிகாரத்தையும் வைத்துக்கொண்டிருப்பது இந்த ஏகாதிபத்தியம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, ஏகாதிபத்தியம் என்பது 'இம்பீரியலிசம்' என்ற ஆங்கில வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். வெளிநாட்டு இம்பீரியலிசம் இல்லை, உள்நாட்டு இம்பீரியலிசம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியே வைத்துக்கொண்டால் கூட இந்த தேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கும் ஒரு அரசை ஏகாதிபத்தியம் என்று சொல்வது முறைதானா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தப் பாராளுமன்றத்தில் உறுப்பினராக ஏழு ஆண்டு இருந்து, அந்த அனுபவத்தை நேரடியாகக் கொண்டு மாநிலங்களுக்கு அதிகாரம் தராமல் மத்தியில் ஒரு ஏக ஆதிபத்தியம் இருக்கிறதென்று உணர்ந்து எழுதியிருக்கிறார்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** நான் சொல்வதெல்லாம். .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்து விடுங்கள்; இன்னும் பலர் பேச வேண்டும்.

(பிற்பகல் 6.40)

**திரு. எம். ஆறுமுகசாமி :** இன்னும் சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன். துணைத் தலைவரவர்களே, அருள்கூர்ந்து சில நிமிடங்கள் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் எவ்வளவு நிமிடங்கள் ஆகும்?

**திரு. எம். ஆறுமுகசாமி :** இன்னும் சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன். 10 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஐந்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** "நீங்கள் ஸ்தாபித்திருக்கும் உள்நாட்டுக் காலனி முறை நாட்டில் பல பெரியார்களைத்தான் ஏற்படுத்துமென்று" சொல்லுகிறீர்கள். ஒரு இடத்தில் உள் நாட்டுக் காலனி என்றும், அடிமை நாடு



என்றும் சொல்லுகிறீர்கள். மற்றொரு இடத்தில் மத்திய அரசை ஏகாதிபத்தியம் என்று சொல்கிறீர்கள். ஏகாதிபத்தியம் என்று சொன்னால், மத்திய அரசை எதிர்த்து சண்டை போடுகிறீர்களா? ஏகாதிபத்தியத்தை எதிர்த்து காலனி நாட்டு மக்கள், அடிமை நாட்டு மக்கள் போராடுவது போன்ற ஒரு யுத்தத்தைப் பிரகடனப்படுத்த விரும்புகிறீர்களா? அவர் சாதுரியமாக, பெரியார்களைத் தோற்றுவிக்குமென்று சொல்லியிருக்கிறார். தான் செய்வேன் என்று சொல்லவில்லை. ஆனாலும்கூட பெரியார் அவர்களின் கருத்துக்களை இந்த நூல் தோற்றுவிக்கும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட பெரியார்களுடைய வார்த்தைகளுக்கு நாட்டிலே செல்வாக்கு ஏற்படக்கூடாது; எனவே எங்களுடைய வாதத்தை ஏற்றுக்கொள்ளுங்களென்று மத்திய அரசைக் கேட்பதுதான் அது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** பெரியார் அவர்களுடைய வார்த்தைக்கு செல்வாக்கு . . . அதைத்தான் நான் ஏற்கெனவே ஒரு முறை சொன்னேன். பிரிவினைக்கான அத்தனை காரணங்களும் இருக்கின்றன, ஆகவே மாநில சுயாட்சி கொடுங்கள் என்று சொல்லப்படுகிறது. பிரிவினைக்கான அத்தனை காரணங்களும் இருக்கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் தான் பிரிவினையை விரும்பவில்லையே; ஏன் அதைச் சேர்க்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மக்கள் தவறான பாதையில் போகக் கூடாது என்பதற்காக எச்சரிக்கையாக, அதற்கு அவசியமே ஏற்பட வேண்டாம்; மாநில சுயாட்சியினால் இந்தத் தவறுகளை எல்லாம் திருத்திவிடலாமென்று சொல்லப்படுகிறது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** துணைத் தலைவரவர்களே, இந்த நாட்டின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், "நீங்கள் இந்தப் பிரிவினையை விரும்பவில்லை"' என்று. ஆனால், ஏன் நீங்கள் ஒவ்வொரு முறையும் பிரிவினைக்கான காரணங்கள் இருக்கின்றனவென்று சொல்லுகிறீர்கள். (குறுக்கீடு) என்னைப் பொறுத்த வரையில், என்ன சொன்னேன். தேசம் ஒத்துக்கொள்ள வேண்டும். நான் உங்களை அறிந்தவன். அதனால் நான் உணர்கிறேன். நான் ஒருவன் புரிந்து கொள்வதல்ல அது. எனவே நீங்கள் மக்களிடத்தில் பிரிவினைக்கான காரணங்கள் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டு போனால், அது நிச்சயமாக ஒருமைப் பாட்டைக் குலைக்கும். எனவே எந்த ஒருமைப் பாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அரசியல் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்று நினைக்கிறாரோ, அது தூளாக்கப் படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரத்தை எடுத்துக்கொள்வோம். நீண்ட, பெரிய விவாதத்திற்குப் பிறகுதான் இந்த அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்ட விவாதப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். உறுப்பு 360; 365 இவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள். இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பு 360 பற்றி அரசியல் நிர்ணய சபையில் வாதம் எழுந்தபோது என்ன நேரிட்டது என்பதைப் பார்க்க வேண்டும். யுத்த காலத்திலே 1949-ஆம் வருஷம் அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வாராமல் வாதத்தில் இருந்தபோதே, தேசத்திலே பணத்தின் மதிப்பு குறைக்கப்பட்டது. அப்படி பணத்தின் மதிப்பு குறைக்கப்பட்டபோது அதனால் பண வீக்கப் பிரச்சினைகள் தோன்றின. அதைச் சமாளிப்பதற்காக மாநில அரசுகள் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசு கேட்டுக்கொண்டது. 1949-ல் மத்திய அரசு எல்லா மாநில அரசுகளையும் கேட்டுக்கொண்டது. ஆனால் என்ன நடந்தது? சென்னையும், பம்பாயும் அதை நிராகரித்துவிட்டன, இது 1949-லே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இதைப்பற்றிச் சொல்கிறார்கள். எனவே இதை நாம் விரும்பாவிட்டாலும், 'கான்ஸ்டிடியூஷன் டிராப்டிங் கமிட்டி'-யில் வாராமல், அரசியல் நிர்ணய சபைக்கு நேரடியாக வந்து, இந்த ஷரத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுபோலத்தான் 365-வது உறுப்பு. மத்திய அரசு ஒரு தீர்மானத்தைச் சொல்லுகிறது. நிலச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று ஒரு ஆலோசனை 'கைட் லைன்' கொடுக்கிறது. அதை இந்த அரசு செய்துவிட்டது. ஆனால் ஆந்திர மாநிலம் செய்யவில்லை; மாட்டிய மாநிலம் செய்யவில்லை.

(மாண்புமிகு துணைத் தலைவர் மணியடித்தார்.)

சீக்கிரம் முடித்துவிடுகிறேன். ஒரு மாநிலத்தில் ஒரு முறையும். .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, நிலச் சீர்திருத்தம் போன்ற முற்போக்கான திட்டங்களை நிறைவேற்றிவிட்டால், அந்த அரசைத் தேர்ந்தெடுத்த மக்களே, அந்த அரசை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றி விடுவார்கள். அந்த மக்கள் கேட்க உரிமை படைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொல்வதை அப்படியே திருப்பிப் பார்த்தால், மத்தியில் வருகின்ற சர்க்கார் முற்போக்கு சர்க்காராக இல்லாமல், பிற்போக்கு சர்க்காராக இருந்து, நிலச் சீர்திருத்தம் தேவையில்லை என்று சொன்னால், அப்போது என்ன செய்வது?



திரு. எம். ஆறுமுகசாமி: அந்த ஆபத்தும் இருக்கிறது. ஒரு மாநிலத்திலே வலதுசாரிக் கொள்கையுடைய சர்க்கார் இருந்து, இன்னொரு மாநிலத்தில் இடதுசாரிக் கொள்கையுடைய சர்க்கார் வந்தால், இந்த தேசம் முழுமையும் ஒரே மாதிரியான வளர்ச்சி எப்படி இருக்க முடியும்; ஒரே மாதிரியான லட்சியம் எப்படி இருக்க முடியும்; ஒரேமாதிரியான சமுதாயத்தை எப்படி உருவாக்க முடியும்? எனவே ஒரேமாதிரியான அமைப்பு வேண்டுமென்று சொன்னால், இந்த மாநிலங்களை இணைத்து, அவைகளை ஊக்குவித்து நடத்துகிற பொறுப்பு மத்திய அரசுக்கு வேண்டுமென்பதற்காக உறுப்பு 365-ஐ எடுத்துச கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்தியிலே ஒரு பிற்போக்குக் கொள்கை படைத்த சர்க்கார் வந்துவிட்டால், அப்போது தாங்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு மாநிலத்திலும். அந்தப் பிற்போக்குக் கொள்கைகள்தான் அமுல் படுத்தப்பட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப் படுமானால், அப்போது என்ன செய்வது?

திரு. எம். ஆறுமுகசாமி: நிச்சயமாக அந்தச் சங்கடம் வரத்தான் செய்யும். துணைத் தலைவரவர்களே, இந்த அரசியல் சட்டத்தை அப்போது தூக்கி எறிவதற்கு மக்கள் தயாராகிவிடுவார்கள். அந்த மாதிரி நிலைமை வரலாம். இப்போது நான் அப்படிச் செய்யச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருகிறபோது தேசம் முழுவதும். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தூக்கி எறியலாமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது கடலிலா அல்லது வேறு எங்கேயாவதா என்பது வேறு பிரச்னை. ஆகவே அரசியல் சட்டத்தின் மீது கோபம் வரும்போது, சில நேரங்களில் சொல்லப்படுகிற வார்த்தைகளையே வாதத்தின் அடிப்படையாக வைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக திரு. ஆறுமுகசாமி அவர்கள், ஆத்திரத்திலே தூக்கி எறிவார்கள் என்று சொன்னது ஒரு உதாரணம்.

திரு. எம். ஆறுமுகசாமி: துணைத் தலைவரவர்களே, நான் தூக்கி எறிய மாட்டேன். நான் தூக்கி எறியச் சொல்லவில்லை. மக்கள் தூக்கி எறிவார்களென்று சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இது அதைவிடக் கொடுமை.

திரு. எம். ஆறுமுகசாமி: அதை நான் ஆதரிப்பதாக அல்லது வைக்குவிப்பதாகப் பொருளல்ல. இன்றைக்கு அதுவல்ல நிலைமை. தேசம் முழுவதிலும் ஒரு நெருக்கடி இருக்கிறது. ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறதென்று பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்படி ஆபத்து ஏற்பட்டுள்ள தருவாயில், பல மாநிலங்களிலுள்ள அரசுகள் பலவந்தமாக வெளியேற்றப்படுகிற இந்த நேரத்தில், பார்லிமெண்ட் உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து பலவந்தமாக ராஜினாமாக் கடிதம் எழுதி வாங்குகிற நேரத்தில்—இப்படிப்பட்டதொரு குழப்பமான நிலைமை நாட்டில் இருக்கும்போது, நாம் நம்முடைய பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றிட, கட்டாயம் தியாகம் செய்திட வேண்டிய நிலையில் இருக்கும்போது, இந்த மாநில சுயாட்சிப் பிரச்சினையை நீங்கள் வலியுறுத்தக் கூடாது; இது தேவையற்றது; இப்போது அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளக்கூடாது; இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றக்கூடாது என்று கூறி விடை பெறுகிறேன்.

* திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மேலவையிலே நமது தமிழக முதல்வரவர்கள் முன்மொழிந்துள்ள மாநில சுயாட்சித் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கும் தமிழரசுக் கழகத்தின் சார்பிலே, மகிழ்ச்சியுடனும், மிக்க உறுதியுடனும் ஆதரிக்க வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

மாநில சுயாட்சியைப்பற்றி நான் பேசுவது, இந்த மேலவையைப் பொறுத்தவரையில் முதல் பேச்சு!—என்னுடைய கன்னிப் பேச்சாகும். ஆனால் இதே மாநில சுயாட்சிக் கொள்கையைப்பற்றிப் பேசுவது எங்கள் தமிழரசுக் கழகத் தலைவர், சிலம்புச் செல்வர் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி கடந்த 27 ஆண்டுக்காலமாகப் பல நூறு பொதுக் கூட்டங்கள், கருத்தரங்குகள், கவி அரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றிலே பேசிப் பேசி என்னுடைய உதடும், நாவும் கன்றிப் போன பேச்சு! கன்றிக் காய்த்துப் போன பேச்சு! அப்படிக் காய்த்துப் போன கருத்தாக இருந்த மாநில சுயாட்சி இன்று கனிந்து வருகிற தருணத்திலே—இந்த மாநில சுயாட்சித் தீர்மானம் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு, மேலவையிலும் நிறைவேறுகிற நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்திலே—இந்த அவையில் என்னையும் ஒரு உறுப்பினராக இணைத்துக் கொண்டதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக எந்தக் கொள்கைக்காகத் தமிழரசுக் கழகத்தில் உறுதியாக இருந்து கொண்டிருக்கிறேனோ; எந்த ஒரு லட்சியத்திற்காக எங்கள் தலைவருடைய அடிச்சுவட்டைப்

யைப்பற்றிப் பாடுபட்டு வருகிறேனே, எதற்காகப் பல முறை சிறை சென்றிருக்கிறேனே, அந்த மாநில சுயாட்சிக் கொள்கை பற்றிப் பேசுகின்ற பேச்சே என்னுடைய முதல் பேச்சாக அமைந்தது என் பெரும் பாக்கிய மென்று நான் கருதுகிறேன். இந்த வாய்ப்பினைத் தேடித் தந்த மேதகு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், அவையின் மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சியின் அவசரம், அவசியம் பற்றி நான் பேசத் தொடங்கும் போதே, இங்கு வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே வழங்கி வந்த ஒரு நாடோடிப் பாடல் என் நினைவுக்கு வருகிறது.

"ஊரான், ஊரான் தோட்டத்திலே பின்னாய்
ஒருவன் போட்டான் வெள்ளரிக்காய்; அதைக்
காசுக்கு இரண்டு விற்கச் சொல்லி
காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்"

என்ற பாடல்தான் அது. நாடு விடுதலை பெற்று 27 ஆண்டுகளுக்குப் பின்னாலே இப்போது நம்முடைய நிலை என்னவென்று எண்ணிப் பார்க்கிறேன். 'முன்னே காகிதம் போட்டான் வெள்ளைக்காரன், இப்போதும் கட்டளை போடுகிறான் டெல்லிக்காரன்; அந்த வெள்ளைக்காரனுக்கும், டெல்லிக் காரனுக்கும் வித்தியாசம் என்னடி ஞானப் பெண்ணே என்று கேட்க வேண்டிய நிலையில்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்தியாவின் ஆட்சி பீடத்தில் ஆள் மாறியதே தவிர, அதிகார முறை மாறவில்லை; ஆதிக்க வெறியும் மாறவில்லை. பெயர் மட்டும் 'இந்திய யூனியன்' என்று வைத்துக்கொண்டிருக் கிறார்களே தவிர, நடப்பதெல்லாம் ஏகாதிபத்தியம்தான். அதைப்பற்றி இங்கே ஏற்கெனவே விவாதம் நடந்தது. ஏகாதிபத்தியம் என்றாலே ஒரே ஆட்சி ஆதிக்கம் செலுத்துவது என்று தான் பொருள். யூனியன் என்றால் கூட்டு. கூட்டு என்பது ஒரு கையிலே விரிந்திருக்கிற ஐந்து விரல்களையோ அல்லது ஒரு மலரிலே பிரிந்த இதழ்களையோ குறிக்காது. பல மலர்களைச் சேர்த்துக் கட்டிய மாலையைத்தான் கூட்டு என்று சொல்லலாம்; பல முத்துக்களைக் கோர்த்த சரத்தைத்தான் மாலையென்று; கூட்டு என்று சொல்லலாம்.

[திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்] [1974 ஏப்ரல் 26

ஆனால் இந்தியா வைத்துக்கொண்டிருக்கும் பெயர் யூனியன் என்பது, நடப்பதோ ஏகாதிபத்தியம். தஞ்சையில் உள்ள பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜ சோழன், டெல்லியில் அனுமதி பெற்றுக்கொண்டு கோயிலைக் கட்டியதாக வரலாறு இல்லை. 'அதே கோயிலில் அதே ராஜராஜன் சோழன் சிலையை வைக்கவேண்டுமென்று நாம் விரும்பினால் சிலையை உள்ளே வைக்காதே, வெளியே வை" என்று உத்தரவு போடுகிறது டெல்லி. நமது பாட்டனும் முப்பாட்டனும் ஓடிவிளையாடிய தீவுத் திடலில் ஆடு மாடுகள் தான் மேய வேண்டுமா? அழகு மாளிகைகள் கட்டலாமா என்று நாம் ஆலோசித்தால் அங்கே அடி எடுத்து வைக்க உனக்கு உரிமை இல்லை" என்று ஆணையிடுகிறது டெல்லி. இப்படித் தமிழ் இனத்தின் தன்மானத்தையே புண்படுத்தும் இழி நிலையை, மாற்றுவதற்காகவும் நாட்டு மக்களுக்கு நலம் பல இன்னும் வேகமாகச் செய்ய வேண்டும் என்பதற்காகவும்தான் மாநில சுயாட்சி கேட்கிறார்கள் நம்முடைய கலைஞர் முதல்வர் அவர்கள். அவருடைய உள்ளத்திற்குள்ளே இன்னும் பிரிவினை எண்ணம் ஒளிந்துகொண்டு இருப்பதாக எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தது போல் சில எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். முதல்வரைப் பற்றித்தான் அப்படிச் சொல்லுகிறார்கள். ஆனால், தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் 27 ஆண்டுக் காலமாக இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை வற்புறுத்தி வருகிறாரே—அதற்கு என்று ஒரு கட்சியே நடத்துகிறாரே—அதற்காக பல தியாகங்களும், பல போராட்டங்களும் நடத்தியிருக்கிறாரே பல நூல்களை எழுதிக் குவித்திருக்கிறாரே—அவரைக் கூடவா பிரிவினைவாதி என்று சொல்லுகிறார்கள்? அவரைப் பிரிவினைவாதி என்று சொல்லுவதற்கு யாருக்காவது நெஞ்சிலே உரம் இருக்க முடியுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உண்மையில் மாநில சுயாட்சி என்பது பழம் பெரும் தேசிய வாதிகளால் திட்டமிடப்பட்ட கொள்கையாகும். காந்தி அடிகள் மாநில சுயாட்சி என்று மட்டும் சொல்லவில்லை, அதற்கு மேல் "கிராம ராஜ்யம்" நடக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாநில சுயாட்சி கேட்கும் நமது முதல்வரையே பிரிவினைவாதி என்பவர்கள் கிராம ராஜ்யம் வேண்டுமென்ற காந்தி அடிகள் இப்போது இருந்தால் அவரை என்ன செய்வார்களோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையைத் தவிர்ப்பதற்கே மாநில சுயாட்சிதான் நல்ல மருந்து என்று மறைந்த அபுல் கலாம் ஆசாத் அவர்கள் சொன்னார்கள். அதை திரு. வகாப் அவர்களும் கூறினார்கள். இந்திய அரசிடமிருந்து மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்பது பிரிவினைக் கோரிக்கைதான் என்று குற்றம் சாட்டுகிறார்களே.



1974 ஏப்ரல் 26] [திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்]

இவர்கள், தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக, அதன் உரிமைக்காக, மக்கள் நலத்திற்காக நாம் குரல் கொடுத்தபோதெல்லாம், அதை எதிர்த்தவர்கள்தான், அதை மறுத்தவர்கள்தான் தெற்கெல்லை போராட்டம் நடத்திய போது இப்படித்தான் எதிர்த்தார்கள். இவர்கள்தான் எதிர்த்தார்கள். ஆனால் அங்கே தேவசகாயம், செல்லையா போன்றவர்களை பலி கொடுத்து பலநூறு தொண்டர்கள் சிறைக்குச் சென்று, நாட்டின் எல்லையை மீட்டு வெற்றி பெற்றோம். யார் அதை எதிர்த்தார்களோ, அவர்கள் விருதுநகரிலே வீழ்ந்து விட்ட பிறகு, கன்னியாகுமரியிலே கால் ஊன்றித்தான், இன்று அரசியல் நடத்த முடிகிறது. வடக்கெல்லையை மீட்க வேண்டும் என்று குரல் கொடுத்தபோதும் இவர்கள்தான் எதிர்த்தார்கள். இப்படித்தான் எதிர்த்தார்கள். இவர்களுடைய எதிர்ப்பை முறியடித்துத்தான் வடக்கெல்லை மீட்டோம். தமிழ் மொழியைக் காக்க நடந்த போராட்டத்தையும் தமிழ்நாட்டிற்கு "தமிழ் நாடு" என்று பெயர் சூட்டுவதையும் இவர்கள்தான் எதிர்த்தவர்கள்; இப்படித்தான் எதிர்த்தார்கள். இப்படி வழக்கமாக தமிழ் இனத்தின் உரிமையை எதிர்த்தவர்கள் தான், இன்றும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

அவர்கள் எதிர்த்து எந்தக் கொள்கையும் வெற்றி அடைந்ததில்லை, தமிழ் இனம் எந்தக் கோரிக்கையிலும் தோற்றதே இல்லை. ஆகவே, இந்த மாநில சுயாட்சிக் கோரிக்கையும் நிச்சயமாக வெற்றி பெறும் என்று நம்புகிறேன். இவர்கள் இதை எதிர்க்காமல் இருந்திருந்தாலாவது ஒருவேளை நாம் வெற்றியடைய முடியாதோ என்று ஐயப்படுவேன். வழக்கமாக எதிர்ப்பவர்கள், இதை எதிர்க்கும் காரணத்தால், வழக்கப்படியே நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்பதும் எனக்கு உறுதியாகத் தெரிகிறது.

என்னுடைய கன்னிப் பேச்சில் இன்னும் அதிகமாகப் பேசுவது ஒருவேளை அதிகப்பிரசங்கித்தனமாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். தமிழரசுக் கழகத் தலைவர், இதைப்பற்றிப் பேசுவதற்கென்றே அவதரித்தவர். நான், இதைப்பற்றி விரிவாகப் பேசுவார் என்ற காரணத்தால் இறுதியாக ஒன்றை மட்டும் சொல்கிறேன். இந்திய சுதந்திரம் எப்படி இந்திய மக்களுடைய பிறப்புரிமை என்று சொல்லப்பட்டதோ அதேபோல் மாநில சுயாட்சி என்பது தமிழ் இனத்தின் பிறப்புரிமை என்பதே எங்கள் தமிழரசுக் கழகத்தின் கொள்கை. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்த மேலவையின் கூட்டத்தைப் பொறுத்தவரையில், ஆட்சி வசதிக்காக, மக்கள் நலனுக்காக, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக மாநில சுயாட்சி தேவை என்று கருதலாம்! ஆனால், அது மட்டும் அல்ல எங்களுடைய கோரிக்கை. மாநில சுயாட்சி என்பது தமிழ் இனத்தின் பிறப்பு உரிமை. அதை அடைந்தே தீருவோம், அதைத் தடுப்பதற்கு உலகத்தில் எந்த சக்தியும் இல்லை

அந்தக் கோரிக்கைக்காக உயிரையும் கொடுக்க 27 ஆண்டுக் காலமாக தமிழரசுப் படை ஒன்று எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை இந்த அவைத் தலைவர் அவர்கள் மூலமாக நமது முதல்வர் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அது சின்னஞ் சிறிய படையாக இருக்கலாம். ஆனால் தியாகம் புரிவதிலே தேர்ச்சி பெற்ற படை அது! நமது மாநில சுயாட்சிக்காக உயிரைக் கொடுக்கவும், இரத்தத்தைச் சிந்தவும் தயாராக உள்ள படை அது என்று உறுதியாகக் கூறி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு மேலவை உப தலைவர் அவர்களே, நான் முதல் முதல் இந்த அவையில் பேச வந்திருக்கிறேன். ஆனால், அமைச்சர்களைப்பற்றிப் புண்படக்கூடிய வார்த்தைகளை நான் பேசப் போவதில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்து ஆகும். அதிக அதிகாரம் என்பது ஒரு மாநிலத்திற்கு மட்டும் அல்ல, ஒரு குடும்பத்திற்குக்கூட வேண்டும் என்பதுதான் ஒவ்வொருவருடைய நோக்கமாக இருக்கும். இப்போது நம்முடைய சில காரியங்களை நாமே செய்துகொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது.

இன்றைக்கு போலீசை எடுத்துக்கொண்டால், அதற்காக உள்ள அதிகாரம் நம்மிடம்தான் இருக்கிறது. அது இன்றைக்கு எந்த நிலையில் நடைபெற்று வருகிறது என்பது நான் சொல்லாமலே எல்லோருக்கும் தெரியும். அதற்குச் சான்று இருக்கிறதா என்று நீங்கள் கேட்டால், அதற்கு மனச்சாட்சிதான் இருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். எல்லோருக்கும் தெரிந்ததற்கு ஒரு சாட்சி வேண்டுமென்றால், சொல்ல முடியாது. மேலும் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிலையில் நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் நாங்கள் அந்த திராவிட நாடு பிரிவினை சம்பந்தமான எண்ணத்தை விட்டு விட்டோமென்று சொல்கிறார்கள். நாங்கள் அதை முற்றிலும் ஆதரிக்கிறோம். முன்னாலே நீங்கள் சொன்னதெல்லாம் என்னாயிற்று? முன்னாலே சொன்ன காரியங்கள் ஓரளவு நிறைவேற்றப்பட்டிருந்தால் அல்லவா பின்னாலேயிருக்கிற





வைகளை நம்ப முடியும். முன்பு பேசிய காரியங்கள் சரியாக இல்லையென்றால், பின்பு அது தொக்கித்தான் இருக்கும் என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. இப்போது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில், நாங்கள் உங்களை வெறுப்புடன் நினைக்கவில்லை. அமைச்சர்களுக்கு நாட்டில் நடப்பது தெரியாமலா இருக்கிறது? அவர்களுக்கு அது தெரியும். வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் தவறான முறையில் மக்களை நடத்தினார்கள். மக்கள் கஷ்டப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மக்கள் இப்போது கிராமங்களில் பேசுவதைப் பார்த்தால், வெள்ளைக்காரன் ஆண்டாலே தேவலை போல் இருக்கிறதென்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அங்கத்தினருடைய பேச்சு முடிகின்ற வரை அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: நீங்கள் நல்ல முறையில் இந்த நாட்டை ஆளவேண்டும். 63 பேர் இங்கே பேசுகிறோம் என்றால், நாமெல்லாம் 4½ கோடி மக்களின் பிரதிநிதிகள். பேசிய பேச்சுக்கள் பத்திரிகையில் வந்தால் போதுமென்ற அளவிற்குத் திருப்தியடையாமல், நாம் செய்கிற காரியம் நாட்டு மக்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டும். நாட்டில் அராஜகம் எங்கு பார்த்தாலும் நடக்கிறது. சகிக்க முடியாத அராஜகங்கள் நடக்கின்றன. அமைச்சர்களுக்குத் தெரியப்படுத்தினீர்களாவென்றால், கலைஞர் அவர்களிடம் தெரியப்படுத்தவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடத் திலும் நேரில் வந்து சொல்லவில்லையென்றாலும், அதுமாதிரி சம்பவங்களை ஆதாரபூர்வமாக எங்களால் எடுத்துக் காட்ட முடியும் இன்றைய தேதி வரை அந்த விதமான சம்பவங்களுக்கு எந்த விதமான பரிகாரமுமில்லை. தலைவரவர்களே, நான் ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்தின் சேர்மன். அந்த முறையில் அந்த பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றாந்தாயின் பிள்ளையை நடத்துகிறமாதிரி எவ்வளவு தொல்லை கொடுக்கின்றார்கள் என்று சொல்லவே முடியாது. அமைச்சர்கள் நேரடியாகச் செய்கின்றார்கள் என்று நான் சொல்லவில்லை. அங்கங்கே உள்ள அடியார்கள், அடியார்கள்தான், செய்யும் துன்பங்கள் கொஞ்சமில்லை. அவர்கள் காரணமாக அதிகாரிகள் இயங்கவே

முடியவில்லை. நியாயம் செய்ய முடியவில்லை. இப்படி இவர்கள் செய்யும் போது, இதிலே அமைச்சர்கள் சம்பந்தப்பட்டிருப்பார்களோ என்றுகூட எண்ணும் நிலைமை ஏற்படுகிறது. சமீபத்திலே, சட்டசபை நடந்துகொண்டிருந்தபோதுகூட, "அமைச்சரிடம் போய் அவர் சொன்னதாகவும், அதன்மேல் ஒரு போன் வருகிறது. மந்திரியிடமிருந்து உடனே அங்கே உள்ள போலீஸ் அதிகாரிக்கு டெலிபோன் வருகிறது. 'மினிஸ்டர் இன்டெரெஸ்ட், ஆக்ஷன் எடு" என்று. நீங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்றீர்கள். எங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டாமா? நாங்கள் அச்சப்படுகிறோம், பயப்படுகிறோம், என்று சொல்லப்படுகிறது. எங்களுக்கு நியாயம் கிடைக்காவிட்டால்

"தசை குருதி நிணமொழுக தனித் தனியே எதிர்த்தவரை
தலைகள் சிந்த விஜயன் வரவேண்டுமா, மற்றுமுள்ளோர்
திரண்டு வரவேண்டுமா? நிசைபுலர் முனைமுனைந்து நீராக்கி
விடுவேன் அந்திருவன் சொன்னபடி அசைவின்மொழி
மறுத்து மற்றலாகாதென்றிருக்கின்றேன் அறிவிலிகாள்!"

காந்தியடிகளின் கட்டளைக்குப் பயந்து நிற்கிறோம், கட்டுப்பட்டிருக்கிறோம். அஹிம்சையில்தான் நாங்கள் நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கின்றார்கள். கட்டுப்பட்டிருக்கிறோம். இப்படிக் கட்டுப்பட்டிருக்கிறோம் என்பதற்காக எங்களை என்ன பாடு படுத்துகின்றார்கள்? குடி நீர் வாரியம் என்று கொண்டு வந்தார்கள். பதினைந்து ஆண்டுகளாக இராஜசிங்க மங்கலம் பஞ்சாயத்திலே ஒரு வேலை நடந்திருக்கிறதா? சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல வெள்ளிவிழாசிரூர் என்ற பஞ்சாயத்து தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தும் இன்று வரையில் எதுவும் நடைபெறவில்லை, பதிலுமில்லை. இதையெல்லாம் பார்த்தால், யாரைக் குறை சொல்லுவது என்றே புரியவில்லை. அமைச்சர்தான் எங்கள் கண்ணுக்குத் தெரிகின்றார்கள். அவர்களிடம்தான் சொல்ல முடியும். நாங்கள் வேறு என்ன செய்ய முடியும்? நாங்கள் யார்? வேறு நாடுகளிலேயிருந்து வந்தவர்களா? இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அன்றைக்கு எதிர்க்





கட்சியாக இருக்கவில்லையா? ராமகிருஷ்ணத்தேவர் எம்.எல்.ஏ. வாக இருந்தார்கள். இப்படியா நடத்தினோம்? எங்கள் பக்கத்திலுள்ள திராவிட கழக நண்பர்களைக் கேளுங்கள். அது திராவிடர் கழகம், இது காங்கிரஸ் என்று ஏதாவது பாரபட்சம் காட்டியிருக்கிறோமா? தலைவரவர்களே, நான் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதாகக் கருதவேண்டாம். நான்...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் உணர்ச்சி வசப்படுவதுபற்றிக் கவலையில்லை. ஆனால் நேரத்தோடு பேசவேண்டும்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: அப்படியானால் நீங்கள் உத்தரவே போட்டு விடலாம், இப்படித்தான் இருக்கும் என்று. கையெழுத்துப் போட்டு விட்டுப் போகிறோம். இங்கே பேசுவதெல்லாம் 63 பேரிடம்தானே பேசுகிறோம். பப்ளிக் மீட்டிங் போட்டுப் பேசவில்லையே? ஆகவே நான் வேண்டிக்கொள்வது, நல்ல நிர்வாகத்தை நடத்துங்கள். இந்த நாட்டு மக்களின் நலன்களுக்காக என்னென்ன காரியங்களைச் செய்கின்றீர்களோ அதற்கு எல்லாம் முழு ஒத்துழைப்பையும் தருகிறோம். கட்சி வேறுபாடு நல்லது செய்வதிலே வரவேண்டாம். எங்கள் பேரில் குற்றம் நடந்திருக்கிறது என்று எழுதினால், உடனே தந்தியே கொடுங்கள், 'ராமகிருஷ்ணத் தேவரே, வாருங்கள், என்ன சமாச்சாரம்' என்று கூப்பிட்டுக் கேட்கலாம். கூப்பிட்டுக் கேளுங்கள், 'என்ன கட்டபொம்மன், ஊமைத்துரை காலத்தில் நடந்து கொண்டதைப் போல நடந்துகொள்ளுகின்றீர்கள்' என்று கேளுங்கள்.

என்ன இது? நேற்று காலையில் காலுக்குக்கூட செருப்பு ஒன்றும் இல்லாதவர்கள் இன்றைக்கு 'கேடில்லாக்' கார்களிலே வந்து இறங்கினால் எல்லோர் கண்ணும் அவர்கள் பேரிலே படுமா இல்லையா? இதை ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியுமா என்று கேட்டால், எப்படிச் சொல்ல முடியும்? சொன்னால் அசிங்கமாக இருக்கும். மாநில சுயாட்சியைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், இதை உங்களுக்காகவா கேட்கின்றீர்கள்? எங்களுக்கும்தான் சேர்த்துக் கேட்கின்றீர்கள்? இதிலே நன்மை இருக்கிறது. அதிலே நன்மை இருக்கின்றது என்பதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் அதே நோக்கில்

[திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர்] [1974 ஏப்ரல் 26

இவ்வளவு நன்மை மக்களுக்கு செய்வதாகச் சொல்லும் உங்களை இப்போது மக்கள் ஏன் வெறுக்கின்றார்கள்? நீங்கள் யாருக்கு என்ன தீமை செய்து விட்டீர்கள்? இப்போது ஏன் மக்கள் உங்களை வெறுக்கின்றார்கள்? காரணம், அங்கங்கே உள்ளவர்கள் செய்த குறைகள் அமைச்சர்கள் தலையில் வந்து விழுகின்றன. இதுதான் நான் நாடோடித்தனமாகச் சுற்றி வந்த அளவிலே எனக்குத் தோன்றியது. ஆகவே, தலைவர்களே, கிடைத்துள்ள அதிகாரங்களை ஆளும் பொறுப்பிலே உள்ளவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி, மக்களுடைய நன்மைக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்யலாம். இந்தத் தீர்மானத்தின் பேரிலே எங்கள் தலைவர் ஒரு சிறு திருத்தத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். அதையும் பயன்படுத்திக்கொண்டு, மாநில சுயாட்சி வரவேண்டும், ஆனால் நல்ல முறையில் ஆட்சியைப் பக்குவப்படுத்திவிட்டு பிறகு வரலாம். இப்போது அது தேவையில்லை என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.



[1974 ஏப்ரல் 27

*** திரு. ஆர். சக்தி மோகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற தீர்மானம் மிக முக்கியமான, நீண்டதொரு சரித்திரப் பின்னணியைக் கொண்டதாக இருப்பதால், ஐந்து நிமிடங்களுக்குள் பேசி அபிப்பிராயங்களைச் சொல்வது என்பது இயலாத காரியம். என்றாலும் கூட, தலைவரவர்களுடைய ஆணையை மேற்கொண்டு கூடியவரையில் குறைத்துப் பேசுவதற்கு முனைகிறேன்.

இந்தத் தீர்மானம் நாடு விடுதலை அடைவதற்கு பத்து வருஷங்களுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகம் உதிப்பதற்கு ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்கு முன்பாக, தேசியவாதிகளால் எழுப்பப்பட்ட குரலாகும். இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இந்தத் தீர்மானத்திற்கான கரு, தேசியவாதிகளால் போடப்பட்டதாகும். சுமார் முப்பது வருஷங்களுக்குப் பிறகு, அதே கரு, அதிகார பூர்வமாக சட்ட மன்றப் பேரவையிலும், இந்த மேலவையிலும் கலைஞர் அவர்களின் மூலம் தீர்மான வடிவம் பெற்றிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை வரி, வரியாகப் படித்துப் பார்த்தேன். அதில் எவரும், எந்தத் தரப்பினரும், எந்தக் கட்சியினரும் எந்த வகையிலும் சந்தேகமோ, சங்கடமோ படுவதற்கு இடமில்லாத வகையில் இருக்கிறது. மேலும் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தாலும்கூட அது பிரதேசவாதத் தீர்மானமாகவுமில்லை. தேசியவாதம்தான் அதிலே வெளிப்படுகிறது என்பதைப் பார்க்கலாம். இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் முன்வைத்து அங்கத்தினர்கள் ஒவ்வொருவருடைய வேறுபட்ட, முரண்பட்ட அபிப்பிராயங்களை மோதவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிற கலைஞரவர்கள்......

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒருவரை விட்டு இன்னொருவரை மோதச் செய்வது அவருடைய வேலை இல்லை. இங்கு விவாதம்தான் நடைபெற்று வருகிறது.

[1974 ஏப்ரல் 27

திரு. ஆர். சக்தி மோகன்: கலைஞராக இருந்தவர் ஒரு பிரதேச வாதியாகத் தான் இருந்தார். முதலமைச்சராகி, தொடர்ந்து டாக்டராகி, முப்பட்டங்கள் பெற்ற பிறகு ஒரு பெரிய தேசியவாதியாக மாறியிருக்கிறார் என்றே கருதுகிறேன். 37 வருஷங்களுக்கு முன்னால் எழுந்த இந்த மாநில சுயாட்சி எண்ணம், இன்று கலைஞர் மூலமாக அதிகார பூர்வமாக வெளிப்படுகிறது என்றால், அவர் ஒரு தேசியவாதியாக மாறியிருக்கிறார், அல்லது இந்தத் தீர்மானத்தை தயாரிக்கின்ற வரையில் தேசியவாதியாக இருந்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன்.

மாநில சுயாட்சி என்பது நீண்டகால தேசியவாதிகளுடைய எண்ணம் என்று நான் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நாடு எந்த வகையிலும் பிரியக்கூடாது, தேசிய ஒருமைப்பாடு கெடக் கூடாது, நாட்டில் எந்த வகையிலும் பிரிவினை நிகழ்ச்சி ஏற்படக்கூடாது என்ற கருத்தைக் கொண்ட நேதாஜி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவன் நான். எந்த வகையில் இத்தீர்மானத்தை ஆராய்ந்தாலும் தேசிய ஒருமைப்பாட்டி லிருந்து விலகி, தனியாகப் பிரிந்து தனிநாடு அமைத்துக் கொள்ள வேண்டு மென்ற எண்ணத்தில், இந்தத் தீர்மானம் அமையவில்லை என்று என்னால் நிச்சயமாகக் கூற முடியும். தேசியவாதிகளால் எழுப்பப்பட்ட முழக்கம் மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களால் ஒரு தீர்மான வடிவில் கொண்டுவரப் படுவது கண்டு நான் பூரிக்கிறேன். கூட்டணியைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் கலைஞர் பெருமைப்படவும், அவரைப் பாராட்டவும் இப்படிக் கூறுவதாகச் சிலர் கருதலாம். யார் எப்படிக் கருதினாலும், இப்பொழுது இருக்கின்ற அதிகாரங்கள் போதவில்லை, போதிய அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்பதற்கான தீர்மானம் தான் இது. அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோருகிறார்கள், தனி நாடு அமைய வேண்டுமென்று அவர் எங்கும் கூறவில்லை. மராட்டிய மாநிலத்தில் பால்தக்கரே என்பவர் வெளி மாநிலத்தவர்கள் மராட்டிய மாநிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு தனி மராட்டியம் கோரிப் போராடி வருகிறார். தெலுங்கானா தனியாக வேண்டுமென்று ஆந்திர மாநிலத்தில் சிலர் கேட்டு



1974 ஏப்ரல் 27] [திரு. ஆர். சக்தி மோகன்]

வருகிறார்கள். கேரளத்தில் மாப்பிள்ளைகள் தனி நாடு வேண்டுமென்று கேட்கிறார்கள். அதே கேரளத்தில் முசல்மான்கள் அவர்களுடைய பகுதியைப் பிரித்துத் தனி மாவட்டம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் கேட்பது மாதிரி, தனி வன்னியர்கள் நாடு கொடுக்க வேண்டும் என்பது மாதிரிக்கூட இத்தீர்மான கோரவில்லை. தமிழர்களுடைய நல்வாழ்வுக்காக, தமிழர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டு மென்றுதான் கேட்கப்பட்டிருக்கிறது.

இராஜமன்னார் குழுவின் அறிக்கையைப் படித்தோம். அது ஒரு பெரிய புத்தகம். அதைப் பார்த்தால் பல விஷயங்கள் விளங்கும். எனினும் அதிலே இருக்கின்ற கருத்துக்களை நான் அணுக விரும்பவில்லை. அதைப்பார்க்கின்ற போது, மத்திய சர்க்கார் இருக்க வேண்டும், ஆனால் அது இயங்கக்கூடாது என்ற அளவிற்கு நேரடியாகக் கூட சில இடங்களில் எடுத்துக் கூறப்பட்டிருக் கிறது. அதைப்பற்றியெல்லாம் நான் விரிவாகப் பேசினால், ஐந்து நிமிஷத் திற்குள் எந்தக் கருத்தையும் சொல்ல முடியாது. ஆகையினால் இந்தத் தீர்மானம் ஒரு தேசியத் தீர்மானமாக எப்படி அமைந்திருக்கிறது என்பதை மட்டும் விளக்கிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1905 ஆம் ஆண்டில் அந்நிய ஆட்சி வங்காளத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று முடிவெடுத்தபோது, எந்த வகையிலும் அந்த மாநிலத்தைப் பிரிக்கக்கூடாதென்று சி. ஆர். தாஸ் போன்ற மாபெரும் தலைவர்கள் எல்லாம் எதிர்த்துப் போராடினார்கள். என்றாலும்கூட ஆங்கில ஆட்சி தேசியவாதி களுடைய எதிர்ப்பைச் சட்டை செய்யாமல் வங்காளத்தைப் பிரித்து இரண் டாக்கியது. அதன் எதிரொலியை நாம் 1947-ல் நாட்டுப் பிரிவினை மூலம் பார்த்தோம். பிறகு காரச்சி தீர்மானம் ஒன்றைப் போட்டார்கள். காரச்சி தீர்மானம்தான் மொழி வழி மாநிலத்திற்கு அடிப்படையே. மொழி வழி மாநிலம் என்று சொல்லி, அந்தந்த மாநிலங்களை மொழி வழியாகப் பிரித்துக் கொடுத்து, அந்த மாநிலங்களுக்கு ஆட்சிப் பொறுப்பையும் கொடுத்த பிறகு ஊடே தலையிட்டு இவ்வளவுதான் அதிகாரம் என்று வரையறை செய்வது

ஜனநாயகத்திற்குப் புறம்பானதாகும். 1947 ஆகஸ்டு 14-ம் தேதி வரை நாட்டைத் துண்டுபடுத்தக் கூடாது, மதத்தின் பேராலோ, பிராந்தியத்தின் பேராலோ எந்த வகையிலும் நாட்டை உடைக்கக் கூடாது, உடைத்தால் என்னை இரண்டாகப் பிளந்து அதன் மீது நாட்டைப் பிளக்க வேண்டுமென்று எம்மான் காந்தியடிகள் சொன்னார்கள். பண்டித நேரு அவர்களும் சொன்னார்கள். ஆனால் அவசியம் கருதியோ அல்லது அவசரம் கருதியோ தெரியாது, வேகம் வேகமாக நாட்டை உடைத்து இரண்டாகப் பிரித்தார்கள். பிரிவினை மனோபாவமே தேசிய முகாமிலிருந்து வந்தது, என்பதற்காக இதைச் சொல்கிறேன். ஆயினும் இத்தீர்மானம் பிரிவினை வாதமல்ல. அதிக அதிகாரங்களைக் கேட்கின்ற தீர்மானம்தான். அந்தக் காலத்தில் நேதாஜி அவர்கள் செய்கோன் வானொலி மூலம் "10 நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், இந்திய

(4–10 பிற்பகல்)

விடுதலை அடையப்போது மிகமிக உறுதியாகிவிட்டது. வேவல் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டாம். 10 நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், உலக யுத்தத்தின் முடிவும், போக்கும் எப்படியிருந்தாலும், இந்தியா விடுதலை நிச்சயமாகிவிட்டது. ஆகவே வேவல் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டாம்" என்று இந்தியத் தலைவர்களுக்குச் சொன்னார்கள். இருந்தாலும்கூட அன்றைக்கிருந்த மிகப் பெரும் தலைவர்களெல்லாம் அதையும் அலட்சியம் செய்துவிட்டு எப்படியோ வேவல் திட்டத்தை ஒப்புக்கொண்டார்கள். இப்படி பிரிவினைக்கு ஆயத்தமாக இருந்த கட்டத்தில் அதைத் தெரிந்து கொண்ட நேதாஜி அவர்கள், "ஆங்கிலேய ஆட்சி நாட்டைப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறது என்றால், அது வெள்ளையர் தந்திரங்களில் ஒன்று, நாட்டிற்கு சுதந்திரம் கொடுத்தால் கூட, பிரிக்கப்பட்ட பகுதியிலிருந்து மீண்டும் ஆதிக்கம் செலுத்துவதற்குரிய திட்டமாகும் என்று கெஞ்சினார் அப்படியும் தலைவர்கள் கேட்கவில்லை. அப்படி நாட்டைப் பிரிப்பதற்கு ஒப்புக் கொள்ள நேர்ந்தால் ஜனப் பரிவர்த்தனை செய்த பிறகு நாட்டைப் பிரியுங்கள் நாட்டை பிரித்த பிறகு ஜன பரிவர்த்தனை செய்ய வேண்டாம் என்று 10-12 நாட்கள் வரை இந்தியாவிலிருந்த தலைவர்களுக்கு அறிவுறுத்தினார் ஆனால் தலைவர்கள் கேட்கவில்லை. முதலில் நாட்டைப் பிரித்தார்கள்



பிறகு ஜனப் பரிவர்த்தனை செய்தார்கள். அதனால் நடந்த கோரக் கூத்துக்களைப் பார்த்தோம். இந்த நாட்டை உடைத்ததன் மூலம் ஆங்காங்கு பிரிவினை மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். 1947-ல் சுதந்திரம் வந்த பிறகு அகில இந்தியாவிலும் ஒரே கட்சியினுடைய ஆட்சி நடந்துகொண்டு வந்ததால், அவர்களுடைய மனதில் அதிகாரம் போதவில்லை என்ற எண்ணம் இருந்தாலும், வெளிப்படையாக எடுத்துச் சொல்லவில்லை. இப்படிபொரு தீர்மானத்தைப் போடக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இன்றைக்கு கவர்னர் பேருரையில்கூட அவர்களால் அனுப்பப்பட்ட அவர், அதிகாரப் பற்றாக்குறைபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாப் பற்றாக்குறையோடு சேர்ந்து அதிகாரப் பற்றாக்குறையையும் பற்றி கவர்னர் உரையில் பார்த்தோம். இதைப்பற்றி கவர்னர் பேருரையில் பேசும் போது எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். இம்மாதிரிப் பிரிவினைக்கு அடியிட்டுக் கொடுத்து, அந்த எண்ணத்தை ஏற்படுத்தியவர்கள் தேசியவாதிகளாக இருந்தாலும்கூட, பிரிவினையைக் கேட்காமல் அதிக அதிகாரம் வேண்டுமென்று தான் தேசியவாதியல்லாத கலைஞர் அவர்கள் கேட்கிறார்கள். இதை எந்த வகையிலும் மறுப்பதற்கில்லை. எல்லா மாநிலங்களுக்கும் மாநிலத்திற்கு ஒரு மந்திரி சபை, மாநிலத்திற்கு ஒரு பேரவை, ஒரு மேலவை என்று பிரித்து நடத்துவதற்கு அனுமதி அளித்து விட்டதன் பிறகு, இன்னின்ன அதிகாரம் உங்களுக்கு, இன்னின்ன அதிகாரம் எங்களுக்கு என்று அனைத்தையும் கேட்டுத் தான் செய்ய வேண்டுமென்றும் விதிப்பது ஜனநாயக மரபிற்கு விரோதமாகும். ஜனநாயகக் கொள்கைக்கு மாறுபட்டதாகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி தலைவரவர்களே. தேசியவாதி என்றால், காங்கிரஸ்காரர்கள் என்ற பொருளில் நண்பர் அவர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். இதைப் பயன்படுத்தி நான் தேசியவாதி அல்ல என்று குறிப்பிடுவது வருந்தத்தக்கது. அவரவர்களுக்கு தேசிய உணர்ச்சி உண்டு. நான் தேசியவாதி அல்ல என்று ஏற்றுக்கொள்வதாக இல்லை. தேசியவாதி என்றால் காங்கிரஸ்காரர்கள் என்று பொருள் கொள்வார்களானால், அது வேறு விஷயம்.

திரு. ஆர். சக்தி மோகன்: முதல்வர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. தேசியவாதி என்று சொன்னால் இப்படித்தான் ஒரு நிலை இருந்தது. யார் கதர் கட்டுகிறார்களோ அவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று கருதப்-

பட்டவில். இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களோ, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கதர் கட்டாது போனாலும், கைத்தறி கட்டி னார்கள். கதருக்கும் கைத்தறிக்கும் அதிக வித்தியாசம் இடையாது. ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர்கள்தான் கதர் கட்டுவார்கள் என்ற நிலை இருந்தது. கதர் தேசிய ஆடை. அன்றைக்கு இருந்த நிலையை வைத்துச் சொல்கிறேன். தேசியப் பற்றில்லாதவர்கள் யாருமே நாட்டில் இருக்க முடியாது. அந்தக் கட்சிகளுக்கும் தேசியப் பற்று உண்டு. அந்த தேசிய மனோபாவத்தின் வெளியீடு என்றுதான் இந்தத் தீர்மானத்தை நான் கருதுகிறேன். கலைஞர் அவர்களும், அவர் சார்ந்த திராவிட முன்னேற்ற கழகமும் ஆளும் இந்த ஆட்சி செல்வம் பெற்றது, சிரஞ்சீவி வரம் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், அவர்கள்தான் வைத்துக்கொள்வார்கள் என்ற அடிப்படை எண்ணம் இருக்கு மானால், அவர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கமாட்டார், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பயன்படக் கூடிய வகையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார். ஜனநாயகத்தில் ஒரே நிலை இருக்கக் கூடாது. மாநிலத்திற்கு ஒரு மந்திரி சபையைக் கொடுத்துவிட்ட பிறகு, அதிகாரம் குறைக்கப்படுவது தவறு. குறிப்பாக ஆளுக்கு ஒரு வீடு என்று அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் திட்டம் போட்டு வேலை செய்துகொண்டி ருக்கிறார்கள். எகிப்தில் நாசர் அவர்கள் அரசாங்க அதிகாரத்திற்கு வந்த வுடனே 50 ஏக்காவிற்கு மேல் வைத்திருப்பவர்களும் 5 ஏக்கர் நிலம் இல்லாத வர்களும் நாட்டில் இருக்கக்கூடாது என்ற சட்டம் போட்டு, அதை நிறை வேற்றியும் காட்டினார். நமது மாண்புமிகு திரு. ராஜாராம் அவர்களை எப்படியும் தமிழ் நாட்டில் 4½ கோடி மக்களில் 50 லட்சம் பேர்களுக்குத் தான் சொந்த வீடு இருக்கிறது, எல்லோருக்கும் வீடு கொடுத்து விட்டுச் சொந்தக்காரர்கள் ஆக்கவேண்டுமென்று திட்டம் போட்டு வேலை செய்கி றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுக்கு ஒரு வீடு என்று கூடாது, குடும்பத்திற்கு ஒரு வீடு என்று இருக்க வேண்டும். ஆளுக்கு ஒரு வீடு என்றால், கணவனுக்கு ஒரு பக்கம், பெண்டாட்டிக்கு ஒரு பக்கம் வீடு கொடுத் தால் என்ன ஆகும்?

திரு. ஆர். சக்தி மோகன்: இப்படி அவர்கள் வீடு கட்டிக் கொடுத்ததன் பிறகு அந்த வீட்டில் இன்ன இடத்தில் நீ சாப்பிட வேண்டும். இன்ன இடத்தில் படுக்க வேண்டும், இன்ன இடத்தில் விருந்தினர்களை வரவேற்க வேண்டும், இந்த அறை என்னைச் சேர்ந்தது, யாரும் அதில் போகக் கூடாது;



நான் வேண்டும்போது எடுத்துக் கொள்வேன், என்று மாண்புமிகு அமைச்சர வர்கள் கட்டாயப்படுத்தினால், நீங்கள் கொடுத்த வீடே வேண்டாம் என்று தான் யாரும் சொல்வார்கள். அதே போல ஜனநாயக மரபுப்படி மாநிலத் திற்கு ஒரு அரசாங்கம் என்று பிரித்துக் கொடுத்ததற்குப் பிறகு, இந்த அதி காரத்திற்கு வரம்பு கட்டி, அங்கே எல்லா அதிகாரத்தையும் குவித்து வைத்துக் கொண்டு இங்கே மக்களுக்கு நலன் புரிவதற்குத் தடையாக இருக்கிற அளவிற்கு அதிகாரத்தைக் குறைத்து வைப்பது கூடாது என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்று ஆதரிக்கிறேன். இந்த நேரத்தில் முதல்வரவர்களுக்கு ஒரு ஆலோசனையும் சொல்கிறேன். இந்தத் தீர்மானத்தை நாம் மட்டும் நிறைவேற்றினால் போதாது. கூடிய வரையில் தீவிர முயற்சி எடுத்து எல்லா மாநில முதல மைச்சர்களுடைய மாநாட்டைக் கூட்டியோ, நேரடியாகச் சென்றோ இதே தீர்மானத்தைக் குறைந்த பட்சம் 5, 6 மாநிலங்களிலாவது, மேலவையிலும் பேரவையிலும் நிறைவேற்றக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்தால், இந்தத் தீர்மானத்திற்கு அதிக வலிமை கிடைக்குமென்ற கருத்தைக் கூறி விளக்கமாகப் பேசுவதற்கு தலைவரவர்கள் நேரத்தை அனுமதிக்காததால், இந்தத் தீர்மா னத்தை ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முதல் நாள் 6 மணிக்கு அவை முடிந்தது. முதல் நாளில் யாருமே பேசத் தயாராக இல்லை. இரண்டாவது நாள் 6-30 மணிக்கு முடிந்தது. மூன்றாவது நாள் 6-30க்கு முடிந்தது. முதல் 3 நாட்கள் பேசுவதற்கு யாரும் முன் வரவில்லை. நாங்கள் அங்கத்தினர்களைப் பேசுங்கள் என்று கேட்கவேண்டியதாக இருந்தது.

* திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக முதல்வ ரவர்கள் அரசின் வெள்ளை அறிக்கையை இந்த அவை முன் வைத்துத் தாம் முன்மொழிந்த தீர்மானத்திற்கு முன்னுரை கூறுகையில், "வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிவதாகக்" குறிப்பிட்டார்கள், இது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். நானும் என் வாழ்நாளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு பேச்சினை இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதன் மூலம் பெருமை அடைகிறேன். இது திராவிட முன்னேற்றக் கழக அரசும், முதல்வர் கலைஞர் அவர் களும், அவருடைய சக அமைச்சர்களும் எனக்குத் தேடித் தந்துள்ள நற்பேறு என்பதை உணர்ந்து, அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் முன்னுரை ஆற்றுகையில்கூட "இந்த மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வெற்றி தேட இடைவிடாமல் தொடர்ந்து

தமிழரசுக் கழகம் முயற்சி எடுத்து வந்திருக்கிறது" என்பதை, மிகுந்த பண்பாட்டுடன் குறிப்பிட்டு, இதற்காகப் பாடுபட்டவர்களுடைய உள்ளங்களில் மகிழ்ச்சியினைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

மாநில சுயாட்சி பற்றி ஆய்வு நடத்த ஒரு குழு அமைக்கப்படவிருக்கிறது என்ற எண்ணத்தையும் 1969-ம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாளில் என்னுடைய பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் பேசுகிறபோதுதான் முதல்வரவர்கள் முதன் முதலில் வெளியிட்டார்கள்.

பிறகு, 1969-ம் ஆண்டு ஆகஸ்டு 20-ம் தேதியன்று மாநில சுயாட்சிப் போராட்டத்திற்கு நிச்சயித்திருந்த நாளில், அதற்கு முன்னாளில், அதாவது ஆகஸ்டு 19 ஆம் தேதியில், முதல்வரவர்கள் போராட்டத்தைக் கைவிடுமாறு என்னைக் கேட்டுக்கொண்டு சட்டப் பேரவையில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அதில் "டாக்டர் ராஜமன்னார் தலைமையில் குழு அமைக்கப் போகிறோம், அந்தக் குழு தன்னுடைய அறிக்கையைத் தருகிற வரை போராட்டம் தேவையில்லை; குழு அறிக்கை தந்த பிறகு, அந்த அறிக்கையை அவைகளில் வைத்து ஆதரவு பெற்ற பிறகு சேர்ந்தே போராடலாம்" என்று குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக அந்தப் போராட்டம் ஒரு நாளோடு நிறுத்தி வைக்கப்பட்டது, முதல்வரவர்களுக்கும், இந்த அவையினருக்கும் நினைவு இருக்கும்.

இந்த மாநில சுயாட்சி முயற்சியிலே எனக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் சரித்திரபூர்வமான, உணர்ச்சி பூர்வமான தொடர்பு உண்டு என்பதை, திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வரவர்கள் ஏற்றுக்கொண்டு, இரு கழகங்களும் இணைந்து செயல்படக்கூடிய ஒரு உணர்ச்சியை, சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள் என்பதை நான் நன்றி உணர்வோடு காண்கிறேன்.

இந்த அவையின் முன்னே டாக்டர் ராஜமன்னார் குழுவின் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை ஒன்றை மட்டுமே வைத்து, அதை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டிருப்பார்களானால், எனது நிலைமை, நான் எடுக்க வேண்டிய முடிவு வேறு விதமாக இருந்திருக்கும். அப்படியின்றி அந்த அறிக்கையை அரசு பரிசீலனை செய்து, அதன்மீது ஆய்வு நடத்தி, அதிலே முற்போக்கான மாறுதல்கள் செய்து, அவை முன் கொண்டு வந்திருப்பதால் ஓரளவு மன நிறைவு பெறத் தக்க நிலையை நான் அடைந்திருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; வெள்ளை அறிக்கையைவிடவும் இன்னொரு படி மேலே போய், இந்தத் தீர்மானத்தை, இந்த அவையிலே பிரேரேபித்திருக்கிறார்கள்.



"மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும், தமிழ் நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று—மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டுமென்று இம் மேலவை முடிவு செய்கிறது" என்ற வாசகத்தை அந்தத் தீர்மானத்திலே சேர்த்திருக்கிறார்கள். "தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களுக்கும் முழு அளவில் சுயாட்சி; மத்தியில் உண்மையான சமஷ்டி ஆட்சி வேண்டும்" என்று தமிழரசுக் கழகமும் தானும் கொண்டிருக்கும் கொள்கைதான் தன்னுடைய கட்சியின் கொள்கை என்று அரசு இந்தத் தீர்மானத்தின் மூலம், அறிவித்துள்ளது. ஆகவே அந்தத் தீர்மானத்தை அவைமுன் வைத்திருப்பதை—மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்று, ஆதரிக்கிறேன்.

இன்னும் விளக்கமாக அரசு தயாரித்து வைத்திருக்கிற வெள்ளை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே,

"நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகியவை தொடர்பான அதிகாரங்களை மட்டும் கொண்டுள்ள மத்திய அரசும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டுள்ள மாநில அரசுகளும் உள்ள உண்மையான கூட்டாட்சியை நிறுவும் இலட்சியத்துடன், தமிழ்நாடு அரசு, இராஜமன்னார் குழுவின் பரிவுரைகளை ஆய்ந்தபின், அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளிலும் அதிகாரப் பட்டியல்களிலும் செய்யப்பட வேண்டிய திருத்தங்களை வகுத்துத் தொகுத்துள்ளது. இதன் விளைவான வேறு மாறுதல்களையும் அரசியலமைப்புச் சட்டத்தில் செய்தல் வேண்டும்" என்றுள்ள பிரிவையும் நான் படித்துப் பார்க்கிறேன். ஆக, ஒன்று நன்றாகத் தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசின் அரசியல் கொள்கை, "மத்தியில் முழுமையான, உண்மையான கூட்டாட்சி; மாநிலம் ஒவ்வொன்றிலும் முழுமையான உண்மையான சுயாட்சி' என்பதுதான். இதுதான் இந்த அரசின் கொள்கையாகத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் வெள்ளை அறிக்கையின் முன் பகுதியிலே சொல்லப்பட்டிருக்கும் கொள்கைக்கும் பின் பகுதியிலுள்ள கோரிக்கைக்கும் நடுவே ஒரு இடைவெளி இருப்பதைக் காண்கிறேன். கொள்கை வேறு; கோரிக்கை வேறு. கொள்கையை முழுமையாக தீர்மானத்தில் அறிவித்திருக்கிறது அரசு. ஆனால் கோரிக்கை என்று வருகிற இடத்தில் சற்று அனுபவ சாத்தியமான, அவசர லாபத்திற்கு உரியதான பகுதி என்று நான்கு அதிகாரங்களைக் குறிப்பிட்டு, இவை மட்டும் மத்தியி

அரசுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு அந்த வெள்ளை அறிக்கை முடிந்திருக்குமானால் இன்னும் மிக்க மகிழ்ச்சியோடு நான் வரவேற்றிருக்க முடியும். ஆனால், வெள்ளை அறிக்கை அத்துடன் நிற்காமல், அரசியல் சட்டத்தின்—பகுதி பகுதியாக, ஆர்ட்டிகிள் ஆர்ட்டிகிளாக—உள்ளே போய், என்னென்ன மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று ஆங்காங்கு சொல்லியிருக்கிறார்கள். முன்னே நான்கு அதிகாரங்கள் மட்டும் கொண்ட மத்திய அரசு வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிற பகுதிக்கும், பின்னே விதி விதியாக எடுத்துக்கொண்டு கோருகிற திருத்தங்களுடைய பகுதிக்கும் நடுவே இடைவெளி இருப்பதைப் பார்க்கிறோம். அவை ஒன்றோடொன்று முரண்பாடுடையவையென்று நான் சொல்லவில்லை. ஒன்றுக்கொன்று இணைந்திருக்கும் தன்மையைப் பார்க்கிறேன். நான்கு அதிகாரங்கள் மட்டும் மத்தியில் வைத்துக்கொள்ளும் கூட்டாட்சி முறை வேண்டும்; முழு அளவுக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்லி விட்ட பிறகு, "இதற்கான வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த ஒரு அவசியல் நிர்ணய மன்றத்தை அமைக்க மத்திய அரசு முயற்சிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு அந்த வெள்ளை அறிக்கை முடிந்திருக்குமானால், இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கும். விதி விதியாக நாம் விளக்க வேண்டிய சூழ்நிலை இன்றில்லை. கொள்கை அளவில் இதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டால்தான், அதிகாரங்களைப் பரவலாக்கும் வகையில், மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதனை மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்ட பிறகு தான் அப்படிப் பகிர வேண்டிய அதிகாரம் எது, எந்த அளவுக்கு என்ற விவாதத்தில் நம்முடைய கருத்துக்களைச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு இதுவரை மாநில சுயாட்சியைக் கொள்கை அளவிலே கூட ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியாவின் பிரதமர், 'சுயாட்சி என்ற சொல்லே பாவமானது' என்று பிரச்சாரம் செய்து வருகிறார்கள். "இவையெல்லாம் பிரிவினைச் சக்திகளிடமிருந்து வருகின்ற கருத்துக்கள குழப்பங்கள்" என்றுகூடப் பெயர் வைத்து விட்டார்கள். இதற்குப் பிறகு, அரசியல் சட்டத்தை விதி விதியாக எடுத்துக்கொண்டு, திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டிய 'விதி' நமக்கு இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால், ஒன்று. ஆளுகின்ற கட்சி, ஆட்சிக்கு வெளியே உள்ள கட்சியின் போக்கிலே மத்திய அரசை அணுக முடியாது. அதை நான் புரிந்துகொள்கிறேன். பிழையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் பொறுப்பைக் கொடுத்துவிட்டு, பொறுப்புணர்ச்சியோடு நம்முடைய நிலை என்ன என்பதை எடுத்துச் சொல்ல தமிழக அரசு முனைவதை இரண்டாக



நாம் பிரித்துக்கொள்ள வேண்டும். ஆம், சுயாட்சியை, 'குறைந்தபட்ச சுயாட்சி' என்றும் 'அதிகபட்ச சுயாட்சி' என்றும் பிரித்துக்கொண்டால், தீர்மானம் அதிகபட்ச சுயாட்சியைச் சொல்கிறது; வெள்ளை அறிக்கையின் முன் பகுதியும் அதிக பட்ச சுயாட்சி என்று சொல்கிறது; பின் பகுதி குறைந்த பட்ச சுயாட்சியைக் கோருகிறது. கொள்கை அளவில் அதிகபட்ச சுயாட்சி ஆனால் கோரிக்கையாக வைக்கும் இடத்தில் குறைந்தபட்ச சுயாட்சியை முதல்வர் கேட்டிருக்கிறார். வேறெந்த முதல்வர்களிடமும் காண முடியாத ஒரு ராஜ தந்திரத்தை நம்முடைய நாட்டு முதல்வரவர்கள் கடைப்பிடிக்கிறார்களென்று எண்ணுகிறேன். அது வெற்றி அடைய வேண்டுமே என்பதுதான் என்னுடைய கவலை. வெற்றி அடையாமல் போய்விடுமோ என்பதுதான் என்னுடைய வேதனை. பொதுவாக, குறைந்தபட்சக் கோரிக்கையாக இந்தத் தீர்மானத்தையும், வெள்ளை அறிக்கையையும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நான் ஏற்கிறேன். ஆனால், ஏன் இதைக்கூட எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள்—ஏற்க மறுக்கிறார்களென்று தெரியவில்லை.

இதற்குப் பிரிவினை என்று பெயர் வைக்கிறார்கள். நான் அவர்களையெல்லாம் வேண்டிக்கொள்கிறேன். இந்த உலகத்தில் நாம் மட்டும் இல்லை. தமிழ் நாட்டிற்கு வெளியே, இந்தியாவிற்கு வெளியே ஒரு பெரிய உலகம் இருக்கிறது. உலக நாடுகளெல்லாம் இந்தியாவுக்கு நட்பு நாடுகளல்ல. பகை நாடுகளும் உண்டு. இந்தியாவின் நாசத்தை விரும்பும் நாடுகளும் உண்டு. அந்த நாடுகளின் செவிக்கும் போகிற அளவில், பிரதம மந்திரி பதவியில் இருக்கும் ஒருவரிலிருந்து ஆளும் கட்சியில் இருக்கிற மற்ற பெரியவர்கள் வரையில், எல்லோரும் சேர்ந்துகொண்டு, "இங்கே பிரிவினை கேட்கும் ஒரு கட்சி ஆட்சி நடத்துகிறது" என்ற செய்தியை உலகுக்குக் கொடுப்பது எந்த நன்மையை முன்னிட்டு என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதில் ராஜீயமும் இல்லை; ராஜ தந்திரமும் இல்லை; தற்காப்பும் இல்லை; சுத்தமாகச் சொல்லப் போனால் தேச பக்திகூட இல்லை. இரண்டு பொதுத் தேர்தல்களிலே வெற்றி பெற்றுள்ள—இளம் சிங்கங்களை லட்சக்கணக்கில் பெற்றுள்ள—ஆட்சியைப் பிடித்துக்கொண்டுள்ள ஒரு கட்சி நாட்டைத் துண்டாடக் கேட்கிறதென்று உலகத்தின் முன்னிலையில் விளம்பரப்படுத்துவது இந்தியாவைப்பற்றி பிற நாடுகள் என்ன எண்ண வைக்கும்? அதிலும் முப்புறமும் கடல் பகுதியைக் கொண்ட—டாக்காவை நெருங்கிய 7-வது கடற்படையை மறக்க மாட்டோம்—ஒரு மாநிலத்தில் பிரிவினைக் கொள்கை கொண்ட கட்சி ஆட்சி செய்கிறதென்று உலகத்திற்கு அறிமுகப்படுத்துவது தேசபக்திதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று என்னுடைய முன்னாள் நண்பர்களான—இந்நாளில் தனிப்பட்ட நண்பர்களான—தேச பக்தர்களை நான் வேண்டுகிறேன்.

இன்னொன்றையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "பிரிவினை கேட்கிறார்கள்" என்கிறீர்களே, அது உண்மைதானா? உங்களுடைய பலவீனத்தின் விளைவாக அதைச் சொல்கிறீர்களே ஒழிய, சுயாட்சித் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாத உங்கள் பரிதாப சூழ்நிலைக்கு ஏற்ப நீங்கள் சொல்கிற ராஜதந்திர வாசகம்தானே ஒழிய, உங்கள் மனம் இதை நம்பவில்லை என்று எனக்குத் தெரியும். முதல்வரவர்கள் தன்னுடைய தீர்மானத்திலும் சரி, முன்னுரையிலும் சரி ஐயத்திற்கு இடமின்றி. 'நாம் பிரிவினையைக் கோரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கு பெரிய காங்கிரஸ்காரர் பலர் சொன்னார்கள்; "நீங்கள் இப்பயே நாட்டைப் பிரிவினைக்குக் கொண்டுபோய் விடுவீர்கள்; ஒரு நாளைக்கு பிரிவினையே கேட்டு விடுவீர்கள்" என்று. இது அப்பட்டமான பலவீனம். இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரசும் மட்டும் இல்லை. அதற்கு அப்பாற்பட்ட கட்சிகளும் இருக்கின்றன. இந்த இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு அப்பால் கோடிக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, உண்மையில் பிரிவினையை விரும்பாத—எதிர்க்கின்ற தேச பக்தர்களிடம் ஒன்றைக் கேட்கிறேன், ஏன் மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லை? மக்கள் இந்தப் பிரிவினையை ஏற்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உள் நோக்கத்தை ஆராய வேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றிய ஐயத்தைத் தூக்கி எறியுங்கள். பிரிவினைக்கு எதிராக மக்களை அழைத்துச் செல்லும் பிரச்சார இயந்திரம் வலுவாக இருக்கிறது உங்களிடம் என்று நீங்கள் எண்ணினால், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. மக்கள் பிரிவினை கேட்கக்கூடிய அளவுக்கு, அவர்கள் கோபப்படக்கூடிய அளவுக்கு மத்திய ஆட்சி நடந்துகொள்ளாதென்ற ஜனநாயகத் தன்மையில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை கேட்டு விடுமோ என்று பயப்படத் தேவையில்லை. ஒருகால் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக்குப் போய் விட்டால், அதைத் தடுக்கும் சக்தி உங்களுக்கில்லை என்றால், அப்போது ஆண்டவன்தான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். வேறு நான் என்ன சொல்ல முடியும்?

இனி பிரிவினை பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். தமிழ் நாடு ஒருநாளும் பிரிவினையைக் கோராது. கடைசிவரை சுயாட்சி கோரி போராடுமே தவிர, மைய ஏகாதிபத்தியத்திற்கும் அடி பணியாது, பிரிந்து வாழ்கின்ற நிலையையும் அது கோராது என்ற உறுதி எனக்கு இருப்பதால், 'நாங்கள் பிரிவினை கோரவில்லை' என்று முதல்வரவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.



பிரிவினை, பிரிவினை என்கிறீர்களே, அதற்கு சான்று உங்களிலே ஒருவரும் சொல்லவில்லை. பேரவையில் நான்கு நாட்கள் நடந்த விவாதங்களை நேரகக் கேட்டேன். இங்கும் மூன்று நாட்கள் கேட்டிருக்கிறேன். மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுத்து விடுவது பிரிவினைக்கு வித்து என்றால், அதற்கு ஒரு சான்றாவது சொல்ல வேண்டுமே! உலகத்தில் சமஷ்டி நாடுகள் பல இருக்கின்றன. அமெரிக்கா, சோவியத் யூனியன், கானடா, ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்த், மலேசியா ஆகியவெல்லாம் சமஷ்டி நாடுகளே. மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கியுள்ள நாடுகளே. அப்படி சுயாட்சி வழங்கப்பட்ட நாடுகளிலே, ஏதேனும் ஒரு மாநிலம் பிரிந்து போய் விட்டதென்றோ; மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கிவிட்டதால் அந்த நாட்டின் கட்டுக்கோப்பு குலைந்துபோய் விட்டதென்றோ; தேசிய ஒருமைப்பாடு அழிந்து, பகைவன் படை புகுந்து விட்டதென்றோ ஒரு சான்று சொல்ல முடியுமா? உலக சரித்திரத்தில் ஒரு

(4–30 பிற்பகல்)

சான்று, பிரதமரவர்களோ அல்லது இந்த அவை உறுப்பினர்களோ அல்லது பேரவை உறுப்பினர்களோ எடுத்துச் சொன்னதுண்டா? இதற்கு நேர்மாறாக பிரிவினையைத் தடுப்பதற்கு சுயாட்சி பயன்பட்டிருக்கிறது. மாநில சுயாட்சியை பிரிவினைக்கு மாற்றாகப் பெறுகிறோம். அது பிரிவினை அல்ல. பிரிவினை என்ற நோய்க்கு அது மருந்து. உலகில் மாநில சுயாட்சியை ஒப்புக்கொண்ட எந்த ஒரு சமஷ்டியும் கலைந்து போகவில்லை. மாநில சுயாட்சியை ஒப்புக்கொள்ள மறுத்த எந்த நாடும் தன்னுடைய ஏகத்தன்மையைக் காப்பாற்றிக் கொண்டதில்லை.

அமெரிக்காவில் சுயாட்சியோடு கூடிய மாகாணங்கள் அமைந்தன. 1781-ல் அங்கு சமஷ்டிச் சட்டம் அமுலுக்கு வந்தது. அப்போது 13 ராஜ்யங்கள் தான் சமஷ்டியில் இருந்தன. இன்றைக்கு 52 ராஜ்யங்கள் இருக்கின்றன. 1781-ல் ஒன்று சேர்ந்த ராஜ்யங்களில் ஒன்றுகூட பிரியவில்லை. சோரத ராஜ்யங்கள் சமஷ்டியில் சேர்ந்துகொண்டேன். இது மிகப் பெரிய ஒரு நாட்டின் அனுபவம்.

சோவியத் நாட்டில் மாநிலங்களுக்கு சுயாட்சி மட்டும் அல்ல; 'ரைட் ஆப் செஸஷன்' என்ற பிரிந்து போகின்ற உரிமையும் உண்டு. இருந்தும் எந்த மாநிலமும் பிரிந்து போகவில்லை. புதிதாக சில நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

மலேசியாவில் விரும்பினால் பிரிந்து போகிற உரிமையோடு மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களில் சுயாட்சியும் இருக்கின்றன. எந்த ஒரு மாநிலமும் அங்கே பிரிந்து போகவில்லை. 'உலகத்தில் எங்கும் இல்லாத, உவமை காட்ட முடியாத ஒரு இழிவைத் தமிழன் தலையில்தானா சுமத்த வேண்டும்?' என்று

என்னுடைய தேச பக்தியின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். 'பிரிவினைபற்றி அச்சம் இருக்கிறது' என்று நம்முடைய தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள், [இப்போது அவையில் இல்லை. ஒரு உவமைக்காகச் சொல்லு கிறேன்.] "நாங்கள் ஏகாதிபத்தியத்தையே எதிர்த்தவர்கள். உங்களுக்கா பயப்படுவோம்" என்றும் சொன்னார்கள். இப்போது காங்கிரசில் புதிதாகப் புகுந்தவர்கள் எல்லாம் இப்படித்தான் பேசுகிறார்கள். பழைய காங்கிரஸ் காரரான ராஜாராம் நாயுடு அவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள், நானும் அப்படிச் சொல்லமாட்டேன். திரு. தீக்ஷிதர் சொன்னதையே நானும் திருப்பிச் சொல்லுகிறேன். 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே வெளியேற்றி வெற்றி கண்ட தமிழனுக்கு—கட்டப்பொம்மன் சாதிக்கு—கப்பல் ஓட்டிய தமிழன் சாதிக்கு, இந்த டெல்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி காண்பது முடியாத காரியம் அல்ல' [இதை என்னுடைய தேசபக்தியின் பெயரால் சொல்லுகிறேன்.] ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சரித்திரம் காங்கிரஸ் கட்சிக்கு ஏகபோகமாக இருந்த காலம் போய்விட்டது. இன்று, ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்களில் சிலர்தான் அங்கே; பலர் வெளியே இருக் கிறார்கள். [அந்தச் சரித்திரத்தைப் புரட்டாதீர்கள்.]

அரசியல் சட்டத்தைத் திருத்தவே கூடாது என்று கூறுகிறார்கள். [எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்தின் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அதன் தொனியைப் பாராட்டுகிறேன். அதன் வழிவகைகள் சரியாக இல்லை; அது இடுக்கு முடுக்காக இருக்கிறது] அரசியல் சட்டத்தைத் திருத்தாமல்—அதன் கட்டுக்கோப்பைக் குலைக்காமல் அதிகாரங்களைப் பரவலாக்குவது எப்படி சாத்தியமாகும்? நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் பண்புமிக்கவர்கள், பாரத நாட்டிலேயே அவர்கள் நமக்குக் கிடைத்தது அரிய வாய்ப்பாக இருக்கிறது. அவரைக் கேட்கிறேன், அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் அதிகாரங்களைப் பரவலாக்கு வதை எப்படிச் செய்ய முடியும்? எனக்கு எடுத்துச் சொல்லுங்கள் நான் கோரும் இந்த விளக்கத்தை அந்த அவையிலும் யாரும் சொல்லவில்லை, இங்கேயும் சொல்லவில்லை. மத்திய அரசிடமுள்ள, சில வரி இனங்கள் மாநிலத் திற்குத் தேவைப்படுகின்றன. அதை எப்படிப் பெறுவது? சட்டத்தைத் திருத்தாமல் மத்தியத்திற்குள்ள வரி இனங்களை எப்படி மாநிலத்திற்கு மாற்ற முடியும்? அதிகாரங்களை, மாகாணப் பட்டியல், பொதுப்பட்டியல், மத்திய பட்டியல் என்று 'கான்ஸ்டிடியூஷனில்' பிரித்து இருக்கிறார்கள். ஒரு பட்டியலின் உள்ள அதிகாரங்களை இன்னொரு பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்றால் சட்டத்தைக் திருத்தாமல் எப்படி முடியும்? சட்டத்தைத் திருத்தாமலே மாற்றுவதற்கு வழிவகை இருக்கிறதா?—சொல்லுங்கள். [அரசின்





தீர்மானத்தை ஏற்பதற்கு மனம் இல்லாத நிலையில், மக்களிடையே உங்களை அடையாளம் காட்டிக்கொள்ளப் பயந்து இப்படியெல்லாம் மறைத்துச சொல்கிறீர்கள். அதைத் தவிர வேறு இல்லை.]

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், அது மாநில சப்ஜெக்ட். அப்படிப் பட்ட கல்வித்துறையில் மத்திய ஆட்சி இப்போது என்ன செய்கிறது? சில பல்கலைக் கழகங்களை அது எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆந்திரா பல்கலைக் கழகத்தையும் திருப்பதி பல்கலைக் கழகத்தையும் ஆந்திர சர்க்கார் நடத்து கிறது. அங்குள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தையும் அதனிடம் கொடுத் தால், அது நடத்த முடியாதது அல்ல. தனியார்கூடப் பல்கலைக் கழகங்கள் நடத்தும்போது, ஒரு மாகாண அரசு உஸ்மானியா பல்கலைக் கழகத்தை நடத்த முடியாதா? ஆக்ரா பல்கலைக் கழகம் மத்திய அரசிடம் இருக்கிறது; டெல்லி பல்கலைக் கழகம் அதனிடமே இருக்கிறது. ஆகவே, அவற்றிற்காக ஒரு கல்வி இலாகாவை டெல்லியில் வைத்து (கான்ஸ்டிடியூஷனைப் பொத்தல் பண்ணி, அதைச் சுற்றி வளைத்து நடத்திக்) கொண்டிருப்பது சரிதானா? டெல்லியில் ஒரு கல்வி மந்திராலயத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்ப தற்காக சில பல்கலைக் கழகங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமா? அமெரிக்காவில் தொழில் நுணுக்கக் கல்லூரிகளை, இஞ்சினியரிங் கல்லூரிகளை அந்த நாட்டின் தொழில் அதிபர்களே நடத்துகின்றனர். தொழில் நிறுவ னங்கள் நடத்துகின்றன. அப்படியானால் இங்கே மாநில அரசுகள் மத்திய அரசிடமுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளை நடத்த முடியாதா? ஆரம்பக் கல்வி—உயர்தரப் பள்ளிக் கல்வி—கல்லூரிக் கல்வி—தொழில் நுட்பக் கல்வி இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டிருக்கின்ற மாநிலத்திலே ஒரே ஒரு கல்வி மந்திரிதான். ஆனால், மத்தியிலோ, ஒரு கல்வி மந்திரி, ஒரு ஸ்டேட் மந்திரி, ஒரு டெபுடி மந்திரி. இத்தனை பேர் அங்கு தேவைதானா? (வேலையில்லாத இடத்தில் இத்தனை மந்திரிகள் தேவைப்படுகிறார்கள்.)

நான் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பவர்களை ஒன்று கேட்கிறேன், டில்லியி லுள்ள கல்வி இலாகாவை அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இழுத்து மூட முடியும் என்று நம்புகிறீர்களா? 'ஆம்' என்றால் எடுத்துச் சொல்லுங்கள். அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் எந்த அதிகாரத்தை மத்தியிடமிருந்து மாநிலத்திற்கு மாற்ற முடியும்? [டில்லியிலுள்ள எந்தக் காரியாலயத்தை இழுத்துப் பூட்ட அரசியல் சட்டம் இடம் தருகிறது என்று விளக்குங்கள். அதை ஒருவரும் சொல்லவில்லை.] இந்த அவைக்குக் கொடுத்திருக்கிற வெள்ளை அறிக்கையில், நான் முன்னே சொன்னது போன்று சிற்சில அதிகாரங் களைத்தானே அரசு கேட்கிறது முதல்வரவர்கள் என்ன நினைக்கிறார்களோ

எனக்குத் தெரியவில்லை. கொள்கையை முழுசாகச் சொல்லிவிட்டு கோரிக்கையில் வெள்ளை அறிக்கையும், தீர்மானமும் பின்வாங்கி விடுகின்றன. அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றுதான் கேட்கப்படுகிறது. அதிகாரப் பரவல் முறையை காங்கிரஸ் எதிர்க்கத் தயாராக இல்லை என்றால் இந்த வெள்ளை அறிக்கையை அது முணுமுணுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு வழியில்லை.

அதிகாரப் பரவல் முறையால் மாநிலங்களுக்கு முழு சுயாட்சி கிடைக்காது என்பது என்னுடைய முடிவு. 'பூர்ண சுயாட்சி' என்றால் என்னவென்று சொல்லுகிறேன், கேளுங்கள்; இந்தியாவின் ஒருமைப்பாட்டை ஒப்புக்கொண்ட பிறகுகூட, "அது 'கான்பெடரேஷன்' ஆக இருந்தால் போதும்" என்று நான் சொல்ல முடியும். அதாவது, ஒரு சங்கம் அமைத்து அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது 'கான்பெடரேஷன்' தி.மு. கழகம் கேட்பது 'கான்பெடரேஷன்' அல்ல. பெடரேஷன்தான் கேட்கிறது. 'கான்பெடரேஷன்' ஒரு சங்கமேயொழிய அது சர்க்கார் அல்ல. 1781-ல் அமெரிக்காவில் அப்படி. ஒரு 'கான்பெடரேஷன்' அமைத்து 6 ஆண்டு காலம் நடத்திப் பார்த்தார்கள். அப்புறம் கான்பெடரேஷன் பாதுகாப்பானது அல்ல என்று உணர்ந்து பெடரேஷனுக்குத் திரும்பி வந்தார்கள். இவ்வளவு காலத்திற்குப் பிறகு நாம் கான்பெடரேஷனுக்குப் போக முடியாது.

பண்டித ஜவஹர்லால் நேரு—விடுதலைப் போரின்போது—காஷ்மீருக்குப் போனார். அங்கே சுயாட்சிப் பிரச்சினை வந்தபோது, 'இந்தியக் கான்பெடரேஷன்தான் நம்முடைய இறுதி நோக்கம்' என்று சொல்லியிருக்கின்றார். அது கிடக்கட்டும். இந்த ஆட்சி கேட்பது முழு பெடரேஷன் கூட அல்ல. அதற்கும் கீழே இறங்குகிறது. [வெள்ளை அறிக்கையின் பின்பகுதி பெடரேஷன் கூட்டாட்சி என்றுகூட சொல்லவில்லை.]

ரஷ்யாவிலே, 'ரைட் ஆப் செசெஷன்'—பிரிந்து போகிற உரிமை—பொறு மாகாணங்கள், கூட்டாட்சியில் இருக்கின்றன. அந்த உரிமையை வெள்ளை அறிக்கையோ, தீர்மானமோ வற்புறுத்தவில்லை. இரண்டு நாளைக்கு முன்பு இங்கு நண்பர் திரு. முத்துசாமி பேசும்போது, அவரை இடைமறித்து பிரிந்து போகிற எண்ணம் எங்களுக்கு இல்லை" என்று முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஆம். சோவியத் நிலைக்கும் கீழே இறங்குகிறது வெள்ளை அறிக்கை. சுயாட்சி பெற்ற மாநிலங்கள், சர்வதேச மன்றத்தில்—அதாவது, ஐ.நா. மன்றத்தில் அங்கம் வகிக்கலாம். சோவியத் யூனியன் மாநிலங்களான உக்ரேன், பைலோரஷியா போன்றவை ஐ.நா. மன்றத்தில் அங்கம் வகிக்க உரிமை பெற்றுவிட்டன. நம் இந்தியாவில் ஒரு மாநிலம் அந்த உரிமையைக்



கேட்கத் தகுதியுடையது என்றால், அது தமிழ்நாடு ஒன்றுதான். பர்மா, சிலோன், சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற அயல்நாடுகளில், நம்முடைய மக்கள்—இந்தியர்கள் என்ற பெயரில் தமிழர்கள்—வாழ்கிறார்கள். தமிழர்-சிங்களர் பிரச்சினை, பர்மாவில் தமிழர் விட்டு வந்த சொத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்கமறுக்கும் பிரச்சினை—இவைகளை ஐ.நா. மன்றத்தில் எடுத்துச் சொல்லி, தமிழ் இனத்தைப் பாதுகாத்துக்கொள்ள, அதிலே நமக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்றால், அது பாவம் அல்ல. சோவியத் யூனியனைச் சான்று காட்டலாம் முதலமைச்சர். ஆனால் வெள்ளை அறிக்கையில் தமிழருக்காக அதைக் கேட்கவில்லை.

அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற பெடரேஷன்களில், ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனித்தனி கான்ஸ்டிடியூஷன் உண்டு. அங்கெல்லாம் பெடரல் கான்ஸ்டிடியூஷன் வேறு; ஸ்டேட் கான்ஸ்டிடியூஷன் வேறு. இங்கு யூனியனுக்கும் மாநிலத்திற்குமாக ஒரே கான்ஸ்டிடியூஷனைத்தான் வைத்திருக்கிறோம். அந்த சமஷ்டிகளிலே ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சுய நிர்ணயமும் உண்டு. ஆம்; சுயாட்சி மட்டும் அல்ல; அந்த சுயாட்சியை நடத்துவதற்கு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'ரைட் ஆப் செல்ஃப் டிட்டர்மினேஷன்' சுய நிர்ணயம் கொடுத்திருக்கிறது அமெரிக்கா. ஆனால், இங்கே உள்ளது ஒரே கான்ஸ்டிடியூஷன்தான். இதை மாற்றி ஸ்டேட் கான்ஸ்டிடியூஷன் தனியாகத் தயாரித்துக் கொள்ள சுயநிர்ணய உரிமை வேண்டும். இந்த வெள்ளை அறிக்கை அதைக் கேட்கவில்லை. அந்த நிலைக்கும் கீழே இறங்கியிருக்கிறது.

அமெரிக்காவில், சோவியத் யூனியனில் நேஷனல் ஃப்ளாக் வேறு, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஸ்டேட் ஃப்ளாக் வேறு. அதிகார அந்தஸ்துடையது ஸ்டேட் ஃப்ளாக். ஆனால், மந்திரிகள் காருக்குக் கொடி கொடுக்க மறுத்த அரசிடம் போய், 'ஸ்டேட் ஃப்ளாக் கொடு' என்று கேட்டு அசிங்கப்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று முதல்வர் அவர்கள் எண்ணினார்களோ என்னவோ, கேட்கவில்லை.

(4–40 பிற்பகல்)

அமெரிக்காவில், சோவியத் யூனியனில் நேஷனல் சாங் வேறு, ஸ்டேட் சாங் வேறு. நேஷனல் 'சாங்'-க்குக்கு விரோதம் இல்லாமல் ஸ்டேட் சாங். இந்த வெள்ளை அறிக்கை அப்படி எல்லாம் ஒன்றும் கேட்டு விடவில்லை. மொத்தத்தில் சொன்னால், 'டிஸெண்ட்ரலைஸேஷன்' என்ற அளவிற்குத்தான் கோருகிறது. குறைந்த பட்ச சுயாட்சியோடு ஆறுதல் அடைகிறது. 'சுயாட்சி' என்ற வாசகத்தைக் கேட்டு காங்கிரஸ்காரர்களாகிய நீங்களே பயப்படுகின்றீர்களா? அல்லது எங்களைப் பயமுறுத்துகின்றீர்களா? அல்லது ஊரை

பயமுறுத்துகின்றீர்களா? இந்த பயமுறுத்தல்கள் வெகு நாட்களுக்கு நீடிக்காது என்று அடக்கத்தோடு—அன்போடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'சுயாட்சி' என்ற சொல்லுக்கு நம்முடைய அரசியல் ஞானத்தையே நாம் அவமானப்படுத்திக் கொள்ளும் வகையில் தவறான வியாக்கியானம் சொல்லக்கூடாது. ஒன்று 'நாங்கள் இதை ஒப்புக்கொள்ள வில்லை' என்று சொல்லுங்கள்; அல்லது 'அதை நாங்கள் எதிர்க்கிறோம்' என்று தைரியமாகச் சொல்லுங்கள். ஆனால், 'இது பிரிவினைக்கு வழி காட்டுவது, சுயாட்சி அளித்துவிட்டால் நாடு என்னமோ ஆகிவிடும்'—என்றெல்லாம் தவறாகச் சொல்ல வேண்டாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் சொன்னார்கள், 'லோகல் போர்டு அடானமி' பற்றி. லார்டு ரிப்பன் கொடுத்த சீர்திருத்தத்திற்கு 'ஸ்தல சுயாட்சி' என்று தான் பெயர். இன்னும் சொல்லப்போனால் யுனிவெர்ஸிடியையே 'சுயாட்சி அந்தஸ்து பெற்றது' என்று சொல்லுவது வழக்கம். அப்படிப்பட்ட சுயாட்சியைக் கண்டு ஏன் இவ்வளவு பயப்பட வேண்டும்? எனக்குப் புரிய வில்லை. சுயாட்சி என்ற வார்த்தையை வழக்கத்திற்குக் கொண்டுவந்தது காங்கிரஸ் தான். [உங்களுக்குத் தெரியும்] டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் எழுதிய காங்கிரஸ் வரலாற்றை எடுத்துப் படித்துப் பாருங்கள். அவர் சொல்லுகிறார், "மாநிலங்களுக்குப் பரிபூரண சுயாட்சி வழங்கவேண்டும் என்ற அடிப்படையை வைத்துத்தான் காங்கிரஸ் மகாசபை காங்கிரஸ் மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தது." என்று. காங்கிரசின் சரித்திரத்தில் கோளாறு இல்லை. நானும் சேர்ந்து வரைந்தது தானே அந்தச் சரித்திரம்? நமது ரத்தத்தால் எழுதப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரவர்களும் மற்றவர் களும் அதில் பங்கு பெற்றவர்கள்தான். 'நாங்கள் எகாதிபத்திய பிரிட்டிஷ் அரசை எதிர்த்துப் போரிட்டவர்கள்' என்று சொன்ன தீட்சிதர் அவர் களுக்குச் சொல்லுகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து விட்டதால் சிவஞானத்தின் தேச பக்திக்கு தீட்டு பட்டுவிடவில்லை. தீட்டுப் படவும் செய்யாது. இந்த அவையில் அரசியல் சட்டத்தின் பெயரால் நான் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டது வெறும் சடங்கல்ல. அதை ஒரு சன்மார்க்க நெறியாகவே நான் எண்ணுகிறேன். சிவஞானத்தின் தேசபக்தி எள்ளளவும் குறைந்துவிடாது, ஆனால், இன்றைக்கு இந்தக் குரலை எழுப்புவது இந்த இடத்திற்கு வந்துவிட்டதால் ஏற்பட்ட புத்தியல்ல. அரசியல் சட்டத்தை நான் என்றுமே மதிக்கிறவன். ஏன் என்றால், இந்த அரசியல் சட்டம் சுதந்திர இந்தியாவின் முதல் அரசியல் சட்டம். அது, தேச விடுதலை வீரர்களின் ரத்தத்தில் எழுதப்பட்டது. அதை எழுதுவதற்கு இரத்த தானம் செய்தவர்களிலே நானும் ஒருவன்; இங்கே வீற்றிருக்கும் எதிர்க்கட்சித்



தலைவரவர்களும் இன்னும் பலபேரும். என்னுடைய இரத்த தானத்தினாலும் எழுதப்பட்ட இந்த அரசியல் சட்டத்தை அவமானப்படுத்த நான் நினைக்கவே மாட்டேன். இதைக் கிழித்தெறிய நான் நினைக்கவே மாட்டேன். இந்த சாசனம் காப்பாற்றப்பட வேண்டுமே என்ற கவலைதான் எனக்கு. அந்தக் கவலையால்தான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

'மாநில சுயாட்சியைத் தமிழ்நாடு மட்டும் ஏன் கேட்கிறது?' என்கிறார்கள். இது கொஞ்சம் பசையுள்ள வாதம்தான். "இந்தியாவிலுள்ள அவ்வளவு மாநிலங்களும் கேட்காதபோது, தமிழ்நாடு மட்டும் கேட்பானேன்?" என்று கேட்கிறார்கள். நானும் திருப்பிக் கேட்கிறேன் அவர்களை, இந்தியா முழுவதும் பிரிக்க முடியாத ஒரு நாடு என்று வாதிடும்போது, 'மாநிலத்திற்கு மாநிலம் வேற்றுமை ஏன்?' என்றெல்லாம் கேட்கும்போது, காஷ்மீரத்திற்கு மட்டும் தனி அரசியல் சட்டத்தைத் தயாரித்துக்கொள்ள அனுமதித்தது ஏன்? இந்திய அரசியல் சட்டத்தை எடுத்துப் பாருங்கள். ஒவ்வொரு விதிக்கும் அடியிலே, 'நோட்' போடுவதைப்போல, எவ்வளவோ விதிகளில்—ஒன்று இரண்டு இல்லை, எண்ணற்ற இடங்களிலே—'இது காஷ்மீரத்திற்கு விலக்கு', 'காஷ்மீரத்திற்கு இது பொருந்தாது', 'காஷ்மீரத்தைப் பொறுத்த வரையில் இந்தத் திருத்தம் செல்லாது'; 'காஷ்மீரத்தைப் பொறுத்த வரையில் இது இன்ன தேதியிலிருந்துதான் செல்லும்' என்றெல்லாம் போடப்பட்டிருக்கிறதே அது ஏன்? ஒரே ஒரு மாநிலத்திற்கு மட்டும் விதி விலக்கு எதற்கு? இது என்ன நியாயம்? என்று கேட்கிறேன். அதைப் பார்க்கும்போது, தமிழ் நாட்டிற்கு மட்டுமே மாநில சுயாட்சி கொடுத்து ஆகவேண்டும் என்று கேட்க எங்களுக்கும் உரிமை உண்டு, காஷ்மீரத்திற்குத் தந்த சுயாட்சியை எங்களுக்கும் தந்தாக வேண்டும் என்று நான் கேட்கக்கூடாதா? ஒருவேளை, 'அங்கே கலகம்—பலாத்காரம் நடப்பதால் கொடுத்தோம்' என்று சொல்வார் களானால், நான் சொல்லுகிறேன்; நாங்கள் இன்றைக்கு இப்படியே இருந்து விடலாம்; நாளை கலைஞரோ பிரிவினையை விரும்பாமல் இருக்கலாம்; எங்கள் சந்ததியினர் எங்களைப் போலவே இருப்பார்கள் என்று நாங்கள் எப்படி உத்திரவாதம் கொடுக்க முடியும்? எனவே, நான் கேட்கிறேன், நாம், பிரிவினையைத் தடுக்கும் முறையில், ஒற்றுமையை ஓங்கச் செய்யும் வகையில், இந்த அரசியல் சட்டத்தைத் திருத்தினால் என்ன கெட்டுவிடும்? அதைத் திருத்த வேண்டும் என்று நான் கேட்பதற்காக யாரும் என்மீது கோபப்பட வேண்டிய அவசியமில்லை.

நமது முதலமைச்சர் அவர்களை, ஷேக் முஜிபுர் ரெஹ்மான் அவர்களோடு ஒப்பிட்டுப் பேசிவிட்டார்களாம். அதில் என்ன தவறு இருக்கின்றது? ஒரு கட்சியிலே—தலைவன்பேரிலே பக்தி கொண்டவர்கள்—அன்பினால் எவ்வளவோ

சொல்லுவார்கள், ஆண்டவனைப் பார்த்துச் சொல்லுவதைப்போல! ஆனால் அப்படிச் சொல்லுகின்றவர்களுக்கு முஜீபிர் ரெஹ்மானைப் பற்றியும் தெரியாது. முஜீபிர் ரெஹ்மானுக்கு எதிராக இருந்தவர்களைப் பற்றியும் தெரியாது. அவர்கள் அன்பினால், ஆர்வம் மிகுதியால் கொடுக்கும் கோஷம் அது. அப்படிச் சொல்லுவதில் பிழை இல்லை. பயப்பட வேண்டாம். கலைஞர் முஜீபிர் ஆகிவிட்டால், இந்தத் தேசம் துண்டாகிவிடாது. ஏன், நான்குகோடித் தமிழர்களும் முஜீபிர் ரெஹ்மான்களாக ஆகிவிட்டாலும் இந்த நாடு துண்டாகிவிடாது. காரணம் முஜீபிர் பிரிவினை வாதியல்ல. அண்மையில் நடந்த சரித்திரத்தைக்கூட காங்கிரஸ் நண்பர்கள் மறந்துவிடுகின்றார்கள். என்ன செய்வது இதற்கு?

முஜீபிர் மாநில சுயாட்சிதான் கேட்டார். யாகியாகான் அவரைச் சிறைப்படுத்திய நேரம் வரையில் அவர் மாநில சுயாட்சியைத் தான் கேட்டார்; பிரிவினையை அல்ல. மாநில சுயாட்சி வங்கத்திற்கு கேட்டுக்கொண்டேதான் சிறை சென்றார். ஆனால், திரும்பி வரும்போது மக்களே படைத்துவிட்ட சுதந்திர வங்கதேசத்திற்கு வந்தார். சுதந்திர வங்கத்தை முஜீபிர் ரெஹ்மான் கேட்கவில்லை. அவர் கேட்டதெல்லாம் சுயாட்சிதான். ஒன்றைச் சொல்லுகின்றேன். அகந்தையால் அல்ல, அடக்கத்தோடு! நான்கு கோடித் தமிழர்களும் முஜீபிர் ரெஹமான்களாக மாறினாலும் தமிழ்நாடு சுதந்திர நாடாகிவிடாது. ஆனால், ஒரு இந்திரா காந்தி யாகியாகானாகிவிட்டால் இது சுதந்திர நாடாகிவிடும். ஆளுவோருக்கு எச்சரிக்கையாகச் சொல்லவில்லை, தேசபக்தியின் விளைவால் சொல்லுகிறேன். 'முஜீபிர்' என்ற வார்த்தையைக் கண்டு பயப்பட வேண்டாம். நான் அப்படிச் சொன்னவர்களைக் கண்டிக்கிறேன். ஏன் கலைஞர் அவர்களை மட்டும் சொன்னார்கள் 'முஜீபிர்' என்று? என்னையும் ஏன் அவரோடு சேர்த்திருக்கக்கூடாது? நான்கு கோடித் தமிழர்களையும் ஏன் சேர்த்திருக்கக் கூடாது? ஒவ்வொரு தமிழனும் முஜீபிர் ரெஹ்மான் ஆவான் என்று இந்த மன்றத்தில் சொல்ல எனக்கு உரிமை உண்டு. துணிவும் உண்டு. ஏன்? பிரிவினையை விரும்பாதவர் முஜீபிர் ரெஹ்மான் அவர்கள். சிறையிலிருந்து அவரை விடுவித்தபின் பூட்டோ என்ன செய்தார்? அவரைச் சிறையில் இட்ட —அவர் கோரிய சுயாட்சிக் கோரிக்கையை மறுத்த யாகியாகான் வங்கத்தை இழந்தார். ஆனால் அவரை விடுதலை செய்தவுடன் விருந்தினர் மாளிகையில் வைத்துக்கொண்டு, "நாங்கள் சுயாட்சி கொடுக்கத் தயாராய் இருக்கிறோம். வங்கம் பிரிந்து போனதை உறுதிப்படுத்திவிடாதீர்கள்; வங்கம் பாகிஸ்தானின் ஒரு பகுதியாகவே இருக்க வேண்டும்" என்று பூட்டோ கேட்டுக்கொண்டார். தாமே விரும்பி பலநாள் அவரை விருந்தினர் மாளிகையில் வைத்துக்கொண்டு கெஞ்சிக் கேட்டார், பூட்டோ. அப்போது முஜீபிர் என்ன சொன்னார்? 'என்



தேச மக்களைக் கேட்டுத்தான் நான் எதையும் சொல்ல முடியும், அவர்களைக் கலக்காமல் நான் எதையும் சொல்ல முடியாது' என்றார். சுதந்திர வங்கம் வேண்டாம் என்று அவர் சொல்லவில்லை. சுதந்திர வங்க தேசம் என்பது மக்கள் படைப்பு. பயப்படுகின்றார்களே, இன்றைக்கு முஜிபிர் ரெஹமான் என்ற வார்த்தையைக் கேட்டு? காந்தியடிகளின்கீழ் சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களா இவ்வளவு பயந்தாங்கொள்ளிகளாகிவிட்டார்கள்? ஆச்சரியப்படுகிறேன்.

அன்றைக்கு காந்தியடிகள் என்ன சொன்னார்கள்; 'மாநிலங்களுக்கு எத்தகைய சுயாட்சி வேண்டும்' என்று செய்தி நிருபர்கள் காந்தி அடிகளைக் கேட்ட நேரத்திலே—[என்னிடம் தஸ்தாவேஜு இருக்கின்றது. எப்போது வேண்டுமானாலும் வந்து பார்த்துக்கொள்ளலாம். வேண்டுமானால் வழக்கறிஞர் பாணியில் பேசும் பாணி எனக்கில்லை. எப்படியோ கலைஞரவர்கள் அந்தப் பாணியில் பேசுகின்றார்கள் என்று அடிக்கடி நான் வியப்படைவதுண்டு. என்னால் முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்டு விடுகிறேன். அன்றைக்கு காந்தியடிகளைக் கேட்ட நேரத்திலே]—"இந்தியா முழுவதற்கும் எத்தகைய சுதந்திரம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றேனோ, அத்தகைய சுதந்திரமே ஒவ்வொரு மாகாணத்திற்கும் இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால் 'சுதந்திரம்' என்றால் பிரிந்து போய்விடுவது என்பதல்ல" என்றார். அடிகளின் இலக்கணப்படியே பார்த்தாலும், சுயாட்சி என்பது பிரிந்துபோய்விடுவதல்ல; இந்தியாவுடன் இணைந்து இருக்க வேண்டும். "பிரிந்து போகும் உரிமையைத் தவிர மாநிலங்களுக்கு வேறு எந்த உரிமையையும் வழங்கலாம்" என்று காந்தியடிகள் சொன்னார்கள். அவர் பயப்படாதபோது இன்றைக்கு நீங்கள் ஏன் பயப்படுகின்றீர்கள்? இது எனக்கு வியப்பாகவும் இருக்கிறது? வேதனையாகவும் இருக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையை ஏன் விட்டுவிட்டது? இராஜாஜி அவர்களின் வேண்டுகோள் ஒன்றை இங்கு படிக்கின்றேன். சேலத்தில் செய்தி நிருபர்களுக்கு இராஜாஜி அவர்கள் அளித்த பேட்டி 9—5—1961 'தினமணி' இதழில் வந்திருக்கின்றது.

> "இந்தியாவிலிருந்து பிரியும் அனுபவசாத்தியமற்ற விருப்பத்தை ஒதுக்கிவிட்டு, முழு சுயாட்சி உரிமையுள்ள இராஜ்யத்திற்குத் தங்கள் கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் குறைத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்."

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 ஏப்ரல் 27

"இராஜ்ய சர்க்கார்களின் ஆலோசனையின்பேரில் மத்திய சர்க்கார் நாட்டின் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று தேசத்தின் அரசியலமைப்புச் சட்டம் விதிக்கிறது. ஆனால், இராஜ்ய சர்க்கார் ஒரு அடிமையாகி, மத்திய சர்க்காரின் மானியத்தைக் கேட்கிறது. அதற்காக டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது."

என்று சொன்னார், அதை ஏற்றுக்கொண்ட விதத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினையை விட்டு மாநில சுயாட்சிக் கொள்கைக்கு வந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடுவதற்கு இல்லை. இன்னும் இராஜாஜி சொல்லுகின்றார்,

"சம அந்தஸ்துள்ள சுயாட்சி உறுப்புகளடங்கிய சமஷ்டி யூனியன் உருவாக்கவே நாம் உழைக்க வேண்டும்."

"சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்."

"1947-க்குப் பிந்திய அரசியல் வரலாறே அதிகாரங்களை மத்திய அரசிடம் குவிக்கும் சபலம் எப்படி இடையறாது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசிடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது."

"மானியம் பெறும் அமைப்புகளின் நிலைக்கு மாநிலங்களெல்லாம் அதிவேகமாகத் தாழ்த்தப்படுகின்றன."

"மத்திய அதிகாரம் விஸ்தரிக்கப்படுவதை விரும்புவோருக்கு இது பிடித்தமாயிருக்கக்கூடும். ஆனால், இது மணல் வீடாகவே முடியும். அதிக காலம் நீடித்து நிற்க முடியாது."

"வெளிநாட்டுறவு, பாதுகாப்பு ஆகிய துறைகள் தவிர, இதரவற்றில் சமஷ்டிக்குள்ள அதிகாரங்கள் மிக மிக அற்பமான அளவுக்கு குறுகி விட வேண்டும். அதே நேரத்தில், மாநிலங்களுக்குள்ள அதிகாரங்கள் அதிகமாக வேண்டும்."

"நமது ஜனநாயகம்" என்ற நூலில் இதைச் சொல்லுகின்றார். இந்தக் கருத்துக்களைச் சொன்ன அவர், அந்த நூலின் முன்னுரையில் சொல்லுகின்றார்:

"இதில் அடங்கியுள்ள பிரச்சினைபற்றி நான் சொல்லியிருப்பவை யாவும் எள்ளளவும் பட்சபாதமின்றி, தீர்க்க சிந்தனையின் பயனாக அடையப்பட்ட முடிவுகள் என்பதை வாசகர்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்."



1974 ஏப்ரல் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

இப்போது நான் எடுத்துக் காட்ட விரும்புவதெல்லாம், இராஜாஜி அவர்கள் சொன்னதற்காக சுயாட்சி கேட்கிறோம் என்பதல்ல; விடுதலைக் காகப் போராடாதவர்கள் சுயாட்சி கோரினால், அது பிரிவினைக் கருத்து. நேற்று பிரிவினையைக் கேட்டவர்கள் இன்றைக்கு அதை விட்டு விட்டு சுயாட்சி கேட்டாலும் அதையும் பிரிவினை என்று சொல்லுகின்றீர்களே. இராஜாஜி அவர்கள் என்ன கேட்கின்றார்கள்? யார் இராஜாஜி? நமக்குத் தெரியும் அவர் யார் என்று. அவரது தேச பக்தியை யாராவது எள்ளளவுக்காவது சந்தேகப்பட முடியுமா? இன்னும் சொல்லப்போனால் விடுதலைக்குப் பிறகு எழுதி முடிக்கப்பட்ட நமது அரசியலுக்கே கவர்னர்-ஜெனரல் என்ற அந்தஸ்தில் இருந்து அதற்குக் கையெழுத்திட்டவர், அந்தச் சட்டத்தை நடை முறைக்குக் கொண்டுவந்தவர்—சொல்லுகின்றார் இந்தக் கருத்துக்களை.

திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இந்த அரசியலைப் படைத்த கர்த்தாக்களிலே ஒருவர்.

(4–50 பிற்பகல்)

அவர் சொல்லுகிறார்—"டெல்லிக்குக் காவடி எடுப்பதாகக் கூறப்படும் புகாரில் உண்மையில்லாமல் இல்லை. [இது, அவர் சொன்ன காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்து வந்த கோஷம், டெல்லிக்கு மாநில அரசு காவடி எடுத்து வருவதாக.] மாநில-மத்திய அரசுகளிடையே அதிகாரங்களைப் பங்கீடு செய்தபொழுது இருந்த நிலை இப்பொழுது இல்லை. பிரத்தியட்ச நிலைமையில் புதிய சங்கடங்கள் தோன்றியுள்ளன. அவற்றைப் போக்க மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். இதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்துவது அவசியம்."

இது 6—5—1962-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் கூட்டத்தில் டி.டி.கே. பேசியது. அந்தச் சட்டத்தை எழுதியவரே திருத்த வேண்டு மென்று சொல்லுகிறார்.

நம்முடைய மதிப்பிற்கும் பெருமைக்கும் உரிய காமராஜர் சொல்கிறார்:

"மத்திய சர்க்காரில் ஒரு கட்சி ஆட்சி, மாநிலத்தில் வேறு கட்சிகளின் ஆட்சி என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படும் என்பதை இருபது ஆண்டுகளுக்கு முன் அரசியல் சட்டத்தை உருவாக்கிய வர்கள் எதிர்பார்க்கவில்லை. [அது அவர்களிடமிருந்த குறைபாடு.] இன்று அந்தப் புதிய நிலை உருவாக்கப்பட்டபடியால் மத்திய-மாநில உறவு பற்றியும் அதிகாரம் பற்றியும் நிர்ணயிப்பது அவசியம். எனவே, முதலமைச்சர்கள்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 ஏப்ரல் 27

மீண்டும் பிரதமர் இந்திரா காந்தி உடனடியாகக் கூட்டி இதுபற்றி முடிவு எடுக்க வேண்டும். 1972 தேர்தலுக்குப் பின்னால் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுமா அல்லது கூட்டாட்சி ஏற்படுமா என்று இப்பொழுது கூற முடியாது. எனவே, மத்திய அரசு—மாநில அரசுகள் உறவு பற்றி இப்போதே பேசி முடிவு எடுக்க வேண்டும். இல்லையேல் தேசத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படும்".

17—3—1969 அன்று காங்கிரஸ் கட்சி பிளவுபடாத காலத்தில், சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் பேரவைக் கூட்டத்தில் பேசி பத்திரிகைகளில் வெளியானது.

இன்று அவருக்கு டில்லி ஆட்சி மீது செல்வாக்கில்லை. ஆகவே, முன் அவர் சொன்னதை வைத்து இன்று நான் அவரைக் குறைத்துப் பேசவில்லை. தேச பக்தர்கள்—தேசியவாதிகள் என்று நண்பர் திரு. சக்தி மோகன் அவர்கள் சொன்னாரே, அந்த வட்டாரம்கூட மாநில சுயாட்சிக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது என்பதைக் காட்டவே இவ்வளவும் சொல்கிறேன். பிரிட்டிஷ்காரன் நம்மை எப்படி ஆண்டுகொண்டிருந்தான் என்பதை வேதனையோடும் துக்கத்தோடும் சொல்கிறேன்.

இந்தியாவின் சுதந்திரம் என்பதே மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதுதான் என்று பிரிட்டிஷார் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நாட்டின் சுதந்திரம் என்ற கருத்தில் அவர்கள் இருந்தார்கள். மிண்டோ—மார்லி ரிபார்ம்ஸ் என்று முதலில் கொடுத்தார்கள், மத்திய அதிகாரங்களை மாநிலங்களுக்குச் கொடுப்பது என்பதாகும். அதன் பிறகு மாண்டேகு—செம்ஸ்போர்டு ரிபார்ம்ஸ் என்று கொண்டு வந்தார்கள். இது மேலும் மத்திய அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்தது. பிறகு 1935-ம் ஆண்டு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இது, இன்னும் மத்திய அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. இந்த 1935 ஆம் ஆண்டு சட்ட அரங்கேற்றம் நடைபெற்றபோது வைசிராய் சொன்னார், "முழு அளவுக்கு மாநிலங்களுக்கு சுயாட்சி கொடுப்பதுதான் பிரிட்டிஷ் சர்க்காருடைய கொள்கையாகும்" என்று.

1946-ம் ஆண்டு பிரிட்டிஷ் கேபினெட் மிஷன் வந்தபோது வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு போக்குவரத்து—சுங்கங்கூட இல்லை; நாணயச் செலாவணி கூட இல்லை—இந்த மூன்றையும் மத்திய அரசுக்கென்று விட்டு விட்டார்கள். அப்பொழுது மௌலானா அபுல் கலாம் அஸாத் அவர்கள் எழுதிக் கேட்டார்கள், "அன்னிய உறவு என்றால், அதிலே வாணிபம் உண்டா" என்று. அதை உங்களுக்குள் பேசிப் பார்த்துக்கொள்ள வேண்டும்



1974 ஏப்ரல் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

என்று சொல்லி விட்டார்கள். அன்னிய அரசியல் உறவைத்தான் நாங்கள் நினைத்தோமே தவிர, வாணிபம் மாநிலங்களுக்கா மத்திய அரசுக்கா என்பதைப் பேசி முடிவு செய்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். இன்னும் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசுக்குக் கிடைக்கின்ற—குறிப்பாக போக்குவரத்து மூலம் கிடைக்கிற—வருவாய் போதாதென்றால், மாநிலங்களிடம் மானியம் பெறலாம் என்றார்கள். இப்பொழுது மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு மான்யம் கொடுக்கும் பழக்கம் இருக்கிறது; அதற்கு மாறாக, மாகாணங்களிடம் வந்து மத்திய அரசு மான்யம் கேட்கின்ற நிலைமை வந்தால், அப்போதுதான் மான்யம் கேட்பதனுடைய நிலைமை என்வாறு இருக்கும் என்பது மத்திய அரசுக்குப் புரியும். அந்தக் காலத்தில் நம்முடைய சிற்றரசுகள் கொடுக்கின்ற கப்பத்தைத்தான் பேரரசுகள் செலவழித்தது உண்டு. நான் மத்திய அரசை பயமுறுத்த விரும்பவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சி, படிப்படியாக சுயாட்சியளித்து வந்து, 1946ல் முழு அளவு சுயாட்சி மாநிலங்களுக்குக் கொடுத்துவிட்டு வெளியேறியது.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு மிக வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்; நான் உங்களோடு சேர்ந்து பாடுபட்டவன். நான் பிறந்து, எனக்கு புத்தி தெரிந்த நாளிலிருந்து தமிழை நேசித்து வருகிறேன். "பிறந்து மொழி பயின்ற நாளெல்லாம் சிறந்து உன் சேவடியே சிந்திக்கப் பெற்றேன்" என்று தெய்வத்திடம் கூறுகிறார் காரைக்கால் அம்மையார். நானும் பிறந்து, பின் மொழி பயின்ற நாள் முதற்கொண்டு, தமிழ் அன்னையின் சேவடியே சிந்திக்கப் பெற்றேன். ஆகஸ்டுப் புரட்சியில் ஈடுபட்டு, மத்திய மாநிலச் சிறையில் இருந்தேன். அப்போது, 14 ரூபாய் சம்பளம் பெற்ற அச்சகத் தொழிலாளியாக பரம ஏழையாக இருந்தேன். ஏழ்மைக்குரிய அந்தத் தொழிலையும் தூக்கி எறிந்துவிட்டு, வயது வந்த ஒரே தங்கையையும், இளம் தம்பியையும், வயது முதிர்ந்த பெற்றோரையும் ஆண்டவனே காப்பாற்றட்டும் என்று சொல்லி விட்டு விட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோடு சேர்ந்து சிறை புகுந்தேன். நான் இருந்த சிறையில் மின்சார விளக்குகள் இல்லை; மின்சார விசிறிகள் இல்லை. 120 டிகிரி வெய்யில் காய்கின்ற இடம். குளிரிலும் வெய்யிலிலும் வேதனைப்பட்டுக்கொண்டு, 'பாரா உஷார், பாரா உஷார்' என்று மராட்டிய மொழியில் காவலர் போடும் சப்தம் கேட்கும். அந்த நேரத்தில் வயிற்று வலியோடு நித்த நித்தம் போராடிக்கொண்டு அந்தச் சிறையில் துணிவுடன் இருந்தேனென்றால் எப்படி முடிந்தது?

இந்தியா சுதந்திரம் பெற்றால் நமது தமிழ்நாடு சுயாட்சி பெறும், இந்தியா சுதந்திரம் பெற்றால், நமது தாய்நாடு தமிழ்மொழியில் ஆளப்படும், ஆட்சி தமிழில் நடத்தப்படும், "கடை மகனை கந்தப்பனும் கண் விழித்து,

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 ஏப்ரல் 27

பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்று கலை விளக்கம் மின்றால் சுடரால் கண்விழித்துப் பதவி கொள்வார்" என்று பாரதி சொன்னானே, அதை நினைத்தேன். தமிழ் மொழியில் ஆளப்பட வாய்ப்பு கிடைக்கும்; அச்சகத் தொழிலாளியான அடியேனுக்கும் கூட விமோசனம் கிடைக்கும் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன், இதுதானா நாம் கேட்ட சுதந்திரம்? இதற்குத்தானா நாம் பாடுபட்டோம்? வீரபாண்டியக் கட்டபொம்மன் சுதந்திரம் கேட்டது பாஞ்சாலங்குறிச்சிக்குத்தான்! அந்த சுதந்திரம் இந்தியா பூராவுக்கும் வளரட்டும் என்ற எண்ணத்தில்தான் கேட்டான். ஜான்ஸி ராணி சுதந்திரம் கேட்டது ஜான்ஸி சமஸ்தானத்திற்கு மட்டும்தான். தாந்தியா தோப்பேயும், நானாவும் சுதந்திரம் கேட்டது, அவர்கள் இழந்துவிட்ட மஹாராஷ்டிரத்தைக் கைப்பற்றத்தான். திப்பு சுல்தான் போராடியது மைசூர்-கன்னட ராஜ்யத்தைக் காப்பதற்குத்தான்.

சுதந்திர இயக்கம் எப்படி வளர்ந்தது? "வங்கம் வங்காளியர்களுக்கே" என்பதில்தான் பிறந்தது. வங்காளத்தை கர்சான் இரண்டாகத் துண்டாடிய போது "வங்கம் வங்காளியர்களுக்கே, அதைத் துண்டாடாதே" என்று தேச பக்தர்கள் சொன்னார்கள். மொழிவழி இன உணர்ச்சியோடுதான் சுதந்திரப் போரில் இணைந்தது வங்கம்.

இன்னும் என்ன நடந்தது? காங்கிரஸ் கட்சி மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதில் கவனம் செலுத்தியது. சுப்பிரமணிய பாரதியார் சொல்கிறார்—சுதந்திர நாட்டை கவிஞர் கற்பனை செய்து பார்க்கிறார்; தாயின் மணிக்கொடி பறக்கிறதாம்; ஆம், அவர் கற்பனையில் பார்க்கிறார். தாயின் மணிக்கொடி பறக்கிறது! அந்தக் கொடியின் நிழலிலே, இந்திய ராணுவம் அணி அணியாக நிற்கிறதாம். அது இந்து அணி, இஸ்லாமியர் அணி, சீக்கியர் அணி, கிறித்தவர் அணி என்று நிற்கிறதா? இல்லை. ஐயர் அணி, அய்யங்கார் அணி, முதலியார் அணி, நாடார் அணி என்று நிற்கிறதா? இல்லை. வடக்கு அணி, தெற்கு அணி, மேற்கு அணி, கிழக்கு அணி என்று நிற்கிறதா? இல்லை. அது எப்படி இருக்கிறதாம்? செந்தமிழ்நாட்டு பொருநர்; சேர்த்த வீரர், சிந்தை துணிந்த தெலுங்கர், கன்னட வீரர், பஞ்சநதத்துப் பிறந்தோர்; முன்னர் பார்த்தன்முன் பலர் வாழ்ந்த நன்னாட்டார், துஞ்சும் பொழுதினும் தாயும் பதத்தொண்டு நினைத்திடும் வங்கத்தினோர்—என இனவாரி அணி வகுத்து நிற்கிறார்களாம்? "சரி" "அந்தக் காட்சி ஓர் ஆனந்தம் அன்றோ" என்கிறார் கவிஞர் ராணுவத்தை மொழிவாரி இனங்களாகப் பிரித்து சுதந்திரக் கொடியின் கீழ் நிறுத்துகிறார்



1974 ஏப்ரல் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

பாரதி. யாரோ கேட்டது போன்று அவருடைய இதயத்தில் எதிரொலி எழுகிறது. இவ்வாறு மொழிவாரி ராணுவத்தை அமைத்தால் நாடு அழிந்து விடாதா, இனவெறியாட்களை நம்பலாமா? என்று யாரேனும் அவரைக் கேட்டிருக்கலாம். அவர்களுக்கு பாரதியார், "நம்பற்குரியர் இவ் வீரர், தங்கள் நல்லுயிர் ஈந்தும் இக்கொடியினைக்காப்பர்" என்கிறார்.

டெல்லியில் இருக்கின்றவர்களுக்கு மாநிலங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் குணம் இல்லை என்று சொன்னால், டெல்லியில் இருக்கின்றவர்களுக்கு ஏகாதிபத்தியப் போக்கு இல்லை என்று சொன்னால், என்னுடைய இன உணர்ச்சிக்கு, அவர்கள் எதிரியில்லை என்று சொல்லட்டும். அவர்கள் தேச பக்தியை நான் நம்புகிறேன். அவர்கள் எங்களுடைய இன உணர்ச்சியை தேசபக்தியை மதிக்கட்டும்; நம்பட்டும்.

இப்பொழுதுள்ள பிரச்சினை ஸ்டேட்—சென்ட்ரல் ரிலேஷன்ஷிப் அல்ல—அதாவது, மைய—மாநில உறவுப் பிரச்சினை அல்ல. இது, மொழிவாரி தேசிய இனங்களின் உரிமைப் பிரச்சினை. நண்பர் கு. மா. பாலசுப்பிரமணியம் நேற்று இங்கு சொன்னது போல், சுயாட்சி கேட்பது மொழிவாரி தேசிய இனங்களுடைய பிறப்புரிமையாகும். இந்தியாவில் ஏதேனும் ஒரு மொழி வழி இனம் சுதந்திரம் கேட்பதற்குத் தகுதி பெற்றிருக்கிறது என்றால், அது தமிழ் நாடாகத்தான் இருக்க முடியும். நாம் தமிழ்நாடு—தமிழ் மொழி—தமிழ் இனம் என்று சொல்லிக்கொண்டு பிறர்பட வேண்டிய அவசியமில்லை. ராஜ ராஜ சோழன் காலமல்ல இது. கரிகால் வளவன் காலமல்ல இது. ராஜேந்திரன் காலமல்ல இது. எனக்கு விளங்குகிறது. அதனால்தான் நாமே விரும்பி சில அதிகாரங்களை மத்தியில் வைக்கிறோம். அதுதான் ஒருமைப்பாட்டிற்காக நாம் கொடுக்கின்ற விலை. 'சினம் மிகாம்யவற்கம் இன்னும் தேசம் பலவினும் சென்றேடி அங்கு தங்கள் புலிக்கொடி, மீன் கொடியும் சால்புற கண்டவன் தாய்நாடு, விண்ணை இடிக்கும் தலை இமயம், எனின் வெற்பை அடிக்கும் திறனுடையார், சமர் பண்ணிக் கலிங்கத்து இருள் எடுத்தார், தமிழ் பார்த்திபர் நின்ற தமிழ்நாடு'. "செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றெல்லாம் பாரதியார் பாடினார். தமிழ்நாட்டின் தனித்த குரலா என்றால், அல்ல; பல மாகாணங்களையும் சேர்த்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்பைச் சொல்கிறார். உலகாண்ட பரம்பரையைச் சொல்கிறார். எதிர்க்கட்சித் தலைவரையும் இணைத்தே சொல்லுகிறேன். அவர் சரியாகத்தான் இருக்கின்றார் என்ற நம்பிக்கையில்தான் சொல்கிறேன். நாம் சரித்திரத்தால் மட்டுமல்ல, நில அமைப்பாலும் தென்கோடியில் இருக்கின்றோம். ஆகவே, மத்திய ஆட்சி நமக்கு நெடுந்தொலைவில் இருக்கிறது.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 ஏப்ரல் 27

ஒன்றை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். யாரையும் குறை கூறவேண்டுமென்று இதை நான் சொல்லவில்லை. டெல்லி செகரெட்டேரியட்டுக்குள் நுழைந்தால், அங்கே அயல்நாட்டில் இருப்பது போன்று தோன்றுகிறது. மதிப்பிற்குரிய சித்ரா நாராயணசாமி, நண்பர் திரு. ஜி. சுவாமிநாதன் போன்றவர்களுக்கு வேண்டுமானால் டில்லியிலுள்ள அவர்களைப் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும். தாய்மொழியையே—தமிழையே நம்பியுள்ள என்போன்றோர், டெல்லி வீதிகளில் உலாவினால், மாஸ்கோ, பாரிஸ் வீதிகளில் உலாவுவது போன்ற உணர்வுதான் ஏற்படுகின்றது. பாரிஸுக்கும் டெல்லிக்கும் எந்த விதமான வேற்றுமையும் தெரியவில்லை. இந்தத் தன்மையைத்தான் நம்முடைய கூட்டாட்சியில் நம்மால் பார்க்க முடிகிறது. உத்தரப் பிரதேசத்திலிருந்து வருகிறவர்களிடமும், ஹரியானா, மத்தியப் பிரதேசங்களிலிருந்து வருகின்றவர்களிடமும் அந்த டெல்லி செக்ரெட்டேரியேட்டில் இருக்கின்ற சாதாரண சிப்பந்திகள் மற்றும் தலைமை அதிகாரிகள் உணர்வு பூர்வமான உறவைக் காட்டுகிறார்கள். அந்த உறவு நம்மிடம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. இது பிறப்பு வழியால் ஏற்படுகின்ற வேற்றுமை. ஆகவே, அதிகாரப் பங்கீட்டின் மூலமாகத்தான், இதைச் சமாளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(5–00 பிற்பகல்)

நேற்றுகூட நண்பர் திரு. அப்துல் வகாப் சொன்னது போன்று காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சியின் ஆட்சி இங்குதான் நடக்கிறது, வேறு கட்சிகளின் துணை இல்லாமல்! ஆகவே, எதிர்க்கட்சி ஆட்சி உள்ள மாநிலம் சுயாட்சிக் குரலைக் கிளப்புகிறது. இனி ஆட்சிக்கு வருகிற எதிர்க்கட்சிகளெல்லாம் இப்படித்தான் கிளப்பும் என்பதற்கு இதுவே அத்தாட்சி. ஆக, 'மற்ற மாநிலங்களிலெல்லாம் கேட்கவில்லை, நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?' என்பதிலே என்ன நியாயம் இருக்கிறது? எப்படி ஆளுகிற காங்கிரஸ் கட்சியிடமுள்ள மாநிலம் கேட்க முடியும்? அரிசி கேட்டதற்கே மந்திரி சபை கவிழ்ந்து விட்டதே குஜராத்திலே. இதை நான் சொல்லவில்லை, குஜராத் முதல்வர் சொன்னார். கட்சிக் கட்டுப்பாடு மூலம் மத்திய அரசின் பயமுறுத்தல் இல்லாத மாநிலம் இது. ஆகவே இங்கு சுயாட்சி உணர்ச்சி பீய்த்துக் கொண்டு வருகிறது.

இன்னொன்று; ஏறக்குறைய நாம் சோஷலிசத்தைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டு விட்ட காலம் இது. நான் கேட்கிறேன். மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருக்கிற நிலையில் சோஷலிசம் வரும் என்று சத்தியமாக நம்ப முடியுமா? இதுபற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தலைவர் திரு. காமராஜர் அப்படி நம்புகிறாரா? அங்கே மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப் பட்டு, லைசென்ஸும் பர்மிட்டுகளும் இந்தியா முழுவதுக்கும் ஒரு சிலரிடம்



1974 ஏப்ரல் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

கொடுப்பதென்றால், டாடா, பிர்லா, டால்மியா சட்டைப் பையில்தான் அவை போய்ச்சேரும். அதிகாரங்களை மத்தியில் குவித்ததன் விளைவு இது. தொழில் அதிகாரங்கள், வாணிப அதிகாரங்கள் ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டு விட்டால், உடனே சோஷலிசம் வந்து விடும் என்று நான் சொல்லவில்லை. பெரிய முதலாளித்துவம் கரைவதற்குத் தொடக்கமாக அது அமையக்கூடும். சோஷலிசத்தை உண்மையாக நம்புகிற யாரும் அதிகாரப் பரவல் முறையை, சுயாட்சி முறையை ஆதரித்தாக வேண்டும். அவர்கள்கூட எதிர்ப்பது சோஷலிசத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்பதற்கு அடையாளம்.

ஆங்கில ஆதிக்கம் என் காலத்திலேயே அழிந்து போகுமானால், நான் சொர்க்கத்திற்குப் போவேன். என் வாழ்நாளில் ஆங்கில ஆதிக்கம் போகாது என்றால், அன்னை மொழிக்காகப் பாடுபட நான் மீண்டும் பிறப்பதற்கே விரும்புகிறேன். அந்தப் பிறப்பையும் தமிழ் நாட்டில் எடுப்பதற்கே விரும்புகிறேன். தமிழ் நாட்டிலேயும் கலைஞருடைய தோழனாக இருந்து தமிழுக்கு வாழ்வு தேடுகிற நிலையையே விரும்புகிறேன். ஆங்கில ஆதிக்கம் எப்படிப் போகும்? அதுதான் பிரச்சினை. மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டதன் விளைவு மத்திய சர்விஸ் வேலைக்குப் போவதற்கு அங்கே ஆட்சி மொழி எதுவோ அதை இங்குள்ள எல்லோரும் படித்தாகவேண்டியிருக்கிறது. ஆம்; கல்விக் கட்டம் முழுவதிலும் படித்தாக வேண்டும். மந்திக்கு யார் போவார், எந்த வேலைக்குப் போவார் என்பது தெரியாததால், கல்விக் கட்டம் முழுவதும் தாய் மொழி அல்லாத மத்திய ஆட்சி மொழியைப் படித்தாக வேண்டும். இன்று ஆங்கிலம் மத்தியில் ஆட்சி மொழியாக இருப்பதால், ஆங்கிலத்தைப் படிக்கிறோம். ஆங்கிலம் போய் இந்தியை மத்திய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது, அதையும் இங்குள்ள எல்லோரும் படித்தாக வேண்டும். நான் கேட்கிறேன். ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரிப் படிப்பு வரை நம்மவர்கள் ஆங்கிலத்தைப் படித்ததால் என்ன ஆனது? நம்முடைய சிவிலிசேஷன் மாறியது. நாம் ஐரோப்பிய நாகரீகத்திற்கு அடிமையாகிவிட்டோம். இந்த நிலையில் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி வருமானால்—ஹிந்தியர்களுக்கும் நமக்கும் நாகரீகத்தில் சிறிதளவு வேறுபாடு உண்டு என்பதை மறக்கவேண்டாம்—நாம் வடவர் நாகரீகத்திற்கு அடிமையாவோம். இந்தியை கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை கட்டாயப் பாடமாக படித்தாலொழிய, மத்திய சர்விசில் நம்மவர்கள் வேலைக்குப் போக முடியாது. இப்போது ஆங்கிலம் படித்து ஆங்கிலேயனோடு போட்டியில்லை. ஆங்கிலேயன் வெளியேறிவிட்ட பிறகு வடவரோடு இதிலே நாம் சமநிலையில் இருக்கிறோம். இந்தி வருமானால், இந்தி படித்த இந்திக்காரன் திறமையை இந்தி படித்த இந்திக்காரன் அல்லாதான் பெற முடியாது. இந்த நிலைமையில்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1974 ஏப்ரல் 27

இந்தி மத்தியில் ஆட்சி மொழியாக ஆகுமானால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? நான், எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் காங்கிரஸ் நண்பர்களுக்கும் ஒன்று சொல்லுகிறேன். தேச பக்தியில் ஊறிய நான் இந்தியை எதிர்ப்பதற்கு இதுதான் காரணம். ஆங்கில ஆதிக்கம் தமிழகத்தில் இன்றே அகற்றப்பட வேண்டுமென்று சொல்கிற நான், மத்தியில் மட்டும் ஆங்கிலம் ஒரு இடைக்காலத்திற்கு இருக்கவேண்டுமென்று சொல்கிறேன் என்றால் அதற்குக் காரணம் இதுதான். கல்வியின் எல்லா கட்டங்களிலும் இந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கி, அதன் ஆதிக்க நிலையை ஏற்பதுபற்றி என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

மத்தியில் அதிகாரங்களைக் குவித்திருப்பதால் என்ன ஆகிறது? அங்கு உத்தியோகங்களும் குவிந்திருக்கின்றன. மத்திய ஆதிக்கத்திலிருந்து மாநிலத்திற்குத் திரும்புகிற அதிகாரங்கள் இந்தி மண்டலத்திலிருந்து, அல்லது இங்கிலீஷ் மண்டலத்திலிருந்து தமிழ் மண்டலத்திற்கு வருகின்றன. பாது காப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு உணவு இந்த மூன்றுதான் மத்தியில் என்றால், அப்புறம் அங்குள்ள உத்தியோகங்கள் எவ்வளவு என்று தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கிறபோது மொழிப் பிரச்சினை தீருவதற்கும் சுயாட்சிதான் வழி என்பதை நாம் மறந்து விட வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் என்ன செய்யப்போகிறது? அது எனக்குத் தெரியவேண்டும். தீர்மானம் அங்கு—பேரவையில் நிறைவேற்றி விட்டோம். இங்கும் நிறை வேற்றப் போகிறோம். இதற்கப்புறம் என்ன நிலைமை? கொள்கை ரீதியில் கூட மத்தியிலுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்று தெளிவாகத் தெரிகிறது. ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். அதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. பிரச்சாரம் வேண்டுமென்று முதல்வரவர்கள் சொன்னார்கள். அவர் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாளைக்குச் சென்னையில் மயிலையில் நானும் கலைஞரும் பேசுகிறோம்—மாநில சுயாட்சிப் பிரச்சாரம்தான். ஒன்றை மறந்து விடவேண்டாம். அதாவது, இந்த விஷயத்தில் நாம் போதிய அளவு பிரச்சாரம் செய்திருக்கிறோம். எனக்கு முந்தியே நீங்கள் பிரச்சாரம் தொடங்கினீர்கள். நீங்கள் பிரிவினை கேட்ட காலத்திலும் கூட, மத்திய ஆதிக்கத்தை எதிர்க்கிற அளவிலே மத்தியில் அதிகாரங்கள் குவிந்ததால் மக்கள் படுகிற வேதனைகளை விளக்கியிருக்கிறீர்கள். 1939 ஆம் ஆண்டிலிருந்தே அந்தப் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று தொடங்கிய நாளிலிருந்து பிரச்சாரம் செய்து வருகிறீர்கள். 'திராவிட நாடு



1974 ஏப்ரல் 27] [திரு. ம. பொ. சிவஞானம்]

திராவிடருக்கே' என்று மாறிய நாளிலிருந்து பிரச்சாரம் செய்திருக்கிறீர்கள். மாநில சுயாட்சியை ஏற்றுக் கொண்ட நாளிலிருந்தும் பிரச்சாரம் செய்து வருகிறோம். இன்னும் மாநில சுயாட்சிகோரும் வட்டாரத்திற்கு வெளியே இருக்கிற கட்சிகளும்—ஜெயப்பிரகாஷ், ராஜாஜி போன்ற தலைவர்களும்—இதைப்பேசி இதற்கு அகில இந்திய முக்கியத்துவம் ஏற்படுத்திக் கொடுத் தார்கள். இவ்வளவுக்குப் பின்னும் நாம் இனியும் பிரச்சாரத்தில் தான் நிற்போம் என்றால், எங்கோ சிக்கல் இருக்கிறதென்று நான் ஐயுறுகிறேன்—அச்சப்படுகிறேன். தெளிவு வேண்டும், முதல்வரவர்களிடமிருந்து—ஆளும் கட்சியிடமிருந்து—ஆட்சியிடமிருந்து. இந்தத் தீர்மானத்தில் கால வரம்பு வைத்து—அந்தக் கால வரம்பிற்குள் மத்திய ஆட்சியின் பதில் எங்களுக்குத் தேவை என்று கேட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். மத்திய அரசோடு மோதுகிறோம் என்ற பொருளில் இதை நான் சொல்லவில்லை. அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறோம் என்று பொருள். அவர்கள் விளக்கம் கொடுப்பதற்கு கால வரம்பு; அவகாசம் கொடுக்கிறோம் என்று பொருள். இப்போது என்னாகிறது? இதிலே இப்போது ஒன்றும் காணோம். முதல்வரவர்களைத் திரும்ப கேட்கிறேன். இது எதுவுமில்லாமல் இன்னும் பிரச்சாரம் தான் செய்துகொண்டிருப்போம் என்றால், முதல்வர் ஒன்றை மறந்து விடவேண்டாம். 1969 ஆகஸ்டிலே நான் பேரவையில் சுயாட்சித் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், அந்த மன்றத்தில் இருந்த எல்லாக் கட்சிகளும் ஆதரித்தன. காங்கிரஸ் கட்சி மௌனம் சாதித்தது. ஆதரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை. ஆனால் இப்போது என்ன நடக்கிறது? அன்று ஆதரித்த கட்சிகள் இன்று மன மாற்றம் அடைந்து விட்டன. ஆக, நாம் நடவடிக்கை எடுக்க தாமதிப்பதனால், அது நம்மையே பலஹீனப்படுத்துகிறது என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் தாமதிக்க அவசியமில்லை, தேவையில்லை என்று எண்ணுகிறேன். முதல்வர் அவர்கள் சுதந்திரம் உள்ள கட்சிக்காரர். நான் தோழன்தான். என்றாலும் வராந்தாவில் தானே இருக்கிறவன். அவர்கள் மாளிகைக்குள்ளே இருப்பவன் அல்ல. சில நேரங்களில் கூப்பிடுகிறார்கள்; அப்போது உள்ளே போகிறேன் திரும்பி வெளியே வந்து விடுகிறேன். தி.மு.க.வினர் கடந்த ஆண்டு ஆகஸ்டு 19-ம் தேதி மாநில சுயாட்சி நாள் கொண்டாடினார்கள். அப்போது, தாங்களே தான் கொண்டாடிக் கொண்டார்கள். நான் கூட நினைத்தேன். நம்மையும் விருந்தாளியாக அழைத்திருக்கலாமே என்று. லிமிடெட் நம்பர் வைத்து விருந்து நடந்தது போலும் என்று நினைத்துக்கொண்டு ஒரு விதமாக ஆறுதல் அடைந்தேன். செழியன் குழுவை நியமித்து, ராசமன்னார் குழு பரிந்துரை பற்றி ஆராய்ந்து அறிக்கை தரச் செய்தார்கள். என்னையும் அந்தக் குழுவில் சேர்த்திருக்கலாம்—சேர்க்கவில்லை. எனக்கு ஆங்கிலம் தெரியாது என்று

எண்ணினார்களோ என்று நான் ஐயுறுகிறேன். கலைஞர் அவர்கள் அப்படி என்னை விட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். வேறு யாரேனும் சொன்னார்களோ என்று ஐயுறுகிறேன். செழியன் குழுவினராவது என்னை சாட்சியத்திற்கு அழைத்தார்களா என்றால், அதுவும் இல்லை. ராஜமன்னார் குழுவே என்னை சாட்சியத்திற்கு அழைத்திருக்கிற போது—மூன்று நீதிபதிகளே என்னை அழைத்திருக்கிற போது, செழியன் குழுவினர், ராசமன்னார் குழு பரிந்துரை பற்றி என்னுடைய கருத்தைத் தெரிந்து கொண்டு, தங்கள் அறிக்கையைத் தயாரித்திருக்கலாம். இந்த அறிக்கை தயாரித்த பிறகாவது அதன் பிரதி ஒன்றை எனக்கு அனுப்பியிருக்கலாம். இது வரை செழியன் குழுவின் அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை. தாயும் சேயும் என்றாலும், வாயும், வயிறும் வேறு தான் என்பதில் உள்ள உண்மையை நான் உணர முடிகிறது. உங்களுக்கு ஆணை இடுகிற அதிகாரம் எனக்கு இல்லை.

யாரோ சொன்னார்களாம், "ம.பொ.சி.-யின் கொள்கையைக் கலைஞர் எடுத்துக்கொண்டார்" என்று. ஆணவம் இல்லாமல் மட்டுமல்ல -அடக்கத்தால் மட்டுமல்ல—சத்தியமாகச் சொல்கிறேன்; இந்தத் தத்துவம் எனக்குச் சொந்தம் அல்ல. அகில உலகின் அரசியல் சாத்திரம்—சரித்திரம் இது. 1781-ல் அமெரிக்காவில் தோன்றிய சமஷ்டி சகாப்தம், பின்னால் விரிவடைந்து வருகிறது. நாடுநாடாக பவனி வருகிறது. அதற்காக ஒரு இயக்கத்தைத் துவக்கினவன் என்ற சிறப்பு எனக்கு இருக்கலாமேயொழிய, தத்துவமே எனக்கு ஏக போகமல்ல. கலைஞர் என் கையில் இல்லை. நான் கலைஞர் கையில் இருக்கிறேன். நான் கலைஞரை வேண்டுகிறேன்—அவரது ஆட்சியை வேண்டுகிறேன்; இந்தப் பிரச்சினையில் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

எங்கோ கிடந்த எளியவனாகிய என்னை அழைத்து வந்து செக்ரடேரியட்டில் ஒரு அறை எனக்குக் கொடுத்து (ரும் கொடுத்து), என்னை இங்கு வைத்திருக்கிறீர்கள். உங்களை வேண்டுகிறேன்; நான் இப்படி நெடு நாட்கள் அறைக்குள் அடைபட்டுக் கிடக்க விரும்பவில்லை. அந்த அறையை விட்டு இந்த மாநில சுயாட்சிக்காக சிறைபுகவே விரும்புகிறேன். உங்கள் ராஜ்யத்தின் சிறைச்சாலைகளிலே எனக்கும் என் தோழர்களுக்கும் இடம் பார்த்து வையுங்கள்; அந்தச் சிறைச்சாலைகளில் திறந்து வையுங்கள் அறைகளை! இன்னொரு முறை இந்த ஏழைத் தொண்டன் நோயாளியாக உள்ள நிலையில் சிறையில் அடைபட்டு அங்கு உயிர் விடுவேனானால், எனது அஸ்தியிலிருந்து தோன்றுகிற பல லட்சக்கணக்கான தமிழ் வீரர்கள் மாநில சுயாட்சி தேட, என்னைவிட 19 வயது



குறைந்தவரான கலைஞர் அவர்களுக்கு உதவி செய்வார்கள். அவர் சுயாட்சித் தமிழகத்தின் முதல்வராகவும், அல்லது சுயாட்சிக் குடியரசின் தலைவராகவும் வருகிற வாய்ப்பை அவருக்குக் கொடுக்க விரும்புகிறேன். எனக்கு சிறைச் சாலையில் இடம் கொடுங்கள் என்று இரு கை கூப்பி வேண்டுகிறேன்; முடிவு உங்கள் கையில் இருக்கிறது. வணக்கம்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, முதலில் எனது திருத்தத்தைப்பற்றி ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வரவர்களின் தீர்மானத்தில் மூன்றாவது பாராவில் மாநில சுயாட்சி பற்றியும் ராஜமன்னார் குழு பரிந்துரைகள் மீதும் தமிழ் நாடு அரசு, அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறை உருவாகும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டுமென்று இம்மேலவை முடிவு செய்கிறது என்பதாகும். இதை தமிழ் நாடு கேட்கிறது. தமிழ்நாடு சட்டசபை தீர்மானத்தின் மூலம் கேட்கிறது. ஆகையினால் அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டுமென்பது அதனுடைய கருத்து. அதற்குப் பதிலாக நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தியாவில் இன்று 21 மாநிலங்கள் இருக்கின்றன. எனவே

(5-10 பிற்பகல்)

"அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தபின், இன்றுவரை ஏற்பட்டுள்ள அனுபவங்களை மனத்திற்கொண்டு, மாநிலங்களுக்கு அவைகள் செயல்படும் முறையில் ஏற்பட்டுள்ள குறைகள், சிக்கல்கள் என்னவென்று ஆய்ந்து, மாநிலங்கள் மேலும் செம்மையாகவும், திறமையாகவும் செயல்பட, இப்போதிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கட்டுக்கோப்பிற்குள், அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தாமலேயோ என்ன மாறுதல் தேவையென்றும், அவ்வாறு செய்ய முடியாவிட்டால், எந்த அளவிற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று முடிவு செய்யவும், இதற்கென முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று மத்திய அரசுக்கு இவ்வவை பரிந்துரை செய்கிறது" என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இது சுற்றி வளைத்துச் சொல்லப்பட்ட தீர்மானமல்ல. ஒன்று, முதலமைச்சர்கள் அத்தனை பேரையும் கொண்ட மாநாடு, அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே நாம் கேட்கும் அதிகாரங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றால், அவசியமானால் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும். இதுதான் தீர்மானத்தின் கருத்து. துணைத் தலைவரவர்கள்

சொன்னதுபோல், சுற்றி வளைப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுக்கப் படவில்லை. இந்தத் திருத்தமானது எங்களுடைய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி 27—6—1971-ல் சென்னையில், காரியக் கமிட்டி கூடி போட்டிருக்கிற தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது. 1971 ஜூன் 27-ம் தேதி அடியிற்கண்டவாறு தீர்மானம் நிறைவேறியது. "கடந்த 21 ஆண்டுகளாக இந்திய அரசியல் சட்டத்தை செயல்படுத்தி வந்ததினால் ஏற்பட்ட அனுபவத்தை கருத்தில் கொண்டு மத்திய மாநில உறவுகளாகிய நிதி பங்கீடு, மொழிப் பிரச்சினை, மத்திய-மாநில அரசுகளின் அதிகாரங்கள் போன்ற பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு பிரதம மந்திரி—மாநில முதலமைச்சர்களை அழைத்துப் பேசி இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு விரோதமில்லாமல் தீர்வு காண வேண்டுமென்று இக் கமிட்டி கருதுகிறது" என்று 1971-ம் ஆண்டில் ஒரு தீர்மானம் போட்டிருந்தோம். அதற்கு முன்பு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிகூட ஒரு தீர்மானம் போட்டது. 1971 ஜூன் மாதம் 16-17 தேதிகளில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. "அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த காலம்தொட்டு, ஏற்பட்டுள்ள அனுபவங்களைக் கொண்டு மத்திய-மாநில உறவுகள் பரிசீலனை செய்யப்பட்டு மத்திய சர்க்காரும் மாநில அரசுகளும் அதனதன் துறைகளில் செம்மையாக செயலாற்றக் கூடிய வகையில் உறவுகளின் அடிப்படை அமைய வேண்டும்" என்ற சுருக்கமான தீர்மானத்தைப் போட்டார்கள். அதை அனுசரித்துத்தான் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும், அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று, அனுபவப்பட்டவர்கள், அந்தத் தீர்மானத்தைச் செய்தார்கள். ஆகவே எனது தீர்மானம், நாம் மட்டும் தனித்து நின்று கோருவதைக் காட்டிலும், அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொண்டது. நாம் யார்? மத்திய அரசு எப்படிச் செயல்படுகிறது என்பதை இந்த விவாதத்தில் நாம் புகுமுன் கொஞ்சம் நன்றாக யோசித்துப் பார்ப்பது நலம். மாநில அரசு எந்த மக்களின் பிரதிநிதிகளாக சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களால் அமைக்கப் பட்டிருக்கிறதோ அதே மாதிரிதான் மத்திய அரசும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அது ஏதோ மாற்றான் அரசு போன்று நினைத்துக்கொண்டு நாம் பேசுவது அழகல்ல. அதிலும் இப்போது அமைந்துள்ள மத்திய அரசு எப்படிப்பட்டது? இங்கு அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு யார் ஓட்டுப் போட்டார்களோ, அவர்கள்தான் அவர்களுக்கும் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். கூட்டாளிகளாக இருந்து, ஒரே தோழமைக் கட்சியாக இருந்து தேர்தலில்



வெற்றி பெற்று வந்தவர்கள் இவர்கள். எந்த மக்கள் இந்த மாநில அரசுக்கு வேண்டிய ஆதரவையும், ஆக்கத்தையும் கொடுத்து, ஆட்சிபீடத்தில் அமர்த்தினார்களோ அவர்கள்தான் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை மத்திய அரசுக்கு ஓட்டுப் போட்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆகையால் பேசுபவர்கள் பலரும்—துணைத் தலைவர் உட்பட—அது மாற்றான் அரசு போலவும், இது நம் அரசு என்றும் தூண்டுவது போலப் பேசுவது நல்லதல்ல. ஆகவே இந்த இரண்டு அரசுகளும் வேறு என்று கருத்தில் கொண்டு பேச ஆரம்பித்தால் மாறுபட்ட கருத்து இருக்கத்தான் இருக்கும். அதிகாரங்களை மாநில அரசுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும்; இப்போதுள்ள அதிகாரங்கள் போதவில்லை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. எந்தெந்த அதிகாரங்கள் வேண்டுமென்பதைக்கூட பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, பிரச்சாரம் செய்வதனாலும் அல்லது தீர்மானம் போட்டுவிடுவதனால் மட்டும் முடியாது. நம்முடன் சேர்வதற்குப் பலர் தயாராக இருப்பார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கும்போது, எந்த மாநில அரசு வேண்டாமென்று சொல்ல இயலும்? நம் மாநிலத்தில் மாற்றுக் கட்சி ஆட்சி இருப்பதால், நமது முதல்வரவர்கள், நம் மாநில அரசு வழி காட்டட்டும். பிரதம மந்திரி இதை நிராகரிப்பவர்களாகத் தெரியவில்லை. பல உறுப்பினர்கள் ஏகாதிபத்திய ஆட்சி, எதேச்சாதிகார ஆட்சி நடக்கிறதென்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. நமக்கு ஓட்டுப் போட்டவர்கள்தான், அவர்களுக்கும் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்துடன்தான் அந்த அரசும் இருக்கும். அப்படி இல்லையென்றால், பிரதம மந்திரி அவர்கள் நம்முடைய முதலமைச்சருடைய கடிதத்திற்கு இம்மாதிரி பதில் எழுத வேண்டிய அவசியமில்லை. இங்கிருந்து இராஜமன்னார் குழு அறிக்கையை நமது முதல்வரவர்கள் அனுப்பியிருந்தார்கள். அதைப் பெற்றுக்கொண்டு, அதற்குத் தாமதமில்லாமல் பதில் எழுதியிருக்கிறார்கள். அதில், "நீங்கள் ஜூன் 15-ம் தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. மத்திய-மாநில உறவுகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையின் நகல் ஒன்றைக் கடிதத்துடன் அனுப்பியுள்ளீர்கள். அறிக்கையின் பரிந்துரைகளை உங்களது அரசாங்கம் ஆய்வு செய்யுமென்று எண்ணுகிறேன். நிர்வாகச் சீரமைப்புக் குழுவும் இப் பிரச்சினை பற்றி ஆய்ந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அக் குழு அளித்துள்ள அறிக்கை எங்களது ஆய்வில் உள்ளது. இது குறித்து உங்கள் அரசின் கருத்துக்களையும் அனுப்பி வைத்தால், அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவோம். இவை முக்கியமான பிரச்சினைகள் என்பதால் எல்லா

முதலமைச்சர்களுடனும் இது குறித்து கலந்து ஆய்வு செய்ய எண்ணி யுள்ளோம்" என்று 22—6—1971 அன்று எழுதிய கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார்கள். நம்முடைய முதலமைச்சருடைய கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, 7 நாட்களுள் இந்தப் பதிலை எழுதியுள்ளார்கள். அவர்களுடைய அந்தரங்க சுத்தியை நாம் சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. நமது முதலமைச்சரவர்கள் அதுமாதிரி சந்தேகப்படவில்லை என்பதை அவர்களுடைய பேச்சு, அவர்களுடைய கருத்து இவைகளிலிருந்து நான் உணர்கிறேன். பிரதம மந்திரியைப் பொறுத்தவரையிலும்கூட, எந்தவிதச் சந்தேகமும் இல்லை யென்று கருதுகிறேன். ஆனால், அவர்கள் அவசரமாகக் கேட்ட கருத்துக்களை மூன்று ஆண்டுகளாக அரசு அனுப்பி வைக்காமலிருப்பதற்கு என்ன காரணம்? 22—6—1971-லே, ராஜமன்னார் குழுவின் அறிக்கையின்பேரில் உங்கள் கருத்துக்களைச் சொன்னால், நாம் மற்ற முதலமைச்சர்களைக் கலந்து, இந்த அவசரமான, முக்கியமான பிரச்சினைகளை ஆராய வசதியாக இருக்குமென்று அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு மூன்று வருஷங்களாக இந்த அமைச்சரவை என்ன செய்தது என்று கேட்க விரும்புகிறேன். பெரிய காமதத்தை நமது தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வளவு 'சீரியஸ்' ஆக இதைப்பற்றி நினைப்பவர்கள், மூன்று ஆண்டுக்காலம் தாமதம் செய்திருக்க வேண்டியதில்லை. அதற்கு இப்போது என்ன அவசியம் ஏற்பட்டது? இவ்வளவு அவசரமாகச் செய்யாமல் இருக்கலாம். இப்போது இந்தச் சபை விவாதித்துக் கொண்டிருக்கிறது. பேரவையில் ஏப்ரல் 20-ம் தேதி விவாதம் முடிந்தது. 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதற்கிடையில் மத்தியில் அமைத்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை அனுப்பி அதுபற்றி அபிப்பிராயம் கேட்டிருந்தார்கள். அதுபற்றி அரசு ஆலோசித்து, இடையிலே அந்த அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டது. அதற்குப் பிறகு இதை அனுப்பியிருக்கிறது.

(5–20 பிற்பகல்)

திரு. கே. ராஜாராம்: ஏப்ரல் 20-ம் தேதி வரையில் சட்டசபை நடந்தது. 21-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை. 22-ம் தேதி மேலவைக் கூட்டம் ஆரம்பித்து விட்டது. உடனடியாக நாமும் விவாதத்தை எடுத்துக்கொண்டோம். நான்கு தினங்கள் நாம் அதைப்பற்றி ஆய்ந்து, பலவிதமான கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறோம். இந்த நிலையில் மூன்று ஆண்டுகள் பொறுத்திருந்த முதல மைச்சர் அவர்கள் இன்னும் 4 தினங்கள் பொறுத்திருந்து, இந்தக் கருத்துக் களையும் சேர்த்து மத்திய அமைச்சரவைக்கு அனுப்பியிருக்கக் கூடாதா?



அதற்குள் அவசரப்பட்டு, கூடிய பிறகு, ஒரு அவையின் கருத்துக்களை மட்டும் அனுப்பி வைப்பது, முதல்வர் அவர்கள், அதுவும் இந்த அவையின் முன்னவர், அப்படிச் செய்யலாமா? அது நான் எதிர்பார்க்காத ஒன்று ஆகும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பத்திரிகையில் உங்கள் பேச்சை மட்டும் போட்டு விடுவார்கள். பிறகு தனியாகச் சொன்னால் அதைப் போடாமல் விட்டு விடுவார்கள். குறுக்கிட்டுச் சொன்னால் இரண்டும் சேர்ந்து வரும் என்று சொல்லுகிறேன். நான் ஒருவேளை அப்படி யாருக்கும் புரியும்படி சொல்லாமல் விட்டுவிட்டேனா என்பதும் தெரியவில்லை. தீர்மானம் நிறை வேற்றப்பட்டு அதைப் பிரதமருக்கு அனுப்பி வைக்கவில்லை. நான் பிரதமருக்கு எழுதிய கடிதம்

"Dear Prime Minister.

I have pleasure in forwarding herewith for kind information, a copy of the white paper placed on the table of the Tamil Nadu Legislative Assembly on the views of my Government on State Autonomy and Rajamannar Committee's report. A copy of my speech made on the floor of the House on 16th April 1974 while moving the resolution on State Autonomy is also enclosed.

With kind regards".

என்று கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறேன். 'வயிட் பேப்பர்', தீர்மான வாசகம், முன்னுரை ஆகியவைதான் ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருக்கிறது. நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சபையில் சொல்லப்பட்ட கருத்துக்கள் அனுப்பப்படவில்லை. அவைகளெல்லாம் சேர்த்துத்தான் அனுப்பி வைக்கப்படும்.

திரு. கே. ராஜாராம்: மூன்று, 4 தினங்களாக வெளியிலும், பத்திரிகை களிலும் இந்த சபைக்கு மதிப்பு இல்லாத முறையில், சில உறுப்பினர்கள் இந்த சபை இருக்க வேண்டுமா, இதை ஏன் கலைத்து விடக்கூடாது என்று பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், இந்த அவையின் முன்னவர் அங்கே 'டிஃபெண்ட்' பண்ணவேண்டியிருக்க, அங்கே சும்மா இருந்து விட்டதால் புறக்கணித்து விட்டார்களோ என்று எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டுமல்ல, ஆளுங்கட்சிக்காரர்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன். இந்த அவைக் குரிய மதிப்பையும், பொறுப்பையும் முதல்வர் அவர்கள் உதாசீனப்படுத்த ஆரம்பித்து விட்டார்களோ என்ற கவலையில் சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த விளக்கத்திற்குப் பிறகும் தாங்கள் தெளிவு அடைந்தீர்களா இல்லையா என்று கேட்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: ஆகவே இந்த அவையின் உரிமையையும் பெருமையையும் பாதுகாக்க வேண்டிய முதல்வர் இனிமேல் இம்மாதிரி ஏற்படாமல் பார்த்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இனிமேல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்றால், ஏதோ ஏற்பட்டதாக அர்த்தம் ஆகிறது. இப்போது தீர்மானத்தின் வாசகமும், 'ஒயிட் பேப்பரும்' மட்டும்தான் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு முக்கிய பிரச்சினை பற்றி ஒரு மாநிலத்தில் 5, 6 நாட்கள் விவாதம் நடத்துகிறபோது, அதுபற்றி பிரதமருடைய கவனத்திற்குக் கொண்டுபோவது சிலாக்கியமானது என்பதற்காகத்தான் அனுப்பி வைக்கப்பட்டது. தீர்மானம் மட்டும் தான் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ராஜாராம்: அதோடு இந்த அவையைக் கலைத்து விடவேண்டுமென்று, எட்டாத கனி புளிக்கும் என்பது மாதிரி, அதற்காக அபேட்சகர்களைப் போட்டு, அவர்கள் அனைவரையும் இந்த அவைக்கு அனுப்ப வேண்டும் என்று ஓட்டுக் கேட்டு, அது கிடைக்கவில்லை என்றவுடனே, இந்த அவையையே ஒழித்து விடவேண்டும் என்று, தனக்குக் கிடைக்காததைக் கொட்டிக் கவிழ்த்துவிடவேண்டும் என்று பேசுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அங்கே யார் பதிலளிக்க முடியும், தாங்கள் (முதல்வர்) தானே பதில் அளிக்க வேண்டும். முதலமைச்சர் எங்களுக்கு முன்னவர், 'லீடர் ஆப் தி ஹவுஸ்'. அவர்தான் பேசவேண்டும். அவர் பேசாமல் விட்டது எனக்குக் கோபம்தான். அந்தக் கோபத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதுவும் கேட்டுக் கொடுப்பதாக இருந்தால் தான் உடனே அறிவிப்பது வழக்கம். நான் மௌனமாக இருந்தால் கலைக்க மாட்டேன் என்றுதான் அர்த்தம்.

திரு. கே. ராஜாராம்: அவையைக் கலைப்பதால் யாரும் நஷ்டம் அடையப் போவதில்லை. தாங்கள் 10 பங்கு நஷ்டம் அடைந்தால், முதலமைச்சர் அவர்கள் கட்சிக்கு 33 பங்கு நஷ்டம். இந்த அவையைக் கலைத்துவிட்டால் அந்த அவையில் உறுப்பினர்கள் ஆகிவிடுவோம். இந்த அவை மிகவும் நல்லது, சிறந்தது என்று பல பெரியவர்கள், மறைந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். நிதானமாக, அமைதியான சூழ்நிலையில்



நின்று விவாதித்து, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதில் நமது மேலவையைப் பாராட்டிச் சொன்னார்கள். எந்த மாநில மேலவையைப் பற்றியும் கூறாமல், நம்முடைய மேலவை நன்றாக இருக்கிறது, கருத்துக்களைத் தெளிவாகத் தருகிறது என்று கூறக் கேட்டிருக்கிறேன். இன்றுள்ள முதல்வர் அவர்கள் கூட பல தடவை சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையை வேண்டாம் என்று ஒழித்து விடுவதைப் பற்றிக் கவலையில்லை. அது இருக்கும் வரைக்குமாவது, அதற்கு இருக்கின்ற மரியாதை, கௌரவம் காக்கப்பட வேண்டும் என்பதோடு அந்த விஷயத்தை முடித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்திய அரசு என்றால் வேறு அரசு என்று யாரும் தவறாக நினைக்கக்கூடாது. இந்திய அரசு என்று சொல்லும்போது India, that is, Bharat shall be a Union of States. States இல்லையென்றால் இந்தியா இல்லை. [The States and the Territories thereof shall be as specified in the மாநிலங்கள் எல்லாம் இதிலே இருக்கிறது. மாநில அரசை அமைப்பதற்கு எந்த மக்கள் ஓட்டுப்போட்டு அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறார்களோ, அவர்கள்தான் ஓட்டுப் போட்டு மத்திய அரசையும் அமைக்கிறார்கள். இது வேறு அரசு, அது வேறு அரசு என்று எண்ணிக்கொண்டு, அதை ஏகாதிபத்தியம் என்றால் இதுவும் ஏகாதிபத்தியம்தான். மத்திய அரசை மாநிலங்கள் ஏகாதிபத்திய அரசு என்று சொல்ல ஆரம்பித்தால், மாநில அரசை பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிட்டி போன்றவை ஏகாதிபத்தியம் என்று சொல்ல ஆரம்பித்துவிடும். அது சரியல்ல. ஜனநாயக ரீதியில் மக்கள் ஆட்சி இங்கேயும் அங்கேயும் நடைபெறுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த இரண்டு ஆட்சிகளும் நமது அரசியல் சாசனத்தில் சொல்லப்பட்டபடி ஒன்றை ஒன்று அனுசரித்து ஒத்துழைத்து வேலை செய்தாலொழிய அரசியல் சட்டத்தை சரிவர அமுல்படுத்த முடியாது. ஆகையால்தான் அடிக்கடி கூடிப்பேசி, முதல்வர்கள் மாநாட்டை, தேசிய அபிவிருத்தி கவுன்சிலைக் கூட்டி கலந்து பேசுகிறார்கள். இந்த அதிகாரங்களைப் பற்றி ஒரு கூட்டத்தைக்கூட்டி விவாதித்து முடிவு செய்ய வேண்டும் என்றுதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்த அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு முன்பு நமது அறிஞர்களைப் பல நாடுகளுக்கு அனுப்பி அந்தந்த நாடுகளின் அரசியல் சட்டங்களைப்பற்றி அறிந்துகொண்டு வரும்படி செய்தோம். அமெரிக்காவிற்கும், சோவியத் ரஷ்யாவிற்கும், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் அவர்கள் சென்றார்கள். அந்த நாட்டு அரசியல் சட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்று பார்த்து கடைசியில் நமது சட்டம் தயாரிக்கப்பட்டது. நமது நாட்டு அரசியல் சட்டம் மற்ற நாட்டு

அரசியல் சட்டங்களின் ஒரு கதம்பம்தான். இதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அபிப்பிராயம் சொல்லலாம். நாம் நினைப்பதைப் போன்ற தப்பிதம் இல்லை. அதுபற்றி ஒவ்வொருவருக்கும் அபிப்பிராயம் கூற இடம் இருக்கிறது. இது ஒரு பெரிய சாசனம் போன்று துணைத்தலைவர் அவர்கள் இதற்கு வேண்டிய மரியாதை எல்லாம் கொடுத்துப் பேசினார்கள். அந்த மட்டில் அவரை நான் பாராட்டுகிறேன். ஆனால், அவர் பேசும்போது டெல்லிக்குச் சென்றால் அது ஏதோ இங்கிலாந்துக்குச் சென்றது மாதிரி, சோவியத் ரஷ்யாவுக்குச் சென்றது மாதிரி இருக்கிறது என்று பேசுவது அவ்வளவு நல்லதல்ல. அங்கேயுள்ளவர்களுடைய மொழி தெரியவில்லை என்பதற்காக அவர்களை அந்நியர்களாகப் பாவிப்பது சரியல்ல. நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட இங்கிலீஷ் மொழியைப் பொது மொழியாக, மற்ற மாநிலங்களுடன் தொடர்பு கொள்ள இணைப்பு மொழியாக, மத்திய அரசும் மாநில அரசும் தொடர்பு கொள்வதற்கான மொழியாக வளர்க்க வேண்டும் என்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 'கிராஜுவேட்ஸ்', பட்டதாரிகளுக்குத்தானே அது சாத்தியமாகும்.

**திரு. கே. ராஜாராம்:** பள்ளிக்கூடத்தில் படிக்காதவர்கள் கூட அந்த மொழியைப் பழகிக்கொள்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** வேறு யாராவது தலைவருடைய இருக்கையில் அமர்ந்து, துணைத் தலைவர் அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

(5–30 பிற்பகல்)

**திரு. கே. ராஜாராம் :** ஏனென்றால், இந்த மன்றத்தின் துணைத் தலைவரவர்களை உள்ளும் புறமும் நன்கு அறிந்தவன் நான். இருபத்து நான்கு மணி நேரமும் கூடவே இருந்து, ஒரு நாளில்லை, இரண்டு நாட்கள் இல்லை, இரண்டரை ஆண்டு காலம் இரவும் பகலும் கூடவே இருந்து, அவர் உடம்பில் ஓடும் ரத்தத்தின் ஒவ்வொரு சொட்டும் என்ன என்பதை நான் அறிந்தவன். இரண்டு பேரும் அந்த அளவிற்கு சிறையில் ஒன்றாகவே இருந்தோம். அவர் சொன்னார்களே, 120 டிகிரி வெயில் என்று, அதிலும் வாடி வதங்கினோம், அதைப் போல பூஜ்யம் டிகிரி குளிரிலும் அவதிப்பட்டோம், துன்பப்பட்டோம். இரண்டு ஆண்டுக் காலம். கடைசியில் ஆறு மாதம் முன்பாக அவர் தப்பித்துக்கொண்டு விட்டார் அந்தக் குளிரிலிருந்தும் வெய்யிலிலிருந்தும். தஞ்சாவூருக்கு வந்துவிட்டார், உடல் நலக் குறைவு காரணமாக. அந்த அளவிற்குச் சிரமப்பட்டோம். நாம்



பெற்ற இந்த நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற அந்த ஒரு எண்ணத்தைத் தவிர என் போன்றவர்களுக்கு வேறு எதுவும் இல்லை. இருக்க முடியாது.

இன்று இந்தியா என்றால், உலகத்தின் கண்களுக்கு இந்திய அரசுதான் தெரியும். இதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியா என்றால் இந்திய அரசு. இந்த இந்திய அரசு பலவீனப்பட்டுவிட்டால் நிலைமை என்ன வாகும்? யோசித்துப் பார்க்க வேண்டும். அதை என்னால் சிந்தித்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஆகவே, இந்திய அரசு எந்தக் காரணத்தினாலும் பலவீனப்பட்டுவிடக்கூடாது. அதில் நாம் எல்லோரும் அக்கறையுடன் இருக்கத்தான் வேண்டும். அதே நேரத்திலே மாநில அரசுகளுக்கு கூடுதலாக என்னென்ன அதிகாரங்கள் வேண்டும் என்பதை கூடிப் பேசி, பிறகு அவர்களிடமிருந்து கேட்டுப்பெற வேண்டும். நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பதில் தவறு எதுவுமில்லை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லுவதிலும் தவறு ஏதுமில்லை.

முதலமைச்சர் அவர்கள் உரையில், 1945 ஆம் ஆண்டு அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி, இந்திய மக்கள் முன் வைத்த காங்கிரஸ் தேர்தல் பிரகடனத்தில்

> "இந்தியக் கூட்டாட்சி என்பது அதன் பல்வேறு பகுதிகளின்— விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்கவேண்டும். பகுதிகளுக்கு (அதாவது மாநிலங்களுக்கு) அதிக பட்ச சுதந்திரம் அளிப்பதற்காக எல்லோருக்கும் பொதுவான, முக்கிய அதிகாரங்கள் கொண்ட குறைந்த பட்ச அதிகாரத்தைக் கூட்டாட்சி (மத்திய) அரசுக்கும் தேவைப்படும் பகுதிகள் அதாவது மாநிலங்கள் விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப் பட்டியலும் இருக்கலாம்"

என்று இருப்பதையும், பிறகு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1947 ஆம் ஆண்டிலே அரசியல் நிர்ணய சபையில் முன் மொழிந்த தீர்மானத்தில்,

> "இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப்பகுதிகளும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப்பகுதிகளும், வேறு வெளியில் உள்ள பகுதிகளும் இணைந்து சுதந்திர இந்தியாவாக விளங்கும். அரசியல் நிர்ணய சபை தீர்மானிக்கிறபடியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப்பொழுதுள்ள எல்லைகளு

டனே அவை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சியுள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் (ரெஸிடுவரி பவர்ஸ்) அப்பகுதிகளுக்கே அளிக்கப்படும்"

என்று இருப்பதையும் எடுத்துக் காட்டி, அது மட்டுமில்லாமல், பிரிந்து போகும் உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி இருக்க வேண்டும் என்பதும் அப்போது முடிவு செய்யப்பட்ட விஷயம் என்றும் குறிப்பிட்டு, பிறகு முதலமைச்சர் அவர்கள் 'இப்படிப்பட்ட தீர்மானங்களையும் தேர்தல் பிரகடனங்களையும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பிறகு மறந்துவிட்டார்கள். இவை மறந்துவிட்ட அல்லது மறைக்கப்பட்டுவிட்ட உண்மைகளாக ஆகிவிட்டன' என்று சொல்லுகின்றார்கள். ஆனால் உண்மை அப்படியல்ல. 1947 ஆகஸ்டுக்குப் பிறகு நாட்டிலே சில பகுதிகளில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இந்த தேசத்தையே உலுக்கி விட்டன. ஜின்னா அவர்களுடைய பிடிவாதத்தினால் இந்தியாவிற்கு ஏற்பட்ட பெரிய நஷ்டம், பாகிஸ்தான் பிரிந்தது, பிறகு பிரிவினையை அடுத்து 40 மில்லியன் மக்கள் அதாவது நான்கு கோடி மக்கள் அந்தப் பகுதியிலிருந்து இந்தியாவிற்குள் விரட்டப்பட்டார்கள். அவர்கள் தங்கள் சொத்து சுதந்திரங்களையெல்லாம் இழந்துவிட்டு, பிள்ளை குட்டிகளையெல்லாம் விட்டுவிட்டு பலர் கொலைசெய்யப்பட்டு ஓடிவந்தார்கள். பலர் மதம் மாற்றப்பட்டார்கள். இப்படி தொல்லைக்குள்ளானவர்கள் போக பாக்கி மட்டும் 40 மில்லியன் அல்லது நான்கு கோடிப் பேர் இந்தப் பகுதிக்கு விரட்டப்பட்டு வந்தனர். அந்த அனுபவத்தின் மூலமாகத்தான் பிரிவினை என்று வந்தால் நாட்டிற்கு எவ்வளவு தீங்கு என்று எண்ணி, 'பிரிந்து போகும் உரிமை' என்ற அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டார்கள். அதோடு மாநில அரசுகளைக் காட்டிலும் மத்திய அரசு அதிக பலமுள்ளதாக இருக்க வேண்டும் என்று செய்துவிட்டார்கள். அந்த அடிப்படையில் செய்த முடிவுகள் காரணமாக ஏற்பட்ட நிலைமைகள்பற்றி முதலமைச்சர் அவர்களும் நமது மேலவையின் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் கருத்துக்களைக் கூறினாலும், அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற பிரச்சினையை பேசித் தீர்த்துக்கொள்ளலாம். கூடுதலான அதிகாரங்களை மாநிலங்களுக்கு எவ்வளவு பெற முடியுமோ அவ்வளவையும் பெறுவதில், அந்த முயற்சியிலே பரிபூர்ணமாக ஒத்துழைக்க காங்கிரஸ் கட்சி மட்டுமில்லை, யாருமே எதிர்க்க மாட்டார்கள். மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களைப்பற்றி புனராலோசனை செய்து அவை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.





அடுத்தபடியாக 'மாநில சுயாட்சி' என்ற வார்த்தையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 'மாநில சுயாட்சி' என்பதை நான் விளக்க வேண்டிய அவசியமே இல்லாதபடி, துணைத் தலைவரவர்களே ஐந்து நிமிஷம் அதைப்பற்றி பேசினார்கள். மிண்டோ மார்லி சீர்திருத்தம் வந்த காலத்திலே 1909-லே அப்போது ஆங்கிலேய அரசு 'இது மாநில சுயாட்சி' என்று சொல்லித்தான் அந்தச் சீர்திருத்தத்தைக் கொடுத்தார்கள். நாம் ஒப்புக்கொள்ளவில்லை. அடுத்தபடியாக, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என்று வந்த காலத்திலும், 'இது தான் மாநில சுயாட்சி' என்று சொன்னார்கள். அதைத்தான் 'ப்ரொவின்சியல் அடானமி' என்றார்கள் அப்போது. அதையும் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகு 1935-ல் ஸைமன் கமிஷன் விஜயத்திற்குப் பிறகு, அப்போது இங்கிலாந்து நாட்டிலே வெளிநாட்டு காரியதரிசியாக இருந்த ஸாமுவேல் ஹோர் 'இந்திய அரசியல் சட்டம்' என்ற சட்டத்தைப் போட்டு, மாநில சுயாட்சி இதுதான் என்று சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு தடவையும் இதுதான் மாநில சுயாட்சி என்று அதிகாரங்களைக் கூட்டிக் கூட்டிக் கொடுத்துக்கொண்டே போனார்கள். கடைசியில் 1947-லே சுதந்திரம் பெற்ற பிறகு இதுதான் மாநில சுயாட்சி என்று கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே மாநில சுயாட்சி இல்லை என்று சொல்லுவது சரியில்லை. என்னைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தைகளிலே பரிபூரண நம்பிக்கையோடுதான் பேசுகிறேன், அதிலே எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஆனால் அவருடைய வார்த்தைகளிலே மாற்று அர்த்தம் கற்பிப்பதற்காக வேண்டுமென்றே இப்படி இருப்பதைக் காட்டியும், மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்பதைக் காட்டியும், மாநில சுயாட்சிக்கான அதிகாரங்கள் மாற்றியமைக்கப் படவேண்டும் என்று சொல்லலாம். அல்லது பரிபூரண சுயாட்சி வேண்டும் என்று சொன்னால் அது வேறு விஷயம். ஆனால் மாநில சுயாட்சி இருக்கும்போதே மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்லுவதிலேதான் அர்த்த பேதம் ஏற்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

எஞ்சியுள்ள அதிகாரங்கள்பற்றி, ரெஸிடுவரி அதிகாரங்கள் பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றிச் சொல்லும்போது கூட, முதன் முதலாக காங்கிரஸ் கொள்கையில் அப்படி இருந்தது. கான்ஸ்டிட்யுவெண்ட் அஸெம்ப்ளியை ஆரம்பிக்கும்போது, ரெஸிடுவரி பவர்ஸ் மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும் என்று இருந்தது. அது ஏன் கைவிடப்பட்டதோ தெரியவில்லை என்றார்கள். இதெல்லாம் பாகிஸ்தானால் ஏற்பட்ட கஷ்டம்தான். நேற்றுகூட பாருங்கள், 'உடனே பிரிந்துபோகும் உரிமையோடுகூடிய மாநில சுயாட்சி

வேண்டும்' என்று சொல்லி முக்கிறேன் என்று உட்காருகின்றார் ஒரு அன்பர். இன்னும் அந்த வார்த்தைகளை விட்டபாடில்லை. இப்படிப்பட்ட தோழர்களை வைத்துக்கொண்டு பேசும்போது, முதலமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் இதிலே சுத்தத்தோடு பேசினாலும், தவறான கருத்துக்களை எப்படி வெளியே உண்டுபண்ணும் நிலைமை ஏற்படுகிறது என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே அப்படிப் பேசுகிறதை விட்டுவிட்டு, அதிக அதிகாரமுள்ள மாநில சுயாட்சி வேண்டும் என்று சொன்னால், வெளியே உள்ளவர்கள் அதைத் திருத்திக்கூறும் நிலை வராது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(5–40 பிற்பகல்)

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, அதிக சுதந்திரமுள்ள மாநில சுயாட்சி வேண்டும் என்று சொல்கிறார். நான் பரிபூர்ணமாக ஒத்துக்கொள்கிறேன். சுயாட்சியை விட மேலே போகிறார்.

**திரு. கே. ராஜாராம் :** அரசின் கருத்தை வெளிப்படுத்தும் வாசகங்களைப் பற்றி ஒரு சில வார்த்தை சொல்லிக்கொள்கிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று கோரும்போது, சட்டம் அமைதி குலையும்போதும், நிர்வாகச் சீர்குலைவு ஏற்படும்போதும், மத்திய அரசு தலையிட்டு சரி செய்ய வேண்டியிருக்கிறது என்று நான் உரிமையுடன் சொல்லிக்கொள்ள முடியும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இன்றல்ல, என்றைக்குமே நம்முடைய நிர்வாகத்திற்குத் துணைபுரியும் அதிகாரிகளும், உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய திறமையைச் செவ்வனே காட்டி வந்திருக்கிறார்கள். அவர்களை இந்த தேசமே பாராட்டுகிறது. இந்திய நாடே பாராட்டுகிறது. நல்ல முறையில் நாம் ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறோம். சட்டமும், அமைதியும் குலையும் நிலைமை நம்முடைய அண்டை மாநிலங்களில் ஏற்பட்ட அளவுக்கு இங்கே ஏற்படுமென்று எண்ணிப் பார்க்கக்கூட பயமாகவிருக்கிறது. அந்த மாதிரி ஒரு நிலை ஏற்பட்டால்,—ஆந்திராவில் ஏற்பட்டது, குஜராத்தில் ஏற்பட்டது போன்ற விஷயத்திற்கு—அது இந்தத் தமிழ் நாட்டுக்கு கெட்ட பெயரைக் கொண்டுவந்து விட்டு விடும். அந்த மாநிலங்களிலே எல்லாம் கலவரத்தின் போது மனிதன் வீட்டை விட்டு வெளியே போக முடியவில்லை. வெளியே போனவர்கள் வீட்டுக்குத் திரும்ப வேண்டுமே என்று பெண்டு பிள்ளைகள் அஞ்சி கொண்டிருந்தனர். அந்த மாதிரி ஒரு நிலை ஏற்படும் போது, மத்திய அரசுக்கு அதிகாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டால், மாநில அரசுகள் யாரை எதிர்பார்ப்பது என்று கேட்கிறேன். ராணுவம்தான் மத்திய அரசுக்கு என்று கூறப்பட்டது: மத்திய அரசு பலமுள்ளதாக இருந்தால்தான், மாநில அரசுகளுக்கு உதவியாக இருக்க முடியும் என்பது என்னுடைய



கருத்து. அதே மாதிரி மாநிலங்களுக்கு இடையே கருத்து வேற்றுமைகள் மட்டுமல்லாமல், தகராறுகள் ஏற்படுகின்றபோது, அவற்றைத் தீர்த்துவைப்பதற்கு ஆற்றல்மிக்க ஒரு மத்திய அரசு இருத்தல் வேண்டும். நாம் ஒரு மாநிலக் கட்சி, ஆகையினால் மத்திய அரசில் நாம் அதிகாரத்திற்கு வர முடியாது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு, மத்திய அரசைப் பலவீனப்படுத்த வேண்டும் என்று நினைப்பது சரியல்ல. நாம் மாநிலக் கட்சியானாலும், மத்திய அரசைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இரண்டுமே மக்களுடைய அரசுகள்தான். இரண்டு அரசாங்கங்களும் செவ்வனே நடைபெற வேண்டும். ஆகவே இம்மாதிரியான விஷயங்கள் பேசித் தீர்த்துக்கொள்ளப் படவேண்டியவைகள். இவற்றின் மீது ஒருதலைப்பட்டமாகத் தீர்ப்பு அளிக்க முடியாது. பேசித்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும். எவரும் மோதிக் கொள்வதன் மூலம் நல்ல காரியங்களைச் சாதித்து விட முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி :** மாண்புமிகு தலைவரவர்களே, எல்லா மாநிலங்களிலும் மாநிலக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு போனால், அங்கே ஆட்சி எப்படி நடைபெற வேண்டுமென்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, என்றைக்குமே மத்திய ஆட்சியைப் பிடிக்க மாட்டோம் என்ற எண்ணம் எந்த மாநிலக் கட்சிக்கும் நிரந்தரமாக இருப்பது தவறு என்பது என்னுடைய கருத்தாகும். இதை அரசியல் நிபுணர்கள், அரசியல் வல்லுநர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவரவர்கள், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் கூறியுள்ள ஒரு கருத்தை இங்கே படித்துக் காட்டினார்கள். அதே போல் திரு. காமராஜர் அவர்கள் சொல்லியுள்ள கருத்து ஒன்றையும் படித்துக் காட்டினார்கள். மிகவும் தெளிவாக இருக்கிறது. என்றைக்குமே ஒரே கட்சி மெஜாரிட்டியாக வந்து விடுமென்று சொல்லிவிட முடியாது. மாநிலக் கட்சிகளாக இருக்கின்றவைகள் மத்திய அரசில் பொறுப்பு ஏற்க முடியவில்லை என்ற எண்ணம் இருக்கத்தான் செய்யும். பல மாநிலங்களில், அந்தந்த மாநிலக் கட்சிகள் ஆங்காங்கே ஆட்சிக்கு வருமேயானால், எந்த ஒரு மாநிலக் கட்சியும் தனித்து மத்தியில் ஆட்சிக்கு வரமுடியாத ஒரு நிலைமைதான் ஏற்பட்டுவிடும். ஆகவே மத்திய அரசை நாம் பலவீனப்படுத்த வேண்டும் என்ற எண்ணமே இருக்கக்கூடாது. மத்திய அரசு பலமாகவிருந்தால்தான், இந்திய நாடு நல்ல நிலைமையில் இருக்க முடியும். இந்தியா என்பது ஒரு நாடு. மாநில அரசுகள் மாநிலங்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை நிறைவேற்றி வருகின்றன.

மாநிலங்களுக்கு இப்பொழுது இருக்கின்ற அதிகாரங்கள் போதவில்லை என்றால், அதுபற்றி கூடிக் கலந்து பேசித் தீர்த்துக்கொள்ளலாம். நிதி விஷயத்திலும், அதிக நிதி வசதிகள் தேவை என்றால், எல்லா மாநிலங்களுக்கும் அது தேவைப் படுகின்ற ஒரு நிலைமை இருக்கும்போது, கூடிப் பேசி அதையும் தீர்த்துக் கொள்ளலாம். கரும்பு தின்ன யாரும் கூலி கேட்கமாட்டார்கள். எல்லா மாநிலங்களும் அதிகப் பணம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண் டிருக்கிறார்கள். அதிக வருவாய் வேண்டுமென்று எல்லா மாநிலங்களும் விரும்பத்தான் செய்யும். நாம் தான் கேட்கிறோம், மற்றவர்கள் கேட்க மாட்டார்கள் என்று கருத வேண்டாம். ஆகையினால் இது மாநிலங்கள் அனைத்தும் கூடிப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

திட்ட ஆணைக் குழு தனித்து இயங்க வேண்டும் என்று நம்முடைய மாநில அரசின் கருத்தில் கூறப்பட்டிருக்கிறது. அது சரியா என்று நான் கேட் கிறேன். மாநிலத்திற்கு என்று ஒரு திட்டக் குழுவை அமைத்திருக்கிறோம். அது தனித்து இயங்கி, அது இங்கே எந்த விதமான அபிவிருத்திகள் வேண்டு மென்று விரும்புகிறதோ அவைகளை அதுவே தீர்மானித்து, திட்ட அமைச்ச ரிடமோ, அமைச்சரவையிடமோ கேட்டுத் தெரிந்துகொள்ளாமல் செயல் பட்டால், அதை மாநில அரசு ஏற்றுக்கொள்ளுமா? அதே போல் மத்திய திட்டக் குழு தனித்து இயங்க வேண்டும், மத்திய அரசுக்கு அப்பாற்பட்டதாக இயங்க வேண்டும் என்று சொல்வது சரியா? சரியல்ல என்பது தான் என்னுடைய கருத்தாகும். ஒவ்வொரு மாநிலமும் தனியாக ஒரு திட்ட வாரி யத்தை அமைத்துக்கொள்ளலாம் என்று சொல்கின்ற நேரத்தில், மத்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கின்ற திட்டக் குழு, மத்திய அரசாங் கத்தின் வருவாய் இனங்களைக் கருதி, அதற்குத் தகுந்தபடி திட்டங்களைச் செயல்படுத்தினால்தான், காரியங்கள் நல்ல முறையில் நடைபெறும். அந்தத் திட்டக் குழு மத்திய அரசுக்கு அப்பாற்பட்டு இயங்க வேண்டுமென்று சொல்வது என்றால், அதே போல் மாநில திட்டக் குழுவும் செயல்படுவதற்கு சம்மதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, உயர்நீதி மன்றத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது ஹைகோர்ட் ஜட்ஜுகளையும், சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுகளையும் ஜனாதிபதி நியமனம் செய்து வருகிறார். ஹைகோர்ட் நீதிபதிகளை மட்டும் மாநில அரசு நியமிக்கலாம், அது மத்திய அரசின் நியமனமாக இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். பொதுவாக மக்கள் இவற்றையெல்லாம் விரும்புவார்களா என்று பார்க்க வேண்டும். மத்திய அரசும் நம்முடைய அரசு என்ற கருத்து வந்தால்





தான், இந்த மாதிரியான கூடிப்பேசும் எண்ணம் வரும். அது வேறு அரசு, அந்நியர் அரசு, அது நம்முடைய அரசல்ல என்ற கருத்து வருமேயானால், வித்தியாசமான எண்ணங்கள்தான தோன்றும். உயர்நீதி மன்றங்களைப் பற்றிக் கூறுகின்ற நேரத்தில், ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி, மாநிலத்திற்கு மாநிலம் உயர்நீதி மன்ற நீதிபதிகளை மாற்றலாம் என்று வழி செய்திருக் கிறார்கள். அந்த அளவுக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கின்ற நிலைமையில், ஹைகோர்ட்டு ஜட்ஜுகள் நியமனம் மாநில அரசுக்கு வரவேண்டும் என்று சொல்வது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். உயர்நீதி மன்றம் எப்படிச் செயல்பட வேண்டும் என்று சொல்வதற்கு மாநில அரசு தலையிடும் என்ற அளவுக்கெல்லாம் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

'மாநிலச் சட்டம் ஒன்றினுடைய ஒரு குறிப்பிட்ட பிரிவு அரசிய லமைப்புச் சட்டத்திற்கு முரணுள்ளதென்று உயர்நீதி மன்றத்திலெழுப்பப் படும்பொழுதெல்லாம், அந்த வழக்கை, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட—அவர்களில் ஒருவர் தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும்—முழு நீதிபதி ஆயத்திடம் ஒப்படைப்பதற்காக உயர்நீதி மன்றத்தைக் கேட்டுக் கொள்வதற்கான உரிமையை மாநில அரசு பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட நீதிபதி ஆயம், சம்பந்தப்பட்ட சட்டத்தின் ஒவ்வொரு பிரிவையும் ஆராய வேண்டும், அது தன்னுடைய தீர்ப்பினை வழங்கிய பின்னர், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது

(5-50 பிற்பகல்)

என்னும் காரணத்தைக் கொண்டு அச்சட்டத்தின் பிரிவு எதுபற்றியும் வாதிடக் கூடாது என்று கூறியிருப்பதையெல்லாம் பார்த்தால், நீதிமன்றத்திற்கும் மாநில அரசுக்கும் தகராறு ஏற்படுமோ என்ற அச்சம் உண்டாகும் கருத்து படைத்த தாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சற்று எண்ணிப் பார்த்திருந்தால் இந்த 2, 3 வாக்கி யங்களைச் சேர்த்திருக்க மாட்டார்கள் என்பது என்னுடைய கருத்து. நீதி பரிபாலனத்தில் தலையிடக் கூடாது என்று அடிக்கடி தனியாகப் பேசும்போது அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீதி பரிபாலனத்திற்கு அப்பாற்பட்டதாக அரசு இருக்க வேண்டுமென்ற கருத்தை அவர் கூறியிருக்கிறார். இப்படித்தான் இருக்க வேண்டும், இப்படித் தான் செய்ய வேண்டுமென்று மாநில அரசு தாக்கீது கொடுக்கும்படியான ஹைகோர்ட் என்ன ஹைகோர்ட் என்று கேட்கிறேன். உச்சநீதி மன்றத்திற்கு அரசியல் சட்டத்தை வியாக்கியானம் செய்யும் வழக்குகளைத் தவிர வேறு அப்பீல்கள் உயர் நீதிமன்றத்திலிருந்து

போகக் கூடாது என்று சொல்வது சரியா? அப்புறம் சுப்ரீம் கோர்ட்டுக்கு என்ன வேலை என்று கேட்கிறேன். இன்று தற்போது இருக்கிற ஹைக் கோர்ட்டில் உள் நாட்டில் இருக்கக்கூடிய விருப்பு, வெறுப்புகளுக்குத் தக்கபடி தீர்ப்பாளுலும் சுப்ரீம் கோர்ட் இருக்கிறதென்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைக் குலைத்துவிடக் கூடிய நிலையில் சொல்வது சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நெருக்கடி நிலைமை நாட்டில் ஏற்படும்போது, போர் அல்லது ஆக்கிரமிப்பு குறித்து மட்டுமே கட்டளைகள் பிறப்பிப்பதற்கான அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் அனைத்து மாநிலக் குழுவின் அனுமதியுடன் மட்டுமே அத்தகைய கட்டளைகள் பிறப்பிக்கப்படவேண்டும். கோர் ஏற்படும்போது மட்டும் மேலிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்றால், உள் நாட்டுக் குழப்பம் ஏற்பட்டு நிர்வாகம் நடத்த முடியாத நிலை ஏற்படும்போது, மத்திய அரசு தலையிடாமல் அதை எப்படித் தீர்த்து வைப்பது? இந்த அதிகாரம் மத்தியில் வேண்டாமென்று சொல்லியிருப்பது மாநிலத்திற்கே நல்லதல்ல. பந்தோபஸ்து அல்ல. பிரிவு 355 படி போர் அல்லது ஆக்கிரமிப்பின் போது மட்டுமே ஒவ்வொரு மாநிலத்தையும் பாதுகாப்பது மைய அரசின் கடமையாகும். சரி. உள் நாட்டுச் சண்டை அல்லது அரசியல் எதிர்க் கட்சிகளை வன்முறையில் ஒரு மாநில அரசு ஒடுக்க முற்படும்போது, மைனாரிட்டிகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது, என்ன செய்வது? நடுவண் அரசு இருந்தால் பாதுகாக்க முடியும். தலையிட வேண்டாமென்றால் எப்படி? போர், ஆக்கிரமிப்பு இவைகளின் போது மட்டும் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த மாதிரி நிலைமை ஏற்படும்போது கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். ஆக, மைய அரசு வல்லமையுடன் இருப்பது மாநிலத்திற்கு நல்லது.

அடுத்து, நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டும்; அதாவது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் மக்கள் தொகை யாதாயினும் பிரதிநிதிகள் சம எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நியாயமா? துணைத் தலைவர் அவர்கள் தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டில் 4 கோடி மக்கள் இருக்கிறார்கள், நம்முடைய பிரதிநிதிகள் . . . .

திரு. ம. பொ. சிவஞானம்: மாநிலங்கள் அவை என்று தான் அதற்குப் பெயர். மாநிலங்கள் அவை லோக் சபா மாதிரி ஆனதல்ல. கீழே இருக்கிற லோக் சபைக்கு சொல்லவில்லை. மாநிலங்களவைக்குக் கேட்டிருக்கிறார்கள்.



திரு. கே. ராஜாராம்: துணைத் தலைவரவர்கள் முதலமைச்சரவர்களுக்குச் சப்பைக் கட்டு கட்டுகிற மாதிரி பேச வேண்டாம்.

திரு. ம. பொ. சிவஞானம்: முதலமைச்சரவர்கள் அவ்வளவு பலஹீனமாக இல்லை. நானும் அவருக்கு சப்பைக் கட்டு கட்டுகிற அளவிற்கு வலுவாக இல்லை.

திரு. கே. ராஜாராம்: நமது மாநிலத்திற்கு ஒரு பிரதிநிதி, 50 ஆயிரம் மக்கள் கொண்ட மணிப்பூருக்கும் ஒரு பிரதிநிதி என்று சொன்னால் சரியா? சற்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதையெல்லாம் அலசிப் பார்க்க வேண்டும். ஏதோ கொடுத்து விட்டார்கள் என்று நிறைவேற்றுவதைக் காட்டிலும் இதைக் கொஞ்சம் பரிசீலனை பண்ண வேண்டும். மீண்டும் இதோடு விட்டு விடாமல் பரிசீலனை செய்ய வேண்டும். மாற்றிச் சொல்வதில் தவறு இல்லை. அரசியலைப்பற்றிச் சொல்லும்போது நேற்று நாம் சொன்ன கருத்தை இன்று மாற்றிக்கொள்வதில் தவறு இல்லை. ஆகவே இவைகளையெல்லாம் மறு பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது.

1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் ஆகிய 2 சட்டங்களின் பிரிவுகளும், அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்குப் பொருந்துகின்ற வகையில் திருத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலச் சட்ட மன்றங்களின் தேர்தல் குறித்து, மாநிலச் சட்ட மன்றங்கள் சட்டங்கள் இயற்ற முழு உரிமை பெற்றவையாக இருக்க வேண்டும்; மாநிலங்களுக்கு தேர்தலை நாமே நடத்திக் கொள்ளவேண்டும்; இதற்கான சட்டத்தை நாமே செய்து கொள்ளவேண்டும் என்பது சரியா? இந்தியா பூராவிற்கும் ஒரு எலெக்ஷன் கமிஷன் இருக்கிறது. அவர்கள் இப்போது தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாமே தேர்தலை நடத்துவது, இதற்காக சட்டம் செய்வதென்றால், அது சரியா? இந்த அரசை நம்பாமல் இதை நான் குறையாகச் சொல்லவில்லை. மாநில மக்களின் நன்மதிப்பைப் பெற்று, மெஜாரிட்டியுடன் வந்து மாநில ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் அமைச்சரவையை, சர்க்காரை நம்பாமல் நான் இதைச் சொல்லவில்லை. இந்த நாட்டில் 21 மாநிலங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலமும் அந்தந்த மாநிலங்களின் சட்டசபைத் தேர்தலுக்கான சட்டத்தை அவர்களே செய்துகொண்டு தேர்தல் நடத்துவதென்றால், ஒரு மாநிலத்திலுள்ள சட்டத்திற்கும் மற்றொரு மாநிலத்திலுள்ள சட்டத்திற்கும் ஒற்றுமை இருப்பது கஷ்டம். அவரவர்களுக்குத் தகுந்தபடி செய்துகொள்வார்கள். தேர்தலும் அவரவர்களுக்குத் தகுந்தபடி

[திரு. கே. ராஜாராம்] [1974 ஏப்ரல் 27

நடத்திக் கொள்வார்கள். யூனிஃபார்மிடி இருக்காது. ஆகவே இந்தியா பூராவிற்கும் ஒரே தேர்தல் கமிஷன் இருக்க வேண்டும். ஒரே மாதிரியான தேர்தல் அமைய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதை மாற்றியமைப்பது நமக்கே நல்லதல்ல. இன்னும் ஒரு வேடிக்கை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் எந்த ஒரு விதித்துறை சம்பந்தப்பட்டதாயிருப்பினும் செய்யப் படும் ஒவ்வொரு திருத்தமும் அனைத்து மாநிலங்களாலும் ஏற்புறுதி பெற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியா என்று கேட்கிறேன். எல்லா மாநிலங்களும் ஒப்புக்கொண்டால்தான் கான்ஸ்டிட்யூஷன் அமெண்ட் மெண்ட் பாஸ் பண்ண வேண்டுமென்று சொன்னால், சின்ன, சோட்டா மேகாலயா அல்லது மணிப்பூர் போன்ற மாநிலங்களின் சமத்துவமான ஆட்சியில் 20 மாநிலங்களும் ஒன்று கூடி அரசியல் நிர்ணயச் சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால், அதை மணிப்பூர் வந்து தடுத்து நிறுத்தும். அனைத்து மாநிலங்களும் ஏற்புறுதி கொடுத்தால் தான் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டுமென்று சொல்வது என்ன நியாயம்? இவைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அப்படி ஒப்புக்கொள்ளக் கூடிய திருத்தங்கள் அல்ல. நான் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டு படித்துப் பார்த்ததால்தான், குறைகள் தெரிகின்றன. மாநில அரசை நம்பாமல் சொன்ன விஷயமல்ல. ஒவ்வொரு மாநிலத்திற்கும் பல விதமான கஷ்டங்கள் வரும். தேசம் பூராவும் ஒரு மைய அரசு இருந்து தான் நடத்த வேண்டி வரும். அதே மாதிரி ரெயில்வேக்களைப் பொறுத்த வரை, மாநிலத்திற்குள் அமைந்த ரெயில்வேக்கள் என்றால், மாநிலங்களுக்குள் முடிந்து போகாது. ரெயில்வே 21 மாநிலங்களில் அமைந்துள்ளது. மாநிலங் களுக்கு ரெயில்வேயை மாற்றிக் கொடுத்து விடவேண்டுமென்றால், எல்லா ரெயில்வேக்களையும் அந்தந்த மாநிலங்களுக்குக் கொடுத்தாகி விட்டது, மத்திய அரசுக்கு சம்பந்தமில்லை என்று எடுத்துவிட வேண்டும். மத்திய அரசு ரெயில்வேக்கள், மாநில அரசு ரெயில்வேக்கள் என்று சொல்வது அர்த்தம் இல்லாதது. 21 மாநிலங்களுக்குள்ளே தான் எல்லா ரெயில்வேக்களும் அமைந் திருக்கின்றன. ஆகவே 21 மாநிலங்களும் ரெயில்வேக்களைப் பார்த்துக் கொள்ளும், மத்திய அரசுக்கும் ரெயில்வேக்கும் சம்பந்தமில்லை, மத்திய அரசுப் பட்டியலிலிருந்து ரெயில்வேயை எடுத்துவிடவேண்டும் என்று சுருக்கமாகச் சொல்லலாம். அடுத்தபடியாக, ஆடிட்டர் ஜெனரல்பற்றி. நான் இதை யெல்லாம் கூர்ந்து படித்தேன். முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, நாங்கள் தெளிவாகப் படித்துத்தான் போட்டிருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்பது தான் எனக்குப் புரியவில்லை. இண்டர்-ஸ்டேட் ரெயில்வே அதாவது, மாநிலங் களுக்கு இடையே ஓடக்கூடிய ரெயில்வேக்களுக்குச் சட்டம் போடுகிற அதிகாரம் அவர்களுக்கு, மாநிலங்களுக்குக்குள்ளே ஓடக்கூடிய ரெயில்வேக் களுக்குச் சட்டம் போடுகிற அதிகாரம், அதாவது Railways within the State அதிகாரம் அந்தந்த மாநிலங்களுக்கு என்று சொல்லியிருக்கிறோம். இது தான் வித்தியாசம்.

**திரு. கே. ராஜாராம்:** எல்லா ரயில்களும் அந்தந்த மாநிலங்களுக்குள்தான் ஓடுகின்றன. 21 மாநிலங்களுக்குள்தான் ஓடுகின்றன.

(6–00 பிற்பகல்)

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஏற்கெனவே ஜில்லா போர்டு இருந்த காலத்தில், வருமானங்கள் எல்லாம் ஜில்லா போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது.

**திரு. கே. ராஜாராம்:** வருமானம் கேட்கலாம். அது வேறு விஷயம். ரயில்வேயில் வரும் வருமானத்தில் ஒரு பகுதி வேண்டுமென்று கேட்பது வேறு விஷயம். ரயில்வேக்குத் தனியாக ஒரு சட்டம் போட வேண்டுமென்று சொன்னால், தனித் தனியாக ஒவ்வொரு மாநிலமும் சட்டம் போட்டுக்கொண் டிருக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இப்போது 'நேஷனல் ஹைவேஸ்'; 'ஸ்டேட் ஹைவேஸ்' என்று இருக்கின்றது. எல்லா ரோடுகளும் மாநிலங்களுக்குள் தான் ஓடுகின்றன. அதில் இரண்டு இருக்கின்றது. அதேமாதிரிதான் இது.

**திரு. கே. ராஜாராம்:** ரோடிலே ஓடும் பஸ் மாதிரி ரயில். ரோடு ஓடுவ தில்லை. ரோடு நிற்கிறது. ரயில் ஓடுகிறது. இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாநிலங்களுக்குள்தான் எல்லா ரோடுகளும் இருக் கின்றன. ஆகவே 'நேஷனல் ஹைவேஸ்' வேண்டாமென்று சொல்லுவதுபோல் இருக்கிறது. எல்லா ரயில்களும் மாநிலங்களுக்குள்தான் ஓடுகின்றன. அதனால் சென்ட்ரல் கன்ட்ரோல் வேண்டியதில்லை; ஸ்டேட் கன்ட்ரோலே போதுமென்று

சொல்ல முடியாது. அமெரிக்காவைப் பார்த்தால், ரயில்வேயை தனியார்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ரேடியோ, டெலிவிஷன்கூட தனியாக இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : ரயில்வே மத்திய அரசுக்கு வேண்டாம்; மாநில அரசிடம் கொடுத்து விடுங்களென்று கேட்டிருக்கலாம். அரசு கொடுத்திருக்கிற சிபாரிசில் மத்திய அரசுக்கு ரயில்வே இருக்க வேண்டும்; அப்புறம் மாநிலத்திற்குள் ஓடும் ரயில்வேக்கள் மாநிலங்களுக்கு வேண்டும் என்று சொல்லுகிறது. 21 மாநிலங்களுக்குள்தான் எல்லா ரயில்களும் ஓடுகின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : டெல்லி ஜனதா எக்ஸ்பிரஸ் யாருக்குச் சொந்தம்?

திரு. கே. ராஜாராம் : மக்களுக்குச் சொந்தம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது, ஸ்டேட்டுக்கா அல்லது சென்ட்ரலுக்கா என்ற பிரச்சினை வந்துவிடும்.

திரு. கே. ராஜாராம் : ரஷ்யாவைப் பற்றியும், அங்கே மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமையுடன் உள்ளனவென்றும் சில அங்கத்தினர்கள் கூறினார்கள். இங்கே நடப்பது 'Democracy' அங்கே நடப்பது 'totalitarianism' அங்கே ஜனநாயக ரீதியில் மாற்றுக் கட்சிகள் இல்லை; எதிர்ப்பு கிடையாது. ஒரே ஒரு கட்சி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. இரண்டு, மூன்று மாநிலங்கள் சர்வ தேச சங்கத்தில் உறுப்பினர்களாக வந்தால், அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு நன்மை. அது 'Sattellite' ஆகத்தான் இருக்குமே தவிர வேறு ஒன்றுமில்லை. இதையும் அதையும் ஒப்பிட்டுப் பேசுவது சரியல்ல.

காஷ்மீர் பற்றி தனியாக அத்தியாயம் போட்டு, சில ஷரத்துக்களை அதற்காகச் சொல்லியிருப்பதுபற்றி, துணைத் தலைவரவர்கள் குறிப்பிடும்போது, அவர்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமையைக்கூட நமக்குக் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். காஷ்மீர் என்று நம்மிடம் இருப்பது முழுக் காஷ்மீர் அல்ல. சட்டபூர்வமாக இன்னும் பாதிக் காஷ்மீர் பாகிஸ்தானிடம் இருக்கிறது. அது வரும்வரை சில சடங்குகளை நாம் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. சர்வ தேச சங்கத்தில் சில கட்டுப்பாடுகளுக்கு நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எல்லைக் கோட்டுக்கு அப்பால் பாகிஸ்தானிடம் சில பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, இம்மாதிரி பிரிவினை இருப்பதால், நம்முடைய அரசியல் நிர்ணயச்



சட்டத்தை எந்த அளவுக்கு அமுல்படுத்த முடியுமோ அந்த அளவுக்குத்தான் சட்டபூர்வமாக அமுல்படுத்த முடியும். அந்த விவகாரம் தீர்ந்துவிட்டால், தனியாக . . . .

திரு. ம. பொ. சிவஞானம் : அதைப்பற்றி பாகிஸ்தான் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினார்கள். இந்தியா பிரிக்க முடியாத ஒரே நாடு என்றால், காஷ்மீருக்கு ஏன் அந்தச் சலுகைகளைக் கொடுத்தீர்கள் என்று கேட்டபோது, எல்லா மாநிலங்களுக்கும் இவ்வித உரிமையைக் கொடுக்கும் எண்ணம் உண்டு; அதை காஷ்மீருக்கு இப்போது கொடுத்திருக்கிறோம்; நாளடைவில் எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கப்படுமென்று திரு. ராவ் அவர்கள் சொன்னார்கள்.

திரு. கே. ராஜாராம் : வேண்டுமென்று சட்டபூர்வமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அது தற்காலிகமாகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு. மற்ற விவரங்களெல்லாம் தெரியுமென்று நினைக்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம் : நான் சொல்லுவது காஷ்மீருக்குத் தெரியாது.

திரு. கே. ராஜாராம் : காஷ்மீருக்குத் தெரியாமல் இல்லை. அந்தக் காஷ்மீருக்குத் தெரியாமல் இருக்கும்—பாகிஸ்தான்.

பொதுவாக நாம் மொழிப்பற்றுடன் இருப்பதுபற்றி யாரும் குறைபட்டுக் கொள்ள வேண்டியதில்லை. நமது மொழியின்பால் நாம் உயிரை வைத்துக் கொண்டு செயல்படுவது நலம். ஆனால், பிற மொழிகள்பால் வெறுப்பு கொள்ளுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, 'அல்டிமேடம்' கொடுக்க வேண்டுமென்ற தொனியில், இவ்வளவு காலத்திற்குள் என்று கால நிர்ணயம் செய்ய வேண்டுமென்று துணைத் தலைவரவர்கள் சொன்னார்கள். அதையெல்லாம், அவர்கள் தரத்திற்கு மனப்பூர்வமாக எண்ண மாட்டார்களென்று கருதுகிறேன். பேச்சின் உற்சாகத்தில் சொல்லியிருப்பார்களென்று நினைக்கிறேன். அது வேண்டியதில்லை. நாம் சமாதான முறையில் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயங்களுக்கு, கால நிர்ணயம் செய்ய வேண்டியதில்லை. அப்படிச் செய்தால், அதையெல்லாம் தேர்தல் ஸ்டன்ட் என்று சொல்லிவிடுவார்கள். எனவே இது, அதற்காகக் கொண்டுவரப்பட்டதல்லவென்று நினைக்கிறேன். எங்களுடைய கருத்துக்களை விளக்கமாகக் கூறிவிட்டேன் என்று எண்ணுகிறேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் பெறுவதில் யாருக்கும் நாங்கள் பின் தங்கியவர்களல்ல. ஆனால், சுமுகமான முறையில், பேச்சு வார்த்தை நடத்தி, மற்றவர்களையும் நம்முடன் கொண்டுவந்து, எல்லா மாநிலங்களுடனும் உட்கார்ந்து பேசி, அடைய வேண்டிய ஒன்று இது. அவசரப்படக்கூடிய காரியங்கள் ஒன்றும் இதில் இல்லை. 25 ஆண்டுகளாக இருந்த

மாநில சுயாட்சிச் சட்டம்தான் இன்றுவரை அமுல்நடத்தி வந்திருக்கிறோம். இப்போது சில குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று புரிகிறது. அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, முதலமைச்சரவர்களுடைய பேச்சில், அறிக்கையில் சொல்லியிருக்கிறபடி, இந்திய ஒருமைப்பாட்டுக்கு எந்தவிதமான ஊறும் ஏற்பட்டுவிடாதபடி, ஒருமைப்பாட்டைக் காப்பாற்றிக்கொண்டு, எல்லா மாநிலங்களுக்கும் அதிக அதிகாரம் தரும்படியான நிலையை உண்டுபண்ணுவதற்காக வாதிட்டு, அந்த அதிகாரங்களைப் பெறுவதில் முழுச் சம்மதம் எங்களுக்கும் உண்டு என்பதைத் தெரிவித்து, அமருகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பெருமைக்குரிய இந்த மன்றத்தின் முன் வைத்த மாநில சுயாட்சித் தீர்மானம் குறித்து 4 நாட்களாக எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும், மாற்றுக் கட்சியினுடைய தலைவர்களும் நல்ல செழிப்பான கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஆளும் கட்சியின் சார்பிலும், ஆளும் கட்சியின் தோழமைக் கட்சிகளான தமிழரசுக் கழகத்தின் சார்பிலும், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலும், பார்வார்ட் பிளாக், உழைப்பாளர் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பிலும் ஆதரவான கருத்துக்கள் பலவற்றை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே சுயேச்சை உறுப்பினராக அமர்ந்திருக்கிற நண்பர் திரு. டி'மான்டி அவர்கள் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தமிழக அரசு எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினைகளை விவாதிக்கின்ற நேரம் வந்துவிட்டதென்பதைச் சுட்டிக் காட்டினார்கள். நண்பர் திரு. சித்தா நாராயணசாமி அவர்கள் மக்களோடு நெருங்கியிருப்பது மாநில அரசுதான்; மத்திய அரசு மக்கள் பிரச்சினைகளுக்கு வெகு தொலைவில் இருக்கிறது என்ற கருத்துக்களை வெளியிட்டதன் வாயிலாக இந்தத் தீர்மானத்திற்கான அடிப்படையை ஒத்துக்கொண்டார்களென்று நம்புகிறேன். நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் என்றும்போல் மிகுந்த ஆர்வத்தோடு, இது போன்ற ஒரு தீர்மானம் எப்போது வருமென்று காத்துக்கொண்டிருந்தவர் போல், மாநில சுயாட்சிக்குத் தேவையான ஆதாரங்கள் பலவற்றை நேற்றைய தினம் இங்கே வாரி வழங்கியிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள அரசுகளுள் நம்முடைய மாநில அரசுதான் சிறந்ததென்பதைச் சுட்டிக்காட்டி, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவில்லை என்று குறிப்பிட்டுவிட்டு, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் மோதல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற



எண்ணத்தை நேற்றையதினம் பேசிய திரு. வசந்த பாய் அவர்கள் தெரிவித்தார்கள். பத்திரிகையில் அது வேறுவிதமாக வந்தாலும், சபைக் குறிப்பிலே அப்படித்தான் ஏறியிருக்கிறதென்பதை அனைவரும் படித்துப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம். பழைய காங்கிரசின் சார்பில் மத்திய, மாநில உறவில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்பதை சூசகமாக அறிவித்து, ஒரு திருத்தத்தையும் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே அளித்திருப்பது மாத்திரமல்ல; நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டபோது, அதிக சுதந்திரமுள்ள மாநில சுயாட்சியை வரவேற்கிறோமென்று அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பது நம்முடைய தீர்மானத்திற்கு நல்ல வலிவையும், பொலிவையும் சேர்க்குமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் அதிக அதிகாரங்களை இன்றைக்கு கையில் வைத்துக் கொண்டிருக்கின்ற டெல்லியின் ஆளுங்கட்சிக்குச் சொந்தக்காரர் என்ற காரணத்தால், நீங்கள் கேட்பது எல்லாம் சரி, இப்போது கேட்காதீர்கள், சூழ்நிலை சரியில்லை, பிறகு கேளுங்கள் என்று நேற்றையதினம் அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள்.

(6—10 பிற்பகல்)

ஆகவே, ஆளுங்கட்சி, தோழமைக் கட்சி, எதிர்க் கட்சிகள், சுயேட்சை உறுப்பினர்கள், அனைவருமே இந்த மாமன்றத்தைப் பொறுத்த வரையில், இந்தத் தீர்மானத்தை முழுக்க ஆதரித்தும், முக்கால் பகுதியை சில பேர் ஆதரித்தும், இது போதாது இன்னும் வேகமாக இந்தத் தீர்மானம் இருக்க வேண்டும் என்கின்ற அளவில் தங்களுடைய திருத்தங்களை எழுதி இந்த மன்றத்தில் வைக்காவிட்டாலும் விளக்கிக்கூறி ஆதரவு தந்திருக்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்கின்ற தீர்மானம் சட்டப் பேரவையிலே 5 நாட்கள் மிகக் கடுமையாக விவாதிக்கப்பட்டு இங்கே நான்கு நாட்களாக விவாதிக்கப்பட்டு, அதை நிறைவேற்றுகின்ற தருணத்தில் நாம் எல்லாம் இங்கே இருக்கிறோம். சுயாட்சி உள்ள மாநிலங்கள் இருந்தால்தான் கூட்டாட்சி மத்தியிலே இருப்பதாகப் பொருள். ஆகவேதான் உண்மையான கூட்டாட்சி மத்தியிலே இருக்கவேண்டுமென்றால், மாநிலங்கள் சுயாட்சி பெற்றவைகளாக இருக்க வேண்டும் என்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து அதன் தொடர்பான கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லி வருகிறேன். கூட்டாட்சி என்கின்ற பெயரால் உண்மையான கூட்டாட்சி இல்லாமல், இன்றைக்கு இந்தியாவில் ஒற்றை ஆட்சிதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒற்றுமைக்கும் ஒன்றிவிடுவதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்துகொண்டாக வேண்டும். ஒற்றுமை என்பது வேறு, ஒன்றிவிடுவது

என்பது வேறு. வேற்றுமையிலே ஒற்றுமை, அந்த ஒற்றுமையைத்தான் மாநிலத்திலே சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்கின்ற முழக்கத்தின் கோரிக்கையின் மூலமாக, திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய தோழமைக் கட்சிகளும் இன்றைக்கு எடுத்துச் சொல்லி வருகின்றன. இந்தியாவின் தேசிய கீதத்தில், ஜனகண மன கீதத்தில், 'பஞ்சாப சிந்து குஜராத மராட்டா திராவிட உத்கல வங்கா' என்ற வார்த்தைகள் ஏன் வருகின்றன. ஏன், இந்தியாவைப் பற்றி ஒரு பொதுவான பாடலாக அது இல்லை. பல நாகரீகங்கள், பல பழக்க வழக்கங்கள், பல பகுதி மக்கள், பல கலாசாரங்கள், பல மொழிகள், மொழி உணர்வுகள், இப்படிப்பட்ட மக்கள் இந்தியாவில் இணைகின்ற காரணத்தினால்தான், தாகூர் அவர்கள் எழுதிய தேசிய கீதத்தில், 'பஞ்சாப சிந்து குஜராத மராட்டா திராவிட உத்கல வங்கா' என்று எல்லாம் பிரித்துப் பிரித்துக் காட்டி, இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்ததுதான் இந்தியா என்று அமைந்திருக்கிறது. ஓவியம் ஒன்று தீட்டுவது என்றால், இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற திருவள்ளுவர் ஓவியத்தை எடுத்துக்கொண்டால்கூட, அதிலே பலவித வண்ணங்கள் இருக்கின்றன. ஆடைக்கு வெண்மை நிறம், உடலுக்கு பழுப்பு நிறம், சுற்றி நீல நிறம் அல்லது பச்சை நிறம் என்கின்ற வண்ணங்களைத் தனித்தனியாகச் சேர்த்து ஓவியம் தீட்டினால்தான், நாம் அழகாகப் பார்க்கின்ற திருவள்ளுவருடைய படத்தைக் காண இயலும். அதற்குப் பதிலாக எல்லா வண்ணமும் ஒன்றுதான், ஆகவே எல்லாவற்றையும் ஒரே கோப்பையிலே போட்டுக் கலக்கி, ஒரே தூரிகையால் திருவள்ளுவருடைய ஓவியத்தை எழுத ஆரம்பித்தால் அது எப்படி இருக்குமோ, அப்படித்தான் இந்தியா ஒன்றியிருப்பது என்கின்ற வாதம் ஆகும். அதை மறுத்துத்தான் இன்றைக்கு இந்த மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்கின்ற பெயரால் வேற்றுமையிலே நாம் ஒற்றுமையை காண் போம் என்று கூறி வருகிறோம். இந்த வேற்றுமையிலே ஒற்றுமை காண்போம் என்று கோருகிற நேரத்தில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். நாங்கள்கூட ஒரு காலத்தில் பிரிந்து போகின்ற உரிமையோடு கூடிய மாநிலங்கள் இந்தியாவிலே அமைய வேண்டுமென்று சொன்னோம்; ஆனால், இந்தியா பிரிந்த பிறகு, பாகிஸ்தான் உருவான பிறகு, அதை நாங்கள் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளானோம், இந்தியாவின் வலிவுக்காக, என்று குறிப்பிட்டார்கள்.

கிணற்றிலே நம்முடைய பிள்ளை விழுந்து இறந்துவிட்டால், அடுத்த பிள்ளை விழாமல் இருப்பதற்காக அந்தக் கிணற்றின் மீது ஒரு இரும்புக் கம்பியாலான ஒரு பலகையைப் போடுவது சகஜம். அதற்குப் பதிலாக கிணற்றிலே தண்ணீர் இருப்பதால்தானே குழந்தை விழுந்துவிடுகிறது என்று அதனுடைய



ஊற்றுக் கண்களை அடைத்துவிடுவது முறையல்ல. பாகிஸ்தான் பிரிந்த பிறகு அதைத்தான் செய்தார்கள். மாநிலங்களுடைய அதிகாரங்கள் அத்தனையையும் பிடுங்கிக்கொண்டு, உரிமைகளை அடைத்துவிட்டு, எல்லாவற்றையும் கொண்டு போய் மத்தியிலே குவிக்கின்ற ஒரு மனப்பான்மை ஏற்பட்ட காரணத்தால் தான், இன்றைக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கை இந்த அளவுக்கு அவசியம் என்று உணரப்படுகிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மாநில சுயாட்சி என்று கேட்கிறீர்களே, அது இல்லையா, அது 1947 ஆம் ஆண்டு அல்லது 1950 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்திலே, 'ஸ்டேட் ஆட்டானமி' என்று இருக்கிறதே, நீங்கள் அதிகாரங்கள் வேண்டுமென்று கேளுங்கள், நீங்கள் ஏன் மாநில சுயாட்சி என்று கேட்கிறீர்கள், மாநில சுயாட்சி தான் இருக்கிறதே என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வாதிட் டார்கள். இருப்பதைக் கேட்கும்போது ஏன் இப்படிக் கோபப்படுகிறார்கள் என்பது தான் எனக்குப் புரியவில்லை. இதைத் தான் வலியுறுத்துகிறோம். ஆனால் ஒன்று. நான்கு வயதில் தைக்கப்பட்ட சட்டை அந்த மாநில சுயாட்சி. அதை 40 வயதிலும் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் சட்டை வேண்டுமென்று சொல்லுகிறோம். அது தான் 4 வயதில் தைத்துக் கொடுத்து விட்டேனே, அதையே 40 வயதான பிறகும் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். சட்டை தானே வேண்டும் என்று கேட்கிறார், இதோ இருக்கிறது என்கிறார்கள். நாங்கள் சொல்லுவது, நாங்கள் இப்போது போட்டுக்கொள்கின்ற அளவில் சட்டை வேண்டும் என்பது. இன்றைக்கு நானோ திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது சிலம்புச் செல்வரோ மற்ற வர்களோ, இங்கே மாநில சுயாட்சிக்காக வாதாடுகிறோம் என்றால், மாநில சுயாட்சி என்பது இப்போது இருக்கின்ற அரசியல் சட்டத்தில் இருக்கின்ற சொல் என்பதைப் புரிந்துகொண்டு தான் கேட்கிறோம்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தான் தந்த விளக்கத்தின் மூலமாக காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்களுக்கு ஒரு நல்ல அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸில் இருக்கிற பல பேருக்கு மாநில சுயாட்சி என்பது பொல்லாத ஒரு சொல், பாவமான ஒரு வார்த்தை என்ற எண்ணம் இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாநில சுயாட்சி என்ற வார்த்தை புதிய வார்த்தை அல்ல, அது ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வார்த்தை தான், என்று குறிப்பிட்டதற்காக நான் அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** சட்டையைப் பற்றி உபமானம் சொன்னார்கள். அதையே நான் திருப்பிச் சொல்லுகிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டை சின்னச் சட்டை, இப்போது பெரிய சட்டை வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆம் அப்படியே கூறுங்கள். நான் சொல்லுவது என்னவென்றால், ஏற்கெனவே இருக்கிற மாநில சுயாட்சி போதாதா, அதிக அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டும், அதிக அதிகாரங்கள் கொண்ட சுயாட்சி வேண்டும் என்று கேளுங்கள். முழுக்க முழுக்க அந்த வார்த்தை இல்லாமல், மாநில சுயாட்சி வேண்டும் என்று சொன்னால், அது வேறு விதமான அர்த்தம் கற்பிக்கும். அதிக அதிகாரங்கள் உள்ள சுயாட்சி வேண்டும், பெரிய சட்டை வேண்டும் என்று கேளுங்கள் என்று சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதைத்தான் தீர்மானத்தில் போட்டிருக்கிறோம். இராஜமன்னார் குழு அறிக்கை மீது தமிழக அரசு பரிந்துரை செய்துள்ள கருத்துக்களை ஏற்று, உண்மையான கூட்டாட்சி மத்தியிலும் மாநில சுயாட்சி மாநிலங்களிலும் மலரவேண்டும் என்று நான் தீர்மானம் போட்டிருக்கின்றோம். சட்டையைக் கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட பிறகு, எந்த விதமான பயமும் இல்லை என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டாட்சி எப்படி உருவாயிற்று, கூட்டாட்சி என்றால் என்ன என்பதைப் பற்றியெல்லாம் நம்முடைய தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் இங்கே விவரமாக எடுத்துச் சொன்னார்கள். அமெரிக்க நாட்டிலே முதலிலே குடியேறியவர்கள், அதை 13 குடியேற்ற நாடுகளாகப் பிரித்துக் கொண்டு தான் வாழ்ந்து வந்தார்கள். அந்த 13 குடியேற்ற நாடுகள் பிரிட்டனை எதிர்க்கவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானபோது, அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தங்களுக்குள்ளே ஒரு கூட்டாட்சி, தங்களுடைய எதிரிகளை எதிர்ப்பதற்கு, அவர்களை வெற்றி கொள்வதற்கு அதற்காக பிரதிநிதிகள் சந்திப்பதற்கு ஏற்ற இடம் தேவை என்று கருதினார்கள். அப்படிக் கருதியபோது தான், 'காண்டினென்டல் காங்கிரஸ்' என்ற அமைப்பு அமெரிக்காவில் உதயம் ஆயிற்று. 1776 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4 ஆம் தேதி. 13 காலனிகளும் பிரிட்டனோடு போர் புரிந்ததற்குப் பிறகு சுதந்திர நாடுகள் என்ற அந்தஸ்தைப் பெற்றன. அந்த அந்தஸ்து அவைகளுக்குக் கிடைத்த பிறகு, அந்த 13 சுதந்திர அரசுகளின் பிரதிநிதிகள் அடங்கிய 'கான்ஃபெடரேஷன்' ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கான்ஃபெடரேஷன் எப்படி இருந்தது என்றால், அதற்கும் பொது மக்களுக்கும் எள்ளளவும்



தொடர்பு இல்லாமல் இருந்தது. அது மாத்திரம் இல்லை, அந்தக்

(6—20 பிற்பகல்)

கான்ஃபெடரேஷனுக்கு ஒரு கட்டுக்கோப்பான இராணுவப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்தது. அந்தக் காலத்திலே, வாஷிங்டன் தலைமை மட்டும் அந்தக் குடியேற்ற நாடுகளுக்குக் கிடைத்திராவிட்டால், அவர்கள் பிரிட்டானிய நாட்டோடு நடந்த போராட்டத்திலே, தோற்றுப் போயிருக்கக் கூடும் என்றுதான் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகின்றார்கள். அந்தப் போராட்டம் முடிந்த பிறகு, வாஷிங்டன், நாடு முழுவதும் பரவிச் செல்லக் கூடிய அதிகாரம் எங்கேயாவது வைக்கப்படவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். வாஷிங்டன் அந்தக் கருத்தை வெளியிட்ட பிறகு, 1787 ஆம் ஆண்டு அனபொலிஸ் என்ற நகரத்திலே ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அந்த மகாநாட்டில்தான் இந்தப் பதின்மூன்று குடியேற்ற நாடுகளும் மறுசிந்தனை செய்தன. இங்கே, பதின்மூன்று பிரதிநிதிகள் கூடிப்பேசும் அமைப்பாக, காங்கிரஸாக இருப்பதா அல்லது வேறு விதத்தில் இது அமைவதா என்ற மறு சிந்தனையை அங்கேதான் செய்தார்கள். முதன் முதலாக, 'ஃபெடரல்' கூட்டாட்சி என்ற சொல்லே அந்த மகாநாட்டில்தான் பயன்படுத்தப்பட்டது. அங்கே கூடிய அந்தப் பதின்மூன்று அரசுகளும், அந்த மகாநாட்டிற்குப் பிறகு, தங்கள் தங்கள் அதிகாரங்களைக் கொஞ்சங்கொஞ்சமாக விட்டுக் கொடுத்து, அந்த அதிகாரங்களை மைய அரசு என்று ஒரு புதிய அமைப்பினிடத்தில் கொடுத்து, மைய அரசு, மாநில அரசுகள் என்ற கூட்டாட்சித் தத்துவமே அதற்குப் பிறகுதான் முதலிலே செயல்படத் தொடங்கியது. ஆனால் அமெரிக்க அரசியல் சட்டத்தில் ஃபெடரல் 'கூட்டாட்சி' என்ற சொல்லுக்கு இடமில்லை என்றாலும், அந்தத் தத்துவம் அமெரிக்காவில்தான் முதலில் செயல்படத் தொடங்கியது. இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தைப்பற்றி நமது நண்பர், ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசும் நேரத்திலே, வியர் எழுதிய புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டி. நமது இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தை வெகுவாக சிலாகித்துப் பேசியிருக்கின்றார்கள். வியர் என்ற அந்தப் பேராசிரியர் எழுதிய அந்த மகத்தான 'ஃபெடரல் கவர்ன்மென்ட்' என்ற நூல் இந்த நூற்றாண்டிலே எழுதப்பட்ட மிகச் சிறந்த நூல் என்று பலராலும் பாராட்டப்படுகிறது. அந்த நூலில் அவர் சொல்லுகிறார்,

"By the federal principlt, I mean the method of dividing powers so that the general and regional Governments are each within a sphere, co-ordinate and independent".

அதாவது மத்திய அரசும் மாநில அரசுகளும் எதன் ஆதிக்கத்திற்கும்

உட்பட்டவையல்ல. கூட்டாகவும் ஆனால் சுதந்திரமாகவும் இயங்கும் வகையிலே அதிகாரத்தைப் பிரித்துக்கொள்ளும் முறைதான் கூட்டாட்சி முறைத் தத்துவமாகும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தை வியர் பாராட்டி எழுதியிருப்பதாக திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள். ஆனால் கூட்டாட்சி என்றால் என்ன என்ற விளக்கத்தையும் வியர் தந்துள்ளதை நாம் மறந்துவிடக்கூடாது. அதே நேரத்திலே இன்னொரு இடத்திலே

* " neither general nor regional Government is subordinate to the maintain law and order and failure to respect State autonomy District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதாவது மத்திய அரசும் மாநில அரசுகளும் தங்கள் தங்கள் அதிகாரங்களைப் பொறுத்த வரையில், ஒன்றுக்கொன்று தாழ்ந்தவை அல்ல, கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கூடியவை அல்ல என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் புகழ்ந்துரைத்த இந்திய அரசியல் சட்டம்பற்றி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாராட்டிப் பேசிய அதே இந்திய அரசியல் சட்டம் பற்றிச் சொல்லப்போனால், அவை எதனுடைய மையத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1935-ம் ஆண்டு வெள்ளையர்கள் காலத்தில் இயற்றப்பட்ட அரசியல் சட்டத்தின் மறுபதிப்புதான் இன்றைக்கு இருக்கின்ற இந்திய அரசியல் சட்டம். பெரும்பான்மையான விஷயங்களை அப்படியே பிரதிபலிக்கும் அரசியல் சட்டத்தைத்தான் இன்றைக்கு நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஓரிரு மாற்றங்கள் இருக்கலாம். ஆனால் அந்த அரசியல் சட்டம் உருவாகி, அது பிரகடனப்படுத்தப்பட்டபோது, அந்தச் சட்டத்தின்படி "தேர்தலில் போட்டியிட்டாலும் சட்டசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தச் சட்டத்தின்படி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டாலும், சட்டசபைக்கு உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் அந்தச் சட்டத்தை எதிர்த்துப்போராடுவது" என்று 1936 டிசம்பர் 27-ம் தேதி ஜெய்ப்பூர் மகாநாட்டில் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியதாக டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் எழுதிய 'இந்திய காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம்' என்ற புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பிறகு அதன்படி பதவிப் பிரமாணம் செய்தவிட்டு, அதை எதிர்க்கலாமா என்கின்ற கேள்வி இந்த அவையில் எழுப்பப்பட்டாலும், வேறு அவைகளில் எழுந்தது. மேடைகளிலே, ஏடுகளிலே இன்றைக்கும் அந்தக் கேள்வி எழுகின்றதைக் காண்கிறோம். 1935-லே வெள்ளைக்காரன்



வகுத்துத்தந்த அரசியல் சட்டத்தின்படி சட்ட மன்றத் தேர்தலிலே போட்டியிட்டு உள்ளே சென்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டு, பின்னர் அதை உள்ளிருந்து எதிர்ப்பது, வெளியேயிருந்தும் எதிர்ப்பது என்று, அன்றைய தினம் காங்கிரஸ் கட்சி ஜெய்ப்பூர் மகாநாட்டில் தன் கமிட்டிக் கூட்டத்திலே மிக முக்கியமான தீர்மானமாக நிறைவேற்றியது. அந்த முடிவிற்குப் பிறகு 1937 பிப்ரவரியில் வார்தாவில் கூடி அந்தச் சட்டத்தின் அடிப்படையில் ராஜவிஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளலாமா என்று பெரிய கேள்வியொன்றுக்கு ஆராய்ச்சி நடத்தினார்கள். அந்த ஆராய்ச்சியுடைய முடிவில் ராஜவிசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும், ஆனால் அப்படி எடுத்துக்கொள்ளுவதற்கு மாற்றாக முதலிலேயே மக்களிடத்திலே மக்களுக்காக நாட்டுச் சுதந்திரத்திற்காக நாங்கள் போராடுவோம் என்று பிரமாணம் எடுத்துக்கொண்டு, அதற்குப் பிறகு சட்ட மன்றத்திற்குள் சென்று ராஜ விசுவாசப் பிரமாணத்தை எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு திருத்தத்தோடு தீர்மானத்தை வார்தாவிலே நிறைவேற்றினார்கள். அது வரையில் அமைச்சரவையில் பொறுப்புகளை, பதவிகளை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்று திட்டவட்டமாக இருந்தார்கள். அதற்கு இரண்டு திங்களுக்குப் பிறகு ஜூலைத் திங்களிலே அதே வார்தாவில் மீண்டும்கூடி, மந்திரி பதவிகளை ஏற்றுக் கொள்ளலாம் என்கின்ற முடிவிற்கு வந்து இந்தியாவில் சற்றேறப்ப ஆறு அல்லது ஏழு மாகாணங்களில் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொண்டார்கள். அப்படி மந்திரிப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட மாகாணங்களில் ஒன்று, இன்றைக்கு தமிழ் நாடு என்று அழைக்கப்படும் அன்றைய சென்னை மாகாணமாகும். அதையொட்டி பிரதமர் ராஜாஜி அவர்கள் பரிபாலனத்தின் கீழ் முதன்முதலாக வந்தது. அப்போது அவர் பிரதமர் என்று அழைக்கப்பட்டார். பிரதமர் ராஜாஜி அவர்கள் 1939 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5-ம் தேதி சட்ட சபையிலே பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். 'மத்திய புலனாய்வுத் துறையை அறவே ஒழிக்க வேண்டும்' என்று சென்னை மாகாணம் கேட்டுக்கொண்டது. அதை மத்திய அரசு புறக்கணித்துவிட்டது என்று 1939-ம் ஆண்டு ராஜாஜி அவர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாகாண அரசை நம்பாமல் மத்திய போலீஸார் மாகாண அரசாங்கங்களை வேவு பார்ப்பதை காங்கிரஸ் மந்திரிகள் அவ்வளவு பேரும் கண்டித்தார்கள். இவைகளையெல்லாம் டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்கள் எழுதிய இந்திய தேசிய காங்கிரஸ் சரிதம் என்ற நூலில் பல இடங்களிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் 1935 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை, 1939-வது ஆண்டிலே ராஜாஜி அவர்கள் கண்டித்தார்கள். மத்திய போலீஸ் புலனாய்வுத் துறை மாநில அரசுகளை வேவு பார்ப்பதை அன்றைக்கு மிக வன்மையாகக் கண்டித்தார்கள். ஆனால்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 27

இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்திலும் **அதே அதிகாரம் மத்திய** அரசிடம் இருக்கத்தான் இருக்கிறது. ஓரே ஒரு வித்தியாசம், **வெள்ளைக்காரன்** சட்டம் போட்டபோது 1935-ம் ஆண்டுச் சட்டத்திலே **அதற்கு சென்ட்ரல்** இன்டெலிஜென்ஸ் பீரோ என்று பெயர் வைத்தழைத்தார்கள். **இப்போது** அதை சென்ட்ரல் பீரோ ஆஃப் இண்டெலிஜென்ஸ் என்று **மாற்றி விட்டார்**கள். அவ்வளவுதான் வித்தியாசம்.

திரு. கே. ராஜாராம்: அப்போது மத்திய அரசாங்கம் வெள்ளைக்காரர்களிடம் இருந்தது, அப்போது அதைக் கொண்டுவந்தார்கள். வெள்ளைக்காரனுடைய ஆட்சிக் காலத்தில்தான் வெள்ளை போலீஸார் நம்மை வேவு பார்ப்பது கூடாது என்று ராஜாஜி அவர்கள் கண்டித்தார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அன்றைக்கு வெள்ளையர்கள் எங்கே தங்கள் ஆட்சியைக் கவிழ்த்துவிடுவார்களோ என்று பயந்து வேவு பார்த்தார்கள். சரி, ஆனால் நான் கேட்கிறேன், இன்றுள்ள டெல்லி ஆட்சியைக் கவிழ்த்துவிடும் துரோகிகளா இன்றைக்கு மாநிலங்களிலே இருக்கின்றார்கள்? அவ்வளவு பயத்தோடு ஒரு ஆட்சி டெல்லியில் இருக்கத் தேவைதானா? எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே உள்ளவர்கள்தான் புனிதமானவர்கள், யோக்கியமானவர்கள், மாநிலத்திலே உள்ளவர்கள் அயோக்கியர்கள், தூய்மை அற்றவர்கள், களங்கம் உள்ளவர்கள் என்ற எண்ணத்தோடு ஒரு அரசு அமைப்பு இருக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய வாதமாகும். அந்த வாதத்தைத்தான் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1935 ஆம் ஆண்டு சட்டத்தின்படி மாகாணங்களுக்கு கொடுத்த அதிகாரங்கள்படி சுயாட்சி என்றுதான் அழைக்கப்பட்டது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூட அதை ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அந்த மாகாண சுயாட்சியை அன்றைக்கு இருந்த தேசியவாதிகள், காங்கிரஸ் தலைவர்கள் யாரும் மாகாண சுயாட்சி என்று **ஏற்றுக்கொள்ளவில்லை.** அதை கவர்னர் சுயாட்சி என்றுதான் செல்லப்பெயரிட்டு அழைத்திருக்கின்றார்கள். ஆனால் அந்தக் கவர்னர் சுயாட்சி இன்றைக்கு உள்ள அரசியல் சட்ட அமைப்பில், நீக்கப்பட்டுவிட்டதா என்றால் நீக்கப்படவில்லை. ஆகவே தான் நாம் சொல்லுகிறோம், 1935 ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் கொண்டுவந்த அதே சட்டம்தான் திரும்ப சில சில மாற்றங்களோடு, நமது நாட்டின் அரசியல் சட்டமாக நமக்குத் தரப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் இதிலே பெருத்த திருத்தங்களை, மாற்றங்களை நாம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். ஒரு உதாரணம் நாம் எண்ணிப் பார்ப்போமேயானால், 1935-வது ஆண்டு



1974 ஏப்ரல் 27] [டாக்டர் மு. கருணாநிதி]

**பிரிட்டிஷார் கொண்டு வந்த அந்தச் சட்டத்தில் மத்திய அரசின் அதிகாரங்கள் 59. இது குறித்து மத்திய சட்டசபைதான் சட்டம் இயற்றும். மாகாணங்கள்**

(6—30 பிற்பகல்)

பட்டியல் சட்டம், ஒழுங்கு, கல்வி போன்ற 54 இனங்கள்—இது குறித்து மாகாண சட்டசபை சட்டம் இயற்றும். இது தவிர பிரிட்டிஷ் பார்லிமெண்டரி கூட்டுக்குழு தெரிவித்த யோசனையின்படி சரித்திரத்திலேயே இதுவரை எந்த விதமான முன்னுதாரணமும் இல்லை—அதாவது பொதுப்பட்டியல் என்கிற ஒரு பட்டியலை 1935-வது சட்டத்தின்படி அவர்கள் கொண்டு வந்தார்கள். அதுதான் 'கன்கரண்ட் லிஸ்ட்'. இந்தப் பொதுப் பட்டியலில் 36 இனங்கள் அடங்கியிருக்கும். இவைகளிலே மத்திய அரசின் முடிவுதான் முடிந்த முடிவாக இருக்கும். இந்த மூன்று பட்டியல்களிலும் அடங்காத புதிய அதிகாரங்கள்—அதாவது எஞ்சிய அதிகாரங்கள்—இவைகளை யார் வைத்துக்கொள்வது என்று தீர்மானிக்கும் பொறுப்பு 1935-வது ஆண்டுச் சட்டத்தில் வைசிராய்க்கு விடப்பட்டிருந்தது. இப்பொழுது அது மத்திய அரசுக்கு விடப்பட்டிருக்கிறது. இவ்வளவுதான் அதிலே வித்தியாசம். 'கன்கரண்ட் லிஸ்ட்' என்கிற பட்டியலில் சட்டம் இயற்றும் அதிகாரம் என்ற ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறதே, அது போன்று உலகத்திலேயே எந்தக் கூட்டாட்சி முறையிலும், பொதுப்பட்டியல் இவ்வளவு நீளமான பட்டியலாக இல்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த 1935-வது ஆண்டுச் சட்டத்தை ஒப்பிட்டு திரு. கே. சந்தானம் அவர்கள் நம்முடைய அரசியல் சட்டத்தைப்பற்றிக் கூறுகிற நேரத்தில், அழகாகக் கூறியிருக்கிறார்கள்:

> 'பிரிட்டிஷ் அரசை வன்மையாக எதிர்த்து வந்த இந்தியத் தலைவர்கள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநாட்டும் நோக்கத்தோடு ஒரு அரசியல் சட்டத்தை அப்படியே அடிமைத்தனத்துடன் ஒப்புக் கொண்ட அசாதாரணமான உண்மையை விளக்குவது அவ்வளவு சுலபமானதல்ல,
>
> Federal Financial Relations and other affairs'

என்கின்ற நூலில், கே. சந்தானம் அவர்கள் அவ்வளவு தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அந்தச் சட்டம் எப்படி எதிர்க்கப்பட்டதென்றால்—இன்றையதினம் சொல்கின்றார்களே, அரசியல் சட்டத்தைப் பற்றிக் குறை கூறலாமா, அதைப்பற்றி வேகமாகத் தாக்கிப் பேசலாமா என்று—பட்டாபி சீதாராமையா எழுதிய காங்கிரஸ் மகாசபை சரித்திரம் என்ற புத்தகத்தில் அன்று அந்தச் சட்டத்தைப்பற்றி எழுதியுள்ள கட்டுரையில் 'காங்கிரஸ்காரர்களே பல்வேறு சமயங்களில் புதிய அரசியல் ஆக்கடை (1935-வது ஆண்டுச் சட்டத்தை) உடைத்து எறிய வேண்டும் என்றும், ஏற்க

முடியாத ஒன்று என்றும் பிரசாரம் செய்திருக்கிறார்கள். அதை எதிர்த்து நாடெங்கும், ஏப்ரல் முதல் தேதியன்று அர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. இருந்தாலும் ஏன் காங்கிரஸ் மந்திரிசபைகள் அமைக்கப்பட்டன? இது அந்தப் புதிய இந்திய அரசியல் ஆக்டை ஏற்றுக் கொள்வதாகாதா என்ற ஐயம் பலருக்கும் தோன்றியது. காரியக் கமிட்டியில்கூட பதவி ஏற்பதை அங்கீகரிக்காத பலர் இருந்தனர். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்று சொல்லலாமே தவிர, வேறு எதுவும் சொல்ல முடியாது'. அந்தக் காலத்திய காங்கிரஸ் தீர்மானங்களை நன்கு ஊன்றிப் படிப்பவர்களுக்குத் தெரியும், காங்கிரஸின் நோக்கம் அந்தச் சந்தர்ப்பத்தில் ஒத்துழையாமை அல்ல. இந்தப் புது அரசியல் ஆக்டுக்குட்பட்டு, செயல்பட்டே அதை உடைத்தெறிவதுதான் காங்கிரஸின் நோக்கமாக அப்பொழுது இருந்தது.

அந்த 1935-வது ஆண்டுச் சட்டம்தான் இன்றைக்கும் இருக்கிறது. அன்று உடைத்தெறியப்பட வேண்டும், நொறுக்கப்பட வேண்டும், கிழித்தெறியப்பட வேண்டும், அதை எதிர்த்து நாடெங்கும் அர்த்தாலே அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூறினோம். இன்று திரு. கே. சந்தானம் அவர்களே, உடைத்தெறியப்பட வேண்டுமென்று சொன்ன அதே சட்டத்தைத்தான் நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார். அது திருத்தப்பட வேண்டாமா என்பதுதான் நம்முடைய கேள்வி. இந்தக் கேள்வியைத் திசை திருப்பக் கூடாது என்று நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1935-வது ஆண்டுச் சட்டத்தில் 59 ஆக இருந்த மத்திய அரசுப் பட்டியல் இப்பொழுது 97 ஆக உயர்ந்த அதிகாரங்களாக இருக்கின்றன. அதாவது 38 அதிகாரங்கள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. 54 அதிகாரங்களைப் பெற்றிருந்த மாநிலப் பட்டியல் மேலும் 12 அதிகாரங்களை மட்டும் பெற்று 66 அதிகாரங்களாகியிருக்கின்றன. 36 அதிகாரங்களைக் கொண்டிருந்த பொதுப் பட்டியல் மேலும் 11 அதிகாரங்களைப் பெற்று. 47 அதிகாரங்களுடன் இன்று விளங்குகிறது. மாநில அரசின் அதிகாரங்கள் 54 ஆக இருந்தது 66 ஆக ஆயிற்றே எப்படி என்று கேட்டால், மத்திய அரசு தன்னுடைய அதிகாரம் எதையாவது விட்டுக் கொடுத்து விட்டதா என்று கேட்டால் எந்த அதிகாரத்தையும் மத்திய அரசு விட்டுக் கொடுக்கவில்லை. எஞ்சிய அதிகாரங்கள் பொதுப் பட்டியலுக்கு வந்து, அவைகளிலிருந்து இந்தப் பத்து, பன்னிரெண்டு அதிகாரங்கள் மாநிலப் பட்டியலுக்கு வந்ததே தவிர வேறல்ல. இப்படி 1935-வது ஆண்டுச் சட்டத்தின் பிரதிபலிப்பாக, நேர் வாரிசாகத்தான் இந்திய அரசியல் சட்டம் இன்று இருக்கிறதேயல்லாமல் வேறல்ல. அதைத்தான் நாம் இன்றைக்கு பிரச்சினைக்குரியதாக்கி இருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் அன்று



எடுத்துச் சொன்னார்களே, இது மாகாண சுயாட்சி அல்ல, கவர்னர் சுயாட்சி என்று. அந்தக் கவர்னர் சுயாட்சித் தன்மைகளை தவறாகப் பயன்படுத்தி விடுவார்களோ என்றெல்லாம் சந்தேகிக்கலாமா, சட்டம்தான் அப்படி இருக்கிறது, அதற்காகப் பயப்படலாமா என்ற கருத்துக்கள் எல்லாம் கூட தெரிவிக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன? 1957 ஆம் ஆண்டு கேரளத்தில் என்ன நடந்தது? இ.எம்.எஸ். நம்பூத்ரிபாட் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடைபெற்று வந்தது. மக்கள் இயக்கம் என்ற பெயரால் ஒரு இயக்கத்தைத் தொடங்கி, அதைக் காரணம் காட்டி அந்த ஆட்சியைக் கவிழ்த்தார்கள். என்ன காரணங்கள் காட்டி கவிழ்க்கப்பட்டது என்று கேட்டால், கம்யூனிஸ்ட் கைதிகள் சில பேரை முதலமைச்சர் அவர்கள் விடுதலை செய்துவிட்டார், கம்யூனிஸ்ட் கட்சி விடுதலை செய்து விட்டது, அரசியல் கொலைகள் நிறைய நடைபெற்றிருக்கின்றன, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் அடிக்கடி தலையிடுகிறது, என்ற இந்தக் காரணங்கள்தான். இப்படிப்பட்ட காரணங்கள் சொல்லப்பட்டு 1959 ஆம் ஆண்டு கேரளத்தில் இ.எம்.எஸ். நம்பூத்ரிபாட் அவர்களுடைய மந்திரிசபை கவிழ்க்கப்பட்டது சரி, இவைகள் எல்லாம் கலைக்கத் தகுந்த காரணங்கள் என்றால், அதற்குப் பிறகு இந்தியாவிலேயே காங்கிரஸ் கட்சி ஆண்ட, அல்லது ஆளுகின்ற மாநிலங்களில் எத்தனை மாநிலங்களில் இந்தக் கலைப்புகள் நடைபெற்றிருக்கவேண்டும்? ஆகவே அரசியல் சட்டத்தில் இன்றைக்குக் கவர்னருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் துர்வினியோகப்படுத்தப்பட்டிருக்கின்றன, துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றன. கேட்கலாம், வேறு மாநிலங்களில் கலைக்கப்படவில்லையா என்று. அங்கேயெல்லாம் சட்டசபைகள் கலைக்கப்படவில்லை. மந்திரி சபைகள் கலைக்கப்பட்டன. மந்திரி சபைகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டன. கேரளத்தில் அந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது, அப்பொழுது பஞ்சாப் மாநிலத்தின் கவர்னராக இருந்த என். வி. காட்கில் அவர்கள் அதை மிக வன்மையாகக் கண்டித்தார். என்ன சொல்லிக் கண்டித்தார்? "ஐந்து ஆண்டு காலம் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு கேரள கம்யூனிஸ்டுகளுக்கு முழு உரிமை இருக்கிறது, அவர்கள் தாங்களாக ராஜினாமா செய்திருக்க வேண்டும் அல்லது சட்டசபையில் தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டில் ஒன்று நடைபெற்றாலொழிய, அந்த அரசை டிஸ்மிஸ் செய்வது அநியாயம்". இப்படிப்பட்ட கருத்தை பஞ்சாப் மாநில கவர்னர் திரு. என். வி. காட்கில் தெரிவித்திருக்கிறார். நான் கேட்கிறேன். அதற்குக் குறைந்த புரட்சியா, 1965 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புக் காரணங்களுக்காக நடைபெற்ற புரட்சி. அதைவிடக் குறைவான கொலைகளா? எந்த அளவுக்கு இங்கே நாசம் ஏற்பட்டது? அந்த அளவுக்குப் புரட்சி ஏற்பட்டது. ஆனால் அன்றைக்கு உள்துறை அமைச்சராக

இருந்த குல்சாரிலால் நந்தா அவர்கள் நாடாளுமன்றத்தில் என்ன சொன்னார், இவ்வளவு புரட்சிக்கும் ஈடுகொடுத்து அசையாத கற்பாறை போல் பக்தவத்சலம் அமர்ந்திருக்கிறார் என்று பாராட்டினாரே ஒழிய, அதைப் போல் கவர்னருடைய தாக்கீது பிறப்பிக்கப்பட்டு, அன்றைய ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டதா? சட்டமன்றம் கலைக்கப்பட்டதா? இடையாது. அதே 1965 ஆம் ஆண்டில் நான் பாளையங்கோட்டை சிறையிலிருந்து கொண்டு பத்திரிகை படிக்கிறேன். என்ன செய்தி வருகிறது? கேரளத்தில் மீண்டும் தேர்தல் நடைபெறுகிறது. கேரள சட்ட மன்ற மொத்த உறுப்பினர்கள் 133. அந்த 133 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் 40 பேர் வெற்றி பெற்றார்கள். காங்கிரஸ் 30 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. கவர்னர் என்ன செய்திருக்க வேண்டும்? நாற்பது பேராக உள்ளவர்களை, அல்லது 30 பேராக உள்ளவர்களையாவது அழைத்து உங்களோடு எந்தெந்தக் கட்சிக்காரர்கள் சேருகிறார்கள், ஆட்சி அமைக்கிறீர்களா என்று கேட்டிருக்க வேண்டும். கேட்டார்களா? இல்லை. அதற்குப் பதிலாக என்ன நடந்தது? சட்டசபையே கூட்டப்படவில்லை எம்.எல்.ஏ.-க்கள் பதவிப் பிரமாணமே எடுக்கவில்லை. ஆனால் சட்டசபை கலைக்கப்பட்டது. தேர்தல் முடிகிறது. இரண்டு நாட்களில் அந்தத் தேர்தல் செல்லாது என்கின்ற வகையில் சட்டசபை அங்கே கலைக்கப்படுகிறது. குஜராத்தில் புரட்சி நடந்ததே, முதலமைச்சர் ராஜினாமா செய்கின்ற அளவுக்கு. மந்திரி சபை எப்பொழுது டிஸ்மிஸ் செய்யப்பட்டது? அப்படி டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்று சொன்னாலும், சட்டசபை கலைக்கப்படவில்லை. சட்டசபையை ஜனநாயக ரீதியாகக் கலைத்தார்களா என்றால், இல்லை. மொரார்ஜி தேசாயின் உண்ணாவிரதம்தான் சட்டசபையைக் கலைத்ததே தவிர, அதற்குப் பிறகு மக்கள் ஆர்த்தெழுந்து நடத்திய போராட்டம்தான் சட்டசபையைக் கலைத்ததே தவிர. இந்த அரசியல் சட்டத்தைக் கொண்டு கலைத்தார்களா என்றால், அவ்வாறு கலைக்கவில்லை. ஆகவே, அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்ய முடியும், அரசியல் காரணங்களுக்காக என்பதற்கான சான்றுகள் இவைகள் எல்லாம். உத்தரப்பிரதேசத்தில் என்ன? உத்தரப்பிரதேசத்தில் மந்திரிசபையைக் கலைத்தார்கள். சட்டசபையைக் கலைக்கவில்லை. சட்ட-

(6-40 பிற்பகல்)

சபையைக் கலைக்காதது மாத்திரமல்ல. பிறகு ஒரு முதலமைச்சரை டில்லியிலிருந்து அனுப்புகிறார்கள். நீங்கள் போய் முதலமைச்சராக இருங்கள் என்று சொல்லி அனுப்புகிறார்கள். சரி, முதலமைச்சர் வருகிறார். ஐந்து மாதம் 6 மாதம் இருக்கலாம், முதலமைச்சர் பொறுப்பேற்று அவர் கேபினெட் அமைச்சரவை அமைத்து விட்டார். சட்டசபைக் கூட்டம் நடைபெற்றதா என்றால், 6 மாத காலம் சட்டசபைக் கூட்டம் நடைபெறவில்லை. முதலமைச்சர், அமைச்சர்கள் பொறுப்பேற்கிறார்கள். இவர்களை எத்தனை பேர்கள்



ஆதரிக்கிறார்கள், எத்தனை பேர்கள் எதிர்க்கிறார்கள் என்று தெரியாது. சட்டசபை கலைக்கப்படவில்லை. ஆனால் கூடாமல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது அமைச்சரவை செயல்படுகிறது. ஆறு மாதங்களுக்குப் பிறகு தேர்தல் வருகிறது. தேர்தலிலே அதிகாரத்தோடு அமைச்சர்கள் ஈடுபடுகிறார்கள். இதற்கு வழி வகுத்திருப்பது என்? இன்றைக்கிருக்கிற அரசியல் அமைப்புச் சட்டம் அல்லவா? ஆகவே இந்த அரசியல் சட்டத்தில் கட்டளையிடுகிற அதிகாரம் இருக்கிறது, கவர்னருக்கு இருக்கிற அதிகாரம் எதேச்சாதிகாரம், ஏகாதிபத்திய அதிகாரம் என்று சொன்னால், எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது, இவ்வளவு உதாரணங்களுக்குப் பிறகும் அவர் கோபித்துக்கொள்ள மாட்டார் என்று கருதுகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** கேரளாவில் நம்பூத்ரிபாத் அரசாங்கம் கலைக்கப்பட்டது தவறு என்றால், அதைப்பற்றி வாதிப்பதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. வாதியுங்கள். ஆனால் தமிழ் நாட்டில் ஏன் கலைக்கவில்லை என்று உங்கள் வாயால் சொன்னது ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல, நல்லதல்ல என்று குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் கலைத்திருக்கக் கூடாதா, கலைக்கவில்லையே என்று வருத்தப்படவில்லை. நான் கேட்பது அங்கு ஒரு நியாயம், இங்கு ஒரு நியாயம் என்பதற்காகத்தான் சொன்னேன். கேரளாவில் நம்பூத்ரிபாத் ஆட்சி கலைக்கப்பட்டிருக்கக் கூடாது என்பதற்காகத் தான் இந்த ஆதாரத்தைச் சொன்னேனேயல்லாமல், அங்கே கலைத்தீர்களே, இங்கே ஏன் கலைக்கவில்லை என்று கேட்கவில்லை. இங்கே கலைக்கவில்லை, அங்கே ஏன் கலைத்தீர்கள் என்றுதான் கேட்கிறேன்.

குஜராத்தில் சட்டசபையை மாத்திரம் விட்டு வைக்கிறீர்கள். அமைச்சரவையைக் கலைக்கிறீர்கள். பீஹாரில் அதே கதைதான். அதே கதையோ அல்லது அதோ கதியோ தெரியாது. ஆக பீஹாரிலும் இதே நிலைமைதான். ஆக இன்றைக்கு குடியரசுத் தலைவரவர்களிடத்தில் அதிகாரம் இருக்கிறது.

**திரு. கே. ராஜாராம்:** குஜராத்தில் சட்டசபையைக் கலைத்து விட்டார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அங்கே சட்டசபையைக் கலைக்கவில்லை. அப்படிப்பட்ட உத்தரவு எதும் போடப்படவில்லை. எண்பது பேர்கள் அவர்களாகவே ராஜினாமா செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு எம்.எல்.ஏ.வை மொட்டையடித்ததாகச் செய்தி வந்தது. இதையெல்லாம் விளக்கிப் பேசவேண்டாம் என்று எண்ணினேன். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் விளக்கிப் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள் போலும். தலைவர் இந்திரா காங்கிரஸ்காரர் மீது அவருக்கு என்ன கோபமோ,

எனக்குத் தெரியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே ஏற்பட்டது. இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒரு மாநிலத்திற்கு ஒரு நீதி என்று இன்றைக்கு இருக்கிறது. அப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கின்ற காரணத்தினால்தான், இவைகளெல்லாம் ஒரேபடியாக மாற்றப்பட்டு மாநிலங்கள் சுயாட்சித் தன்மையோடு விளங்க வேண்டுமென்று நாம் கூறுகிறோம். இதைச் சொன்னால் பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி—நல்ல வேளை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்தச் சந்தேகத்தைச் சொல்லவில்லை. ஆனால்—எங்களுடைய வரலாற்றை ஆராய்ந்து பார்த்து நீங்கள் ஒரு காலத்திலே பிரிவினை கேட்டீர்களே, திராவிட நாடு கேட்டீர்களே, தமிழ்நாடு தமிழருக்கே என்று சொன்னீர்களே, ஆகவே சந்தேகப்படுகிறோம் என்றார்கள். பிரிவினை பேசுவதை நாங்கள் விட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால் நீங்கள் விடமாட்டேன் என்கிறீர்கள். இதுதான் எனக்குப் புரியவில்லை. மாநில சுயாட்சி என்றால், உடனே பிரிவினை, சுதந்திரம் என்ற வகையில் இன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் பேசுவது நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். உங்களில் சில சொற்பொழிவாளர்கள், உங்கள் தோழமைக் கட்சியில் சிலர் இப்படி வேகமாகப் பேசுகிறார்களே என்று கேட்கிறார்கள். காங்கிரஸ் கட்சி சுதந்திரம் கேட்டபோது அல்லது உத்தமர் காந்தியடிகள் விடுதலை கேட்டபோது, அவர் அஹிம்சா முறையில் விடுதலையை எய்திடவேண்டுமென்று பணியாற்றிக்கொண்டிருந்தபோது அவரைச் சுற்றியும் பலர் வேகமானவர்கள் இருந்தார்கள். நேதாஜியை விடவா, பகவத் சிங்கை விடவா, சுகதேவை விடவா, அவர்களெல்லாம் வேகமானவர்களாக இருந்தார்கள். அவர்கள் எல்லாம் அப்படி வேகமாகக் கேட்கிறார்கள் என்பதற்காக விடுதலை இயக்கத்தை விட்டுவிடவில்லை, காந்தியடிகள். இந்தியச் சுதந்திர இயக்கத்தை விட்டு விடவில்லை காந்தியடிகள். இதைப்போல வேகமாகப் பேசுகிறவர்கள், வேகமாகக் கருத்துக்களைச் சொல்கிறவர்கள் எந்த இயக்கத்திலும் இருப்பார்கள். இதற்காக கருத்தின் ஆழத்தை விட்டுவிட்டு வேகமாகப் பேசப்பட்ட பேச்சுக்களை மாத்திரம் இதிலே கொண்டுவந்து இணைத்துக்கொண்டு அதுதான் இது என்று வாதிப்பது நல்லதல்ல. கரும்பு சாப்பிடுகிற நேரத்தில் இந்தக் கரும்பினுடைய கணுக்கள் ஈறில் பட்டு ரத்தம் ஒழுகுகிறது. அதற்காக கரும்புச் சுவையை விட்டு விட முடியாது. அதைப்போலத்தான் சில நேரங்களில் ரத்தம் ஒழுகுகிற அளவிற்கு கரும்புச் சக்கைகள் ஈறில் பட்டு விடலாம். அதனால் கரும்பு சாப்பிட்டால் ரத்தம் வரும், ஆகவே கரும்பு சாப்பிடாதே என்று கூறிவிடக் கூடாது. ஜாக்கிரதையாகச் சாப்பிடச் சொல்லுங்கள். சாப்பிடுகிறோம். அதற்காக கரும்பே சாப்பிடாதே என்று சொல்வார்களா என்றுதான் கேட்கிறேன். இன்றைக்கு மாநில சுயாட்சி என்பது புதுமையானதாகத் தெரியலாம்.



இன்றைக்கு கேலிக்குரியதாக இருக்கலாம். எள்ளி நகையாடப்படலாம். எதிர்க் கட்சித் தலைவரவர்கள், மேலவைத் துணைத் தலைவரவர்கள் குறிப்பிட்டது போன்று, பண்பாளர், இந்த அவையில் மிகுந்த பண்பாட்டுடன் அவையை நடத்தி வருகிறார்கள். அவர் இயல்புக்கு ஏற்ப அவர்கள் கேலி புரியாமல் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு கேலிக்குரியதாக, கண்டனத்திற்குரியதாக நாட்டில் பேசப்படுகிறது. நான் இன்று காலையில் காந்தியடிகள் எழுதிய சத்தியசோதனை நூலைப் படித்துக்கொண்டிருந்தேன். அதில் ஒரு இடத்தில் காந்தியடிகள் சொல்கிறார்கள். அவர் லண்டனில் வாழ்ந்தபோது, 80 ஆண்டுகளுக்கு முன்பு லண்டனில் வாழ்ந்தபோது, வங்காளத்திலிருந்து ஒரு எழுத்தாளர்—அவருடைய பெயர் நாராயண ஹேம சந்திரர்—அவரோடு கொஞ்ச நாட்களுக்குப் பழகினார். நண்பர்கள் ஆனார்கள். மிக எளிமையாக வாழ்பவர் அந்த நாராயண ஹேம சந்திரர். அவர் அமெரிக்காவிற்குப் போக வேண்டுமென்று ஆசைப்பட்டாராம். காந்தியடிகள் அவரைப் பார்த்து, உன்னுடைய பழக்க வழக்கத்தை அங்கே யாராலும் புரிந்துகொள்ள முடியாது, அங்கே ஏன் செல்ல வேண்டுமென்று கேட்டாராம். நான் போய்த்தான் தீருவேன் என்று அவர் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறார். அங்கே ஒரு நாள் வேட்டியுடனும் பனியனுடனும் தெருவில் நடந்து சென்றிருக்கிறார். அவர் ஆபாசமான உடையுடன் இருக்கிறார் என்று அவரைக் கைது செய்து விட்டார்கள். எண்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது இது. இப்போது அதுகூட ஏன் கட்டியிருக்கிறாய் என்று கேட்பார்கள். அது வேறு விஷயம். எண்பது ஆண்டுகளுக்கு முன்பு நாராயண ஹேம சந்திரர் வேட்டியும் பனியனும் போட்டுக்கொண்டு போனதைப் பார்த்து அமெரிக்காவில் உள்ளவர்கள் இது ஆபாசமான உடை, கண்டனத்திற்குரியது என்று சொல்லி அவரைக் கைது செய்து விட்டார்கள். அவரை நீண்ட நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்ததாக காந்தியடிகள் எழுதியிருக்கிறார்கள். அதைப்போலத்தான் இன்றைக்கு ஏதோ ஒற்றுமை, ஒருமைப்பாடு, இந்தியா என்று எல்லாம் பேசிக்கொண்டிருப்பவர்களுக்கிடையே மாநில சுயாட்சி என்ற வேட்டியும் பனியனும் கட்டிக்கொண்டு வருவது ஆபாசமாகத் தெரியலாம், அருவருக்கத்தக்கதாகத் தெரியலாம், கண்டனத்திற்குரியதாக இருக்கலாம். ஆகவே இவர்களைக் கைது செய்யுங்கள் என்று சொல்லலாம். இவர்கள் நாட்டின் விரோதிகள் என்று சொல்லலாம். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் அமெரிக்காவிற்குள்ளே நாராயண ஹேம சந்திரர் எவ்வளவு துணிவோடு பனியனும் வேட்டியும் போட்டுக் கொண்டு போனாரோ அதைப் போல இந்தியாவில் ஒற்றுமை என்ற பெயரால், ஒருமைப்பாடு என்ற பெயரால் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்காமல் ஒரு புதிய ஏகாதிபத்திய ஆட்சியை டில்லியில் உருவாக்குவதற்கு காரணமாக இருக்கிறவர்களால் எள்ளி நகையாடப்படுமானால் நான் அவர்களுக்காக வருந்துகிறேன். நான் பேரவையிலும் சொன்னேன். என்னுடைய முன்னுரையிலும் குறிப்பிட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டோம். நண்பர் திரு. ஏ. கே. வில்லம் அவர்கள் பேசுகிற நேரத்தில் சொன்னார்கள். நாங்கள் எதைச் சொன்னாலும் பகிரங்கமாகச் சொல்வோம். நாங்கள் மறைத்துக்கொண்டு சொல்லவேண்டிய அவசியமில்லை. ஒளிந்துகொண்டு சொல்லவேண்டிய அவசியமில்லை. பிரிவினையை நாங்கள் விட்டு விட்டோம். பத்து ஆண்டு காலமாக இந்தப் பிரிவினைப் பேச்சே கிடையாது. எங்களுடைய சட்ட திட்ட புத்தகங்களிலே இதை அகற்றி விட்டோம். இன்றைக்கு மாநில சுயாட்சி கேட்கிறோம். 1947-ல் காங்கிரஸ்காரர்கள் மாநில சுயாட்சி கேட்டார்கள். இப்போது நிலைமை வேறு என்றெல்லாம் சொல்லக்கூடும். இன்றைக்கு இந்த அவையில் மாத்திரம் எழுந்த பிரச்சினை அல்ல இது. ஆந்திரப் பிரதேச சட்டப் பேரவையில் 1959-ம் ஆண்டு ஒரு தீர்மானத்தை திரு. வாவிலாலா கோபாலகிருஷ்ணையா—அவர் இங்கே கூட இருந்தவர்—ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்.

Assembly recommends to the Government to impress upon the Government of India the need to amend the Constitution of India so as to confine to foreign affairs, defence, communications, planning and its co-ordination of States to Centre and slightly enlarge the State list to ensure Federal structure and real democracy.

என்கின்ற ஒரு தீர்மானத்தை 1959-ல் கொடுத்து அதைத் திரும்பப் பெறுகிறார். பிறகு 1970இல் இது விவாதிக்கப்பட்டு விடப்படுகிறது. 13—2—1970-ல் இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டு விவாதிக்க நேரமில்லாமல் காலாவதியாகிறது. 27-11-1970-ல் விவாதிக்கப்பட்டு 4-12-1970 வரையில் விவாதம் தொடர்ந்து பிறகு அது விடப்படுகிறது. 1971-ம் ஆண்டிலும் இந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது. ஆக, இந்த எண்ணங்கள், கருத்துக்கள், மாநில மத்திய உறவுகள் செம்மைப்படுத்தப்படவேண்டும்; மாற்றியமைக்கப்பட வேண்டும், அதற்கேற்ப அரசியல் சட்டங்கள் திருத்தப்படவேண்டும் என்கின்ற இந்த எண்ணங்களெல்லாம் புதியவைகள் அல்ல. ஆங்காங்கு கிளைத்துக்கொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் அனுசரணைக்கு ஒன்று சொல்கிறேன். 13-8-1973இல் டில்லியில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்திற்கு அசோக் மேத்தா வருகிறார், சி. பி. குப்தா வருகிறார். பிறகு, ராஜ்நாராயண், கர்ப்பூரி தாக்கூர், பிலு மோடி, பட்நாயக், சாமன்லால் யாதவ், சிவ் குமார் சாஸ்திரி, இரா. செழியன், எஸ். எஸ். மாரிசாமி, முஸ்லீம் மஜீத்தைச் சேர்ந்த சில பேர் இவ்வளவு தலைவர்களும் கூடிப் பேசுகிறார்கள். அதிலே அவர்கள் 'நேஷனல் பிரொடெஸ்ட் டே' ஒன்று கொண்டாட வேண்டுமென்று தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். அவர்கள் இந்திய சர்க்காருக்கு எதிர்ப்பாக இந்திய சர்க்கார் எதில் எதிலே தவறிவிட்டது என்பதைச் சொல்கிறார்கள்.



Failure to supply food, failure to control prices, failure to maintain law and order and failure to respect State autonomy.

என்றெல்லாம் சொல்லி விட்டு, அசோக் மேத்தா அவர்களும், கிருபளானி அவர்களும் மற்றவர்களும் கூடிப்பேசிய அந்த அனைத்துக் கட்சிகளுடைய கூட்டத்தில் இதே கருத்தை அவர்கள் பிரதிபலித்திருக்கிறார்கள்.

(6—50 பிற்பகல்)

ஆகவே காங்கிரஸ்காரர்களுக்கு இது உடன்பட்ட கருத்தென்று சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லுகின்ற காரணத்தால், தமிழரசுக் கழகத்தின் தலைவர் சொல்லுகின்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சிகள் சொல்லுகின்ற காரணத்தால், இந்தக் கருத்து எடுபடக்கூடாது என்று எண்ணுகின்ற எண்ணம் காங்கிரஸ் தரப்பில் இருப்பவர்களுக்கு ஏற்படலாகாது என்பதைத்தான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் தீர்மானமும், திருத்தமும் பேரவையில் ஒன்றாகவும், மேலவையில் ஒன்றாகவும் இருந்தாலும், இரண்டின் முரண்பாட்டையும் எடுத்துக் காட்டி விமர்சிக்க விரும்பவில்லை. பேரவையைவிட மேலவையில் திருத்தம், திருத்தம் பெற்று, தெளிவு பெற்று மாநில சுயாட்சிக் கொள்கையை ஓரளவுக்கு ஏற்கத்தக்க வகையில், எதிர்க் கட்சித் தலைவரவர்களால், காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தின் பின்னணியோடு கொண்டுவரப்பட்டதற்காக உள்ளபடியே பாராட்டுகிறேன். ஆனால், அங்கே கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து அரசியல் சட்டம் திருத்தப்படத் தேவையில்லை; மத்திய, மாநில உறவுகளுக்காக எந்தவித முயற்சியுமே எடுக்கத் தேவையில்லை என்கின்ற வகையில் அங்கே திருத்தம் கொடுக்கப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் திருத்தத்தில், முதலமைச்சர்கள் மாநாடு கூட்ட வேண்டும்; இது பற்றிப் பேச வேண்டும்; இந்தியாவிலே எல்லோரையும் அழைத்துப் பேச வேண்டும்; நாம் மாத்திரம் சொல்லி என்ன பயன் என்று கேட்டார்கள். இதே எண்ணம், இதே கருத்து மதுவிலக்கில் இருக்கிறதா என்றால்—மதுவிலக்குபற்றிப் பேசினால் அகில இந்திய மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நமது தமிழ் நாட்டில் மட்டுமாவது மதுவிலக்கை அமல்படுத்தி மற்றவர்களுக்கு வழி காட்டுவோம் என்று சொல்கிறார்கள். அதனை இந்த அரசும் ஏற்றுக்கொண்டது. மாநில சுயாட்சிக் கொள்கைக்கும் இந்த இலக்கணம் பொருந்த வேண்டாமா என்று நான் கேட்கிறேன். மற்ற மாநிலங்களுக்கு சுயாட்சி தேவையில்லை என்று மற்ற மாநிலங்கள் கூறிவிட்டாலும், நாம் நமது மாநிலத்திற்கு சுயாட்சி பெறுவதற்காக போராட வேண்டுமென்று தமிழரசுக் கட்சித் தலைவர் சிலம்புச் செல்வர் கூறினார்; சிறைக்குச் செல்லத் தயார் என்றார். அப்படி ஒரு நிலைமை தவிர்க்க முடியாததென்றால், நானும் அவருடன் சிறையில் இருப்பேன்; அவரைத் தனியாக விடமாட்டேன். என் அரசியல் பொது வாழ்வில் இந்தத் தீர்மானத்தை

இரு அவைகளிலும் நிறைவேற்றியதன் மூலம் நான் ஒரு பெரிய கடமையைச் செய்து முடித்ததாகக் கருதுகிறேன். இந்தக் கடமையில் வெற்றி பெற பதவியையும் பொருட்படுத்தாமல் பணியாற்றும் உரிய காலம் விரைவில் வருமென்று எதிர்பார்க்கிறேன்; நம்புகிறேன்; தயாராக இருக்கிறேன் என்று கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : எதிர்க் கட்சித் தலைவர் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

**திரு. கே. ராஜாராம்** : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவையின் முன்னுள்ள பிரச்சினை—

"அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பின், இன்றுவரை ஏற்பட்டுள்ள அனுபவங்களை மனத்திற் கொண்டு, மாநிலங்களுக்கு அவைகள் செயல்படும் முறையில் ஏற்பட்டுள்ள குறைகள், சிக்கல்கள் என்னென்னவென்று ஆய்ந்து, மாநிலங்கள் மேலும் செம்மையாகவும், திறமையாகவும் செயல்பட, இப்போதிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கட்டுக்கோப்பிற்குள் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தாமலேயே என்ன மாறுதல் தேவையென்றும், அவ்வாறு செய்ய முடியாவிட்டால், எந்த அளவிற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்றும், முடிவு செய்யவும், இதற்கென முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று மத்திய அரசுக்கு இவ்வவை பரிந்துரை செய்கிறது".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவையின் முன்னுள்ள பிரச்சினை—

"மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும், தமிழ் நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவின் அறிக்கையையும், இம் மேலவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு,

பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்,

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும், தமிழ் நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று—மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இம் மேலவை முடிவு செய்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(4) நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் நாட்டுடைமையாக்கப்படுதல்**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே,

"1951 ஆம் ஆண்டு, தொழிலாளர் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) கீழும், 1972 ஆம் ஆண்டு நொடித்த பஞ்சாலைகள் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 72/1972) இம்மாநிலத்தில் உள்ள நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் சிலவற்றை மேற்கொள்ள மத்திய அரசு ஆணையிட்டுள்ளதாலும்;

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு, தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளதாலும்;

ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் இந்த ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்ய இந்த ஆலைகளில் மாநில அரசும், மத்திய அரசும் கணிசமான நிதிகளை முதலீடு செய்துள்ளதாலும்;

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்கிறது:—

1. மேற்கொள்ளப்பட்ட ஆலைகள் தாமதமின்றி நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்;

2. நாட்டுடைமையாக்கும் பணி மாநில அரசினால் செய்யப்பட வேண்டும்;

3. இந்த பஞ்சாலைகளைத் திறம்பட நிர்வகித்துவரும் தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் இந்த ஆலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னரும் இந்த ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வர வேண்டும்;

4. அரசின் உதவியுடனும், ஏனைய பொது நிதிகளின் உதவியுடனும் இந்த ஆலைகளில் செய்யப்படும் மேம்பாடுகளினால் கிடைக்கும் நன்மை முந்திய நிர்வாகத்திற்குக் கிடைக்காத வகையில் இழப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட வேண்டும்.

5. இதை குறித்து அவசியமான சட்டமியற்றும் அதிகாரம், மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை —

" 1951 ஆம் ஆண்டு, தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) கீழும், 1972 ஆம் ஆண்டு நொடித்த பஞ்சாலைகள் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 72/1973) இம் மாநிலத்தில் உள்ள நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் சிலவற்றை மேற்கொள்ள மத்திய அரசு ஆணையிட்டுள்ளதாலும் ;

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு, தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளதாலும் ;

ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் இந்த ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்ய இந்த ஆலைகளில் மாநில அரசும், மத்திய அரசும் கணிசமான நிதிகளை முதலீடு செய்துள்ளதாலும் ;

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்கிறது :—

1. மேற்கொள்ளப்பட்ட ஆலைகள் தாமதமின்றி நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் ;

2. நாட்டுடைமையாக்கும் பணி மாநில அரசினால் செய்யப்படவேண்டும் ;

3. இந்த பஞ்சாலைகளைத் திறம்பட நிர்வகித்து வரும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் இந்த ஆலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னரும் இந்த ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வரவேண்டும் ;

4. அரசின் உதவியுடனும் ஏனைய பொது நிதிகளின் உதவியுடனும் இந்த ஆலைகளில் செய்யப்படும் மேம்பாடுகளினால் கிடைக்கும் நன்மை முந்திய நிர்வாகத்திற்குக் கிடைக்காத வகையில், இழப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட வேண்டும் ;

5. இது குறித்து அவசியமான சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகின்றது.

(6—55 பிற்பகல்)

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.



2. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

262. Notification issued with Roc. No. 48277/72-F1, dated the 26th April 1973 regarding alteration of the name of Subramaniapuram Panchayat in Tirunelveli district as Vembar South Panchayat. [Laid on the table ofo the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

263. Notification issued with G.O. Ms. No. 967, Home, dated the 19th April 1974 in regard to direction issued to the State Transport Authority, Madras, relating to the revised rates for stage carriages. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

264. Notification issued with G.O. Ms. No. 817, Home, dated the 1st April 1974 in regard to the appointment of certain persons to exercise the powers and perform the functions of licensing officers in respect of motor vehicles. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

265. Notifications issued with G.O. Ms. No. 2671, Rural Development and Local Administration, dated the 29th November 1973 in regard to division of Mettupalayam Municipality into twenty-eight wards and one seat for Scheduled Castes and three seats for women in the Mettupalayam Municipal Council. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

266. Notifications issued with G.O. Ms. No. 329, Rural Development and Local Administration, dated the 14th February 1974 in rtgard to division of Virodhunagar Municipality into thirty-two wards and one seat for Scheduled Castes and two seats

for women in the Virudhunagar Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

267. Notifications issued with G.O. Ms. No. 258, Rural Development and Local Administration, dated the 8th February 1974 in regard to division of Singanallur Municipality into thirty-six wards and three seats for Scheduled Castes and two seats for women in the Villupuram Municipal Council. [Laid onthe table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

268. Notifications issued with G.O. Ms. No. 334, Rural Developement and Local Administration, dated the 14th February 1974 in regard to division of Villupuram Municipality into thirty-two wards and one seat for Scheduled Castes and three seats for women the Villupuram Municipal Council. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municiplities Act, 1920 (Tamil Nadu Act V of 1920.]

269. Notifications issued with G.O. Ms. No. 335, Rural Development and Local Administration, dated the 14th February 1974 in regard to division of Tiruchengode Municipality into twenty-four wards and one seat for Scheduled Castes and one seat for women in the Tiruchengode Municipal Council. [Laid on the table of the House under sections 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

270. Notifications issued with G.O. Ms. No. 336, Rural Development and Local Administration, dated the 16th February 1974 in regard to division of Tirunelveli Municipality into thirty-six wards and two seats for Scheduled Castes and one seat for women in the Tirunelveli Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

B. *Reports, Notifications and Other Papers*—" Nil ".

# Index to Tamil Nadu Legislative Council Debates

FORTY-SEVENTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*24th to 27th April 1974.*

*Volume CXXII* (*Nos.* 1 *to* 4).

## A


PAGES.

ABDUL WAHAB, Thiru K. S.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 124–132, 151–152

ADITYAN, Thiru S. T.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. .. 23–30

ADJOURNMENT MOTION *re*—

Food poisoning in Midday meals supplied in Panchayat Union Elementary School in Chettiapatti village near Dindigul, Madurai district and consequent death of two students and admission of 91 students in hospitals .. .. .. 105–108

ANBAZHAGAN, THE HON. THIRU K.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. 76, 78–79, 84, 119–120, 121, 129, 154, 155, 168, 169

PAGES

*A*—cont.

ARIVUDAINAMBI, PULAVAR O.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 225

ARUMUGASWAMI, THIRU M.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 161–172

*B*

BAKKAR, THIRU M. M.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 57–63

BALARAMAN, THIRU L.—.
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 79–86, 123

BALASUBRAMANIAM, THIRU A.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. 89–91

BALASUBRAMANIAM, THIRU K. M.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. 172–176

BUSINESS OF THE HOUSE—
Transaction of Government business on a Private Members' day .. .. .. .. 180

*C*

CHAIRMAN, MR.—
House Committee, election of members to .. 46
Privileges Committee, election of members to .. 45–46
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 51, 52, 56, 61, 81, 83, 181, 186, 187, 232





PAGES

*C*—cont.

COMMITTEE ON DELEGATED LEGISLATION—
*See* Committees

COMMITTEES—
Committee on Delegated Legislation, nomination of members to .. .. .. .. 5–6

Estimates Committee—
Nomination of members to .. .. .. 5
Report on Food Production Department, laid on the table .. .. .. .. .. 44

House Committee, election of members to .. .. 46

Privileges Committee, election of members to .. 45–46

Public Accounts Committee—
Nomination of members to .. .. .. 4
Report on Accounts of Tamil Nadu State for 1970-71, laid on the table .. .. .. 44

Public Undertakings Committee, nomination of members to .. .. .. .. 6

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 7–42, 47–102, 109–180, 181–252

*D*

DEPUTY CHAIRMAN—
Adjournment Motion *re* food poisoning in midday meals supplied in Panchayat Union Elementary School in Chettiapatti village near Dindigul, Madurai district and consequent death of two students and admission of 91 students in hospitals. 105, 108

PAGES.

*D*—cont.

DEPUTY CHAIRMAN—*cont.*

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 34, 35, 38, 113, 114, 122, 142, 166, 168, 171, 177, 179, 220

DHARMALINGAM, THE HON. THIRU A. P.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 231

DISTRICT MUNICIPALITIES ACT, 1920—

Amendment to Notification No. 48-A, dated 28th November 1974, laid on the table .. .. 43

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Devakottai Municipality, notification laid on the table .. .. 103–104

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Kumbakonam Municipality, notification laid on the table .. .. 103

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Mettupalayam Municipality, notification laid on the table .. .. 255

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Namakkal Municipality, notification laid on the table .. .. .. 104

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Pollachi Municipality, notification laid on the table .. .. 103

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Singanallur Municipality, notification laid on the table .. .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Sivaganga Municipality, notification laid on the table .. .. 103



PAGES.

*D*—cont.

DISTRICT MUNICIPALITIES ACT—*cont.*

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Srirangam Municipality, notification laid on the table .. .. 103

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Tiruchengode Municipality, notification laid on the table .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Tirunelveli Municipality, notification laid on the table .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Villupuram Municipality, notification laid on the table .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Virudhunagar Municipality, notification laid on the table .. .. 255–256

D'MONTE, THIRU D. V.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 30–31

DRAVIDAMANI, THIRU A—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 86–89

*E*

ENTERTAINMENTS TAX—

Exemption of Canadian Film shows to be held in Madras in connection with Canadian Film Festival from—and additional surcharge, notification laid on the table .. .. .. .. 43

ESTIMATES COMMITTEE—

*See* Committees

EXCISE ACT, 1971—

Levy of export pass fee on export of Beer manufactured in Tamil Nadu, notification laid on the table .. .. .. .. .. 43

PAGES

*G*

GEORGE KOMAGAN, THIRU—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 95–101

*I*

INDIAN STAMP ACT, 1899—

Remission of stamp duty on lease deed to be executed by Commissioner, Panchayat Union, Pallipalayam, Salem district, for rights of collection of tolls on bridge across Cauvery river between Erode and Pallipalayam, notification laid on the table .. 44

*K*

KARUNANIDHI, THE HON. DR. M.—

Adjournment motion *re* food poisoning in mid-day meals supplied in Panchayat Union School in Chettiapatti village near Dindigul, Madurai district and consequent death of two students and admission of 91 students in hospitals .. .. .. 107–108

Business of the House, transaction of Government business on a Private Members' day .. .. 180

Committee on Delegated Legislation, nomination of members to .. .. .. .. 5–6

Estimates Committee, nomination of members to .. 5

House Committee, election of members to .. 46

Privileges Committee, election of members to .. 45

Public Accounts Committee, nomination of members to .. .. .. .. .. 4

Public Undertakings Committee, nomination of members to .. .. .. .. .. 6

Question hour dispensation with—on 24th and 25th, 26th and 27th April 1974 ... ... ... 1, 45, 105, 180



PAGES

*K*—cont.

KARUNANIDHI, THE HON. DR. M.—*cont.*

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 7, 38, 79, 80, 83, 84, 111, 112, 114, 123, 128, 130, 170, 171, 185, 216, 217, 218, 234–252

*L*

LOANS—

Collection of Government and Co-operative loans due from agriculturists of Madurantakam taluk, Minister's attention called to need for postponement .. .. .. .. .. 2–4

*M*

MADHAVAN, THE HON. THIRU S.—

Resolution *re*—

Sick Textile Mills in Private sector, nationalisation of .. .. .. .. 253

State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. .. 231

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Loans due from agriculturists of Madurantakam taluk, calling attention to need for postponement of collection of Government and Co-operative .. 2–4

MEMBERS OF LEGISLATURE—

Return of Assets of certain Members of the Assembly as on 31st March 1971, 1972 and 1973 .. .. 104

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

District Municipalities Act, 1920—*cont.*

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Singanallur Municipality (G.O. Ms. No. 258, Rural Development and Local Administration, dated 8th February 1974) .. .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Sivaganga Municipality (G.O. Ms. No. 30, Rural Development and Local Administration, dated 3rd January 1974) .. .. .. .. 103

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Srirangam Municipality (G.O. Ms. No. 28, Rural Development and Local Administration, dated 3rd January 1974) .. .. .. .. 103

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Tiruchengode Municipality (G.O. Ms. No. 335, Rural Development and Local Administration, dated 14th February 1974) .. .. .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Tirunelveli Municipality (G.O. Ms. No. 336, Rural Development and Local Administration, dated 16th February 1974) .. .. .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Villupuram Municipality (G.O. Ms. No. 334, Rural Development and Local Administration, dated 14th February 1974) .. .. .. .. 256

Division of wards and reservation of seats for Scheduled Castes and women in Virudhunagar Municipality (G.O. Ms. Nc. 329, Rural Development and Local Administration, dated 14th February 1974) .. .. .. .. 255–256







PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Entertainments Tax, exemption of Canadian film shows to be held in Madras in connection with Canadian Film Festival from—and additional surcharge (G.O. Rt. No. 340, Revenue, dated 24th January 1974) .. .. .. .. 43

Excise Act, 1971, levy of export pass fee on export of Beer manufactured in Tamil Nadu (G.O. Ms. No. 388, Excise and Prohibition, dated 24th November 1973) .. .. .. .. 43

Indian Stamp Act, 1899, remission of stamp duty on lease deed to be executed by Commissioner, Panchayat Union, Pallipalayam, Salem district for rights of collection of tolls on bridge across Cauvery river between Erode and Pallipalayam (G.O. Ms. No. 7634, Revenue, dated 29th December 1973) .. .. .. .. .. 44

Motor Vehicles Act, 1939—

Fixing of fares for Stage carriages, directions to State Transport Authority, Madras for—(G.O. Ms. No. 966, Home, dated 19th April 1974) .. 43

Revised rates for Stage carriages, direction to State Transport Authority, Madras, relating to—(G.O. Ms. No. 967, Home, dated 19th April 1974) .. .. .. .. .. 255

Motor Vehicles Taxation Act, 1974, appointment of persons to exercise powers and perform functions of licensing officers under—(G.O. Ms. No. 817, Home, dated 1st April 1974) .. .. 255

Panchayats Act, 1958, alteration of name of Subramaniapuram Panchayat as Vembar South Panchayat in Tirunelveli district (Roc. No. 48277|72-F1, dated 26th April 1973) .. .. .. .. 255

*P*—cont.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, list of parks, play-fields and open spaces within Madurai Corporation limits (G.O. Ms. No. 2702, Rural Development and Local Adminsitration, dated 31st December 1973) .. 43

Return of Assets of certain Members of the Assembly as on 31st March 1971, 1972 and 1973 .. 104

Revenue Department Notification II-1 No. 2423 of 1971, amendment to—(G.O. Ms. No. 3205, Revenue, dated 5th June 1973) .. .. .. .. 44

PARKS, PLAY-FIELDS AND OPEN SPACES (PRESERVATION AND REGULATION) ACT, 1959—

Approved list of parks, play-fields and open spaces within Madurai Corporation limits, notification laid on the table .. .. .. .. .. 43

PUBLIC ACCOUNTS COMMITTEE—

*See* Committees.

PUBLIC UNDERTAKINGS COMMITTEE—

*See* Committees.

*Q*

QUESTION HOUR—

Dispensation with—on 24th, 25th, 26th and 27th April 1974 .. .. .. .. .. 1, 45, 105, 180

*R*

RAJAGOPAL, THIRU C. V.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 33–39, 61–62



*R*—cont.

RAJAMANICKAM, THIRU S. A.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 115–123

RAJARAM, THIRU K.—

Adjournment Motion *re* food poisoning in Midday Meals supplied in Panchayat Union Elementary School in Chettiapatti village near Dindigul, Madurai district and consequent death of two students and admission of 91 students in hospitals. 105–106

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 33, 84, 121, 123, 124, 127, 128, 130, 213–234, 238, 242, 247, 252

RAMA SUBBAYYA, THIRU Karaikudi—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 101–102

RAMAKRISHNA THEVAR, THIRU S.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 176–180

RAMANATHAN, THIRU M.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 143–150

RAMASAMY PADAYATCHI, THIRU S. S.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 16–23

RESOLUTION *re*—

Sick Textile Mills in Private Sector, nationalization of .. .. .. .. .. 253–254

State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. .. .. 7–42, 47–102, 109–180, 181–252

R—*cont.*

REVENUE DEPARTMENT NOTIFICATION II-1 No. 2423 OF 1971—
Amendment to—, notification laid on the table .. 44

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—
Adjournment motion *re* food poisoning in Midday Meals in Panchayat Union School, Chettiapatti and consequent death of two students and admission of 91 students in hospitals—Consent withheld after the statement of the Chief Minister .. .. 106, 108

RUSSEL RAJ, THIRU C.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 39–42

S

SADIQ PASHA, THE HON. THIRU S. J.—
Loans due from agriculturists of Madurantakam taluk statement *re* need for postponement of collection of Government and Co-operative .. 2-4

SANKARALINGAM, THIRU M.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 47–57

SAKTHI MOHAN, THIRU R.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 181–187

SHANMUGAM, THE HON. THIRU P. U.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 118–119

SIVAGNANAM, THIRU M. P.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 187–213, 224, 228, 229, 233



S—cont.

STATE AUTONOMY—
Resolution *re*—and Rajamannar Committee Report .. .. .. .. .. 7–42, 47–102, 109–180, 181–252

SWAMINATHAN, THIRU G.—
Adjournment Motion *re* food poisoning in Midday Meals supplied in Panchayat Union Elementary School in Chettiapatti village near Dindigul, Madurai district and consequent death of two students and admission of 91 students in hospitals. 106–107
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. 7, 49, 50, 61, 133–143, 220, 231–232

SWEARING IN OF MEMBER—
Thangapandian, Thiru V. .. .. 1

T

TEXTILE MILLS—
Resolution *re* Sick—in private sector, nationalization of .. .. .. .. 253–254

THANGAPANDIAN, THIRU V.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. .. 8–16
Sworn-in .. .. .. .. .. 1

V

VASANTHA PAI, THIRU G.—
Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 7, 51, 62, 150–156

V211,32 'N74



N74-12232

V—*cont.*

PAGES.

VENGA, THIRU V.—

Loans due from agriculturists of Madurantakam taluk, calling Minister's attention to need for postponement of collection of Government and Co-operative .. .. .. .. .. 2-3

VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. 77, 81, 109-115, 118, 124

VICE-CHAIRMAN (THIRU K. S. GANAPATHI)—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 152

VILVAM, THIRU A. K.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 91-95

Y

YELLAMANDA, THIRU P.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 31-33

YOGAMBAL, SELVI C.—

Resolution *re* State Autonomy and Rajamannar Committee Report .. .. .. .. 156-160

63135